
# 2008 அவ்யக்த முரளி



<u>பொருளடக்கம் - 11</u>

**18.01.2008** உண்மையான அன்பு உடையவர்களாக ஆகி, அனைத்து சுமைகளையும் தந்தையிடம் கொடுத்து மகிழ்ச்சியின் அனுபவம் செய்யுங்கள், கடின உழைப்பிலிருந்து விடுபட்டவர் ஆகுங்கள்!

**02.02.2008** சம்பூரண தூய்மை மூலமாக ஆன்மீக ராயல்ட்டி (ராஜரீகம்) மற்றும் உயர் அந்தஸ்தை (பர்சனாலிட்டி) அனுபவம் செய்து கொண்டே, தன்னுடைய மாஸ்டர் ஞான சூரிய சொரூபத்தை எழுச்சியுறச் செய்யுங்கள் (எமர்ஜ்)!

**18.02.2008** உலக மறுமலர்ச்சிக்கு அமைதி சக்தியைப் பிரயோகம் செய்யுங்கள்!

**05.03.2008** சங்கமத்தின் வங்கியில் அமைதி (சைலன்ஸ்) சக்தி மற்றும் சிரேஷ்ட கர்மத்தை சேமியுங்கள், சிவ மந்திரம் மூலம் "நான்" என்பதை பரிவர்த்தனை செய்யுங்கள்! (சிவ ஜெயந்தி)

**18.03.2008** காரணம் என்ற சொல்லை நிவாரணம் என்று மாற்றி மாஸ்டர் முக்தி வள்ளல் ஆகுங்கள். எல்லோருக்கும் தந்தையின் தன்மைகள் எனும் வர்ணம் பூசி சமமாக ஆக்குவதற்கான ஹோலி கொண்டாடுங்கள்!

**02.04.2008** இந்த ஆண்டு நான்கு பாடங்களிலும், அனுபவத்தின் அதாரிட்டி ஆகுங்கள், லட்சியம் மற்றும் லட்சணத்தை சமமாக வையுங்கள்!

**20.10.2008** சந்துஷ்டமணி (திருப்தி) ஆகி உலகில் திருப்தியின் ஒளியினைப் பரப்புங்கள், திருப்தியாயிருங்கள், எல்லோரையும் திருப்தி செய்யுங்கள்!

**15.11.2008** உண்மையான தூய உள்ளத்தோடு பரமாத்மாவிடம் சிநேகம் உள்ளவராகி ஒவ்வொரு பிராப்தியின் அனுபவத்தின் அதாரிட்டி ஆகுங்கள்!

**30.11.2008** முற்றுப்புள்ளி வைத்து, சம்பூரண தூய்மையைக் கடைப்பிடித்து மனோ சக்தி மூலமாக சுகம் சாந்தியின் அஞ்சலி வழங்கும் சேவை செய்யுங்கள்!

**15.12.2008** ஒரு ராஜ்யம், ஒரு தர்மம், சட்டம் ஒழுங்கு ஸ்தாபனையின் சமயத்தில் தன்னை பரிவர்த்தனை செய்து விஷ்வ பரிவர்த்தனையாளர் ஆகுங்கள்!

**31.12.2008** இந்த புத்தாண்டில் பரிவர்த்தனை சக்தி எனும் வரதானம் மூலமாக எதிர்மறையை (நெகட்டிவ்) ஆக்கப்பூர்வமாக (பாஸிட்டிவ்) பரிவர்த்தனை செய்து எண்ணம் (சங்கல்பம்), சுவாசம், சமயம் (நேரம்)

ஆகியவற்றை பயன்தரும் வகையில் பயன்படுத்துங்கள், வெற்றி மூர்த்தி ஆகுங்கள்!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂
☂☂☂☂☂☂☂

# 18.01.2008 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உண்மையான அன்பு உடையவர்களாக ஆகி, அனைத்து சுமைகளையும் தந்தையிடம் கொடுத்து மகிழ்ச்சியின் அனுபவம் செய்யுங்கள், கடின உழைப்பிலிருந்து விடுபட்டவர் ஆகுங்கள்!

இன்று பாப்தாதா தனது நாலா புறங்களிலும் உள்ள கவலையற்ற சக்கரவர்த்திகளின் குழுவை பார்த்துக் கொண்டிருக்கின்றார். சக்கரவர்த்திகளின் இவ்வளவு பெரிய சபை கல்பத்தில் முழு கல்பத்திலும் இந்த சங்கமத்தில் தான் ஏற்படுகிறது. சொர்க்கத்திலும் சக்கரவர்த்திகளின் இவ்வளவு பெரிய சபை இருக்காது ஆனால் இப்பொழுது பாப்தாதா சபையிலுள்ள அனைத்து சக்கரவர்த்திகளையும் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றார். தூரத்தில் இருப்பவர்களும் மனதளவில் நெருக்கத்தில் தென்பட்டுக் கொண்டிருக்கின்றனர். நீங்கள் அனைவரும் கண்களில் கலந்திருக்கிறீர்கள், அவர்கள் உள்ளத்தில் கலந்திருக்கின்றனர். எவ்வளவு அழகான சபையாக இருக்கிறது! அனைவரின் முகத்திலும் இன்று விசேஷமாக நினைவு நாளன்று அவ்யக்த ஸ்திதிக்கான நினைவின் ஜொலிப்பு தென்பட்டுக் கொண்டிருக்கிறது. அனைவரின் உள்ளத்திலும் பிரம்மாபாபாவின் நினைவு கலந்திருக்கிறது. ஆதி தேவன் பிரம்மாபாபா மற்றும் சிவபாபா இருவரும் அனைத்து குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கின்றனர்.

இன்று அதிகாலை இரண்டு மணியிலிருந்து பாப்தாதாவின் கழுத்தில் வித விதமான மாலைகள் அணிவிக்கப்பட்டிருந்தது. இந்த பூ மாலைகள் பொதுவானது. வைர மாலையும் ஒன்றும் பெரிய விசயமில்லை ஆனால் அன்பு என்ற விலை மதிக்க முடியாத முத்துக்களின் மாலை

மிகவும் சிரேஷ்டமானது. இன்றைய நாள் ஒவ்வொரு குழந்தையின் உள்ளத்திலும் அன்பு விசேஷமாக வெளிப்பட்டிருந்தது. பாப்தாதாவிடம் விசேஷமாக நான்கு வகையான விதவிதமான மாலைகள் வெளிப்பட்டிருந்தது. முதல் நம்பர் -பாப்சமான் ஆவதற்கான சிரேஷ்ட முயற்சி செய்யும் சிரேஷ்ட குழந்தைகள் மாலையின் ரூபத்தில் தந்தையின் கழுத்தில் மாலையாக இருந்தனர். முதல் மாலை அனைத்தையும் விட மிகவும் சிறியதாக இருந்தது. இரண்டாவது மாலை -உள்ளத்தில் நெருக்கத்தில் இருந்து சமம் ஆவதற்கான முயற்சியாளர் குழந்தைகளின் மாலை. அவர்கள் சிரேஷ்ட முயற்சியாளர்கள். இவர்கள் முயற்சியாளர்கள். மூன்றாவது மாலை -அது மிகவும் பெரியது, அவர்களும் அன்பானவர்களாக, தந்தையின் சேவையில் துணையாகவும் இருந்தனர் ஆனால் சில நேரம் தீவிர முயற்சியாளர்களாகவும், சில நேரம் புயல்களை அதிகம் எதிர்கொள்ளக் கூடியவர்களாகவும் இருந்தனர் ஆனால் விரும்பமுடையவர்களாக, சம்பன்னம் ஆக வேண்டும் என்ற விரும்பமும் மிக நன்றாக இருக்கிறது. நான்காவது மாலை -சாக்குபோக்கு கூறும் மாலை. வித விதமான முறையில் குழந்தைகளின் மாலைகள் அவ்யக்த ஃபரிஸ்தா முகத்தின் ரூபத்தில் மாலைகள் இருந்தன. பாப்தாதாவும் வித விதமான மாலைகளைப் பார்த்து குஷியும் அடைந்து கொண்டிருக்கின்றார். கூடவே அன்பு மற்றும் சக்திகளையும் கொடுத்துக் கொண்டிருக்கின்றார். இப்பொழுது நீங்கள் அனைவரும் நான் யார்? என்பதை தனக்குத் தானே சிந்தித்துப் பாருங்கள்; ஆனால் நாலா புறங்களிலும் உள்ள குழந்தைகளிடம் இப்பொழுது ஏதாவது செய்தே ஆக வேண்டும் என்ற விசேஷ சங்கல்பம் உள்ளத்தில் வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த ஆர்வம், உற்சாகம் மெஜாரிட்டி ஆத்மாக்களிடம் சங்கல்பத்தில் ரூபத்தில் இருக்கிறது, சொரூபத்தில் வரிசைக்கிரமமாக இருக்கின்றனர் ஆனால் சங்கல்பத்தில் இருக்கிறது.

பாப்தாதா அனைத்து குழந்தைகளுக்கும் இன்று அன்புக்கான நாள், நினைவு நாள், சக்திசாலியான நாளுக்கான விசேஷமாக உள்ளப்பூர்வமான ஆசீர்வாதம் மற்றும் உள்ளப்பூர்வமான வாழ்த்துக்களை கொடுத்துக் கொண்டிருக்கின்றார். இன்று விசேஷமாக அன்புக்கான நாளாக இருக்கின்ற காரணத்தினால் மெஜாரிட்டி ஆத்மாக்கள் அன்பில் மூழ்கியிருக்கின்றனர். இதே போன்று

முயற்சியில் சதா அன்பில் மூழ்கியிருங்கள், அன்பில் மூழ்கியிருங்கள், எளிய சாதனம் அன்பு, உள்ளப்பூர்வமான அன்பு. தந்தையின் அறிமுகம் கலந்த அன்பு தந்தையின் பிராப்திகளின் மீது அன்பு. அன்பு எளிய சாதனமாகும். ஏனெனில் அன்பான ஆத்மா கடின உழைப்பிலிருந்து விடுபட்டு விடுவர். அன்பில் லயித்திருக்கும் காரணத்தினால், அன்பில் மூழ்கியிருக்கும் காரணத்தினால் எந்த ஒரு கடின உழைப்பும் மன மகிழ்ச்சியின் ரூபத்தில் அனுபவம் ஆகும். அன்பானவர் தானாகவே தேக உணர்வு, தேக சம்பந்தத்தில் கவனம், தேக உலகின் கவனத்திலிருந்து விடுபட்டு அன்பில் தானாகவே லயித்து விடுவார்கள். உள்ளப்பூர்வமான அன்பு தந்தையின் நெருக்கத்தின், துணையின், சமமான நிலையின் அனுபவம் ஏற்படுத்தும். அன்பானவர்கள் எப்பொழுதும் தன்னை தந்தையின் ஆசீர்வாதத்திற்கு பாத்திரமானவர் என்று நினைப்பார்கள். அன்பு அசம்பவத்தையும் எளிதாக சம்பவம் ஆக்கி விடும். சதா தனது நெற்றியின் நடுவில் தந்தையின் உதவி, அன்பின் கைகள் இருப்பதாக அனுபவம் செய்வார்கள். நிச்சயபுத்தி நிஷ்சிந்த் ஆக இருப்பார்கள். நீங்கள் அனைவரும் ஆதி ஸ்தாபனைக்கான குழந்தைகள் ஆதி நேரத்தின் அனுபவம் இருக்கிறது. இப்பொழுதும் சேவைக்கான ஆதி நிமித்த குழந்தைகளுக்கு அனுபவம் இருக்கிறது -ஆரம்பத்தில் அனைத்து குழந்தைகளுக்கும் தந்தை கிடைத்திருக்கின்றார், அந்த நினைவின் மூலம் அன்பின் போதை எவ்வளவு இருந்தது! ஞானம் பின் நாட்களில் கிடைத்தது ஆனால் முதல் போதை அன்பில் மூழ்கியிருந்தனர். தந்தை அன்புக்கடலானவர் எனில் மெஜாரிட்டி குழந்தைகள் ஆரம்பத்திலிருந்து அன்புக்கடலில் மூழ்கியிருக்கின்றனர், முயற்சியின் வேகம் மிகவும் நன்றாக, வேகமாக இருக்கின்றது ஆனால் சில குழந்தைகள் அன்புக்கடலில் மூழ்கி விடுகின்றனர். சிலர் நீரில் மூழ்கி விட்டு வெளியில் வந்து விடுகின்றனர். ஆகையால் மூழ்கியிருந்த குழந்தைகளுக்கு உழைப்பு குறைவாக இருக்கும், அந்த அளவிற்கு இவர்களுக்கு கிடையாது. சில நேரங்களில் உழைப்பு, சில நேரங்களில் அன்பு -இரண்டிலும் இருப்பர் ஆனால் யார் அன்பில் மூழ்கியிருப்பார்களோ, அவர்கள் சதா தன்னை குடைக்குள் இருக்கும் அனுபவம் செய்வார்கள். உள்ளப்பூர்வமான அன்புடைய குழந்தைகள் உழைப்பையும் அன்பாக மாற்றி விடுவர். அவர்கள் முன் மலை போன்ற பிரச்சனையும் மலையாக இருக்காது ஆனால் கடுகு போன்று அனுபவம் ஆகும். கல்லும் தண்ணீர் போன்று

அனுபவம் ஆகும். ஆக இன்று எப்படி அன்பான சூழ்நிலையில் இருந்தீர்கள், அனுபவம் செய்தீர்கள் -கடின உழைப்பு இருந்ததா? அல்லது மகிழ்ச்சியாக இருந்ததா?

இன்று அனைவருக்கும் அன்பின் அனுபவம் அனைவருக்கும் ஏற்பட்டதல்லவா? அன்பில் மூழ்கியிருந்தீர்களா? அனைவரும் மூழ்கியிருந்தீர்கள். இன்று உழைப்பின் அனுபவம் ஏற்பட்டதா? எந்த ஒரு விசயத்திலும் உழைப்பு அனுபவம் ஆனதா? ஏன்? எதற்கு? எப்படி என்ற சங்கல்பம் வந்ததா? அன்பு அனைத்தையும் மறக்க வைத்து விடுகிறது. எனவே பாப்தாதா கூறுகின்றார் -அனைவரும் பாப்தாதாவின் அன்பை மறந்து விடாதீர்கள். அன்புக்கடல் கிடைத்து விட்டார், அலைகளில் நன்றாக விளையாடுங்கள். எப்பொழுதெல்லாம் உழைப்பின் அனுபவம் ஏற்படுமோ, ஏனெனில் மாயை இடையிடையில் சோதனை செய்கிறது ஆனால் அந்த நேரத்தில் அன்பின் அனுபவத்தை நினைவு செய்யுங்கள். பிறகு உழைப்பு அன்பாக மாறி விடும். அனுபவம் செய்து பாருங்கள் ஆனால் எதில் தவறு ஏற்படுகிறது? அந்த நேரத்தில் என்ன? ஏன்? இதில் அதிகம் சென்று விடுகிறீர்கள். வருகிறதோ, அது சென்று விடும் ஆனால் எப்படிப் போகும்? அன்பை நினைவு செய்வதன் மூலம் உழைப்பு சென்று விடும். ஏனெனில் அனைவருக்கும் வித விதமான நேரத்தில் பாப்தாதா இருவரின் அன்பின் அனுபவம் இருக்கிறது. அனுபவம் இருக்கிறது தானே! சில நேரங்களில் செய்திருப்பீர்கள் அல்லவா! சதா செய்திருக்கவில்லை என்றாலும் சில நேரங்களில் செய்திருப்பீர்கள். அந்த நேரத்தை நினைவு செய்யுங்கள் -தந்தையின் அன்பு எப்படிப்பட்டது. தந்தையின் அன்பினால் என்ன என்ன அனுபவம் செய்தேன்? ஆக அன்பின் நினைவின் மூலம் உழைப்பு மாறிவிடும். ஏனெனில் பாப்தாதாவிற்கு எந்த ஒரு குழந்தையின் உழைப்பிற்கான ஸ்திதி நன்றாக தோன்றவில்லை. எனது குழந்தையாக ஆகி உழைப்பு. ஆக உழைப்பிலிருந்து எப்போது விடுபடுவீர்கள்? சங்கம யுகமே உழைப்பிலிருந்து விடுபடுவதாகும். விடுபட்டவர்கள் தான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்க முடியும். மகிழ்ச்சியில்லையெனில் ஏதாவது சுமை புத்தியில் இருக்கிறது. சுமைகளை என்னிடம் கொடுத்து விடுங்கள் என்று தந்தை கூறுகின்றார். எனது என்பதை மறந்து டிரஸ்டியாகி விடுங்கள். பொறுப்புகளை தந்தையிடம் கொடுத்து விடுங்கள், சுயம் உள்ளத்தில் உண்மையான குழந்தையாகி

சாப்பிடுங்கள், விளையாடுங்கள் மற்றும் மகிழ்ச்சியாக இருங்கள். ஏனெனில் சங்கம யுகம் அனைத்து யுகங்களிலும் மகிழ்ச்சிக்கான யுகமாகும். இந்த மகிழ்ச்சிக்கான யுகத்திலேயே மகிழ்ச்சியாக இல்லையெனில் பிறகு எப்போது இருப்பீர்கள்? குழந்தைகள் சுமைகளை தூக்கிக் கொண்டு அதிக உழைப்பு செய்து கொண்டிருப்பதை பாப்தாதா பார்க்கின்றார். கொடுத்து விடுவது கிடையாது. சுயம் தானே தூக்கிக் கொள்கின்றனர். ஆக தந்தைக்கு இறக்கம் ஏற்படுகிறது அல்லவா, கருணை வரும் அல்லவா! மகிழ்ச்சியாக இருக்கும் நேரத்தில் உழைப்பு. அன்பில் மூழ்கி விடுங்கள், அன்பான நேரத்தை நினைவு செய்யுங்கள். ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு நேரத்தில் அன்பின் அனுபவம் ஏற்படுகிறது, ஏற்பட்டிருக்கிறது. ஏற்பட்டிருக்கிறது என்பதை தந்தை அறிவார் ஆனால் நினைவு செய்வது கிடையாது. உழைப்பைத்தான் பார்த்துக் கொண்டிருக்கின்றனர், குழப்பமடைந்து கொண்டிருக்கின்றனர். இன்றும் அமிர்தவேளையிலிருந்து இப்பொழுது வரை பாப்தாதா இருவரின் அன்பின் அனுபவம் உள்ளப்பூர்வமாக செய்திருந்தால், இந்த நாளை நினைவு செய்வதன் மூலம் அன்பிற்கு முன் உழைப்பு அழிந்து விடும்.

இப்பொழுது பாப்தாதா இந்த ஆண்டு ஒவ்வொரு குழந்தையும் அன்பானவர்களாக மற்றும் உழைப்பிலிருந்து விடுபட்டவர்களாக இருப்பதை பார்க்க விரும்புகின்றார். உழைப்பு என்பதன் பெயர், அடையாளம் உள்ளத்தில் இருக்கக் கூடாது. வாழ்க்கையில் இருக்கக் கூடாது. முடியுமா? முடியுமா? செய்தே தீருவேன் என்ற தைரியம் உடையவர்கள் கைகளை உயர்த்துங்கள். இப்படிப்பட்ட ஒவ்வொரு குழந்தைக்கும் இன்று விசேஷமாக தந்தையின் விசேஷ வரதானம் -உழைப்பிலிருந்து விடுபடுங்கள். ஏற்றுக் கொள்வீர்களா? பிறகு ஏதாவது நடந்து விட்டால் என்ன செய்வீர்கள்? ஏன்? எப்படி? என்று கூறமாட்டீர்கள் தானே? அன்பான நேரத்தை நினைவு செய்யுங்கள். அனுபவத்தை நினைவு செய்யுங்கள் மற்றும் அனுபவத்தில் மூழ்கி விடுங்கள். நீங்கள் உறுதிமொழி கொடுத்திருக்கிறீர்கள். தந்தையும் குழந்தைகளிடம் கேள்வி கேட்கின்றார் -நாம் தந்தையின் மூலம் 21-பிறவிக்கான ஜீவன்முக்திக்கான பதவியை பிராப்தியாக அடைந்து கொண்டிருக்கின்றோம், அடைவோம் என்று நீங்கள் அனைவரும் உறுதிமொழி எடுத்திருக்கிறீர்கள். ஜீவன்முக்தியில் உழைப்பு இருக்குமா

என்ன? 21-பிறவியில் ஒரு பிறவி சங்கம யுகமாகும். உங்களது உறுதிமொழி 21-பிறவிகளுக்கானது, 20-பிறவிகளுக்காக அல்ல. ஆக இப்பொழுதிலிருந்தே உழைப்பிலிருந்து விடுதலை அதாவது ஜீவன்முக்தி, கவலையற்ற சக்ரவர்த்தி. இப்போதைய சம்ஸ்காரம் ஆத்மாவிற்குள் 21-பிறவிகளுக்கு வெளிப்பட்டு இருக்கும். ஆக 21-பிறவிகளுக்கான ஆஸ்தி எடுத்திருக்கிறீர்கள் அல்லவா! அல்லது இப்போது அடைய வேண்டுமா? தயவு செய்து கவனம் கொடுங்கள். உழைப்பிலிருந்து விடுதலை, திருப்தியாக இருக்க வேண்டும் மேலும் திருப்திபடுத்த வேண்டும். தான் மட்டும் இருந்து விடக்கூடாது, திருப்திப்படுத்தவும் வேண்டும். அப்போதுதான் உழைப்பிலிருந்து விடுபட்டு இருப்பீர்கள். இல்லையெனில் ஏதாவது சுமைக்கான விசயங்கள, உழைப்பிற்கான விசயங்கள், ஏன், எதற்கு என்ற வார்த்தைகளில் வந்து விடுவீர்கள். இப்பொழுது நேரத்தின் நெருக்கத்தை பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். நேரம் எவ்வாறு நெருங்கிக் கொண்டிருக்கிறதோ, அதே போன்று நீங்கள் அனைவரும் தந்தையின் நெருக்கத்தை அதிகப்படுத்த வேண்டும் அல்லவா! தந்தையிடமுள்ள உங்களது நெருக்கம் நேரத்தின் நெருக்கத்தை சமாப்தி செய்து விடும். குழந்தைகளாகிய உங்கள் அனைவருக்கும் ஆத்மாக்களின் துக்கம், அசாந்திக்கான ஓசை காதுகளில் கேட்கவில்லையா என்ன? நீங்கள் தான் பூர்வஜ் ஆகவும் இருக்கிறீர்கள், பூஜைக்குரியவர்களாகவும் இருக்கிறீர்கள். ஆக ஹே பூர்வஜ் ஆத்மாக்களே! பூஜ்ய ஆத்மாக்களே! உலக நன்மைக்கான காரியத்தை எப்போது முழுமையாக்குவீர்கள்?

ஒவ்வொரு வர்க்கத்தினரும் உலக நன்மைக்கான காரியத்தை எப்படி துரிதப்படுத்துவது? என்று தனித்தனியாக கலந்துரையாடல் செய்கின்றனர், திட்டம் தீட்டுகின்றனர் என்பதை பாப்தாதா பார்க்கின்றார். மிக நல்ல திட்டங்களை உருவாக்குகிறீர்கள் ஆனால் எதுவரை? என்று பாப்தாதா கேட்கின்றார். இதற்கான பதில் தாதிகள் கொடுப்பீர்களா? -எதுவரை? பாண்டவர்கள் கொடுப்பீர்களா? -எது வரை? பாபா பிரத்யக்ஷம் ஆக வேண்டும் என்று ஒவ்வொரு வர்கத்தினரும் திட்டம் உருவாக்குவதில் லட்சியம் வைக்கிறீர்கள் ஆனால் திடமான உறுதிமொழியின் மூலம் தான் பிரத்யக்ஷதா ஏற்படும். உறுதிமொழியில் உறுதியாக இருக்க வேண்டும். ஏதாவது ஒரு காரணத்தினால் அல்லது

விசயத்தினால் உறுதியான நிலை குறைந்து விடுகிறது. உறுதிமொழி மிகவும் நன்றாக செய்கிறீர்கள். அமிர்த வேளையில் நீங்கள் கேட்டீர்களா? ஆனால் தந்தை கேட்கின்றார். அனைவரின் மன ஓசைகளை கேட்கும் அளவிற்கு உங்களுக்கு விஞ்ஞானம் சாதனங்களை கொடுக்கவில்லை. பாப்தாதா கேட்கின்றார், உறுதிமொழிகளின் மாலைகள், சங்கல்பம் செய்யக் கூடிய விசயங்கள் அனைத்தும் மிக நன்றாக, மனதை குஷிப்படுத்தக் கூடியதாக இருக்கிறது. பாப்தாதாவும் ஆஹா குழந்தைகளே ஆஹா என்று கூறுகின்றார் ஆனால் என்ன கூறுகிறீர்கள்? என்ன செய்து கொண்டு இருக்கிறீர்கள்? செயலில் வருகிறீர்கள் அல்லவா, வார்த்தைகள் வரை 75-சதவிகிதம் சரியாக இருக்கிறது ஆனால் கர்மயோகியாக வரும்பொழுது வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. சில சன்ஸ்காரம். சில சுபாவம். சுபாவம் மற்றும் சன்ஸ்காரங்களை எதிர்கொள்கிறீர்கள், அப்பொழுது உறுதிமொழியானது உறுதியாக இருப்பதற்குப் பதிலாக சாதாரணமாக ஆகி விடுகிறது. உறுதியின் சதவிகிதம் குறைந்து விடுகிறது.

குழந்தைகளின் ஒரு விளையாட்டைப் பார்த்து பாப்தாதா புன்னகைக்கின்றார். எந்த ஒரு விளையாட்டு விளையாடுகிறீர்கள் என்று கூறட்டுமா? கூறினால் தான் இந்த விளையாட்டை நிறுத்துவீர்கள், செய்வீர்களா? இன்று அன்பின் சக்தி இருக்கிறது அல்லவா! செய்வீர்களா? கை உயர்த்துங்கள். கை மட்டுமல்ல. உள்ளம் என்ற கையை உயர்த்த வேண்டும், செய்தே ஆக வேண்டியிருக்கும். பிறகு பாப்தாதா சிறிது ஏதாவது செய்வார். சொல்லட்டுமா? பாண்டவர்கள் கூறுங்கள் -சொல்லட்டுமா? இந்த முதல் வரிசையில் உள்ளவர்கள் கூறுங்கள் -சொல்லட்டுமா? கூறுங்கள். செய்தே ஆக வேண்டும். சொல்லட்டுமா? சரி என்றால் முதல் வரிசையில் உள்ளவர்கள் கை உயர்த்துங்கள். இந்த இரண்டு வரிசைகளில் உள்ளவர்கள் கை உயர்த்துங்கள். மதுவனத்தில் உள்ளவர்களும் கை உயர்த்துங்கள். உள்ளத்தின் கைகள் அல்லவா! நல்லது. விளையாட்டை பார்க்கும்போது பாப்தாதாவிற்கு கருணை வருகிறது, மகிழ்ச்சி வரவில்லை. ஏனெனில் குழந்தைகள் தங்களது விசயங்களை மற்றவர்கள் மீது சுமத்துவதில் மிகவும் அதிக புத்திசாலிகளாக இருப்பதை பாப்தாதா பார்க்கின்றார். என்ன விளையாட்டு விளையாடுகிறீர்கள்? விசயங்களை உருவாக்கி

விடுகிறீர்கள். பார்ப்பதற்கு யார் இருக்கிறார்கள்? என்று நினைக்கிறீர்கள். நான் அறிவேன், எனது உள்ளம் அறியும். தந்தை பரந்தாமத்தில், சூட்சும வதனத்தில் அமர்ந்திருக்கின்றார். யாரிடமாவது நீங்கள் இதை செய்யக் கூடாது என்று கூறினால், என்ன விளையாட்டு விளையாடுகிறீர்கள் என்பதை அறிவீர்களா? ஆம், நடந்து விட்டது, ஆனால் ஆனால் என்ற வார்த்தையை அவசியம் பயன்படுத்துகிறீர்கள் ஆனால் என்ன? இவ்வாறு இருந்தது இல்லையா, இவ்வாறு செய்தார் அல்லவா! இவ்வாறு நடக்கும் அல்லவா! அதனால்தான் ஏற்பட்டது, நான் செய்யவில்லை. அதனால்தான் நடந்தது. இவர்கள் செய்ததால்தான் நான் செய்தேன். இல்லையெனில் நான் செய்ய மாட்டேன். ஆக இதன் பொருள் என்ன? தன்னை உணர்தல் குறைவாக இருக்கிறது. சரி, அவர்கள் இவ்வாறு செய்தார்கள், அதனால் தான் நீங்கள் செய்தீர்கள். மிகவும் நல்லது. முதல் நம்பர் அவர் ஆகி விட்டார். இரண்டாம் நம்பரில் நீங்கள், சரி தானே! பாப்தாதா இதையும் ஏற்றுக் கொள்கின்றார். நீங்கள் முதல் நம்பரில் கிடையாது. இரண்டாம் நம்பரில் இருக்கிறீர்கள். முதல் நம்பரில் உள்ளவர் மாறி விட்டால் நான் சரியாகி விடுவேன் என்று நீங்கள் நினைக்கிறீர்கள், சரி தானா? அந்த நேரத்தில் இப்படி நினைக்கிறீர்கள் அல்லவா! முதல் நம்பரில் உள்ளவர் மாறுகின்றார் என்று வைத்துக் கொள்ளுங்கள். பாப்தாதா முதல் நம்பரில் உள்ள அனைவருக்கும் கூறுகின்றார் -உங்களுடைய தவறாகும். நீங்கள் மாற வேண்டும். சரி தானே. முதல் நம்பரில் உள்ளவர்கள் மாறி விடுகிறார்கள் எனில் முதல் நம்பர் யாருக்கு கிடைக்கும்? உங்களுக்கு முதல் நம்பர் கிடைக்காது. மாற்றம் கொண்டு வரும் சக்தியில் உங்களுக்கு முதல் நம்பர் கிடைக்காது. முதல் நம்பரை நீங்கள் அவருக்கு கொடுத்து விட்டீர்கள் எனில் உங்களது நம்பர் எதுவாக இருக்கும்? இரண்டாம் நம்பர் ஆகி விடும் அல்லவா! நீங்கள் இரண்டாம் நம்பர் என்று கூறினால் ஏற்றுக் கொள்வீர்களா? ஏற்றுக் கொள்வீர்களா? இல்லை என்று கூறுவீர்கள். இவ்வாறு இருந்தேன். அப்படி இருந்தேன். எப்படியெல்லாம் இருந்தேன். இது போன்ற வார்த்தைகள் அதிக விளையாட்டுக்களில் வருகிறது. இப்படி, அப்படி, எப்படி என்ற விளையாட்டை முடித்து விட்டு நான் மாற வேண்டும். நான் மாறி மற்றவர்களை மாற்ற வேண்டும். ஒருவேளை மற்றவர்களை மாற்ற முடியவில்லையெனில் சுப பாவனை, சுப விருப்பம் வைக்க முடியும். அவர்களும் உங்களுடையவர்கள் அல்லவா! எனவே நான் ஹே அர்ஜீன்

ஆக வேண்டும். முதலில் உலக மகாராஜா லெட்சுமி-நாராயணனின் நெருக்கத்தில் நீங்கள் வர வேண்டுமா? அல்லது இரண்டாம் நம்பரில் உள்ளவரா?

பாப்தாதாவிற்கு இந்த ஆண்டு இந்த ஆசை தான் இருக்கிறது -அனைத்து பிராமண ஆத்மாக்களும், பிரம்மா குமார், பிரம்மா குமாரிகள் இங்கு இந்த பேட்ஜ் அணிந்து கொள்கிறீர்கள் அல்லவா! அனைவரும் அணிந்து கொள்கிறீர்கள் தானே! இங்கு வந்த பிறகும் உங்களுக்கு பேட்ஜ் கிடைக்கிறது அல்லவா -அது காகிதத்திலோ, தங்கத்திலோ அல்லது வெள்ளியிலோ! ஆக எப்படி இங்கு பேட்ஜ் அணிந்து கொள்கிறீர்களோ, அவ்வாறு உள்ளத்தில், மனதில் நான் மாற வேண்டும், நான் நிமித்தம் ஆக வேண்டும் என்ற இந்த பேட்ஜ் அணிந்து கொள்ளுங்கள். பரிவர்த்தனைக்கான காரியத்தில் பிரம்மாபாபாவைப் போன்று முதலில் நான், மற்ற விசயங்களில் இரண்டாவதாக இருங்கள் -வீண் விசயங்களின் ஆனால் பரிவர்தனை செய்வதில் முதலில் நான். சரி தானே! நாளை அமிர்தவேளையில் பாப்தாதா பார்ப்பார், பாப்தாதாவிற்கு தாமதம் ஏற்படாது. சுவிட்ச் ஆன் செய்ததும் முழு உலகமும் தென்படும். ஆக நாளை அமிர்தவேளையில் அனைவரும் தந்தையை சந்திப்பீர்கள் அல்லவா! சந்திப்பு செய்யும் போது இந்த பேட்ஜ் அணிந்து கொள்ளுங்கள். நடைமுறையில் யார் பேட்ஜ் அணிந்து வருகிறார்கள் என்று பார்க்கின்றேன். பாசாங்கிற்காக அணிந்து வரக்கூடாது. பரிவர்தணை ஆகியே தீர வேண்டும். திடமாக இருக்கிறீர்கள் அல்லவா! அனைவரும் கைகளை உயர்த்துகிறீர்கள் அல்லவா! செய்வார்களா? செய்யமாட்டார்களா? என்று பாப்தாதாவிற்கு சிறிது தோன்றுகிறது. இவ்வாறு கைகளை உயர்த்துவதும் மிகவும் நல்லது. ஒரு விநாடியில் நல்ல சங்கல்பம் செய்தீர்கள் ஆனால் செய்தே தீருவேன். நான் மாற வேண்டும். மாறி மாற்ற வேண்டும். இவர்கள் மாற வேண்டும். இந்த விசயம் மாற வேண்டும், இன்னார் மாற வேண்டும். இந்த சூழ்நிலை மாற வேண்டும் என்று இருக்கக் கூடாது. நான் மாற வேண்டும். பிரச்சனைகள் வந்து கொண்டே இருக்கும், நீங்கள் உயர்ந்த நிலைக்கு சென்று கொண்டிருக்கிறீர்கள். உயர்ந்த இடத்தில் பிரச்சனைகளும் உயர்வாகத் தான் வரும் அல்லவா! ஆனால் இன்று எப்படி வரிசைக்கிரமமாக, முடிந்தவரை அன்பான நினைவின் சூழ்நிலை

இருந்ததோ, அவ்வாறு தனது மனதில் சதா அன்பில் மூழ்கியிருக்கும் வாயுமண்டலத்தை சதா வெளிப்படுத்துங்கள்.

பாப்தாதாவிடம் மிகவும் நல்ல நல்ல செய்திகள் வருகின்றன. சங்கல்பம் வரை மிகவும் நன்றாக இருக்கிறது. சொரூபத்தில் வரும்பொழுது முடிந்த வரை என்று ஆகி விடுகிறது. இப்பொழுது இரண்டு நிமிடங்கள் அனைவரும் பரமாத்ம அன்பில், சங்கமயுகத்தின் ஆன்மீக மகிழ்ச்சியின் ஸ்திதியில் நிலைத்து விடுங்கள். நல்லது. இதே அனுபவத்தை அடிக்கடி ஒவ்வொரு நாளும் நேத்திற்கு தகுந்தாற் போன்று அனுபவம் செய்து கொண்டே இருங்கள். அன்பை விட்டு விடாதீர்கள். அன்பில் மூழ்க கற்றுக் கொள்ளுங்கள். நல்லது.

**சேவைக்கான வாய்ப்பு குஜராத் மண்டலம்:** குஜராத்தைச் சார்ந்த குமாரர்கள் எழுந்து நில்லுங்கள். நன்றாக இருக்கிறது. குமார் என்றாலே சரீரத்தில் சக்திசாலி, மனோ சக்தியிலும் சக்திசாலி மேலும் சரீரத்திலும் லேசாக இருக்கும், ஆத்மாவும் லேசாக இருக்கும். இப்படிப்பட்ட குமாரர்களாக இருக்கிறீர்களா? கை அசையுங்கள், இருக்கிறீர்களா? சுமைக்கான எந்த புகாரும் வரக் கூடாது. இன்றிலிருந்து குஜராத்தைச் சார்ந்த குமார்களிடமிருந்து எந்த புகாரும் வராது தானே? இவ்வாறு நடக்குமா? புகார் வராதா? அல்லது வருமா? புகார் வராது என்று கூறுபவர்கள் கை உயர்த்துங்கள். ஆம், போட்டோ எடுங்கள். பக்காவாக காரியம் செய்ய வேண்டும் அல்லவா! நன்றாக இருக்கிறது. பாப்தாதாவிடம் ஒரு இளைஞர் குரூப்பின் செய்தியும் வந்தது, நன்றாக முயற்சி செய்திருக்கிறார்கள், தைரியம் நன்றாக வைத்திருக்கிறார்கள், நிகழ்ச்சிக்கான விதியும் நன்றாக இருக்கிறது. ஒருவேளை வேறு எந்த மண்டலத்தைச் சார்ந்தவர்கள் இந்த விதியை பின்பற்ற விரும்பலாம். பாப்தாதாவிற்கு மிகவும் நன்றாக பிடித்திருக்கிறது. எந்த நிகழ்ச்சி இப்பொழுது செய்திருக்கிறீர்களோ, அதற்கு பாப்தாதா சார்பாக அமர் பவ என்ற வரதானம் இருக்கிறது. இப்பொழுது வந்த இளைஞர்கள் அனைவரும் முதலில் நான் பரிவர்தனையில் முதல் அடி எடுத்து வைப்பேன் என்பதை ஏற்றுக் கொள்வீர்கள் தானே! முதலில் நான்? அல்லது முதலில் இவர்கள்? முதலில் நான் என்று கூறுபவர்கள் கை உயர்த்துங்கள். பாருங்கள். நீங்கள் நன்றாக போட்டோ எடுங்கள். பாப்தாதா ரிசஸ்ட் பார்க்க வேண்டும் அல்லவா! நன்றாக இருக்கிறது.

முழு விஸ்வ வித்யாலயத்தின் ரிசல்ட்டையும் இளைஞர்கள் வெளிப்படுத்தி விட முடியும். அரசாங்கத்தின் பிரச்சனைகளை தூரமாக்கி விட முடியும் -இரண்டு அரசாங்கம். சர்வ சக்தி வாய்ந்த அரசாங்கமும் தடைகளற்று இருப்பதை பார்க்க விரும்புகிறது மேலும் இன்றைய அரசாங்கமும் தடைகளற்ற பாரதத்தை பார்க்க விரும்புகிறது ஆனால் இளைஞர்களைத் தான் நிமித்தமாக ஆக்க விரும்புகின்றனர். ஆக செய்து காண்பிக்க வேண்டும், அமரர்களாக இருக்க வேண்டும். உறுதிமொழியை கடைபிடிப்பதிலும் அமரர்களாக இருக்க வேண்டும். மற்றபடி கொண்டிருக்கிறீர்கள், சங்கல்பம் செய்தீர்கள், முயற்சி செய்து முன்னேற்றிக் கொண்டும் இருக்கிறீர்கள் மேலும் முன்னேற்றிக் கொண்டே இருக்க வேண்டும். ஆக குஜராத்தைச் சார்ந்த இளைஞர்கள் இன்றிலிருந்து தடைகளற்றவர்கள். தடைகளற்று இருப்பீர்கள் தானே! மிகவும் நல்லது.

தாய்மார்கள் எழுந்து நில்லுங்கள்: நன்றாக இருக்கிறது, தாய்மார்களுக்கு வரதானம் இருக்கிறது. ஏனெனில் உலகத்தினரும் தாய்மார்கள் உலகை மாற்றுபவர்களாக ஆகி விட்டன என்ற புதுமையை பார்க்கின்றனர். எனவே தாய்மார்கள் இந்த பாடத்தை பக்காவாக ஆக்கிக் கொள்ளுங்கள் -நாம் சதா சுப சிந்தனையாளர்களாக மற்றும் ஞானச் சிந்தனை செய்பவர்களாக இருக்க வேண்டும். இருக்க முடியுமா? இருப்பீர்களா? எந்த ஒரு ஆத்மாவாக இருக்கட்டும் ஆனால் நீங்கள் ஞானசிந்தனை செய்பவர்களாக இருங்கள் மேலும் சுப சிந்தனை செய்யுங்கள், வீண் சிந்தனை அல்ல, தீய சிந்தனை அல்ல. சுப சிந்தனை. யார் சுப சிந்தனை மற்றும் சுப சிந்தனையாளர்களாக இருக்கிறார்களோ, அவர்கள் தான் 21-பிறவிக்கான ஆஸ்திக்கு அதிகாரிகளாக ஆகிறார்கள். ஆக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் -சுப சிந்தனை மற்றும் சுப சிந்தனையாளர். எண்ணிக்கை நன்றாக இருக்கிறது. ஒருபோதும் பரசிந்தனை (பிறரைப் பற்றிய சிந்தனை) செய்யக் கூடாது. வீண் சிந்தனையும் செய்யக் கூடாது. இந்த ரிசல்ட் காண்பிப்பீர்களா? ஆசிரியர்கள் அனைவரும் அவரவர்களது சென்டரில் குஜராத்தின் இந்த வரதானத்தை பக்கா செய்விக்க வேண்டும் மற்றும் ரிசல்ட் கொடுக்க வேண்டும். பரசிந்தனை நிறுத்தி விட வேண்டும், வீண் சிந்தனை நிறுத்தி விட வேண்டும். சுப சிந்தனை மற்றும் சுப சிந்தனையாளர். ஒவ்வொரு ஆத்மாவின் மீதும், அவர்கள் உங்கள் பின்னாலேயே வருபவர்களாக

இருக்கலாம், தலைகீழான நண்பனாக ஆகியிருக்கலாம், இருப்பினும் சுப சிந்தனையில் உறுதியாக இருக்க வேண்டும். தாய்மார்கள் கை உயர்த்துங்கள். ஆசிரியர்கள் ரிசல்ட் பார்க்க வேண்டும். ஒவ்வொரு வாரமும் இந்த விசயத்திற்கான ரிசல்ட் பார்க்க வேண்டும். பார்க்க முடியும் தானே! நல்லது.

பாண்டவர்கள் எழுந்து நில்லுங்கள்: பாண்டவர்களின் எண்ணிக்கையும் குறைவாக இல்லை. நல்லது, பாண்டவர்கள் என்ன செய்வீர்கள்? பாண்டவர்களின் மகிமை என்ன? பாண்டவர்கள் சதா பாண்டவ பதியின் கூடவே இருந்தனர் மற்றும் துணையாக இருந்தனர். கூடவே இருந்தனர், துணையாகவும் இருந்தனர் ஆகையால் பாண்டவர்களின் பட்டம் என்ன? வெற்றி பாண்டவர்கள். பாண்டவர்களுக்கு வெற்றி கிடைத்து விட்டது அல்லவா! காரணம் என்ன? பரமாத்மா கூடவே இருக்கின்றார் மற்றும் துணையாக இருக்கின்றார். ஆக இன்றிலிருந்து உள்ளத்தில், மனதில் தந்தையின் துணையை விட்டு விடக் கூடாது. துணையை விட்டு விடுவதால் மாயை வந்து விடுகிறது. தந்தையின் துணையை விடுவது என்றால் மாயை வரக்கூடிய வாசல் திறப்பதாகும். கதவை திறந்து விட்டால் அது வந்து விடும் அல்லவா! ஏன் வராது? 63-பிறவிகளுக்கு பழையது அல்லவா! ஆக தந்தையை மறந்து விடாதீர்கள், மறப்பது என்றால் மாயை வந்து விட்டது. எனவே சதா கூடவே இருக்க வேண்டும் மற்றும் சேவையில் உலக மாற்றத்திற்கான காரியத்தில் சதா துணையாக இருக்க வேண்டும். பரமாத்ம காரியத்தில் துணை, இதில் மனம், சொல், செயல், முகம் மற்றும் நடத்தையில் துணையாக இருங்கள். பிடித்திருக்கிறதா? கூடவே இருப்பீர்களா? துணையாக இருப்பீர்களா? மாயையின் வாசற் கதவை மூடி விட்டீர்களா? டபுள் பூட்டு போட்டு விட்டீர்களா? ஒரு பூட்டு பூட்டாதீர்கள். டபுள் பூட்டு. நிரந்தர சேவாதாரி மற்றும் நிரந்தர நினைவு. இது தான் இரட்டை பூட்டு பூட்டுவதாகும். சரிதானே? பாண்டவர்களும் தடைகளற்றவர்கள். தடைகளற்றவர்கள் கை உயர்த்துங்கள். மனதார கை உயர்த்திக் கொண்டு இருக்கிறீர்களா? யார் மனதார உயர்த்திக் கொண்டிருக்கிறீர்களோ அவர்கள் அதிகமாக அசையுங்கள். ஆசிரியர்கள் பார்த்துக் கொள்ளுங்கள். கை உயர்த்திக் கொண்டிருக்கின்றனர். நன்றாக இருக்கிறது. குஜராத் அடுத்த வீட்டுக்காரர்கள் அல்லவா! மதுவனத்திற்கு

பக்கத்து வீட்டுக்காரர்கள். ஆக பக்கத்து வீட்டுக்காரர்கள் அதிசயம் செய்வீர்கள் அல்லவா! நல்லது.

ஆசிரியர்கள் மற்றும் குமாரிகள் இருவரும் எழுந்து நில்லுங்கள்: அனைவரும் ஆசிரியராக ஆக வேண்டும் அல்லவா! குமாரிகள் என்ன ஆக வேண்டும்? குமாரிகள் ஆசிரியராக ஆக வேண்டும் தானே! அதனால் தான் ஆசிரியர்களுடன் நிற்க வைக்கப்பட்டிருக்கிறீர்கள். வேலையும் செய்ய வேண்டியிருக்கிறது எனில் பாப்தாதா கூறுகின்றார் -உலக சேவைக்கான லட்சியம் இருக்கிறது எனில் குமாரிகள் ஒவ்வொரு சனிக் கிழமைகளில், விடுமுறை இருக்கும் பொழுது சென்டரில் இருக்க வேண்டும் ஆனால் அங்கு சேவை செய்ய வேண்டும். வேலையின்றி இருந்து விடக் கூடாது. சேவைக்கான பயிற்சி செய்ய வேண்டும். சிறிது கணக்கு வழக்கு இருக்கிறது எனில் அதை நிறைவேற்ற வேண்டும் -ஒருவேளை அவசியமான கணக்கு இருக்கிறது எனில், இருக்க முடியாது. அதற்காகத் தான் வேலைக்கு செல்கிறேன் எனில் தோல்வி அடைந்து விட்டீர்கள். உண்மையிலேயே சில காரணங்கள் இருக்கின்றன, சிலருக்கு சூழ்நிலை இருக்கும் ஆனால் சிலருக்கு பிடித்திருக்கும். சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சேவை செய்யுங்கள். ஞாயிற்றுக்கிழமை முழுமையாக சேவை செய்யுங்கள். சம்ஸ்காரம் உருவாக்குங்கள். இருப்பதற்கான சம்ஸ்காரம் மட்டுமின்றி சேவைக்கான சம்ஸ்காரமும் உருவாக்குங்கள். நான் சேவாதாரி ஆவதற்காக வந்திருக்கின்றேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். பயிற்சி செய்து கொண்டே இருங்கள். எந்த அளவிற்கு பயிற்சி செய்வீர்களோ, மகிழ்ச்சி வந்து விடும். பிறகு தானாகவே ஏதாவது சாக்கு கூறிவிட்டு தன்னை விடுவித்துக் கொள்வீர்கள். குமாரிகள் சாமர்த்தியமானவர்கள்,கள்ளங்கபடமற்றவர்களாக இருப்பது கிடையாது. ஆகையால் குமாரிகள் என்றால் சுய முன்னேற்றத்திற்கு ஒவ்வொரு நேரத்திலும் அடி எடுத்து வைக்க வேண்டும். வெறும் வேலை மட்டுமின்றி சுய முன்னேற்றத்திற்கு தனது சூழ்நிலையின் அநுசாரமாக முன்னேற்றத்தை நோக்கி அடி எடுத்து வைக்க வேண்டும். ஏதோ நடந்து கொண்டிருக்கின்றோம், காரியம் செய்து கொண்டிருக்கின்றோம் என்று இருக்கக் கூடாது. எவ்வளவு நாள் செய்வீர்கள்? எவ்வளவு நாட்கள் செய்யாமல் இருப்பீர்கள்? என்று சிந்திப்பது கிடையாது. குமாரிகள் பிரம்மா குமாரிகளாக ஆகி

விட்டீர்கள். அனைத்து குமாரிகளும் பிரம்மா குமாரிகளாக இருக்கிறீர்கள். சேவை செய்யக் கூடியவர்களும் பிரம்மா குமாரிகளாக இருக்கின்றனர் ஆனால் யார் உலக நன்மைக்கான பாவனை, விருப்பம் வைத்திருக்கிறார்களோ அவர்கள் தான் பிரம்மா குமாரி. ஆக குமாரிகள் தகுதியான ஆசிரியர்களாக ஆகியிருக்கிறார்களா? சண்டையிடுபவர்களாக ஆகவில்லை தானே என்று பாப்தாதா பார்ப்பார். தகுதியான ஆசிரியர். ஏனெனில் தகுதியான ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். இன்றைய நாட்களில் என்ன நடக்கிறது எனில் பயிற்சியும் (டிரெயினிங்) எடுத்துக் கொள்கின்றனர் ஆனால் சென்டருக்கு சென்றதும் சிலர் பிரச்சனையானவர்களாகி விடுகின்றனர். ஆக கைகளாக ஆக முடியாது அல்லவா! குமாரி என்றால் பாப்தாதாவின் சேவைக்கு துணையாக இருப்பது மேலும் தடைகளற்ற துணையாக இருப்பதாகும். தன்னை அனுசரித்துச் செல்பவர்கள். அனுசரிக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டுமே தவிர எதிர்க்கக் கூடியவர்களாக இருக்கக் கூடாது. யாரையும் எதிர்ப்பவர்களாக இருக்கக் கூடாது, அனுசரிக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். ஆக இப்படிப்பட்ட குமாரிகளாக ஆவீர்களா? கை உயர்த்துங்கள். அனுசரிக்கக் கூடியவர்கள். யோசித்து கை உயர்த்துங்கள். அனைவருடனும் அனுசரித்தல், அனைவரையும் தனக்கு துணையாக ஆக்கிக் கொள்பவர்கள், தடைகளற்றவர்கள். அப்பொழுது தான் பல கைகள் உருவாகும். இப்போது கைகள் குறைவாக இருக்கின்றன. பாப்தாதா அனைத்து குமாரிகளுக்கும் கூறிக் கொண்டிருக்கின்றார். உதவியாளர்களாக ஆவீர்கள் தானே! யார் உதவியாளர்களாக ஆவீர்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள் ஆனால் எப்படிப்பட்ட உதவியாளர்! தடைகளற்ற உதவியாளர். இப்போது எழுந்து நில்லுங்கள். தடைகளற்ற உதவியாளர்களாக இருப்பீர்களா? முன் கூட்டியே வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்.

ஆசிரியர்களுடன்: ஆசிரியர்களும் குஜராத்தில் அதிகம் இருக்கின்றனர். இப்பொழுது ஆசிரியர்கள் என்ன செய்ய வேண்டும்? ஆசிரியர்கள் இப்பொழுது எல்லையற்ற வைராக்கிய விருத்திக்கான வாயுமண்டலத்தை பரப்ப வேண்டும். சென்டரிலோ அல்லது உலகத்திலோ! உலகத்திலும் வைராக்கிய விருத்திக்கான வாயுமண்டலம் அவசியமாக இருக்கிறது. ஏனெனில் கீழான நிலை,

பாவங்கள் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. வைராக்கியமின்றி இந்த ஆத்மாக்களுக்கு நன்மை ஏற்பட முடியாது. செய்தி கொடுக்கும் காரியம் என்ன செய்து கொண்டிருக்கிறீர்களோ அதை நன்றாக செய்து கொண்டிருக்கிறீர்கள். பாப்தாதாவிற்கு பிடித்திருக்கிறது ஆனால் இதன் மூலம் சகயோகிகளாக ஆகின்றனர், மைக் ஆகின்றனர். உங்களைப் போன்று வாரிசு குழந்தைகள், சமர்பண குழந்தைகள் குறைவாக ஆகின்றனர். நாலா புறங்களிலும் உள்ள கிளை நிலையங்களில் வைராக்கிய விருக்தி அவசியமானதாக இருக்கிறது. சாப்பிடுவது, குடிப்பது, அணிந்து கொள்வதில் வைராக்கிய விருக்தி அல்ல, சாதனங்களில் அல்ல ஆனால் முழுமையாக மானசீக விருத்தி. திருஷ்டி மற்றும் காரியங்களில் -நாலா புறங்களிலும் உள்ள மண்டலங்களில் இப்போது வைராக்கிய விருத்தியின் மூலம் விடுபட்ட, தேக உணர்விலிருந்து விடுபட்டு இருக்கும் அலை இருக்க வேண்டும். எல்லையற்ற வைராக்கிய விருக்தி முதலில் தேக உணர்வின் மீது வைராக்கிய விருத்தி, தேக விசயங்களின் மீது வைராக்கிய விருத்தி, தேக பாவணையின் மீது வைராக்கிய விருத்தி வேண்டும். ஆக பாப்தாதா நாலா புறங்களிலும் உள்ள குழந்தைகளிடம் இதில் கவனம் செலுத்தக் கூறுகின்றார் -பிராமணர்களிடத்தில், சகயோகி ஆத்மாக்களிடத்தில் சிரேஷ்ட முன்னேற்றம் ஏற்படுவதற்கு வைராக்கிய விருத்திக்கான வாயுமண்டலத்தை தனக்குள் மற்றும் அனைவருக்கும் பரப்ப வேண்டும், அப்போது தான் ஓசை பரவும். அனைத்து வர்க்கத்தினரும் இதையே யோசிக்கின்றனர் -பிரத்யக்ஷம் செய்ய விரும்புகின்றனர், நிகழ்ச்சிகளும் உருவாக்குகின்றனர் ஆனால் இப்போது இன்று வரை ஏற்படவில்லை. ஏன்? காரணம் என்னவெனில் நாலா புறங்களிலும் பாவ காரியம் அல்லது பிரேஷ்டாச்சார் அல்லது பிரச்சனைகள் அல்லது பதவிகளில் வைராக்கிய விருத்தி வரவில்லை. எனவே பிரத்யக்ஷதா எளிதாக ஏற்பட முடியாது. ஆக இப்போது நாலா புறங்களிலும் எல்லையற்ற விருத்தி -பிரம்மாபாபா கடைசி வரை எல்லையற்ற வைராக்கிய விருத்தியுடன் இருந்ததை பார்த்திருக்கிறீர்கள். தனது தேகத்தின் மீதும் வைராக்கிய விருத்தி. குழந்தைகளின் சம்பந்தங்களிலும் வைராக்கிய விருத்தி. ஆக என்ன செய்யப் போகிறீர்கள்? இதே லட்சியத்தை லட்சணமாகக் கொண்டு வாருங்கள். நல்லது. குஜராத்தில் உள்ளவர்கள் சேவைக்கு சதா ஆஜராகக் கூடியவர்கள். சேவையின் விருத்தியும் நன்றாக இருக்கிறது,

எண்ணிக்கையும் நன்றாக இருக்கிறது. இப்பொழுது வாரிசு மற்றும் மைக், அப்படிப்பட்ட மைக் தயார் செய்யுங்கள் அவரது ஓசையின் மூலம் தாக்கம் ஏற்பட வேண்டும். அனைவரின் வாயிலிருந்தும் இவர் கூறுகின்றார், இவர் கூறுகின்றார்... எனில் ஏதோ இருக்கும் அல்லவா! என்று வெளிப்பட வேண்டும்.

**மருத்துவர்கள் (மெடிக்கல்) மற்றும் இன்ஜினியரிங் வர்க்கம்:** நல்லது. இரண்டு வர்க்கங்களும் மிகவும் அவசியமானது. பாப்தாதா இரண்டு வர்க்கங்களின் திட்டங்களை கேட்டறிந்தார். மருத்துவர்கள் என்ன திட்டம் உருவாக்கியிருக்கிறீர்களோ, நன்றார் இருக்கிறது. பாப்தாதாவிற்கு பிடித்திருக்கிறது. வாழ்த்துக்கள். ஏன் பிடித்திருக்கிறது. ஏனெனில் அனைத்து விளக்கங்களும் தெளிவான ரூபத்தில் உருவாக்கியிருக்கிறீர்கள். என்ன செய்ய வேண்டும்? யார் செய்ய வேண்டும்? எதுவரை செய்ய வேண்டும்? எந்த ரிசல்ட் கிடைக்க வேண்டும்? இவை அனைத்தும் தெளிவான ரூபத்தில் உருவாக்கியிருக்கிறீர்கள். கிராமம் மற்றும் இளைஞர் பிரிவினர் தெளிவாக உருவாக்கினர் மற்றும் நடைமுறையில் கொண்டு வந்தனர், ஆகையால் பாப்தாதா இந்த இருவரின் திட்டங்கள் மற்றும் நடைமுறையில் கொண்டு வருவதற்கான வாழ்த்துக்கள் கொடுக்கின்றார். அதே போன்று மருத்துவர்களும் இப்போது என்ன திட்டம் உருவாக்கியிருக்கிறீர்களோ, அதை மிகவும் தெளிவாக உருவாக்கியிருக்கிறீர்கள். மேலும் ஆரோக்கியத்தின் பெயரைக் கேட்டு அனைவரும் ஆசைப்படவும் செய்வர். ஏனெனில் நாளுக்கு நாள் புதுப்புது வியாதிகள் உருவாகிக் கொண்டு இருக்கின்றன, மருந்துகளும் அதிகம் உருவாகிக் கொண்டு இருக்கின்றன, வியாதிகளும் அதிகம் உருவாகிக் கொண்டிருக்கின்றன. வியாதிகளினால் களைப்படைந்து விட்டனர். ஆக இந்த திட்டங்களை பார்த்து சேவை எளிதாகி விடும். நன்றாக தைரியம் வைத்திருக்கின்றனர். நல்ல நல்ல உதவியாளர்களும் வந்து விட்டனர் மேலும் நாலா புறங்களிலும் ஓசை பரப்புவதற்கான திட்டம் உருவாக்கியிருக்கிறீர்கள். ஒரு மண்டலத்திற்கு மட்டுமல்ல, முழு பாரதத்திற்கானது ஆகும். ஆக நாலா புறங்களிலும் பரவும்போது ஓசை நன்றாக பரவி விடும். நல்வாழ்த்துக்கள். திட்டத்தை நடைமுறைபடுத்திக் கொண்டே செல்லுங்கள். வெற்றி உங்களது பிறப்புரிமையாகும். மருத்துவர்களின் எண்ணிக்கையும் அதிகமாக

இருக்கிறது. முழு உலகிலுள்ள மருத்துவர்களை ஒன்றாக்கினால் எண்ணிக்கை அதிகமாக இருக்கும். மருத்துவர்கள் காரியத்திற்கு பயன்படுவார்கள். பின் நாட்களில் நீங்கள் அதிக சேவை செய்ய வேண்டியிருக்கும். அதிக துக்கத்தை போக்க வேண்டியிருக்கும். அனைவரும் கதறுவார்கள். நீங்கள் உடல் மற்றும் மன மருத்துவர்களாக ஆகி சேவை செய்வீர்கள். நல்லது.

இன்ஜினியரிங் மற்றும் அறிவியல்: இரண்டு துறையும் மிகப் பெரியது. நல்ல திட்டத்தை உருவாக்குங்கள். எவ்வாறு அறிவியல் வெளிப்படையான உதாரணம் காண்பிக்கின்றதோ, அவ்வாறு அமைதி சக்தியின் வெளிப்படையான நிரூபனம் காண்பியுங்கள். ஏனெனில் இன்று கேட்பதற்குப் பதில் நிரூபனம் பார்க்க விரும்புகின்றனர். எனவே அந்த மாதிரியான நிகழ்ச்சி உருவாக்குங்கள். விஞ்ஞானம் நிரூபித்து கூறுவது போன்று, விஞ்ஞானத்தின் மூலம் இது நிரூபனம் ஆகியிருக்கிறது, நன்மை ஏற்பட்டிருக்கிறது அல்லது மாற்றம் நிகழ்ந்திருக்கிறது, அதே போன்று நீங்களும் அமைதி சக்தியின் நடைமுறை நிரூபனம் உருவாக்குங்கள். அப்போது மனிதர்களிடம் ஈர்ப்பு ஏற்படும். சரி தானே! இப்போது இந்த ஆண்டு இந்த ரூபத்தில் ஏதாவது திட்டம் உருவாக்குங்கள். உருவாக்க முடியும், புத்திசாலிகளாக இருக்கிறீர்கள். உருவாக்க முடியும். நன்றாக இருக்கிறீர்கள். எப்போது வர்க்கம் உருவாக்கப்பட்டதோ, சேவையும் விருத்தி ஆகின்றது. நல்லது.

இரட்டை அயல்நாட்டினர்: அயல்நாட்டினர் அதிக சாமர்த்தியம் செய்தது பாப்தாதாவிற்கு மிகவும் பிடித்திருக்கிறது. ஒவ்வொரு குரூப்பிலும் வாய்ப்பு எடுத்துக் கொள்கின்றனர். எத்தனை தேசத்திலிருந்து வந்திருக்கிறீர்கள்? 35-நாடுகளிலிருந்து வந்திருக்கிறீர்கள். ஆக 35-நாடுகளுக்கு நன்மை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது அல்லவா! எங்கிருந்து நீங்கள் வந்திருக்கிறீர்களோ அந்த தேசத்திற்கு நன்மை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது அல்லவா! ஆக உலகிற்கு நன்மை செய்பவர் என்ற பட்டம் யதார்த்தமானது அல்லவா! எந்த ஒரு மூலையும் இருந்து விடக் கூடாது. எந்த ஒரு மூலையும் செய்தி சென்றடையாமல் இருந்து விடக் கூடாது என்று அயல் நாட்டிலும் திட்டம் உருவாக்கியிருக்கின்றனர் என்ற செய்தி பாப்தாதா கேள்விப்பட்டார். உருவாக்கியிருக்கிறீர்கள் அல்லவா! ஆக தந்தையின்

இந்த உலகிற்கு நன்மை செய்யவர் என்ற பட்டத்தை நீங்கள் நல்ல முறையில் நடைமுறையில் கொண்டு வந்திருக்கிறீர்கள். முதலில் பாரதத்திற்கு மட்டும் நன்மை செய்யவராக இருந்தார். இப்போது உடனடியாக கூறுகின்றோம் -உலகிற்கு நன்மை செய்யவர். ஆக உலகிற்கு நன்மை செய்பவர் என்ற தந்தையின் இந்த பட்டம் அயல்நாட்டினர்களாகிய நீங்கள் நடைமுறையில் கொண்டு வந்திருக்கிறீர்கள் மேலும் அயல்நாட்டினர் ஒரு விசயத்தில் அதிபுத்திசாலியாக இருக்கின்றனர். எந்த விசயத்தில் என்று கூறட்டுமா? அயல்நாட்டினர் எப்பொழுதும் கை மீது கை கோர்த்து நடக்கின்றனர். வழக்கம் இருக்கிறது. ஆக அயல்நாட்டினர் தந்தையின் கை மீது கை கோர்த்து நடக்கக் கூடியவர்கள். அப்படித் தானே? கை மீது கை இருக்கிறதா? கை என்றால் எது? நிராகாரமானவருக்கு கை கிடையாது. நிராகாரமானவரின் கை ஸ்ரீமத் ஆகும். ஆக ஸ்ரீமத் என்ற கை மீது கை கோர்த்து நடப்பவர்கள் தானே! கை மீது கை கோர்த்து நடப்பதில் ஒருபோதும் களைப்படைந்து விடுவதில்லை அல்லவா! களைப்படைகிறீர்களா? சிறிதளவு களைப்படைகிறீர்களா? சதா தந்தையின் ஸ்ரீமத் என்ற கை மீது கை அதாவது துணையாக உதவி செய்யக் கூடியவர்களாக இருக்கிறீர்கள். தந்தை என்ன கூறுகின்றாரோ அதை செய்தேன். இப்படி இருக்கிறீர்கள் தானே? இருக்கிறீர்களா? எதிரில் உள்ளவர்கள் இப்படி இருக்கிறீர்களா? பக்கா? பார்த்துக் கொள்ளுங்கள், பாப்தாதா கணக்கு பார்ப்பார் அல்லவா! தந்தை கூறினார், குழந்தைகள் செய்தனர். அவர்கள் தான் நல்ல குழந்தை. செய்யலாமா? வேண்டாமா? என்று யோசிக்கக் கூடாது. இவ்வாறு நடக்காது, அவ்வாறு நடக்காது. தந்தை கூறினார், நான் செய்தேன். இது தான் பக்கா வாரிசு. யோசிக்கக் கூடியவர் அல்ல, செய்யக்கூடியவர். செய்கின்றேன். கண்டிப்பாக செய்வேன் பாருங்கள் என்று சிலர் கூறுகின்றனர். உடனடி செயல், உடனடி தானம் என்று அவர்கள் கூறுகின்றனர் ஆனால் இங்கு பாப்தாதா கூறுகின்றார் -ஒவ்வொரு காரியத்திற்கும் உடனடியாக பின்பற்றுவது மகா புண்ணியமாகும். மகா புண்ணியம் மற்றும் புண்ணியம் இரண்டிற்கும் வித்தியாசம் இருக்கிறது. பக்தியிலும் பார்த்திருப்பீர்கள் -பலி கொடுக்கும் போது ஒரே வெட்டில் பலியாவதை மகா பிரசாதம் என்று கூறப்படுகிறது, யோசித்து யோசித்து இறந்தால் அதை மகா பிரசாதம் என்று கூற மாட்டார்கள். ஆக ஸ்ரீமத்'ஐ உடனேயே பின்பற்ற வேண்டும், இதைத் தான் மகா புண்ணியம் என்று

கூறப்படுகிறது. சரி தானே! அதிபுத்திசாலிகளாக இருக்கிறீர்கள். நன்றாக இருக்கிறது, இந்த சிந்தி குரூப்பும் நன்றாக இருக்கிறது. மதுவனத்தின் அலங்காரம் அல்லவா! ஆக மிகவும் நன்றாக இருக்கிறது. இரட்டை அயல் நாட்டினர் என்றால் இரட்டை முயற்சியாளர். முந்தைய குரூப்பில் வரதானம் கொடுத்திருந்தேன் -இரட்டை அயல் நாட்டினர் என்றாலே இரட்டை முயற்சியாளர். யோசிக்கும் முயற்சியாளர் அல்ல. நல்லது. மற்றபடி சேவை செய்து கொண்டிருக்கிறீர்கள். எங்கிருந்தெல்லாம் வந்திருக்கிறீர்களோ, சேவை நன்றாக செய்து கொண்டிருக்கிறீர்கள். சுய முயற்சியிலும் கவனம் இருக்கிறது. இன்னும் தீவிரம் காட்ட வேண்டும். முயற்சி செய்கிறீர்கள் ஆனால் தீவிரமாக செய்ய வேண்டும். ஏனெனில் நேரம் மிக விரைவாக சென்று கொண்டிருக்கிறது. எதிர்பாராமல் திடீரென்று எது வேண்டுமென்றாலும் நடைபெறலாம். நல்லது. அனைவருக்கும் ஆசீர்வாதமும் இருக்கிறது மேலும் உள்ளப்பூர்வமான அன்பு நினைவுகளும் இருக்கிறது. நல்லது.

நாலா புறங்களிலும் உள்ள யோகயுக்த், யுக்தியுக்த், ராஜ்யுக்த், தானும் ரகசியங்களை அறிந்து சதா திருப்தியாக இருந்து சதா திருப்திப்படுத்தக் கூடியவர்கள் -தான் மட்டும் திருப்தியாக இருந்து விடக் கூடாது, திருப்திபடுத்தவும் வேண்டும். இவ்வாறு அன்புக் கடலில் மூழ்கியிருக்கும் குழந்தைகளுக்கு, சதா பாப்சமான் ஆவதற்கான தீவிர வேகத்தில் முயற்சி செய்யும் குழந்தைகளுக்கு, சதா அசம்பவத்தையும் எளிதாக சம்பவம் ஆக்கக்கூடிய சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, சதா தந்தையின் கூடவே இருக்கக் கூடிய மற்றும் தந்தையின் சேவையில் துணையாக இருக்கக் கூடிய -இப்படிப்பட்ட மிக மிக அதிர்ஷ்டசாலி மற்றும் அன்பான குழந்தைகளுக்கு இன்றைய அவ்யக்த நாளுக்கான, அவ்யக்த ஃபரிஸ்தா சொரூபத்தின் அன்பு நினைவுகள் மற்றும் உள்ளப்பூர்வமான ஆசீர்வாதங்கள். நல்லது.

இன்று வதனத்தின் காட்சி நன்றாக இருந்தது. இன்று பாப்தாதா வதனத்தில் அனைத்து அட்வான்ஸ் பார்ட்டிகளை அழைத்தார். அட்வான்ஸ் பார்ட்டிகளாகிய நம் அனைவரின் அன்பு நினைவுகள் அட்வான்ஸ் நிலையுடையவர்களுக்கு கொடுங்கள் என்று அட்வான்ஸ் பார்ட்டியினர் கூறினர். ஆக நீங்கள் அனைவரும் அட்வான்ஸ் நிலையுடையவர்கள். அவர்கள் அட்வான்ஸ் பார்ட்டிகள். உங்களுக்கு

அதிக அன்பு நினைவுகள் கொடுத்தனர். இன்று அதிக ஆண்டுகள் அவ்யக்த நடிப்பு நடிக்கக் கூடிய நிமித்த தாதி மற்றும் குல்ஸார் தாதி -இருவரையும் தன்னுடன் அமர்த்திக் கொண்டார். அதிக ஆண்டுகள் அவ்யக்த நடிப்பு ஆகி விட்டது, வியக்த சேவையை விட அலௌகீக சேவையின் நடிப்பு அதிகமாக நடைபெற்றது. ஆக இன்று பாப்தாதா இருவருக்கும் அதிக அன்பு செலுத்தினார், மேலும் அட்வான்ஸ் பார்ட்டியினர் வரவேற்பு அளித்தனர். பாப்தாதா இருவரின் கழுத்திலும் மாலை அணிவித்தார், அரவணைத்துக் கொண்டார் மேலும் இருவரின் காரியங்களையும் கூறினார். தாதியைப் பற்றி கூறும் பொழுது தாதி குடும்பம் மற்றும் சேவையை, தன்னுடன் இருப்பவர்களை, அனைவரையும் மிக நல்ல முறையில் நடத்தினார், நடத்துவதற்கு நிமித்தம் ஆனார் மேலும் நிமித்தம் என்று புரிந்து கொண்டு நடத்தினார். மேலும் குல்சார் குழந்தை பாப்தாதாவை தனக்குள் வரவழைக்கும் காரியம் செய்தார். ஆக இருவரின் காரியமும் விசேஷமானதாக இருந்தது. ஆகையால் இருவரையும் வதனத்தில் விசேஷமாக வரவேற்பு கொடுக்கப்பட்டது, கூடவே ஆதியிலிருந்து இருக்கக்கூடிய ஆதி ரத்தினங்களாகிய தாதிகளுக்கும் வரவேற்பு கொடுக்கப்பட்டது. பாப்தாதா இந்த விசேஷதாவைப் பற்றி தான் கூறிக் கொண்டிருந்தார் -இருவரின் காரியத்திலும் வெற்றி கிடைத்தற்குக் காரணம் நான் என்பது கிடையாது.

குல்சார் குழந்தையையும் மகிமை செய்தார் -நிர்மலமானவர், பணிவுடையவர், சேவைக்கு நிமித்தமானார் மேலும் தனக்குள் பரமாத்மா மற்றும் பிரம்மாபாபா இருவரையும் வரவழைக்கும் சக்தியை காரியத்தில் பயன்படுத்தினார். கடைசி நேரத்தில் தாதியின் (தாதி பிரகாஷ்மணி) கை மீது கை வைத்து பாப்தாதா மனோ பலத்தை (வில் பவர்) உயிலாக கொடுத்தார். அந்த சக்தியை காரியத்தின் தடையின்றி பயன்படுத்தினார். ஆக இருவரின் விசேஷதா குறைந்தது கிடையாது. இருவரும் தங்களது நடிப்பை மிகவும் நன்றாக நடித்தார்கள். இப்பொழுதும் நடித்துக் கொண்டிருக்கிறார்கள். யார் விசேஷ காரியத்திற்கு நிமித்தமாக ஆகிறார்களோ அவர்களுக்கு பாப்தாதா மற்றும் பிராமணர்களின் வாழ்த்துக்கள் அவசியம் கிடைக்கும் என்று பாப்தாதா கூறுகின்றார். அவர்களுக்கு சுப பாவனை, சுப விருப்பங்களின் வாழ்த்துக்கள் அதிகமாக கிடைக்கிறது. ஆக இருவரின்

பாகமும் தனிப்பட்டதாக இருந்தது ஆனால் வெற்றியுடையதாக இருந்தது, வெற்றியானதாக இருக்கும். அவ்யக்த பாகமும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நடைபெற்றுக் கொண்டிருக்கும் மேலும் சக்தி கொடுக்கும். நேரத்தை நெருக்கத்தில் கொண்டு வரும் பாகம் நன்றாகவே நடைபெறும் மேலும் அனைத்து தாதிகள் மற்றும் இரண்டு தாதிகளையும் கூடவே இருந்து சேவைக்கு நிமித்தமாக இருக்கக்கூடிய சகோதரிகள், அவர்கள் மிக நன்றாக யோகயுக்த் ஆக சேவை செய்தனர். செய்து கொண்டிருக்கின்றனர். அவர்களையும் பாப்தாதா வெளிப்படுத்தி வரதானம் கொடுத்தார் -சதா இவ்வாறே யோகயுக்த், ராஜயுக்த் ஆகி நடந்து கொள்ளுங்கள். தந்தையின் ஆசீர்வாதங்களின் கைகள் உங்களது நெற்றியில் இருக்கிறது. இவ்வாறு வதனத்தில் காட்சிகள் நடைபெற்றது மேலும் அட்வான்ஸ் பார்ட்டிகள் மற்றும் சேவைக்கு துணையாக இருந்த ஆதி ரத்தினங்கள் அனைவரும் வெளிப்பட்டனர். அவர்கள் இருவரின் மீதும் இன்று வதனத்தில் தங்கமலர்கள் தூவினர். தங்கமலர்களை பார்த்திருக்கிறீர்களா? மிக லேசாக இருக்கும், சுமையாக இருக்காது. வலி ஏற்படும் அளவிற்கு இருக்காது. மிக லேசான இலையாக இருக்கும் ஆனால் நல்ல வர்ணங்களுடன், நல்ல டிசைன்களுடன் இருக்கும். ஆக இன்று பாப்தாதா இருவரின் பாகத்தின் விசேஷதாவைக் கூறி அனைவரின் மூலம் மீண்டும் தங்கமலர்களின் மழையை பொழியச் செய்தார். பாப்தாதா இருவருக்கும் அதிக அன்பு செலுத்தினார் மேலும் இருவரும் பாபா பாபா என்று கூறிக் கொண்டே இருந்தனர். பாபா நீங்கள் செய்வித்தீர்கள், பாபா நீங்கள் செய்வித்தீர்கள், பாபா நீங்கள் செய்வித்தீர்கள் -இவ்வாறு பாட்டு பாடிக் கொண்டே இருந்தனர். இது வதனத்தின் காட்சியாகும். நல்லது.

**தாதிகளுடன்:** ஆதி ரத்தினம். ஆதி ரத்தினங்களின் ஜொலிப்பே தனிப்பட்டது. நன்றாக இருக்கிறது. நிமித்தமாக இருக்கக் கூடிய நீங்கள் அனைவரும் இந்த குரப் முழுவதும் நிமித்தமானவர்கள் தானே -நிமித்தமானவர்களின் இந்த முழு குரூப் நன்றாக இருக்கிறது. ஒருவருக்கொருவர் சகயோகம் செய்து இப்பொழுதும் நடத்திக் கொண்டு இருக்கிறீர்கள். நன்றாக நடத்திக் கொண்டு இருக்கிறீர்கள், பாப்தாதா பார்த்து ஆசீர்வாதங்கள் கொடுக்கின்றார். ஒருவர் கூறுகின்றார், மற்றொருவர் ஏற்றுக் கொள்கின்றார், காரியம்

வெற்றியுடையதாகி விட்டது. ராய்பகதூராகவும் இருக்கிறீர்கள் மற்றும் காரியங்கள் செய்யக் கூடியவர்களாகவும் இருக்கிறீர்கள் ஆனால் அனைவரும் இணைந்து -பாண்டவர்கள் நிமித்தமாக இருந்தாலும், சக்திகள் நிமித்தமாக இருந்தாலும் -நன்றாக நடத்திக் கொண்டு இருக்கிறீர்கள் மேலும் நன்றாகவே நடைபெறும். இதுவே பாப்தாதாவின் வரதானமாகும்.

நிர்மல் சாந்தா தாதியிடம்: குஷியாக இருக்கிறீர்கள். நோய் வந்தாலும் துடிப்பது கிடையாது, இது மிகவும் நல்ல விசயமாகும். யோகாவும் நன்றாக செய்து கொண்டிருக்கின்றாய். மிகவும் நல்லது. (குஷியாக இருங்கள், மகிழ்ச்சியாக இருங்கள் என்ற பாட்டு தாதி பாடினார்). இந்த பாட்டு மிகவும் நன்றாக இருக்கிறது. நடிப்பும் நன்றாக நடித்துக் கொண்டிருக்கிறாய்.

சாந்தாமணி தாதியிடம்: நன்றாக இருக்கின்றாய். சரீரத்தை நடத்திக் கொண்டே இரு, நடந்து விடும். ஏனெனில் மனோ பலம் இருக்கிறது அல்லவா! இவ்வளவு ஆண்டுகளுக்கான மனோ பலம் காரியத்திற்கு பயன்படுகிறது. காரியத்தில் பயன்படுத்திக் கொண்டிருக்கிறாய், பயன்படுத்திக் கொண்டே இரு. சேவையும் நன்றாக செய்து கொண்டிருக்கின்றாய்.

மனோகர் தாதியிடம்: ஆதி ரத்தினங்கள் அனைவரின் பார்வையிலும் இருக்கின்றனர். எப்படி இருந்தாலும், எங்கு இருந்தாலும் -ஆனால் அனைவரின் பார்வையில் ஆதி ரத்தினங்கள் இருக்கின்றனர். அனைவரும் ஆதி ரத்தினங்கள். மனோபலம் இருக்கிறது. (பாபா மிகவும் நன்றாக இருக்கின்றார் என்று தாதி ஜானகி கூறினார்). குழந்தைகளும் நன்றாக இருக்கின்றனர். நல்ல தந்தை தனக்குச் சமம் ஆக்கியிருக்கின்றார். நல்லது.

இன்று விசேஷமாக பிரம்மாபாபா உங்கள் ஒவ்வொருவரையும் நினைவு செய்து கழுத்தில் மிகப் பெரிய மாலை அணிவித்தார். (நடைமுறையில் செய்து காண்பித்தார்) நடைமுறையில் செய்ய முடியாது அல்லவா! ஏனெனில் ஒருவர் மட்டுமே கிடையாது, அனைவரும் இருக்கின்றனர். அனைவரும் உரிமையாளர்கள்.

பிரம்மாபாபாவிற்கு குழந்தைகளின் மீது அதிக அன்பு இருக்கிறது. அதே போன்று தாதியையும் மறப்பது கிடையாது. அடிக்கடி நினைவு வருகிறது. எப்படி இருக்கிறீர்கள்? எப்படி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது? சரியாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறதா? என்னிடம் கூறுங்கள், எப்படி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது? என்று கேட்டுக் கொண்டே இருப்பார். இருப்பினும் தோழிகளின் நினைவும் வரும், பாண்டவர்களின் நினைவும் வரும். காரியங்கள் எல்லாம் சரியாக நடந்து கொண்டிருக்கிறதா? என்று தான் கேட்பார். சரியாக நடைபெற்றும் கொண்டிருக்கிறதா? சரியாகத் தானே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தாதியும் குஷி மற்றும் பிரம்மாபாபாவும் அவரை விட குஷி. (தாதியின் பாகம் என்ன?) தாதி சக்திகள் மற்றும் டச்சிங் கொடுத்து அவர்களை தீவிரப்படுத்துவார். சிறிய வயதிலேயே அவரது மனதில் அதிக திட்டங்கள் உருவாகும். (பிறப்பு எடுத்து விட்டாரா?) இப்பொழுது கிடையாது சரியான நேரத்தில் பிறப்பு எடுப்பார் அல்லவா! இப்பொழுது எடுக்கவில்லை. சரியான நேரத்தில் தான் எடுப்பார். இன்றைய நாளின் யதார்த்தமாகும் ஆனாலும் உங்கள் அனைவரையும் சூட்சுமத்தில் சந்தித்துக் கொண்டு இருப்பார். (உங்களது நினைவுச்சின்னம் சோமநாத் சென்று கொண்டிருக்கின்றார் என்று சகோதரர் ரமேஷ் கூறினார்) செய்தி அனைவருக்கும் கிடைக்கிறது ஆனால் இப்போது அந்த மாதிரியான மைக் மற்றும் வாரிசு உருவாகவில்லை, அதை உருவாக்குங்கள். ஏனெனில் பக்தியின் ரூபத்திலும் அது பெரியதாகும். செய்தி கொடுப்பது சரிதான் ஆனால் யாராவது நிமித்தம் ஆக வேண்டும். இப்போது முயற்சி செய்யுங்கள். உருவாக்க முடியும், சிறிது உழைப்பு செய்ய வேண்டும். ஏனெனில் பக்தியின் தாக்கம் இருக்கிறது.

**நாராயணன் தாதா மற்றும் மனோஜ் உடன்:** குஷியாக இருக்கிறீர்கள். சரீர நிர்வாகத் திற்கான கவலை கிடையாது. இவருக்கு இருக்கிறதா? கிடையாது. கவலையற்று இருக்கிறீர்களா? ஒருபோதும் யோசிக்கக்கூடாது. உன்னுடைய குடும்பம் எல்லையற்றது. ஆகையால் கவலையற்று இருக்க வேண்டும், எந்த கவலையும் கூடாது. (பாபா சேவையில் இப்போது ஈடுபடுத்துங்கள்) நல்லது, கலந்து ஆலோசித்து பிறகு கூறுகின்றோம்.

**பூபால் சகோதரரிடம்:** பாப்தாதா அனைவரையும் நினைவு செய்து கழுத்தில் மாலை அணிவித்தார். அனைவரையும் நினைவு செய்கின்றார். தாதி தனது புஜங்களை மறந்து விட மாட்டார். பெரியவர்களை விட்டு விடுங்கள் ஆனால் புஜங்களையும் மறந்து விட மாட்டார். நல்லது.

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺
✺✺✺✺✺✺✺

# 02.02.2008 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சம்பூரண தூய்மை மூலமாக ஆன்மீக ராயல்ட்டி (ராஜரீகம்) மற்றும் உயர் அந்தஸ்தை (பர்சனாலிட்டி) அனுபவம் செய்து கொண்டே, தன்னுடைய மாஸ்டர் ஞான சூரிய சொரூபத்தை எழுச்சியுறச் செய்யுங்கள் (எமர்ஜ்)!

இன்று பாப்தாதா நாலா பக்கமும் உள்ள தனது ராயல்ட்டி மற்றும் பர்சனாலிட்டியுள்ள குடும்பத்தை பரிவார்) பார்க்கின்றார். இந்த ராஜரீகம் (ராயல்ட்டி) மற்றும் ஆன்மீக உயர் அந்தஸ்திற்கான (பர்சனாலிட்டி) அஸ்திவாரம் சம்பூரண தூய்மை (பியூரிட்டி) தூய்மையின் அடையாளம் எல்லோருடைய நெற்றியிலும், எல்லோருடைய சிரசின் மீதும் (தலை) ஒளிக்கிரீடம் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. இவ்வாறு ஒளி வீசிக் கொண்டிருக்கின்ற கிரீடதாரி. ஆன்மீக ராஜரீகம் (கம்பீரம்) மற்றும் ஆன்மீக உயர் அந்தஸ்துடையவர்கள், பிராமண குடும்பத்தைச் சேர்ந்த நீங்கள் தான், ஏனெனில் தூய்மையை தங்களுடையதாக ஆக்கிக் கொண்டிருக்கிறீர்கள். பிராமண ஆத்மாக்களாகிய உங்களுடைய தூய்மையின் பிரபாவம், ஆதி காலத்திலிருந்து பிரசித்தமாக இருக்கிறது. புகழ் வாய்ந்ததாக! உங்களுடைய அநாதி மற்றும் ஆதி காலம் பரந்தாமம் மற்றும் சத்யுகம் நினைவுக்கு வருகிறதா? நினைவுக்குக் கொண்டு வாருங்கள். அநாதி காலத்திலும் பரந்தாமத்தில் இருக்கும்போது கூட தூய்மையான ஆத்மாக்களாகிய நீங்கள் ஆத்ம ரூபத்தில் இருந்தபோதும் கூட விசேஷமாக ஒளி வீசும் நட்சத்திரமாக, பிரகாசித்துக் கொண்டிருக்கிறீர்கள். மற்ற ஆத்மாக்களும் இருக்கின்றார்கள் ஆனால் நட்சத்திரங்களாகிய உங்கள் பிரகாசம் மற்றெல்லோருடனும் இருந்தபோதிலும், விசேஷ ஒளி வீசிக்

கொண்டிருக்கிறது. எப்படி! ஆகாயத்தில் அநேக நட்சத்திரங்கள் உள்ளன ஆனால் ஒரு சில நட்சத்திரங்கள் மட்டும் விசேஷமாக ஒளி வீசிக் கொண்டிருக்கின்றன. நீங்கள் எல்லோரும் எப்படி இருக்கிறோம் என்று உங்களைப் பார்க்கின்றீர்களா? ஆரம்பத்தில் (ஆதிகாலம்) உங்களுடைய தூய்மையின் கம்பீரம் மற்றும் அந்தஸ்து எவ்வளவு மகானாக இருந்திருக்கிறது! எல்லோரும் ஆதி காலத்திற்கு வந்து சேர்ந்து விட்டீர்களா? வந்து சேருங்கள். சோதித்துப் பாருங்கள். என்னுடைய கிரணத்தின் ஒளி எத்தனை சதவிகிதம் உள்ளது? ஆதிகாலத்திலிருந்து, அந்திம காலம் வரை உங்களுடைய தூய்மையின் கம்பீரமும், அந்தஸ்தும் சதா காலம் இருக்கிறதா? அநாதி காலத்தில் ஒளி வீசிக் கொண்டிருக்கும் நட்சத்திரம், ஒளி வீசிக் கொண்டே தந்தையோடு கூடவே இருப்பவர்கள். இப்போதே. உங்களுடைய விசேஷத்தை அனுபவம் செய்யுங்கள். அநாதி காலத்திற்கு எல்லோரும் வந்து சேர்ந்து விட்டீர்களா? பிறகு முழு கல்பத்திலும், தூய்மையான ஆத்மாக்களாகிய உங்களுடைய ராயல்ட்டி. வேறு விதமாக இருக்கிறது. மேலும், ஆத்மாக்களாகிய உங்களைப் போல யாரும் சம்பூரண தூய்மை ஆகவில்லை. தூய்மை, பிறப்புரிமையாக, விசேஷ ஆத்மாக்களாகிய உங்களுக்கு தந்தையிடமிருந்து கிடைத்திருக்கிறது. இப்போது ஆதிகாலத்திற்கு வாருங்கள். அநாதி காலத்தையும் பார்த்தீர்கள். இப்போது ஆதி காலத்தில் (சத்யுகம்) உங்களுடைய தூய்மையின் கம்பீர சொரூபம் எவ்வளவு மகானாக இருக்கிறது! எல்லோரும் சத்யுகம் வந்து சேர்ந்து விட்டீர்களா? சர்ந்து விட்டீர்களா? வந்து விட்டீர்களா? எவ்வளவு அன்பான சொரூபமாக இருக்கிறது தேவதா ரூபம்! தேவதைகளைப் போன்ற ராயல்ட்டியும், பர்சனாலிட்டியும் முழு கல்பத்திலும், வேறு எந்த ஒரு ஆத்மாவுக்கும் இல்லை, தேவதா ரூபத்தின் பிரகாசத்தை அனுபவம் செய்கிறீர்கள் அல்லவா இவ்வளவு ஆன்மீக பர்சனாலிட்டி தூய்மையின் காரணமாக அடைந்ததாகும். இப்போது தேவதா ரூபத்தை அனுபவம் செய்தவாறே மத்ய காலத்திற்கு (துவாபரயுகம்) வாருங்கள். வந்து விட்டீர்களா? வருவதும் அனுபவம் செய்வதும் சகஜமாக இருக்கிறதல்லவா? ஆகவே மத்ய காலத்தையும் பாருங்கள் உங்களுடைய பக்தர்கள், பூஜைக்குரிய ஆத்மாக்களாகிய உங்களுக்கு பூஜை செய்கிறார்கள். சித்திரங்களாக வரைகிறார்கள். சித்திரம் எவ்வளவு கம்பீரமாக இருக்கிறது மேலும் எவ்வளவு சிரத்தையுடன் பூஜை செய்கிறார்கள். உங்களுடைய பூஜைக்குரிய

சித்திரம் கண் முன்னால் வந்து விட்டதல்லவா? சித்திரம் தாமாத்மாக்களுக்கும் கூட தயார் செய்கிறார்கள் ஆனால் உங்களுடைய சித்திரத்தில் காணப்படும் ஆன்மீகம் மற்றும் விதிபூர்வமாக செய்யப்படும் பூஜையில் வித்தியாசமிருக்கிறது. ஆகவே உங்களுடைய பூஜைக்குரிய சொரூபம் எதிரில் வந்து விட்டதா? நல்லது இனி அந்திம காலமாகிய சங்கமத்திற்கு வாருங்கள். இந்த ஆன்மீக டிரில் செய்து கொண்டிருக்கிறீர்கள் அல்லவா? சுற்றி வாருங்கள். உங்களுடைய தூய்மை உங்களுடைய பிராட்தியை அனுபவம் செய்யுங்கள். அந்திம காலத்தில் சங்கமத்தில் பிராமண ஆத்மாக்களாகிய உங்களுக்கு பரமாத்மாவின் பாலனை, பரமாத்மாவின் அன்பு, பரமாத்மாவின் படிப்பினுடைய பாக்கியம், கோடியில் ஒரு ஆத்மாவுக்குத்தான் கிடைக்கிறது பரமாத்மாவின் நேர்முக படைப்பு, முதல் படைப்பு -தூய்மையான ஆத்மாக்களாகிய நீங்கள் உலகிலுள்ள மற்ற ஆத்மாக்களுக்கும் கூட முக்தியை ஆஸ்தியாக தந்தையிடமிருந்து கிடைக்கச் செய்கிறீர்கள். ஆகவே இந்த முழு சுற்றில் அநாதி காலம், ஆதி காலம், மத்ய காலம் மற்றும் கடைசி காலம் என்ற முழு சுற்றிலும் இவ்வளவு சிரேஷ்ட பிராப்திக்கான ஆதாரம் தூய்மை தான். முழுவதும் சுற்றி வந்தீர்கள். இப்போது உங்களை சோதித்துப் பாருங்கள். உங்களைப் பாருங்கள். பார்க்கும் கண்ணாடி இருக்கிறதல்லவா? உங்களைப் பார்க்கும் கண்ணாடி இருக்கிறதா? யாரிடம் இருக்கிறதோ. அவர்கள் கை உயர்த்துங்கள். கண்ணாடியிருக்கிறது. சுத்தமாக இருக்கிறதா கண்ணாடி? அப்படியானால், தன்னுடைய தூய்மையின் சதவிகிதம் எவ்வளவு என்று கண்ணாடியில் பாருங்கள். தூய்மை என்பது பிரம்மச்சரியம் மட்டுமல்ல ஆனால் பிரம்மாச்சாரி மனம், சொல், செயல், சம்பந்தம், தொடர்பு எல்லாவற்றிலும் தூய்மை இருக்கிறதா? எத்தனை சதவிகிதம் இருக்கிறது? சதவிகிதம் கணக்கிடத் தெரியுமா? டீச்சர்களுக்குத் தெரியுமா? பாண்டவர்களுக்குத் தெரியுமா? கெட்டிக்காரர்கள். மாதாக்களுக்குத் தெரியுமா? தெரியுமா தாய்மார்களுக்கு? நல்லது. தூய்மையை கணிக்கும் விதம் விருத்தி, திருஷ்டி மற்றும் கிருத்தி (உள்ளுணர்வு, பார்வை மற்றும் செயல்) இந்த மூன்றையும் சோதியுங்கள். விருத்தி சம்பூரண தூய்மையானதாக இருந்தால், அது புத்தியில் வந்து விட்டதல்லவா? போசித்துப் பாருங்கள் சம்பூரண தூய்மையுள்ள உள்ளுணர்வு (விருத்தி என்பது, ஒவ்வொரு ஆத்மாவிடமும், சுப பாவனை மற்றும் சுப காம்னா (சுப அபிலாஷை)

அனுபவசாலிகள் தானே? பிறகு திருஷ்டி எப்படியிருக்கும்? ஒவ்வொரு ஆதிமாலையும், ஆத்ம ரூபமாக பார்ப்பது. ஆத்மீக நினைவிலிருந்து பேசுவது, நடப்பது சுருக்கமாகக் கூறுகிறேன். விவரமாக நீங்கள் சொற்சொழிவு செய்ய முடியும் அடுத்து கிருத்தி (செயல்) என்பது கர்மத்தில் நடைமுறையில் சுகத்தை எடுப்பது சுகத்தைக் கொடுப்பது இப்படி சோதிக்க வேண்டும் என்னுடைய விருத்தி திருஷ்டி. கிருத்தி இம்மாதிரியாக இருக்கிறதா? சுகம் பெற வேண்டும். துக்கம் அடையக்கூடாது. சோதியுங்கள். எப்போதாவது துக்கம் எடுத்துக் கொள்வதில்லை அல்லவா? அல்லது அவ்வப்போது கொஞ்சம், கொஞ்சம் எடுக்கிறீர்களா? துக்கம் கொடுப்பவர்கள் இருக்கிறார்கள் அல்லவா? உதாரணமாக ஒருவர் துக்கம் கொடுக்கிறார் என்றால், நீங்கள் அவரைப் பின்பற்ற வேண்டுமா? பின்பற்ற வேண்டுமா? கூடாதா? யாரைப் பின்பற்ற வேண்டும்? துக்கம் கொடுப்பவரையா அல்லது தந்தையையா? தந்தை அதாவது பிரம்மாபாபா, நீராகார் விஷயம் இருக்கவே இருக்கிறது ஆனால் பிரம்மாபாபா எந்தக் குழந்தையினுடைய துக்கத்தையும் ஏற்றுக் கொண்டாரா? சுகம் கொடுத்தார். சுகம் பெற்றார். தந்தையைப் பின்பற்ற வேண்டுமா? அல்லது எப்போதாவது எடுக்க வேண்டியதாகவும் இருக்கிறதா? பெயரே துக்கம் எப்போது துக்கம் கொடுக்கிறார்களோ அல்லது நிந்தனை செய்கிறார்களோ, அப்போது இது நல்லதல்ல என்பது உங்களுக்குத் தெரியும். யாராவது உங்களை நிந்தனை செய்தால், அது நல்லது என்று நீங்கள் நினைக்கிறீர்களா? கெட்டது என்று தானே நினைக்கிறீர்கள் ஆகவே, அவர் உங்களுக்குத் துக்கம் கொடுக்கின்றார் அல்லது நிந்தனை செய்கின்றார். அதாவது கெட்ட பொருளை உங்களுக்கு யாராவது கொடுக்கிறார்கள் என்றால் நீங்கள் அதை வாங்கிக் கொள்வீர்களா? வாங்கிக் கொள்வீர்களா? கொஞ்ச நேரத்திற்காக? ரொம்ப நேரம் அல்ல கொஞ்ச நேரம் மட்டும் கெட்ட பொருள் வாங்க கூடியதா? அப்படியானால் துக்கத்தையோ, நிந்தனையையோ எதற்காக வாங்குகிறீர்கள்? அதாவது மனதில் பாதிப்பை ஃபீலிங்) ஏன் உண்டாக்குகிறீர்கள்? ஆதலால் உங்களையே கேட்டுப் பாருங்கள் நாள் துக்கம் எடுத்துக் கொள்கிறேனா? அல்லது துக்கத்தை மாற்றம் செய்து பார்க்கிறீர்களா? முதலாவது வரிசையில் அமர்ந்திருப்பவர்கள் என்ன நினைக்கிறீர்கள்? துக்கம் எடுப்பது சரியா? சரி தானா? மதுபன் வாசிகள் கூறுங்கள், சரியா? கொஞ்சம், கொஞ்சம் வாங்கிக் கொள்ள வேண்டுமா?

முதலாவது வரிசை, துக்கம் வாங்கிக் கொள்ள வேண்டுமல்லவா! வாங்கக்கூடாது ஆனால் வாங்கிக் கொள்கிறீர்கள். தவறுதலாக வாங்கிக் கொள்கிறீர்கள். இந்த துக்கத்தின் காரணமாக பாதிக்கப்படுவது யார்? மனதில் குப்பையை வைத்துக் கொண்டால் கஷ்டப்படுவது யார்? எங்கே குப்பை இருக்கிறதோ, அங்கு தான் பாதிப்பு இருக்குமல்லவா? ஆகையால், அந்த சமயம் உங்களுடைய ராயல்ட்டி மற்றும் பர்சனாலிட்டியை எதிரில் கொண்டு வாருங்கள். மேலும் அப்போது உங்களை எந்த சொரூபத்தில் பார்க்க வேண்டும்? உங்களுடைய டைட்டில் என்னவென்று தெரியுமா? உங்களுடைய டைட்டில் பட்டம் -சகன் (பொறுமை) ஷீத்தலத்தா தேவி, சகன் ஷீத்தலத்தா தேவ்! ஆகவே நீங்கள் யாராக இருக்கிறீர்கள்? சகன் ஷீத்தலத்தா தேவிகள் சகன் ஷீத்தலத்தா தேவர்கள். சரிதானா? சில சமயம் ஆகி விடுகிறது உங்களுடைய ஸ்தானத்தை நினைவு செய்யுங்கள். சுவமான் நினைவு செய்யுங்கள். நான் யார்? இதை நினைவில் கொண்டு வாருங்கள். முழு கல்பத்திலும் விசேஷ சொரூபத்தை நினைவில் கொண்டு வாருங்கள். நினைவு வருகிறதல்லவா?

பாப்தாதா பார்த்தார். அதாவது என்னுடைய (மேரா) என்ற வார்த்தையை மிக எளிதாகவே நினைவில் கொண்டு வந்து விட்டீர்கள். ஆகவே என்னுடைய என்பதை சுருக்கி என்ன கூறுகின்றீர்கள். மேரா பாபா, எப்போதெல்லாம் என்னுடைய என்னுடைய (மேரா, மேரா) என்று வருகிறதோ, அதை மேரா பாபா என்று கூறுகின்றீர்கள். மேலும் அடிக்கடி மேரா பாபா என்று சொல்வதால், நினைவும் எளிதாகி விடுகிறது. மேலும் பிராப்தியும் கூட அதிகமாகிறது இதேபோலவே முழு நாளில் ஒருவேளை ஏதாவதொரு விதத்தில் பிரச்சினை அல்லது ஏதோ ஒரு காரணம் வருகிறதென்றால், அதில் விசேஷமாக இரண்டு வார்த்தைகள் வருகின்றன நான் மற்றும் எனது ஆகவே பாபா என்று கூறும்போது மேரா என்ற வார்த்தையும் பக்கவாக (உறுதியாக) நினைவில் இருக்கிறது, அப்படித்தானே? எல்லோரும் இப்போது பாபா, பாபா என்று சொல்வதில்லை. மேரா பாபா என்று தான் கூறுகின்றார்கள். இதேபோல, நான் என்ற வார்த்தை இருக்கிறதல்லவா, இதையும் கூட மாற்றம் செய்வதற்காக, எப்போதெல்லாம் நான் என்று கூறுகின்றீர்களோ அப்போது உங்களுடைய சுலமான் விஷ்டையும் நினைவில் கொண்டு வாருங்கள். நான் கிரேஷ்ட ஆத்மா.

சிம்மாசனத்திற்கு அதிகாரி ஆத்மா விஷ்வ கல்யாணகாரி ஆத்மா. இப்படி. ஏதாவதொரு சுவமானை சேர்த்துக் கொள்ளுங்கள். இதனால் நான் என்ற சொல் உன்னதிக்கான சாதனமாகி விடட்டும் எப்படி மேரா (என்னுடைய) என்ற சொல் மெஜரிட்டி பாபா என்ற சொல்லை நினைவுபடுத்துகிறது. ஏனெனில் நேரம் இயற்கை மூலமாக சவால் விடுகிறது. நேரம் நெருங்கிக் கொண்டிருப்பதை சாதாரண விஷயமாக எண்ணி விடாதீர்கள். திடீரென்று (அச்சானக்) மற்றும் எப்போதும் தயார் நிலை (எவர் ரெடி) என்ற சொற்களை, தங்களுடைய கர்மபோகி வாழ்க்கையில், ஒவ்வொரு சமயத்திலும் நினைவில் வைத்திருங்கள். தன்னுடைய அமைதி சக்தியை (சாந்தி) தனக்காகவும் கூட விதவிதமான ரூபத்தில் பிரயோகம் செய்யுங்கள். எப்படி விஞ்ஞானம் புதுப்புது விதத்தில் பிரயோகம் செய்து கொண்டிருக்கிறதல்லவா? எவ்வளவு தனக்காக, பிரயோகம் செய்வதை பயிற்சி செய்து கொண்டிருக்கிறதல்லவா? எவ்வளவு தனக்காக யோகம் செய்வதை பயிற்சி செய்து கொண்டேயிருப்பீர்களோ, அவ்வளவு தான் மற்றவர்களுக்கும் கூட அமைதி (சாந்தி) சக்தி பிரயோகம் ஆகிக் கொண்டேயிருக்கும்

இப்போது விசேஷமாக தன்னுடைய சக்திகளின் கிரணங்களை நாலாபுறமும் பரவச் செய்யுங்கள். எப்படி உங்களுடைய இயற்கையின் சூரியசக்தி, சூரிய கிரணங்கள் தனது காரியத்தை எத்தனையோ விதத்தில் செய்து கொண்டிருக்கிறது. மழையாகப் பொழிகிறது. தண்ணீரை வற்றச் செய்கிறது. பகல் இரவாகவும், இரவு பகலாகவும் ஆக்கிக் காட்டுகிறது. ஆகவே நீங்கள் உங்களுடைய சக்திகளின் கிரணங்களை வாயுமண்டலத்தில் பரப்ப முடியாதா? ஆத்மாக்களை தங்களுடைய சக்திகளின் கிரணங்கள் மூலமாக துக்கம், அசாந்தியிலிருந்து விடுவிக்க முடியாதா? ஞான சூரிய சொரூபத்தை எழுச்சியுறச் செய்யுங்கள். கிரணங்களை பரப்புங்கள். அதிர்வுகளை பரவச் செய்யுங்கள், எப்படி ஸ்தாபனையின் ஆதிகாலத்தில், பாப்தாதாவிடமிருந்து, அநேக ஆத்மாக்களுக்கு வீட்டிலிருந்தபடியே பிரேரணையின் அனுபவம் உண்டானது போக வேண்டும் என்ற எண்ணம் வந்தது. இதுபோல், இப்போது ஞான சூரிய குழந்தைகள் மூலமாக சாந்தியின் அலைகளை பரப்புவதற்கான அனுபவியாக வேண்டும் ஆனால் இது எப்போது ஏற்படும் என்றால், இதற்கான

சாதனம் மன ஒருமுகட்பாடு. நினைவின் ஒருமுகப்பாடு, ஆதலால் ஒருமுகப்பட்டிருக்கும் சக்தியை அதிகப்படுத்துங்கள். எப்போது வேண்டுமோ, எதுவரையில் வேண்டுமோ. அதுவரையிலும் மனம் ஒரு முகப்பட்டிருக்க முடிய வேண்டும் இப்போது மாஸ்டர் ஞான சூரிய சொரூபத்தை எழுச்சியுறச் (எமர்ஜ்) செய்யுங்கள். மேலும் சக்தி கிரணங்களையும், அதிர்வுகளையும் பரப்புங்கள்.

பாப்தாதா கேள்விப்பட்டார். மகிழ்ச்சியாகவும் இருக்கிறது குழந்தைகள் சேவையில் ஊக்கம், உற்சாகத்தோடு பல இடங்களில் சேவை நன்றாகச் செய்கிறார்கள். பாப்தாதாவிடம் சேவை செய்திகள் எல்லா பக்கங்களிலிருந்தும் நல்ல நல்லவிதமாக வந்து சேர்ந்திருக்கிறது செய்தித்தாள் மூலமாகவும், டி.வி. மூலமாகவும், செய்தி அளிக்கும் காரியம் விருத்தியாகிக் கொண்டேயிருக்கிற செய்தியும் சென்றடைகிறது. செய்தியை நன்றாக சென்றடையவும் செய்கிறீர்கள். கிராமங்களிலும் கூட விடுபட்டிருக்கும் பகுதிகளிலும் ஒவ்வொரு ஜோனும் மிக நன்றாக தங்கள் பகுதியினை விஸ்தரித்துக் கொண்டேயிருக்கின்றனர். பத்திரிகை மூலமாக டி.வி மூலமாக விதவிதமான சாதனங்கள் மூலமாக ஊக்கம் உரத்சாகத்தோடு சேவை செய்து கொண்டிருக்கிறீர்கள். இவ்வாறு செய்து கொண்டிருக்கின்ற எல்லா குழந்தைகளுக்கும் பாப்தாதா மிதந்த அன்பு நிறைந்த ஆசிகளோடு வாழ்த்துக்களையும் அளிக்கின்றார் ஆனால் இப்போது செய்தி அளிப்பதில் நல்ல ஊக்கம் உற்சாகம் இருக்கிறது மேலும் நாலா பக்கமும் பிரம்மா குமாரிகள் யார் என்பதும் நல்ல காரியம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தி பரவலாக பரவியிருக்கிறது மேலும் அதிகரித்துக் கொண்டுமிருக்கிறது ஆனால், ஆனால் என்ன? கூறலாமா? சொல்லட்டுமா, ஆனால் என்னவென்று? ஆனால் பிரம்மா குமாரிகளின் பாபா எவ்வளவு நல்லவர் என்ற விஷயம் உரக்க எதிரொலிக்கச் செய்ய வேண்டும் இதை அதிகப்படுத்த வேண்டும். பிரம்மா குமாரிகள் நல்ல காரியம் செய்கிறார்கள் ஆனால் இப்படி இவர்களை செய்விப்பவர் யார்? இப்போது இது பிரத்யக்ஷம் ஆக வேண்டும் தந்தை வந்து விட்டார். இந்த செய்தி மனதில் சென்று சேரவேண்டும் இதற்கான திட்டம் (பிளான்) தயார் செய்யுங்கள்,

பாப்தாதாவிடம் குழந்தைகள் கேள்வி கேட்டனர்? வாரிசு யார்? எமக் என்றால் யாரைச் சொல்வது? மைக் (முக்கிய பிரமுகர்கள்) வந்திருக்கின்றனர் ஆனால் தற்சமயத்தின் அடிப்படையில் விரும்புவது அவசியமாகவும் இருக்கிறது. யாருடைய சொல்லுக்கு மக்கள் மத்தியில் மதிப்பு இருக்கிறதோ, அவர்கள், அப்படிப்பட்டவர்கள். இப்போது சாதாரணமாகவே பாபா என்ற வார்த்தையையும் உச்சரிக்கிறார்கள். நன்றாக செய்கிறார்கள் என்பது வரையிலும் கொண்டு வந்திருக்கிறீர்கள். இதற்கு பாப்தாதா வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார் ஆனால் இப்போது யாருடைய வார்த்தைக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு இருக்கிறதோ, அப்படிப்பட்ட மைக் அவசியமாக இருக்கிறது. அவ்வளவு பிரசித்தமானவராக இருக்க வேண்டும் பிரசித்தம் என்பதன் பொருள் பெரிய அந்தஸ்துடையவர் என்பதல்ல ஆனால் அவருடைய பேச்சைக் கேட்டவர்கள், இவர் சொல்கிறார் என்றால் இதில் நிச்சயம் உண்மையாக இருக்க வேண்டும் என்று மனதில் ஏற்றுக் கொள்ளும்படியாக இருக்க வேண்டும். இப்படிக் கூறுபவர் அனுபவம் செய்ததன் மூலமாகச் சொல்வாரேயானால் அதற்கு மதிப்பு நிச்சயமிருக்கும். பொதுவாக பிரமுகப் பேச்சாளர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள் ஆனால் பேச்சில் வித்தியாசம் இருக்கும். சொற்களில் உறுதி ஏறக்குறைய இருக்கும் ஆதலால் உண்மையான சக்திசாலியான எமக்கைத் தேடிக் கண்டுபிடியுங்கள். இது வரையிலும் ஒவ்வொரு ஜோனிலும், ஒவ்வொரு வாக்கத்தின் மூலமாக மைக் உருவாகி இருக்கிறார்கள். பாப்தாதா சேவை மூலமாக பிரத்யக்ஷ ரிசல்ட் உண்டாகவில்லை என்று கூறவில்லை. உருவாகியிருக்கிறார்கள் ஆனால் இப்போது நேரம். குறைவாக இருக்கிறது. மேலும் சேவையில் மகத்துவம் உள்ள ஆத்மாக்கள் இப்போது நிமித்தமாக வேண்டியிருக்கிறது இப்படிப்பட்டவருடைய வார்த்தை மதிப்புடையதாக இருக்க வேண்டும் அந்தஸ்து இல்லை என்றாலும் பரவாயில்லை ஆனால் அவருடைய நடைமுறை வாழ்க்கை நடைமுறை அனுபவம் அசைக்க முடியாத உறுதிபடைத்ததாக இருக்க வேண்டும். அவருடைய பேச்சு அனுபவத்தின் ஆதாரமுடையதாக இருக்க வேண்டும். புரிந்ததா? எப்படிப்பட்ட மைக் வேண்டும் என்று வாரிசு யார்? என்பதை புரிந்து கொண்டிருக்கிறீர்கள். வாரிசு என்றால் இவருடைய ஒவ்வொரு சுவாசத்திலும், ஒவ்வொரு அடியிலும் தந்தை மற்றும் கடமை மேலும்

இத்தோடு கூடவே மனம், சொல், செயல், உடல், மனம், தனம், எல்லாவற்றிலும் பாபா மற்றும் யகஞும் அடங்கியிருக்க வேண்டும் பேகத் சேவை அடங்கியதாக இருக்க வேண்டும் பிரபாவம் பிரேரணை அளிக்கும் திறமையுள்ளவராக இருக்க வேண்டும். நல்லது, இப்போது யாருடைய சேவை?

தமிழ்நாடு, ஈஸ்டர்ன் மற்றும் நேபாளம்: முதலாவதாக யார்? வங்காளம் /பெங்கால் நிமித்தமாயிருக்கிறார்கள். பெங்கால்காரர்கள் எழுந்திருங்கள். நல்லது பங்கால்காரர்கள் சேவைக்கான வாய்ப்பை எடுத்துக் கொண்டார்கள். இந்த கொஞ்ச நாட்களில் கர்மனா சேவை மூலம் யக்ஞ சேவையின் மகத்துவத்தை அறிந்து உங்களுக்குள்ளே யக்கு சேவையின் புண்ணியக் கணக்கு எவ்வளவு சேமித்தீர்கள் என்று பார்த்தீர்களா? சேவை அங்கேயும் கூட செய்து கொண்டு தான் இருக்கிறீர்கள் ஆனால் யக்ஞ சேவையின் மகத்துவம் அலாதியானது ஆகவே டபுள் சேவை செய்தீர்கள். ஒன்று கர்மனா சேவை இரண்டாவது சேவை வாயுமண்டலத்தை சக்திசாலியாக்குவது திருப்திப்படுத்துவது இதற்கும் கூட டபுள் புண்ணியம் யக்கு சேவையின் பிரத்யக்ஷ பலன் அடைந்தீர்கள். குஷியாக இருந்ததல்லவா? எல்லோரும் குஷியாக இருந்தீர்கள் அல்லவா? ஆகவே குஷியின் பிரத்யக்ஷ பலனும் கூட கிடைத்தது. மேலும் வருங்கால பாக்கியமும் சேமிப்பானது டபுள் பிராப்தி ஏனெனில் எல்லோரும் பார்த்து குஷியடைகிறார்கள். எவ்வளவு நிர்விக்ன சேவை நடக்கிறது என்று குஷியடைக்கிறார்கள். எவ்வளவு அன்போடு சேவை நடக்கிறது. இந்த வாயுமண்டலம் பரப்புவது நிமித்தமாவது இதற்கும் கூட பெரிய புண்ணியம் கிடைக்கிறது. ஆகவே, யாருக்கெல்லாம் வாய்ப்பு கிடைத்திருக்கிறதோ, இவர்கள் விசேஷ புண்ணியக் கணக்கு சேமிப்பதற்கான வாய்ப்பு கிடைத்தது என்று நினைக்கட்டும். ஆகவே சேமித்தீர்களா? கை அசையுங்கள். தற்சமயமும் சேமிப்பு, வருங்காலத்திற்கும் சேமிப்பு இது டபுள் பலன் சேமிப்பதற்கு சாதனமாக இருக்கிறது நல்லது ஆகவே பெங்கால்காரர்கள் ஏதாவது புதுமை செய்தீர்களா? ஏதாவது புதிய காரியம் செய்தீர்களா? ஏதாவது புதிய கண்டுபிடிப்பு செய்தீர்களா? செய்தீர்களா? ஏனெனில் பெங்காலில் தந்தையின் வருகை ஏற்பட்டிருக்கிறது. பிரவேசம் நடந்திருக்கிறது. ஆதலால் புதுமை செய்து காட்ட வேண்டுமல்லவா? ஏதாவது புதிதாக கண்டுபிடியுங்கள். பாப்தாதா

இதற்கு முன்பும் கூறியிருந்தார். இப்போது என்ன சேவை செய்து கொண்டிருக்கிறீர்களோ. யார் செய்திருந்தாலும் சரி. அதையே திரும்பவும் செய்கிறார்கள். வெளிநாட்டினர் புதுமையாக ஏதாவது செய்திருக்கிறீர்களா? சேவைக்கான புதிய சாதனம் ஏதாவது கண்டுபிடியுங்கள். என்ன இப்போது நடந்து கொண்டிருக்கிறதோ, அது நன்றாகவே. இருக்கிறது ஆனால் இன்னும் நன்றாக, யாராவது செய்திருந்தால் கை உயர்த்துங்கள். யாரும் செய்யவில்லை. வர்க்க சேவையும் கூட இப்போது வெகு நாட்களாக நடந்து கொண்டிருக்கிறது. இப்போது கொஞ்சம் புதுமையாக நடக்க வேண்டும் யார் செய்யப் போகிறீர்கள். பெங்கால்'காரர்கள் செய்வார்களா? மற்றபடி நன்றாக இருக்கிறது பாப்தாதாவுக்கு ஒவ்வொரு ஜோனுக்கும் வாய்ப்பு கிடைப்பது பிடித்தமானதாக இருக்கிறது சேவை விருத்தியடைந்து கொண்டிருக்கிறது. இந்த செய்தி பாப்தாதாவுக்கு கிடைக்கிறது. சென்டர்கள் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. மாணவர்களும் அதிகமாகிக் கொண்டிருக்கிறார்கள். இது நடக்கிறது ஆனால் குறைந்த செலவில் அதிக பலன், அப்படி ஏதாவது புதிய சாதனம் கண்டுபிடியுங்கள். பெங்கால் ஜோனில் (ஈஸ்டர்ன் ஜோன்) விருத்தியாகியிருப்பதைப் பார்த்து குஷியடைகின்றார். மற்றபடி பாப்தாதா நல்லது ஆகவே புண்ணியம் சேமித்தீர்கள் மேலும் இந்த புண்ணியத்தின் மூலதனம் கூடவே வரும் வெறுங்கையாக இருக்காது புண்ணியத்தின் மூலதனத்தை கூடவே எடுத்தச் செல்வீர்கள். எவ்வளவு புண்ணியம் சேமிக்க விரும்புகிறீர்களோ அவ்வளவு செய்ய முடியும். மற்றபடி நல்ல தைரியம் வைத்திருக்கிறார்கள். யக்ஞ சேவையில் வந்து சேர்ந்து கொண்டு விட்டார்கள்: மேலும் பயனுள்ளதாகவும் ஆக்கிக் கொண்டார்கள்.

ஈஸ்டர்னில் அநேக நதிகள் ஒன்று சேர்ந்திருக்கின்றன. பெங்கால், பீஹார். ஓரிஸா, அஸ்ஸாம். நேபாள். தமிழ்நாடு பாதி இவ்வளவு பாக்கியமுள்ளவர்களாக்கியிருக்கிறார்கள். இதற்கு மிகுந்த வாழ்த்துக்கள் பாருங்கள். டிவியில் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்று பாருங்கள். நல்ல, நல்லவர்கள் நிறைய இருக்கிறார்கள். கை அசையுங்கள். மிகவும் நல்லது யக்கு சேவை செய்வதில் எவ்வளவு அன்புடையவர்களாக இருக்கிறார்கள் என்பதைப் பார்த்து பாப்தாதாவுக்கு குஷியாக இருக்கிறது. இனி 5-நதிகளும் சேர்ந்து புதிய

பிளான் தயார் செய்யுங்கள், எதிரொலி பரவுவதற்கான சேவை செய்து விட்டீர்கள். இனி இன்னும் அதிகமாகச் செய்யுங்கள். மற்றபடி பாப்தாதா குஷியடைகின்றார். 5-பக்கங்களிலிருந்தும் எண்ணிக்கை அதிகமாக வந்திருக்கிறார்கள். இங்கேயே இவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்றால், அங்கே எவ்வளவு பேர் இருப்பார்கள்? இவ்வளவு விருத்தி செய்திருக்கிறார்கள் இதனால் பரிவாரத்தினர் அனைவருக்கும் குஷியாக இருக்கிறது. பாப்தாதாவுக்கும் குஷியாக இருக்கிறது. இனி, சுயபரிவர்த்தனை மற்றும் சேவையில் புதுமைக்கான பிரைஸ் வாங்க வேண்டும், நம்பர் வாங்குவீர்களல்லவா? 5-பகுதியினர் இருக்கிறார்கள். மேலும் எல்லோரும் பெரியவர்கள். சிறியவர் யாருமில்லை. அற்புதம் நிகழ்த்த வேண்டும் உங்களுக்குள் மீட்டிங் செய்து புதிய சேவைக்கான பிளான் தயார் செய்யுங்கள். ஏனெனில், இப்போது அநேக ஆத்மாக்கள் இதைக் கேட்கும்போது, பெரிய புரோகிராம், கண்காட்சிகள், யாத்திரைகள், மாநாடுகள் இதெல்லாம் நாங்கள் செய்து விட்டோம் என்று கூறுகின்றார்கள். பார்த்திருக்கிறோம். ஆகவே புதுமையாகச் செய்ய வேண்டும். மற்றபடி தைரியம் வைத்திருக்கிறார்கள். பாபா விசேஷமாக 5-பகுதியினருக்கும் மிகவும் உள்ளன்புடன் கூடிய ஆசிகளை வழங்குகின்றார். வரதானமும் கூட இருக்கிறது. என்ன வரதானம் என்று சொல்லட்டுமா? அமர்பவ என்னும் வரதானம். அமரர்களாக இருக்கிறீர்கள். பாப்தாதாவுடன் அமரலோகம் செல்வீர்கள் அல்லவா? முதலாவது ஜன்மத்தில் வரவேண்டும். இரண்டாவது மூன்றாவதில் வரக்கூடாது. எல்லோருக்கும் ஆர்வம் இருக்கிறதல்லவா? முதலில் கூடவே வீட்டிற்குச் செல்வீர்கள். பிறகு இராஜ்யத்தில் எப்போது வருவீர்களோ. அப்போது முதல் ஜன்மத்தில் வரவேண்டும். இரண்டாவது, மூன்றாவதில் மஜா இருக்காது. முதல் ஜன்மத்தில் யார் வருவார்கள்? எல்லோரும் வருவீர்கள். முதல் ஜன்மத்தில் வருவதற்கான விதி என்னவென்று தெரியுமல்லவா? விதியைப்பற்றித் தெரியுமா? யார் நான்கு பாடங்களிலும் முதல் நம்பரில் இருப்பார்களோ. ஒரு பாடத்தில் கூட குறை இருக்கக்கூடாது. எல்லா பாடங்களிலும் முதல் நம்பர், இவர்கள் முதல் ஜன்மத்தில் கூடவே இருப்பார்கள். தைரியம் இருக்கிறதா? அனைவரையும் பாருங்கள். ஸ்தூல படிப்பிலும் கூட, ஒருவேளை ஒரு பாடத்தில் தோல்வி அடைந்து விட்டாலும் கூட அல்லது குறைவான மார்க்குகள் வாங்குகிறார்கள் என்றால், இவர்கள் நம்பர்-1 ஆகமாட்டார்கள்

அல்லவா? ஆகவே முதலாவது ஜன்மத்தில் வருவது என்பதன் பொருள் நம்பர்-1னில் வரவேண்டும் ஏற்றுக் கொள்வீர்கள் அல்லவா? இப்போது கை உயர்த்துங்கள். யோசித்து கை உயர்த்த வேண்டும். நல்லது. அமரராக இருக்க வேண்டும். மேலும் அமரர்களாக ஆக்க வேண்டும். நல்லது.

தமிழ்நாடு ஜோனில் 12-ஜோதிர்லிங்கம் அமைத்து யோக அனுபவம் செய்வித்துக் சொண்டிருக்கிறார்கள். சிறு சிறு இடங்களிலும் கூட இந்த சேவை மிக நல்ல முறையில் நடந்து கொண்டிருக்கிறது. இதில் செலவு மிகவும் குறைவு தான் வெற்றிகரமாக உள்ளதா? நல்லது வாழ்த்துக்கள். இதையும் பாருங்கள். புதிய கண்டுபிடிப்பாக இருக்கிறதல்லவா? இதுபோல், இன்னும் வேறுவிதமாக புதுமையாகச் செய்யுங்கள். மேலும் எல்லா இடங்களிலும் செய்து பாருங்கள். செலவு குறைவாக இருக்க வேண்டும் மேலும் சிவனுடைய நினைவார்த்தமாக பிரதிமைகள் இருக்கின்றன. ஆகவே எல்லோருடைய புத்தியிலும் ஒரு தந்தையின் ஞாபகார்த்தம் இருக்கும். நன்றாக இருக்கிறது ரிசல்ட்டும் நன்றாக இருக்கிறது. இப்போது இனி மேலும் செய்து பாருங்கள். நன்றாக இருக்கிறது வகுப்பில் எப்படி செய்கிறீர்கள்? என்ன நடக்கிறது? என்று அனுபவத்தை கூற வேண்டும் மற்றபடி நன்றாக இருக்கிறது வாழ்த்துக்கள்.

நல்லது. பீஹார்காரர்கள் ஏதவாது செய்திருக்கிறார்களா? பீஹாரில் வந்தது வசந்தருது என்ற தலைப்பில் ஒரு திட்டம் தயார் செய்திருக்கிறார்கள். பீஹாரில் எங்கெல்லாம் செய்தி பரவவில்லையோ. அங்கெல்லாம் இந்த ஆண்டு செய்து முடிப்பார்கள். ஒவ்வொரு மாதமும் ஒரு சேவா கேந்திரம் திறப்பார்கள்? நன்றாகச் செய்திருக்கிறீர்கள். ஏனெனில் பீஹாரில் பார்க்கும்போது மிக அதிகம் பேர்களுக்கு செய்தி கிடைக்க வேண்டியதாக இருக்கிறது. புரோகிராம். தயார் செய்திருக்கிறார்கள். இந்த ஆர்வம், உற்சாகத்திற்கு வாழ்த்துக்கள் இனி வசந்தருது வருமல்லவா? வசந்தருதுவைப் பார்க்கலாம். வந்தருதுவின் ஆனந்தத்தை அனுபவம் செய்வீர்கள் அல்லவா? நல்லது. சேவை. யாரெல்லாம் செய்து கொண்டிருக்கிறார்களோ, ஒவ்வொரு ஜோனிலும் ஏதாவதொரு சேவை நடந்து கொண்டு தான் இருக்கிறது.

ஒவ்வொரு வர்க்கமும் செய்து கொண்டிருக்கிறது. மேலும் இது இன்னும் அதிகமாக வேண்டும் சரிதானா? நல்லது,

**டபுள் விதேஷி (வெளி நாட்டினர்):** டபுள் விதேஷி என்றால் டபுள் புருஷார்த்தி இப்போது பாப்தாதா டபுள் புருஷார்த்தி என்று பெயர் வைத்திருக்கின்றார். டபுள் புருஷார்த்திகளாக இருக்கின்றீர்களா? யாரெல்லாம். தற்சமயம் டபுள் புருஷார்த்தியாவதற்கான லக்ஷியம் வைத்திருக்கின்றோம் மேலும் செய்து கொண்டுமிருக்கின்றோம் என்று நினைப்பவர்கள் கை உயர்த்துங்கள். டபுள் புருஷார்த்தம் டபுள்? மிகவும் நல்லது, டபுள் செய்கிறார்கள் என்றால் கரவொலி எழுப்புங்கள். நல்லது. உங்களைப் பார்த்து எல்லோரும் குஷியுடன் முன்னேறுவதற்கான லஷியம் வைப்பார்கள். மேலும் இன்றைக்கு நான் பார்க்கிறேன். வெளி நாட்டினரின் முக்கியமான (மெயின்) குணம் சர்வீஸபுள், நாலஜ்புல், சக்செஸ்புல் -சேவை செய்பவர்கள், ஞானம் நிறைந்தவர்கள். வெற்றி நிறைந்தவர்கள், எனவே அடைந்து கொண்டிருக்கிறார்கள். மேலும் மீட்டிங் கூட நன்றாகச் செய்கிறார்கள். முதலாவது மீட்டிங்'ன் செய்தியை பாப்தாதா கேட்டார் எல்லோரும் இன்டர் நேஷனல் ஒவ்வொரு நாட்டிலிருந்தும் விசேஷ ஆத்மாக்கள் சந்தித்து செய்திருக்கிறார்கள். இது மிக நன்றாக இருக்கிறது மேலும் சகஜமான வழி மூலம் எல்லோரும் ஒரு வழிப்படி நடப்பவர்களாக பாஸ் ஆகி விட்டார்கள். ஆதலால் விசேஷ ஆத்மாக்களாகிய நீங்கள் யார் நிமித்தமாகியிருக்கிறார்களோ அவர்களுக்கு பாப்தாதா பல மடங்கு வாழ்த்துக்கள் அளிக்கின்றார். மிகப் பழைய பழைய அஸ்திவாரங்கள் வத்திருக்கின்றனர். பாப்தாதாவுக்கு குஷியாக இருக்கிறது. பாண்டவர்களும் குறைந்தவர்கள் அல்ல. பாண்டவர்களும் ஒருவர் மற்றவரை விட முன்னே இருக்கிறார்கள். மேலும் சக்திகளும் ஒருவர் இன்னொருவரை விட முன்னே இருக்கிறார்கள். நல்லது. எல்லோரும் வரதானங்களை அமரர்களாக ஆக்குவதற்காக சகஜமான விதியை கடைபிடியுங்கள். அமிர்தவேளையில் பிறகு கூடவே கர்மயோகி ஆவதற்கு நேரத்தையும் கூட. அடிக்கடி வரதானத்தையும் ரிவைஸ் செய்து சொரூபத்தில் நிலைத்திருங்கள். இல்லையென்றால் தங்களை வரதானி சொரூபத்தில் நிலைத்திருக்கச் செய்யுங்கள். அடிக்கடி ரிவைஸ் செய்யுங்கள். பாப்தாதா வரதானத்தை கொடுத்து விடுகின்றார் ஆனால் வரதானத்தை நிலையாக வைத்திருப்பதற்கு அடிக்கடி ரிவைஸ்

செய்து சொரூபத்தில் கொண்டு வர வேண்டும். அந்த வரதானத்தை அனுபவம் செய்யுங்கள். அப்போது அந்த வரதானம் உங்களுக்கு அமர் வரதானம் ஆகி விடும். ஏனெனில் வரதானத்திற்குப் பாத்திரமானவர்கள், விசேஷ ஆத்மாக்களாகிய நீங்கள் தான். பக்தர்களுக்கும் வரதானம் கிடைக்கிறது ஆனால் அது அல்ப காலத்திற்காக, ஒரு ஜன்மத்திற்கு மட்டும். உங்களுடைய சங்கமத்தின் வரதானம் ஜன்ம ஜன்மாந்திரம் கூடவே இருக்கும். ஆதலால் வரதானத்தை சொரூபத்தில் கொண்டு வந்து கொண்டேயிருந்தால், வரதானத்தின் வெற்றியை அனுபவம் செய்து கொண்டேயிருப்பீர்கள். புத்தியில் மட்டுமல்ல சொரூபத்தில் கொண்டு வாருங்கள். அந்த நஷாவில் இருங்கள். பெருமிதத்தில் இருங்கள். நான் வரதாதாவின் வரதானியாக இருக்கின்றேன் என்ற பெருமிதம் இருக்கட்டும். நேர்முகமாக வரதாதா வரதானத்தை வழங்கியிருக்கின்றார். வரதானத்தை அமர் (நிலையானதாக) ஆக்குங்கள். அவ்வப்போது மட்டுமல்ல, மேலும் டபுள் விதேஷிகளிடம் எல்லா பிராமண ஆத்மாக்களுக்கும் விசேஷ அன்பு இருக்கிறது. ஏனெனில் நீங்கள் ஆதி பாரதத்தின் சேவாதாரிகளுக்கு மிகவும் சகயோகியாக இருக்கிறீர்கள். விஷ்வ கல்யாணகாரி என்ற டைட்டிலை பாபா கொடுத்திருக்கின்றார் அல்லவா? அதை சாகார ரூபத்தில் (ஸ்தூலம்) வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு கலாச்சாரம், வெவ்வேறு மொழிகள், உள்ள நாடுகளில் நீங்கள் எல்லோரும் விஷ்வ கல்யாண சேவை வெற்றியடைவதற்கு சகயோகி ஆனீர்கள். ஆதலால் பாரதவாசிகளுக்கு, உங்களுக்கான சேவையில் அன்பாக இருக்கிறார்கள். நல்லது விசேஷமாக முதல் மீட்டிங்கில், யாரெல்லாம் வந்திருக்கிறீர்களோ, சாசளம் (விதிமுறைகள்) தயாரிக்கும் மீட்டிங்கில் வந்திருப்பவர்கள் உயரமாக கை உயர்த்துங்கள். (கான்ஸ்டிடியூஷன்) நல்லது. பாப்தாதாவுக்கு மீட்டிங் மிகவும் பிடித்தமானதாக இருக்கிறது; முயற்சியும் கூட அன்போடு செய்திருக்கிறார்கள். களைப்படையவில்லை. ஆர்வம். உற்சாகம் மற்றும் களைப்பில்லாமல் செய்திருக்கிறார்கள். பாரதவாசிகள் மற்றும் விதேஷிகள் சேர்ந்து செய்திருக்கிறார்கள். மிக நன்றாகச் செய்திருக்கிறார்கள். பாப்தாதாவுக்கு விருப்பமுள்ளதாக இருக்கிறது. பாரதத்தினரும் எழுந்திருங்கள். மூன்று பாண்டவர்களுக்கும் விசேஷ வாழ்த்துக்ககள் ஏன் வாழ்த்துக்கள்? ஏனெனில், முதல் குறிப்பு நீங்கள் செய்திருக்கிறீர்கள். மேலும் டபுள் விதேஷிகளுக்கு இந்த

விஷயத்திற்காக வாழ்த்துக்கள். யாரெல்லாம் இதில் சகயோகி ஆகியிருக்கிறார்களோ அவர்களுக்கு, மேலும் நேரம் ஒதுக்கி பைனல் செய்திருக்கிறார்கள். பார்க்கலாம் என்று சொல்லவில்லை. செய்து விட்டீர்கள். இதனால் பாப்தாதாவுக்கு குஷியாக இருக்கிறது. வாழ்த்துக்கள். வாழ்த்துக்கள். எல்லோருக்கும் பாரதவாசிகளுக்கும் கூட மற்றும் டபுள் விதேஷிகளுக்கும் கூட சக்திகளுக்கும் கூட வாழ்த்துக்கள்.

இப்போது அப்படிப்பட்ட மைக் எதை பாப்தாதா கூறினாரோ விசேஷமான மைக் எங்கிருந்து தயாராகிறார்கள் என்று பார்க்கலாம். பாரதத்திலிருந்தா? அல்லது வெளி நாட்டிலிருந்தா? ஆர்வம் உற்சாகத்தைக் காட்டுகிறது. நல்லது.

மீடியா விங் மற்றும் ஸ்பார்க் விங் வந்திருக்கிறார்கள்: பாட்டு பாடினார்கள் -நாங்கள் வெற்றி அடைவோம் ஒரு நாள்! இருசாராரும் அவரவர் காரியத்தை செய்து கொண்டிருக்கிறார்கள். இப்போது பாப்தாதாவுக்கு செய்தி கிடைத்துக் கொண்டேயிருக்கிறது. ஆகவே மீடியாவும் கூட நாளுக்கு நாள் முன்னேறிக் கொண்டே. இருக்கிறது டிவியில் வருகிற புரோகிராம் நல்ல முறையில் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது இப்போது அடிபெடுத்து வைத்தாகி விட்டது. பத்திரிகைகளிலும் கூட இப்போது கஷ்டமின்றி இடம் ஒதுக்குகிறார்கள். டி.வி.யிலும் எளிதாகவே இடம் கொடுக்கிறார்கள். வாய்ப்பு கிடைக்கிறது. இவ்வளவு செய்திருக்கிறார்கள். ஆகவே மீடியாவுக்கு வாழ்த்துக்கள். இப்போது வெளிநாட்டில் டிவியில் புரோகிராம் ஆரம்பமாகியிருக்கிறது. சில சமயங்களில் வருகிறது ஆனால் வெளிநாடு மற்றும் உள்நாடு இந்த இரண்டுக்குமிடையே கனெக்ஷன் நெருக்கமாக உண்டாகி விட்டால் நாலா பக்கமும் எதிரொலிக்க ஆரம்பித்துவிடும். மற்றபடி முயற்சிக்கு வெற்றி கிடைத்திருக்கிறது இது பாப்தாதாவுக்கும் பிடித்திருக்கிறது முயற்சி செய்திருக்கிறார்கள். பலனும் கிடைத்துள்ளது. இப்போது ஸ்பார்க் வர்க்கமும் தங்களுடைய பிளான் செய்திருக்கிறார்கள். நன்றாக இருக்கிறது. இப்போது இன்னும் கொஞ்சம் செயலில் செய்து காட்ட வேண்டும். எப்படி விஞ்ஞானம் பிரத்யக்ஷ ரூபத்தில் பலனைக் காண்பிக்கிறார்கள் அல்லவா? இதுபோல சைலன்ஸ் சக்தி மூலமாகவும் எளிதாக பிரத்யக்கூக்ஷ பலன் அடைய

முடியும் என்பதை தெளிவாக்க வேண்டும். அனுபவம் செய்விக்க வேண்டும். பிரம்மா குமாரிகளிடம் சகஜ சாதனம் உள்ளது என்ற அனுபவம் உண்டாக வேண்டும். ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். நடக்கும் எல்லோரும் புத்தியை நல்லவிதமாக உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள் ஆதலால் புத்தி மூலமாக ஏதவாது பிரத்யக்ஷ பலன் கிடைக்கும். நல்லது முயற்சி நன்றாக இருக்கிறது பலனும் கிடைத்துக் கொண்டிருக்கிறது. பலன் கிடைத்துக் கொண்டேயிருக்கும். இப்படி நடக்கத்தான் வேண்டும் நல்லது!

இப்போது ஒரு செகண்டில், ஒரு செகண்டு ஆகி விட்டது. ஒரு செகண்டில் முழு சபையும் மனதை ஒரே சங்கல்பத்தில் நிலைக்கச் செய்யுங்கள். நானும், தந்தையும் பரந்தாமத்தில் அநாதி ஜோதிர் பிந்து சொரூபத்தில் இருக்கிறோம். பரந்தாமத்தில் தந்தையுடன் அமர்ந்து விடுங்கள்.

தற்காலத்தின் கணக்குப்படி மனம், புத்தியை ஒரு முகப்படுத்தும் அப்பியாசம் செய்ய வேண்டும். என்ன காரியம் செய்கிறீர்களோ, அதே காரியத்தில் ஒருமுகப் படுத்துங்கள். கன்ட்ரோலிங் பவர். இந்த அப்பியாசம் வருங்காலத்தில் உதவியாக இருக்கும், வாயுமண்டலத்தை அனுசரித்து ஒரு செகன்டில் கன்ட்ரோல் செய்ய வேண்டியதாக இருக்கும். என்ன நினைக்கிறீர்களோ, அது தான் நடக்க வேண்டும். ஆகவே இந்த அப்பியாசம் பயிற்சி மிக அவசியம். இதை விட்டுவிடக்கூடாது. ஏனெனில், வேண்டிய சமயத்தில், கடைசியில் சுகம் அளிக்கக் கூடியதாக இருக்கும். நல்லது.

நாலா பக்கமும் உள்ள டபுள் தக்த் நஷீன், பாப்தாதாவின் தில்தகத் நஷீன், கூடவே விஷ்வ ராஜ்ய சிம்மாசனத்திற்கு அதிகாரி சதா தன்னுடைய அதாதி சொரூபம் ஆதி சொரூபம். மத்ய சொரூபம் அந்திம் சொரூபம் எப்போது வேண்டுமோ, அப்போது அப்படி நிலைத்திருக்கக் கூடிய, மேலும் மற்றவர்களையும் கூட பொக்கிஷங்களால் நிரப்பக்கூடிய எல்லா ஆத்மாக்களுக்கும் அகனாயிடமிருந்து முக்தியின் ஆஸ்தி கிடைக்கும்படி செய்யக்கூடிய இப்படி பரமாத்மாவின் அன்புக்குப் பாத்திரமாயிருக்கும் ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள், உள்ளத்தின் ஆசிகள் மற்றும் நமஸ்தே.

தாதிகளுடன்: எல்லோருக்கும் பிடித்தமானதாக இருக்கிறது. பழைய ஆதி ரத்தினங்களைப் பார்த்து எல்லோருக்கும் குஷியாக இருக்கிறது. (மனோகர் தாதியிடம்) பாடம் நடத்தினாலும் நடத்தாவிட்டாலும், சரி. உங்களைப் பார்த்ததுமே குஷி உண்டாகிறது. சந்தித்துக் கொண்டேயிருங்கள், சிரிக்க வைத்துக் கொண்டேயிருங்கள். ஒவ்வொருவருக்கும் ஏதாவதொரு வரதானத்தைக் கொடுத்துக் கொண்டேயிருங்கள், என்ன நடந்தாலும் சரி, ஆதி ரத்தினங்களிடமிருந்து பிரகாசம் வருகிறதல்லவா, இது அதிகம் வந்து கொண்டிருக்கிறது. ஆதலால் உங்களுடைய காரியத்தை செய்து கொண்டேயிருங்கள். எல்லோருக்கும் ஆனந்தத்தை அளித்துக் கொண்டேயிருங்கள். குஷியடைந்து விடுகிறார்கள் அல்லவா! பாதாதியிடம் (நிர்மல் சாந்தாஜி) -மதுபன் வந்து சேர்ந்து விடுகிறீர்கள் அல்லவா உங்களைப் பார்த்து எல்லோரும் குஷியடைகிறார்கள். உங்களுக்கும் குஷி உண்டாகிறது நல்லது கணக்கு தனது வேலையை செய்து கொண்டிருக்கிறது. நீங்கள் உங்கள் காரியத்தைச் செய்து கொண்டிருக்கிறீர்கள். நன்றாக இருக்கிறது எல்லோரும் கூடியிருக்கும் போது குஷி உண்டாகிறது. நன்றாக செய்திருக்கிறீர்கள். உங்களுடைய கணக்கு வழக்கை கருக்கிக் கொண்டிருக்கிறீர்கள். நல்லது எல்லாம் நன்றாக இருக்கிறது எல்லாம் நன்றாக நடந்து கொண்டிருக்கிறது (மோகினி சகோதரி, முன்னி சகோதரியுடன்) தாதியும் பார்த்து குஷியடைந்து கொண்டிருக்கின்றார். நல்லது சந்தித்து ஒருவருக்கொருவர் உதவியாளராகி ஆம் என்று சொல்லி அப்படியே செய்யலாம் என்று நடந்து கொண்டிருக்கிறீர்கள். நடந்து கொண்டேயிருப்பீர்கள். எல்லோரும் குஷியாக இருக்கிறீர்கள் அல்லவா?

ரமேஷ் சகோதரர் உஷா சகோதரியின் உடல்நலம் பற்றிய செய்தி கூறினார் -ஆபரேஷன் நடந்திருக்கிறது. இது கொஞ்சம் கூடக் குறைய இருக்கும் சரியாகி விடும். காயம் உண்டானால் கொஞ்சம் வித்தியாசம் இருக்கத்தான் செய்யும். சரியாகி விடும் நீங்கள் உங்களுடைய உடலை சரி செய்யுங்கள். வேண்டாம் பரவாயில்லை என்று சொல்லாதீர்கள். எது வேண்டுமோ, அதைக் கொடுத்துக் கொண்டேயிருங்கள். பொறுப்பு இருக்கிறதல்லவா? ஒத்தாசையாக இருப்பவர்களையும் தயார் செய்து

கொண்டேயிருங்கள். மற்றபடி நன்றாக செய்து கொண்டிருக்கிறீர்கள். இப்போது ரிசல்ட் நன்றாக இருக்கிறது இன்டர்நேஷனல் ஆகி விட்டது. எல்லோரும் ஒற்றுமையுடன், நிச்சய புத்தியுடன் அமர்ந்தால் சரியாகி விடும் எல்லோருடைய உதவியும் இருக்கிறது ஆனால் ஸ்தூலத்தில் மூன்று பேரும் ஒற்றுமையுடன் மேலும் சரி. சரி என்று ஒன்று கூடி படித்துறை அமைத்து விட்டீர்கள். மற்றபடி கொஞ்சம் பழக்கமாகி விட்டால் சரியாகி விடும் ஆகவே வாழ்த்துக்கள். மூன்று பேருக்கும் வாழ்த்துக்கள்

**மூன்று மூத்த சகோதரர்கள் மற்றும் வெளிநாட்டின் 6-சகோதரிகள்:** பாப்தாதாவுக்கு குஷியாக இருக்கிறது. சகோதரர்களானாலும், சகோதரிகளானாலும் செய்தேயாக வேண்டும் என்ற லக்ஷியம் வைத்திருந்ததால் எளிதாக நடந்தேறி விட்டது. நேரம் பிடிக்கத்தான் செய்யும் ஆனால் சகஜமாக நடந்து விட்டதல்லவா? அதிகமாக விவாதிக்க வேண்டியிருக்கவில்லையல்லவா? ஆதலால் இதுவும் கூட காரியம் செய்வதற்கு ஒரு உதாரணம் ஆகி விட்டது.

**வெளிநாட்டு, பாண்டவர்களுடன்:** இவர் முதுகெலும்பாக இருந்தார். நீங்கள் முழுகெலும்பாக இருந்தீர்கள். இவர் நிமித்தமாக இருந்தார். எல்வோரும் ஒரு காரியத்தை நிச்சய புத்தியுடன் செய்து முடித்தீர்கள் செய்த பிறகு வெற்றி உங்களுடைய கையில் இருக்கிறது என்பது நிரூபணமாகி விட்டது. என்ன விரும்புகிறீர்களோ அதைச் செய்ய முடியும் இந்த அனுபவம் உண்டானது குஷியடைந்து விட்டீர்கள். எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து திட சங்கல்பத்துடன் செய்யும்போது, மலையும் கூட பஞ்சுபோல் ஆகி விடும் என்பதை புரிந்து கொண்வர்கள். பஞ்சு போல ஆக முடியுமல்லவா? ஆக முடியுமா? ஏற்கனவே முடிந்து போன விஷயம். சக்திகளுக்கும் சுப சங்கல்பம் இருக்கிறது, விசேஷ நிமித்தமாக சிலர் தான் ஆகியிருந்தார்கள் ஆனால் எல்லோருக்கும் எந்த ஒரு சுப சங்கல்பம் இருந்ததோ, செய்யத்தான் வேண்டும் என்பது அது வேலையை முடித்து விட்டது. ஆகவே இப்போது எப்படி இன்டர்நேஷனல் முடிவு சேர்ந்து எடுத்தீர்களோ மேலும் நடைமுறையில் பிரத்யக்ஷமாகவே நடந்து முடிந்ததைப் பார்த்தீர்கள். இதேபோலவே. சதா செய்து கொண்டேயிருக்க வேண்டும் கஷ்டம் ஒன்றுமில்லை. எவ்வளவு ஆதரவாளர்கள் இருக்கிறார்கள் இவர்கள்

யார்? ஒரு பிரம்மாபாபாவின் புஜங்கள். ஆதலால் பழங்கள் அற்புதம் நிகழ்த்திக் காட்டினார்கள் அல்லவா? இதே போலவே குழுவை அதிகரித்துக் கொண்டேயிருக்க வேண்டும். ஒருவருக்கொருவர் சகயோகியாக இருக்க வேண்டும். சரிதானா? பாப்தாதாவுக்குத் தெரியும். இந்த குரூப்பிற்கு ஏதவாது ஞாபகார்த்தம் கொடுக்க வேண்டும். ஞாபகார்த்தத்தில் ஒரு வரதானம் நினைவில் வைத்திருக்க வேண்டும். எந்த ஒரு காரியம் வேண்டுமானாலும் செய்யுங்கள். அப்போது அமர்பவ என்ற வரதானத்தை நினைவு செய்யுங்கள். இதன் மூலம் அமர் ஆகி விடும். உறுதியாகி விடும். சரிதானா? நல்லது. மிக்க நன்று.

**நியூயார்க் மோகினி சகோதரி, டெனிஸ் சகோதரியின் நினைவை அளித்தார்:** அவரிடம் கூறுங்கள். நீங்களும் கூட டபுள் விதேஷிகளில் ஒரு உதாரணம் என்று இந்த சைகை மூலம் புரிந்து கொள்ளக்கூடியவர் வாழ்த்துக்கள். இப்போது இதே வழிமுறைப்படி நடத்திக் கொண்டேயிருங்கள். வெற்றிக்கு வரதானம் இருக்கிறது. யார் மூலமாலது வெற்றி அடைந்து விடும்.

**அன்னபூர்ணா சகோதரி (சென்னை):** இப்போது உங்களுடைய முகத்தில் நோய் இல்லை. இப்படியே இருக்க வேண்டும் போதும். புன்முறுவல் செய்து கொண்டேயிருக்க வேண்டும். உங்களுக்கான மருந்து புன்முறுவல் செய்து கொண்டேயிருக்க வேண்டும் என்பது. மருந்து எடுத்துக் கொள்ளுங்கள் ஆனால் புன்முறுவல் செய்து கொண்டேயிருக்க வேண்டும்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 18.02.2008 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உலக மறுமலர்ச்சிக்கு அமைதி சக்தியைப் பிரயோகம் செய்யுங்கள்!

இன்று பாப்தாதா தன்னுடைய விஷ்வ பரிவர்த்தக் (உலகை மாற்றம் செய்பவர்கள்) ஆகவும். தந்தையின் நம்பிக்கை தீடங்களாகவும் இருக்கின்ற குழந்தைகளை நாலா பக்கமும் பார்த்து மிகழ்ச்சி படைகின்றார். குழந்தைகள் பாப்தாதாவிடம் மிக மிக மிக அன்புடையவர்களாக இருக்கின்றார்கள் என்பதை பாப்தாதா அறிவார். மேலும் பாப்தாதாவுக்கும் கூட ஒவ்வொரு குழந்தையிடமும் நூறு மடங்குக்கும் மேலாக அதிக அள்பு இருக்கிறது. மேலும் இந்த அன்பானது சதா இந்த சங்கமயுகத்தில் கிடைத்துக் கொண்டுதான் இருக்கும். எப்படியெப்படியெல்லாம் சமயம் அருகாமையில் வந்து, கொண்டிருக்கிறதோ, அதற்கேற்ப ஒவ்வொரு குழந்தையின் உள்ளத்திலும், இப்போது ஏதாவது செய்பத்தான் வேண்டும் என்ற எண்ணம் ஆர்வம், உற்சாகத்துடன் இருக்கிறது. ஏனென்றால் தற்சமயம் மூன்று விதமான சக்திகளும் மிகவும் குழப்பத்தில் இருந்து கொண்டிருக்கின்றன என்பதைப் பார்க்கின்றார்கள். தர்ம பரிபாலனம் ஆனாலும், இராஜ்ய பரிபாலனமானாலும், விஞ்ஞான சக்தியாக இருந்தாலும் சரி, இன்றைக்கு விஞ்ஞான சக்தியும் கூட இயற்கைத் தத்துவத்தை யதார்த்த ரூபத்தில் உபயோகிக்க முடியவில்லை. நடக்கும் என்று கூறுகின்றார்கள். ஏனென்றால் விஞ்ஞான சக்தியானது, தத்துவத்தைப் பயன்படுத்தி காரியம் செய்ய வேண்டும் ஆனால் தத்துவமும் கூட, விஞ்ஞான சாதனம் இருந்தும், முயற்சிகள் செய்தாலும், இப்போது வசத்தில் இல்லை. (கண்ட்ரோலில் இல்லை) மேலும் இனி போகப்போக இயற்கையின் விளையாட்டு மேலும் மேலும் அதிகமாகிக் கொண்டேதானிருக்கும். ஏனென்றால். இயற்கையிலும் கூட முன்பு இருந்ததைப்போன்ற சக்தி இப்போது இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் இப்போது எந்த சக்தி மாற்றத்தைக் கொண்டு வர முடியும் என்பதை நீங்கள் எண்ணிப் பாருங்கள். இந்த அமைதி சக்தி தான்

(சைலன்ஸ் பவர்) உலக மாற்றம் செய்யும். நாலா பக்கமும் இப்போதுள்ள குழப்பத்திலிருந்து மீட்கக் கூடியவர் யார்? தெரியுமல்லவா? பரமாத்மாவின் பாலனைக்கு அதிகாரி ஆத்மாக்களைத் தவிர வேறு யாராலும் செய்ய முடியாது. ஆதலால் உங்கள் எல்லோருக்கும் இந்த ஊக்கம், உற்சாகம் இருக்கிறது. பிராமண ஆத்மாக்களாகிய நாம் தான் பாப்தாதாவுடனும் இருக்கின்றோம். மாற்றம் கொண்டு வரும் (பரிவர்த்தனை) காரியத்தில் துணையாகவும் இருக்கின்றோம் என்பது.

பாப்தாதா விசேஷமாக அமிர்த வேளையில் கூடவே இருக்கும்போது பார்த்தார். அதாவது உலகில் மூன்று சக்திகளும் எவ்வளவு குழப்பத்தில் இருக்கின்றனவோ, அந்த அளவுக்கு சாந்தி தேவிகள், சாந்தி தேவர்களாகிய நீங்கள் எவ்வளவு அமைதி சக்தியை சக்திசாலியாக பிரயோகிக்க வேண்டுமோ, அதில் குறை உள்ளது. ஆதலால் பாப்தாதா இப்போது எல்லா குழந்தைகளையும் உற்சாகப்படுத்துகின்றார். சேவை செய்யும் இடங்களில் சப்தத்தை (செய்தியை) நன்றாகவே பரப்புகிறீர்கள். அதில் குழப்பம் இருக்கிறது ஆனால் சைலன்ஸ் சக்தி (குல்ஜார் தாதி உடலுக்கு அடிக்கடி இருமல் வந்து கொண்டிருக்கிறது) வாத்தியம் கெட்டுப் போய்விட்டது. (தொண்டை சரியாக இல்லை. இருந்தாலும் கூட பாப்தாதா குழந்தைகளை சந்திக்காமல் இருக்க முடியாது, இதுபோல் குழந்தைகளும் இருக்க முடியாது. ஆதலால் இப்போது குழந்தைகள் நாலா பக்கமும் அமைதி சக்தியின் அதிர்வுகளைப் பரப்ப வேண்டும் என்று சைகை செய்கின்றார்.

விசேஷமாக பிரம்மாபாபாவையும் ஜகதம்பாவையும் பார்த்தீர்கள். இவர்கள் சுயம் ஆதி தேவாக இருந்தும் கூட, அமைதிசக்தியை எவ்வளவு ரகசியமாகவே பயன்படுத்தினார்கள். உங்களுடைய தாதியும் கூட கர்மாதீத் நிலை அடைவதற்காக, இதே விஷயத்தை எவ்வளவு பக்கவாக (உறுதியாக) செய்தார், பொறுப்பு இருந்தபோதும். (இருமல் அடிக்கடி வந்து கொண்டிருக்கிறது. தொண்டை (வாத்தியம்) எவ்வளவுதான் சரியில்லாமல் இருந்தாலும் பாப்தாதாவுக்கு அன்பிருக்கிறது. சேவை சம்மந்தமான பொறுப்புகள் எவ்வளவு பெரிதாக இருந்தாலும். சேவையில் வெற்றிக்கான பிரத்யக்ஷ பலன் அமைதிசக்தி இல்லாதுபோனால் எவ்வளவு விரும்புகிறீர்களோ, அவ்வளவு கிடைக்க

முடியாது ஏனெனில், தனக்காகவும், முழு குடும்பத்திற்கும் அவசியமான பாக்கியத்தை அப்போதுதான் அடைய முடியும். இதற்காக இப்போது ஒவ்வொருவருக்கும் தனக்காகவும், முழு கல்பத்திலும் ராஜ்ய பாக்கியம் அடைவதற்கும், மேலும் பூஜைக்குரியவராக ஆவதற்கும் சேமிப்பதற்கான நேரம் இருக்கிறது. ஏனென்றால் நேரத்தைப் பயன்படுத்த முடியாமல் போகக்கூடிய ஒரு நிலை வரத்தான் போகிறது. அப்படிப்பட்ட நேரத்தில் அமைதிசக்தியின் மூலமாக டச்சிங் பவர் மற்றும் கேச்சிங் பவர் அவசியமாக இருக்கும் ஏனெனில் எந்த ஒரு சாதனமும் உபயோகப்படாமல் போகக்கூடிய அப்படிப்பட்ட நேரம் வரும். ஆத்மீக சக்தி மட்டுமே, பாப்தாதாவின் டைரக்ஷன் டச்சிங் தான் காரியத்தை செய்விக்கக்கூடியதாக இருக்கும். ஆதலால் தன்னை சோதியுங்கள். இப்படிப்பட்ட நேரத்தில் பாப்தாதாவின் டச்சிங் மனதிலும் புத்தியிலும் டச்சிங் ஆகுமா? இதற்கு வெகுகால அப்பியாசத்தின் அவசியம் இருக்கிறது. இதற்கான சாதனம், மனம் மற்றும் புத்தி அவ்வப்போது மட்டுமல்ல, சதா சுத்தமாகவும் (கிளீன்) தெளிவாகவும் (கிளீயர்) இருக்க வேண்டும். இப்போது ஒத்திகை (ரிகர்ஸல்) அதிகமாகிக் கொண்டேயிருக்கும். பிறகு ஒரு நொடியில் உண்மையாகி விடும். ஒருவேளை மனதிலும் புத்தியிலும் எந்த ஒரு ஆத்மாவின் மீதும், எந்த ஒரு காரியத்தின் மீதும் கூடவே இருந்து உதவிக் கொண்டிருக்கிறவருடையவர் மீதும், சிறிதளவு எதிர்மறை எண்ணம் (நெகட்டிவ்) இருந்தால், அதை கிளீன் மற்றும் கிளீயர் என்று சொல்ல முடியாது. ஆதலால் பாப்தாதா, இது பற்றிய கவனத்தை ஈர்க்கின்றார், முழு நாளும் சோதித்துப் பாருங்கள். சைலன்ஸ் சக்தி எவ்வளவு சேமிப்பாகியிருக்கிறது? சேவை செய்து கொண்டிருந்தாலும் கூட சைலன்ஸ் சக்தி வாய்மொழியில் ஒருவேளை இல்லாமலிருந்தால் பிரத்யக்ஷ பலன் எவ்வளவு விரும்புகிறீர்களோ அவ்வளவு இருக்காது. முயற்சி அதிகம் பலன் குறைவு சேவை செய்யுங்கள் ஆனால் அமைதி சக்தி நிறைந்த சேவை செய்யுங்கள். அதில் எவ்வளவு ரிசல்ட் (வெற்றி) விரும்புகிறீர்களோ, அதை விட அதிகம் கிடைக்கும். அடிக்கடி சோதித்துப் பார்க்க வேண்டும். மற்றபடி பாப்தாதாவுக்கு குஷியாக இருக்கிறது. ஏனெனில் ஒவ்வொரு நாளும் எங்கெல்லாம் என்ன சேவை செய்கிறீர்களோ, அதை நன்றாகவே செய்து கொண்டிருக்கிறீர்கள் ஆனால் தனக்காக அமைதி சக்தியை சேமிப்பதில் சுய மாற்றம் கொண்டு வருவதில் இன்னும் கொஞ்சம் கவனம் வேண்டும்.

முடிவாக உலக மாற்றம் உண்டாவதற்கு யார் நிமித்தமாகப் போகிறார்கள் என்று உலகம் முழுவதும் தேடிக் கொண்டேயிருக்கிறார்கள். ஏனெனில் ஒவ்வொரு நாளும் துக்கமும், அசாந்தியும் அதிகமாகிக் கொண்டேயிருக்கிறது. இதைவிடவும் இன்னும் அதிகமாகத்தான் செய்யும். ஆதலால் பக்தர்கள் தங்கள் இஷ்ட தேவதையை நினைவு செய்கிறார்கள். சிலர் மிக அதிக பிரச்சனைகளுக்கிடையே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மத குருமார்களின் பக்கமாகப் பார்வைபைத் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள் மேலும் விஞ்ஞானிகளும் கூட இனி என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறார்கள் இன்னும் எவ்வளவு நாள் இப்படி இருக்கும் ஆகவே இவை அனைத்திற்கும் பதில் சொல்லக்கூடியவர் யார்? எல்லோருடைய மனதிலும் எப்போது பொற்காலம் உதயமாகும் என்ற எதிர்பார்ப்பு இருக்கிறது. ஆதலால் நீங்கள் எல்லோரும் கொண்டு வரக் கூடியவர்கள் தானே? அப்படிப்பட்டவர்களா? இதில் நாங்கள் நிமித்தமாயிருக்கிறோம் என்று நினைப்பவர்கள் கை உயர்த்துங்கள். நிமித்தமாயிருக்கிறீர்கள். நல்லது. இவ்வளவு பேர் நிமித்தமாயிருக்கிறார்கள் என்றால், எவ்வளவு காலம் தேவைப்டும். உங்கள் எல்லோருக்கும் கூட இதில் குஷி தான், பாப்தாதாவுக்கும் மகிழ்ச்சிதான் பாருங்கள். இந்த பொன்னான வாய்ப்பு ஒவ்வொருவருக்கும் பொன்னாக ஆவதின் அடிப்படையில் கிடைக்கும்.

இப்போது உங்களுக்குள், எப்படி சர்வீஸ் மீட்டிங் செய்கிறீர்கள். அதில் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்கிறீர்கள் அல்லவா? அதுபோல, இந்த மீட்டிங்கும் செய்யுங்கள். பிளான் (திட்டம்) தயார் செய்யுங்கள். நினைவு மற்றும் சேவை. நினைவு என்பதன் அர்த்தம் அமைதிசக்தி. இது எப்போது அடைகிறீர்களோ, அப்போது உங்களுடைய நிலை உச்சத்தில் இருக்கும். உதாரணமாக நீங்கள் ஒரு மிக உயரமான இடத்தில் நின்று கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தீர்களானால் எல்லாம் தெளிவாகத் தெரிகிறதல்லவா? அதுபோல உங்களுடைய உச்ச நிலை. எல்லாவற்றிலும் உச்சம் எது? பரந்தாமம். பாப்தாதா கூறுகின்றார், சேவை செய்தவுடன் உச்ச ஸ்தானத்தில் தந்தையிடம் வந்து அமர்ந்து விடுங்கள். உதாரணமாக களைப்பாக இருக்கும்போது 5-நிமிடம் அமைதியாக இருந்து விடுகிறீர்கள். என்றால் வித்தியாசம்

தெரிகிறதல்லவா? இதுபோல இடையிடையே, தந்தையிடம் வந்து அமர்ந்து விடுங்கள். இதற்கடுத்த உயரமான இடம், சிருஷ்டி சக்கரத்தைப் பார்ப்பது சிருஷ்டி சக்கரத்தில் உயர்ந்த இடம் எது? சங்கமம். சங்கமத்தில் முள்ளின் முனையை உச்சத்தில் காண்பிக்கிறீர்கள் அல்லவா? கீழே வந்தீர்கள். சேவை செய்தீர்கள். பிறகு உயர்ந்த இடத்திற்குச் சென்று விடுங்கள். இப்போது என்ன செய்ய வேண்டும் என்பதை புரிந்து கொண்டீர்களா? நேரம் (சமயம்) உங்களை அழைக்கிறது. நீங்கள் நேரத்தை அருகாமையில் கொண்டு வந்து கொண்டிருக்கிறீர்களா? இதற்கு எஜமான் (படைப்பவர்) யார்? உங்களுக்குள் இதைப் போன்ற திட்டம் தயார் செய்யுங்கள். நல்லது.

குழந்தைகள் வரத்தான் வேண்டும் என்று சொன்னார்கள். தந்தை சரி என்று சொன்னார். இதுபோல ஒருவர்க்கொருவரிடையேயான விஷயத்தை சுபாவத்தை விருத்தியை புரிந்து, சரி ஆமாம் என்று சொல்வதன் மூலம் இப்படி எல்லோரும் ஒருங்கிணைந்த ஒட்டுமொத்த சக்தியானது அமைதியின் ஜுவாலையை பிரகாசிக்கச் செய்யும் நெருப்புக் கொழுந்தைப் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா? ஆகவே இந்த கூட்டு சக்தியானது அமைதி ஜுவாலையை பிரகாசிக்கச் செய்யும். நல்லது.

மகாராஷ்டிரா, ஆந்திர பிரதேஷ், பாம்பே, சேவை வாய்ப்பு: பெயரே மகாராஷ்டிரா. மகாராஷ்டிராவுக்கு டிராமாபடி விசேஷமாக கோல்டன் கிப்ட் கிடைத்திருக்கின்றது. என்ன அன்பளிப்பு? பிரம்மாதந்தை மற்றும் தாயின் பாலனை மகாராஷ்டிராவுக்கு நேர்முகமாகக் கிடைத்துள்ளது. டெல்லி மற்றும் உத்தரபிரதேசத்திலும் கிடைத்துள்ளது ஆனால், மகாராஷ்டிராவுக்கு அதிகம். இப்போது மகாராஷ்டிரா மகானாகத்தான் இருக்கிறது. இனி என்ன செய்ய வேண்டும்? மகாராஷ்டிரா எல்லாம் சேர்ந்து ஒரு திட்டம் தயார் செய்ய வேண்டும். இதற்காக ஒரு மீட்டிங் செய்து அதில் எல்லோருக்கும் ஒரே சுபாவம், ஒரே சம்ஸ்காரம், ஒரே சேவையின் லக்ஷியம், அமைதி சக்தியை எப்படி பரப்புவது என்பது பற்றி பிளான் தயார் செய்ய வேண்டும். செய்வீர்கள் அல்லவா? செய்வீர்களா? நல்லது. ஒரு மாதத்திற்குப் பிறகு என்ன பிளான் செய்திருக்கிறீர்கள் என்று ரிப்போர்ட் கொடுப்பீர்கள். உங்களுடைய ஆன்மீக சம்பாஷணை (ரூஹ்ரிஹான்) இன்னும் அதிகமாகி விடும். விதவிதமான ஜோன்

இருக்கிறதல்லவா? ஆகவே அவர்களும் தயார் செய்வார்கள். அதில் நீங்கள் மகாராஷ்டிரா ஒரு சரம் (வழிகாட்டுதல்) தயாரியுங்கள், அவர்கள் அதில் வைரங்களை கோர்க்கட்டும். (சிறப்புச் செய்தல்) இருக்கிறதல்லவா தைரியம்? டீச்சர்களுக்கு தைரியம் இருக்கிறதா? முதலாவது வரிசை தைரியமிருக்கிறதா? சம்ஸ்காரத்தை ஒன்றாக இணைக்கும் காரியத்தை எந்த ஜோன் செய்வார்கள்? ஏதாவதொரு ஜோன் சுப.விருத்தி, சுப திருஷ்டி, சுப கிருத்தி எப்படி கொண்டு வருவது? இதை ஒரு ஜோன் எடுத்துக் கொள்ளட்டும். அடுத்த ஜோன் ஒருவேளை யாரோ ஒரு ஆத்மா சுயமாக தனது சம்ஸ்காரத்தை மாற்றிக் கொள்ள முடியவில்லை விரும்புகிறது ஆனால் செய்ய முடிவதில்லை. இதற்காக, அந்த ஆத்மாவுக்காக இரக்க மனம், மன்னிப்பு, உதவி, அன்பு கொடுத்து எப்படி தன்னுடைய பிராமண பரிவாரத்தை சக்திசாலியாக ஆக்கலாம். இந்த பிளான் தயார் செய்யட்டும். இப்படிச் செய்ய முடியுமா? செய்ய முடியுமா? முதலாவது வரிசை சொல்லுங்கள் செய்ய முடியுமா என்று? முடியும் என்று நினைப்பவர்கள் கை உயர்த்துங்கள். ஏனெனில் முதலாவது வரிசையில் அமர்ந்திருப்பவர்கள் எல்லோரும் மகாரதிகள், இப்போது பாப்தாதா பெயர் சொல்லப்போவதில்லை. ஒவ்வொரு ஜோனுக்கும் எது பிடித்தமானதாக இருக்கிறதோ. அதை ஆன்மீக சம்பாஷணை செய்து, பிறகு சிவராத்திரிக்குப் பிறகு கூட, ஒரு மாதத்தில் ரிசல்ட் சொல்லலாம். மகாராஷ்டிரா அல்லவா? நன்றாக இருக்கிறது விருத்தி, எல்லா இடங்களிலும் ஆகிக் கொண்டிருக்கிறது. இதற்கு பாப்தாதாவின் வாழ்த்துக்கள் வாழ்த்துக்களை அளிக்கின்றார். இதுவரையிலும் செய்ததற்கும் வாழ்த்துக்கள் ஆனால் இனி விசேஷமானவர்களின் விருத்தி செய்யுங்கள். குவாலிட்டி. குவாலிட்டி என்றால் பணக்காரராக இருக்க வேண்டும் என்பதல்ல, குவாலிட்டி என்பதன் பொருள் நினைவை நியமப்படி வாழ்க்கையில் நடைமுறைப்படுத்திக் காண்பிப்பவர். மற்றபடி மைக் மற்றும் வாரிசு என்பது பற்றி உங்களுக்குத் தெரியும். நிச்சயபுத்தி உள்ளவராக உறுதியுள்ளவராக இருக்க வேண்டும். நல்லது.

டபுள் ஃபாரினர்ஸ் எழுந்திருங்கள்: யுகல் மற்றும் குமாரிகளுக்கான ரிட்ரீட் விசேஷமாக நடந்தது. இவர்கள் அடையாளத்துடன் வந்திருக்கின்றார்கள். நன்றாக இருக்கிறது. குமாரிகள் கூட்டமாகச்

செல்லுங்கள், அனைவரும் பார்க்கட்டும். சுற்றி வாருங்கள். நல்லது எல்லோரும் அதிருஷ்டசாலிகள் தான் என்றாலும் குமாரிகள் டபுள் லக்கி ஏன்? மற்றபடி குமாரர்களும் லக்கி தான் ஆனால் குமாரிகளுக்கு ஒருவேளை குமாரி வாழ்க்கையில் நிலையாக இருந்தார்களானால். பாப்தாதாவின் குருபாயின் ஆசனம் கிடைக்கிறது. மன சிம்மாசனம் இருக்கவே இருக்கிறது. அது எல்லோருக்கும் இருக்கிறது ஆனால் குருவின் ஆசனம் எதில் அமர்ந்து கொண்டு முரளி படிக்கிறார்களோ அது. டீச்சராகி கற்பிக்கின்றீர்கள். ஆகவே தான் பாப்தாதா கூறுகின்றார். குமாரிகள். குமாரிகளின் புகழ் 21-பரம்பரையை முன்னேற்று பவர்கள். ஆகவே நீங்கள் உங்களுடைய 21-ஜென்மத்தை முன்னேற்றிக் கொண்டீர்கள் ஆனால் யாருக்காக நிமித்தமாகிறீர்களோ அவர்களையும் கூட 21-ஜென்மம் முன்னேற்றினீர்கள். ஆதலால் நீங்கள் அப்படிப்பட்ட குமாரிகள் தானே? அப்படித்தானே? பக்காவா? அல்லது கொஞ்சம், கொஞ்சம் கச்சாவா? இப்படி நினைப்பவர்கள் கை உயர்த்துங்கள். பக்காவாக இருக்கிறார்கள். நீங்கள் பார்த்தீர்கள் பக்கா குமாரிகள். முதிர்ச்சியடைந்தவர்கள். மோகினி சகோதரி கூறட்டும். (நியூயார்க்: முதிர்ச்சி யடைந்திருக்கிறார்களா? குமாரிகளின் குரூப் பக்காவாக இருக்கிறது. இவர்களுடைய டீச்சர் யார் (மீரா சகோதரி), பக்கா என்றால் கரஒலி எழுப்புங்கள். பாப்தாதாவுக்கும் குஷியாக இருக்கிறது. நல்லது. (இது குமாரிகளுக்கு 8வது ரிட்ரீட் -இதன் விஷயம் நம்முடையவர் என்ற அனுபவம் 30-தேசங்களிலிருந்து 80-குமாரிகள் வந்திருக்கின்றனர். எல்லோருமே நம்முடையவர் என்ற அனுபவம் மிக நன்றாக செய்தனர்? வாழ்த்துக்கள். இது குமாரிகளுக்கு ஆகி விட்டது. நீங்கள் எல்லோரும் யார்? நீங்கள் கூறுங்கள். இவர்களோ குமாரிகள் தான், நாங்கள் பிரம்மா குமார், பிரம்மா குமாரிகள். நீங்களும் கூட குறைந்தவர்கள் அல்ல. இது குமாரர்களின் குரூப் கிடைத்திருக்கின்ற குரூப், நன்றாக இருக்கிறது. யுகலாக (தம்பதியர்) இருப்பவர்களுக்கு நஷா உள்ளது. அதிகப்படியான நஷா தெரியுமா? எப்போதிருந்து குடும்ப வாழ்க்கையில் (பிரவிருத்தியிலுள்ளவர்கள்) இருப்பவர்கள். இந்த ஞானத்தை தாரணை செய்ய ஆரம்பித்தார்களோ, அப்போதிருந்து மெலூரிட்டி இப்போது மக்களிடையே தைரியம் வந்திருக்கிறது. நாமும் கூட இப்படி இருக்க முடியும் என்ற நம்பிக்கை உண்டாகியிருக்கிறது. ஆரம்பத்தில் என்ன நினைத்தார்கள் என்றால் பிரம்மா குமாரிகள் ஆகி விட்டால் எல்லாவற்றையும் விட்டு விடவேண்டியதாக இருக்கும் என்று ஆனால்

இப்போது பிரம்மா குமார் குமாரி ஆகி குடும்ப விவகாரங்களையும் நடத்த முடியும் என்று புரிந்து கொண்டிருக்கிறார்கள் மேலும் யுகல் தம்பதியராக இருப்பவர்களிடம் இன்னும் ஒரு விசேஷம் இருக்கிறது. இவர்கள் மகாத்மாக்களுக்கு, சவால் விட்டிருக்கிறார்கள். நாங்கள் கூடவே இருந்து, காரிய விவகாரங்களை செய்து கொண்டிருந்தும் எங்களுடைய ஆன்மீகம் சிரேஷ்டமாக இருக்கிறது. வெற்றியாளர்களாக இருக்கிறோம். ஆகவே வெற்றியுடன் நடந்து காட்டுவது தம்பதிகளாக இருப்பவர்களுடைய (யுகல்) காரியம் ஆதலால் பாப்தாதா யுகலாக இருப்பவர்களுக்கும் வாழ்த்துக்களை அளிக்கின்றார்.

சரி தானே! சவால் விடுபவர்கள் தானே! பக்காவா? யாராவது சிஐடி வந்து சோதித்தால் செய்யட்டும். நீங்கள் கூறுங்கள். சோதித்துப் பாருங்கள் என்று. துணிச்சல் இருக்கிறதா? கை உயர்த்துங்கள். நல்லது.

கிராம சேவை துறையினர் மீட்டிங் நடந்து கொண்டிருக்கிறது: நன்றாகக் கூறினார்கள். ஏதோ புதுமையாகச் செய்கிறார்கள் அல்லவா? செய்கிறார்களா, யாராவது புதுமையாக? என்ன செய்கிறீர்கள்? யாராவது கூறுங்கள். (மோகினி சகோதரி கூறினார்) யோகப் பிரயோகத்தோடு கூடவே. ஆரோக்கியத்திற்கு உதவக்கூடிய பயிர்கள் (செடி கொடிகள்) பற்றிய திட்டம் தயாரித்திருக்கிறார்கள். இது நல்லது தான் ஏனெனில், தற்காலத்தில் பயிர்களிலிருந்து என்ன கிடைக்கிறதோ, அவற்றில் பிரச்சனைகள் உண்டு. ஆகவே நல்ல காரியம் செய்தார்கள். ஒன்று தனக்கு பலனளிக்கும் யோகம் செய்வார்கள். இரண்டாவது பொது மக்களுக்கு உதவியும் கிடைக்கும். ஆதலால் நல்லது செய்கிறார்கள். ஆர்வம், உற்சாகத்தோடு செய்து கொண்டிருக்கிறார்கள். இதைச் செய்து கொண்டே இருக்க வேண்டும். நல்லது. வாழ்த்துக்கள். நன்று.

இனி இன்றைக்கு யாரெல்லாம் புதிதாக வந்திருக்கிறார்களோ அவர்கள் எல்லோரும் எழுந்திருங்கள். பாதி வகுப்பு புதிதாக வந்திருப்பவர்கள். உங்கள் எல்லோருக்கும் மதுபன் வந்ததால் விசேஷ குஷியிருக்கும். மகிழ்ச்சிக்கு நல் வாழ்த்துக்கள். மேலும் பாப்தாதா சதா எல்லோருக்கும் இதைத்தான் கூறுகின்றார். அமர்பவ என்ற வரதானத்தை அமிர்தவேளையில் ரிவைஸ் (நினைவுக்குக் கொண்டு வருதல்) செய்து கொண்டேயிருக்க வேண்டும். இங்கு தந்தையிடமிருந்து வரதானம்

கிடைக்கிறது. ஆனாலும் வரதானம் எப்போது உபயோகப்படும் என்றால். எப்போது நீங்கள் தினமும் ரிவைஸ் செய்து கொண்டேயிருப்பீர்களோ. அப்போது தான். ஆதலால் ரிவைஸ் செய்து கொண்டேயிருங்கள். முன்னேறிக் கொண்டேயிருங்கள். நல்லது.

மற்றபடி இன்று யாரெல்லாம் வந்திருக்கின்றார்களோ பாப்தாதா உங்கள் எல்லோருக்கும் மிக மிக அன்போடு வரவேற்று. சரீரத்தை நடத்திக் கொண்டிருக்கின்றார் நன்று டீச்சர்ஸ், டீச்சர்கள் நன்றாக இருக்கிறீர்களா? டீச்சர்கள் நிறைய பேர் வந்திருக்கிறார்கள். நல்லது. மூத்தவர்களும் கூட எழுந்திருக்கிறார்கள். நன்றாக இருக்கிறது. பாருங்கள் பாப்சமான் டைட்டில் உங்களுக்கும் கூட இருக்கிறது. தந்தையும் கூட டீச்சராக வருகின்றார். டீச்சர் என்றால், சுய அனுபவத்தின் ஆதாரத்தில் மற்றவர்களையும் அனுபவசாலிகளாக்குவது அனுபவம் என்ற அத்தாரிட்டி எல்லாவற்றையும் விட விசேஷமானது ஒருவேளை ஏதோ ஒரு விஷயத்தில் அனுபவசாலி ஆகியிருந்தாலும் கூட, வாழ்க்கை முழுவதும் மறக்காது. கேட்கும் விஷயம், பார்க்கின்ற விஷயம் மறந்து விடும் ஆனால் அனுபவம் செய்த விஷயம் மறக்காது. ஆகவே டீச்சர்ஸ் என்றால் அனுபவசாலிகளாகி அனுபவம் செய்விப்பவர்கள். இந்த காரியம் தான் செய்து கொண்டிருக்கிறீர்கள் அல்லவோ? நல்லது. ஏதாவது அனுபவத்தில் குறை இருந்தால் ஒரு மாதத்தில் நிரப்பி விடுங்கள். பிறகு பாப்தாதா ரிசல்ட் கேட்டார். நல்லது.

இப்போது நாலா பக்கமும் உள்ள பாப்தாதாவினுடைய மன சிம்மாசனத்திற்கு அதிகாரியாகயிருக்கின்ற, சதா தன்னுடைய சைலன்ஸ் சக்தியை அதிகரித்துக் கொண்டும், மற்றவர்களும் முன்னேறுவதற்கு ஊக்கம், உற்சாகம் அளித்துக் கொண்டும், சதா குஷியாக இருக்கின்ற மேலும் எல்லோருக்கும் குஷியின் அன்பளிப்பை அளிக்கின்ற, நாலா பக்கமும் உள்ள பாப்தாதாவின் லக்கி மற்றும் லவ்லி குழந்தைகளுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள், ஆசிகள் மற்றும் நமஸ்தே!

சாந்தாமணி தாதியுடன்: உங்களுக்கு என்ன டைட்டில் கிடைத்திருக்கிறது. (சச்சி கௌடி) பாப்தாதா சச்சி கௌடி என்ற

ரூபத்தில் பார்க்கின்றார். நல்லது பாருங்கள். நடத்திக் கொண்டிருக்கின்றார். வாழ்த்துக்கள் சரீரம் இயங்குகிறது. நல்லது.

(முன்னி சகோதரி பாப்தாதாவிடம் கேட்டார். பாபா! தாதி பிறப்பு எடுத்து விட்டாரா? பாப்தாதா கூறினார். ஆம் நடந்து விட்டது).

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 05.03.2008 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சங்கமத்தின் வங்கியில் அமைதி (சைலன்ஸ்) சக்தி மற்றும் சிரேஷ்ட கர்மத்தை சேமியுங்கள், சிவ மந்திரம் மூலம் "நான்" என்பதை பரிவர்த்தனை செய்யுங்கள்! (சிவ ஜெயந்தி)

இன்று பாப்தாதா நாலாபக்கமும் உள்ள குழந்தைகளின் சிநேகத்தைப் பார்க்கின்றார். நீங்கள் எல்லோரும் கூட சிநேகம் என்ற விமானத்தில் இங்கு வந்து சேர்ந்து விட்டீர்கள். இந்த சிநேகம் என்ற விமானம் மிக சுலபமாக சிநேகத்தின் பக்கமாக கொண்டு வந்து சேர்த்து விடுகிறது. பாப்தாதா பார்க்கின்றார். இன்று விசேஷமாக அன்பில் மூழ்கியிருக்கின்ற ஆத்மாக்களாகிய நீங்கள் எல்லோரும் பரமாத்ம அன்பு எனும் ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருக்கிறீர்கள். பாப்தாதாவும் கூட நாலா பக்கங்களிலுமுள்ள குழந்தைகளின் சிநேகத்தில் ஒன்றி விட்டார். இந்த பரமாத்ம சிநேகம் பாபா சமானமாக அசரீரியாக சுலபமாகவே ஆகி விடுகிறது. ஸ்தூல பாவனையிலிருந்து விலக்கி, அவ்யக்த ஸ்திதியில் அவ்யக்த சொரூபத்தில் நிலைக்கச் செய்து விடுகிறது. பாப்தாதாவும் கூட ஒவ்வொரு குழந்தையின் சமமான ஸ்திதியைப் பார்த்து மகிழ்ச்சியடைகின்றார்.

இன்றைய தினம் எல்லா குழந்தைகளும், சிவராத்திரி, சிவஜெயந்தி நாளில் தந்தை மற்றும் தன்னுடைய ஜன்ம தினத்தைக் கொண்டாட வந்திருக்கிறீர்கள். பாப்தாதாவும் கூட தங்கள், தங்களுடைய வதனத்திலிருந்து (இருப்பிடம்) குழந்தைகளாகிய உங்கள் எல்லோருடைய பிறந்த நாளைக் கொண்டாடுவதற்காக வந்து சேர்ந்து விட்டார். முழு கல்பத்திலும் இந்த பிறந்த தினம் தந்தைக்கும், உங்களுக்கும் நியாராவாகவும் (அலாதியானதாக) மிகவும்

அன்புடையதாகவும் இருக்கிறது. முழு கல்பத்திலும் யாருடைய பிறந்த நாளையும் பரமாத்மா கொண்டாடுவதில்லை. ஆத்மா, ஆத்மாவுக்கு கொண்டாடுகிறது ஆனால் இந்த அலௌகீக பறவியை பரமாத்மா, ஆத்மாக்ளுக்காக கொண்டாடுகின்றார். இத்தோடு கூடவே, இந்தப் பிறவியின் விசேஷம் மிகவும் அலௌகீகமானது, இம்மாதிரியாக முழு கல்பத்திலும் நடைபெற முடியாது. தந்தைக்கும் மற்றும் குழந்தைகளுக்கும் பிறந்த தினம், ஒரே நாளாக இருப்பதை நீங்கள் ஒருபோதும் கேள்விப்பட்டிருக்க மாட்டீர்கள். ஆதலால் இந்த பிறந்த நாளுக்கு இன்னொரு மகத்துவமும் உண்டு. அதாவது தந்தையோடு கூடவே கொண்டாடுகிறீர்கள். இந்த பிறந்த நாளை சிவஜெயந்தி என்றும் கூறுகின்றார்கள், சிவராத்திரி என்றும் கூறுகின்றார்கள். ஆகவே பிறவியோடு கூடவே, கடமைக்கும் கூட ஞாபகார்த்தம் இருக்கிறது. இருளை விலக்குவதற்கும், ஒளியைப் பரப்புவதற்கும் ஞாபகார்த்தம் உள்ளது. இப்படிப்பட்ட பிறந்த நாளை நீங்கள் தந்தையோடு கூடவே கொண்டாடுகின்ற பாக்கியவான் ஆத்மாக்கள் ஆவீர்கள். தந்தை குழந்தைகளுக்கு, பல நூறு மடங்கு இந்த தெய்வீகப் பிறவிக்கு வாழ்த்துக்களையும், ஆசிகளையும் வழங்குகின்றார். மேலும் உள்ளன்போடு கூடிய நினைவுகளையும் அளிக்கின்றார். வாழ்த்துக்கள்! பல நூறு மடங்கு வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்!

பக்தர்களும் கூட இந்த பண்டிகையை மிகுந்த பாவனையோடும். அன்போடும் கொண்டாடுகிறார்கள். நீங்கள் இந்த தெய்வீகப் பிறவியில் எந்த ஒரு சிரேஷ்டமான, அலௌகீக கர்மம் செய்தீர்களோ. இப்போதும் செய்து கொண்டிருக்கிறீர்களோ, இதை ஞாபகார்த்த ரூபத்தில் தற்காலிகமாக அல்லது கொஞ்ச நேரத்திற்காக கொண்டாடுகிறார்கள். இருந்தாலும், பக்தர்களும் கூட சாதாரணமானவர்கள் அல்ல. ஞாபகார்த்தமாக கொண்டாடுபவர்களும், ஞாபகார்த்தத்தை உருவாக்குபவர்களும் கூட எவ்வளவு அற்புதம் செய்து காட்டுகிறார்கள் பாருங்கள். காப்பியடிப்பதில் கெட்டிக்காரர்களாகத்தான் இருக்கிறார்கள். ஏனென்றால், உங்களுடைய பக்தர்கள் தானே! ஆதலால் உங்களுடைய சிரேஷ்ட தன்மைக்கான பலன், அந்த ஞாபகார்த்தத்தை உருவாக்குபவர்களுக்கு வரதானமாகக் கிடைத்திருக்கிறது. நீங்கள் ஒரு பிறவிக்கு ஒரு முறை சம்பூரண தூய்மைக்கான விரதம் மேற்கொள்கின்றீர்கள். காப்பியடித்திருக்கிறார்கள். அதாவது ஒரு

நாளைக்கு தூய்மையாக இருப்பது என்ற விரதம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் உங்களுடைய முழு பிறவிக்கும் துய்மையான உணவுக்கான விரதம் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் ஆனால் அவர்கள் ஒரு நாள் மட்டும் விரதம் மேற்கொள்கிறார்கள். ஆதலால் பாப்தாதா இன்று அமிர்த வேளையில் பார்க்கும் போது உங்கள் எல்லோருடைய பக்தர்களும் கூட சளைத்தவர்களாயில்லை. அவர்களிடமும்கூட விசேஷத்தன்மைகள் நன்றாகவே இருந்தன. ஆகவே நீங்கள் எல்லோரும் முழு பிறவிக்கும். உணவுப் பழக்கத்திலும், மனம், சொல், செயல், சம்மந்தம், தொடர்பு ஆகிய எல்லாவற்றிலும் பக்காவாக விரதம் (உறுதிமொழி) எடுத்துக் கொண்டிருக்கிறீர்களா? முழுமையாகவே எடுத்துக் கொண்டிருக்கிறீர்களா? அல்லது கொஞ்சம், கொஞ்சம் எடுத்துக் கொண்டிருக்கிறீர்களா? தூய்மை (பவித்திரத்தா) பிராமண வாழ்க்கையின் ஆதாரம். பூஜைக்குரியவராவதற்கும் ஆதாரம். சிரேஷ்ட பாக்கியம் அடைவதற்கும் ஆதாரமாக இருக்கிறது. ஆகவே பாக்கியவான் ஆத்யகள் யாரெல்லாம் வந்து சேர்ந்திருக்கிறீர்களோ, அவர்கள் சோதித்துப் பார்க்க வேண்டும். இந்தப் பிறவிக்கான விழா நாலா விதத்திலும் தூய்மையாக ஆவதற்காக, பிரம்மச்சரியம் அனுசரிப்பது மட்டுமல்ல, மனம், சொல், செயல், சம்மந்தம், தொடர்பு ஆகிய அனைத்திலும் தூய்மை. இந்த உறுதியினை (விரதம்) பக்காவாக எடுத்துக் கொண்டிருக்கிறீர்களா? எடுத்துக் கொண்டிருக்கிறீர்களா? யாரெல்லாட்ட பக்கவாக எடுத்துக் கொண்டிருக்கிறார்களோ, கொஞ்சம், கொஞ்சம் கச்சாவாக அல்ல, அவர்கள் கை உயர்த்துங்கள். பக்காவா? (உறுதி) பக்காவா? பக்காவா? எவ்வளவு பக்கா? யாராவது அசைத்தால் அசைந்து விடுவீர்களா? அசைந்து விடுவீர்களா? அசைய மாட்டீர்களா? சிற்சில சமயங்களில் மட்டுமா? சில சமயம் கொஞ்சம், சில சமயம் அதிகம். சில சமயம் பக்கா. சில சமயம் கச்சா (உறுதியற்ற நிலை) இப்படி இருக்கவில்லையல்லவா? ஏனென்றால் பாப்தாதாவிடம் அன்பில் நூறு சதவிகிதத்திற்கும் அதிகம் என்றே சொல்லலாம். ஒருவேளை பாப்தாதாவிடம் எவ்வளவு அன்பு இருக்கிறது என்று கேட்டால் எல்லோரும் ஆர்வம், உற்சாகத்தோடு கை உயர்த்துகிறார்கள். அன்பில் சதவிகிதம் குறைவதேயில்லை. மெஜாரிட்டியாக இருக்கிறது. எப்படி அன்பில் பாஸாகியிருக்கிறீர்களோ. பாப்தாதாவும் அன்பில் மெஜாரிட்டி பாஸ் என்பதை ஏற்றுக் கொள்கிறார் ஆனால் பவித்திரத்தா விரத்தில் (தூய்மை) நாலா ரூபத்திலும் மனம், சொல், செயல்,

சம்மந்தம், தொடர்பு ஆகியவற்றில் சம்பூரணத் தூய்மையாக நடப்பதில் சதவிகிதம் வந்து விடுகிறது. இப்போது பாப்தாதா என்ன விரும்புகின்றார்? பாப்தாதா எதை விரும்புகின்றார் என்றால், பாப்சமான் ஆக வேண்டும் என்று பிரதிக்ஞை எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆகவே ஒவ்வொரு குழந்தையின் முகத்தில் தந்தையின் முழுத் தோற்றம் தென்பட வேண்டும். ஒவ்வொரு சொல்லும் பாபா சமான் சொல்லாக இருக்க வேண்டும். பாப்தாதாவின் சொல் வரதானமாகி விடுகிறது. ஆதனால் நீங்கள் எல்லோரும் சோதியுங்கள். தன்னுடைய முகத் தோற்றத்தில் தந்தையின் தோற்றம் தெரிகிறதா? தந்தையின் தோற்றம் எது? சம்பன்னம், எல்லா விஷயத்திலும் சம்பன்னம் நிறைந்த இப்படி ஒவ்வொரு குழந்தையின் கண்களும், முகமும் பாபா சமானமாக இருக்கிறதா? சதா புன்முறுவலுடன் கூடிய முகத் தோற்றம் உள்ளதா? அல்லது சில சமயம் ஏதோ ஒரு ஆலோசனையில் இருப்பது போலவும், சில சமயம் வீணான எண்ணங்களின் நிழல் படிந்திருப்பது போலவும், சில சமயம் கவலையில் இருப்பது போலவும். சில சமயம் கஷ்டப்பட்டு சோர்வடைந்திருப்பது போன்ற முகத் தோற்றம் இல்லையல்லவா? சதா ரோஜா மலர். சில சமயம் ரோஜா போன்று மலர்ந்த முகம், சில சமயம் வேறு விதமாகவும் ஆகி விடுவதில்லை தானே? ஏனென்றால், பாப்தாதா பிறந்தவுடனேயே கூறி விட்டார் -மாயா, உங்களுடைய இந்த சிரேஷ்டமான வாழ்க்கையை எதிர்க்கும். மாயாவின் வேலை வருவது ஆனால் சதா தூய்மை விரதத்தில் இருக்கின்ற ஆத்மாக்களாகிய உங்களுடைய வேலை தூரமாக இருக்கும்போதே மாயாவை விரட்டி விடுவது.

பாப்தாதா பார்த்தார். அநேக குழந்தைகள் மாயாவை தூரமாக இருக்கும்போதே விரட்டுவதில்லை. மாயை வந்து விடுகிறது. வருவதை அனுமதித்து விடுகிறார்கள். அதாவது மாயையின் பிரபாவத்தில் வந்து விடுகிறார்கள். ஒருவேளை தூரத்தில் வரும்போதே விரட்டவில்லையேல் மாயாவுக்கும் கூட பழக்கமாகி விடுகிறது. ஏனென்றால், மாயைக்குத் தெரிகிறது. இவர்களிடம் இருப்பதற்கு இடம் தருவார்கள் என்று. இதன் அடையாளம், மாயை என்று புரிந்து கொள்கிறார்கள். புரிந்து கொண்டாலும் என்ன நினைக்கிறார்கள்? இப்போது யார் சம்பூரணமாகியிருக்கிறார்கள். யாருமே சம்பூரணம் ஆகவில்லை என்று. இப்போது தான் சம்பூரணம் ஆகிக்

கொண்டிருக்கிறோம், ஆகி விடுவோம். இப்படி வோம், வோம் என்று கூறுகிறார்கள். இதன் காரணமாக மாயை வந்து இடம் பிடிக்கும் பழக்கம் உண்டாகி விடுகிறது. இன்று பிறந்த நாள் கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். தந்தையும் கூட ஆசிகளையும், வாழ்த்துக்களையும் அளித்துக் கொண்டிருக்கின்றார் ஆனால் தந்தை ஒவ்வொரு குழந்தைக்கும் கடைசி நம்பரில் வரக்கூடிய குழந்தையையும்

எந்த ரூபத்தில் பார்க்கின்றார்? கடைசி நம்பர் குழந்தையும் கூட தந்தைக்குப் பிரியமானவர் தானே! ஆதலால் தந்தை கடைசி நம்பர் குழந்தையையும் கூட ரோஜாவாகப் பார்க்க விரும்புகின்றார். மலர்ந்த ரோஜாவாக! வாடிப்போன ரோஜாவாக அல்ல. வாடிப்போவதன் காரணம் என்ன? கொஞ்சம் அலக்ஷியம். செய்து விடலாம். பார்த்துக் கொள்ளலாம். செய்தே விடுவோம். அடைந்தே விடுவோம். இப்படி வோம், வோம் என்ற சிந்தனை கீழே தள்ளி விட்டு விடுகிறது. ஆதலால் சோதியுங்கள். எவ்வளவு காலம் கழிந்து விட்டது? இப்போது சமயத்தின் நெருக்கம் மற்றும் திடீர் மாற்றம் ஏற்படவிருக்கிறது என்ற சைகையை பாப்தாதா ஏற்கனவே கொடுத்து விட்டார். கொடுத்துக் கொண்டிருக்கின்றார் அல்ல, கொடுத்தே விட்டார். இப்படிப்பட்ட சமயத்திற்காக எவர்ரெடி, கவனம் (அலர்ட்) அவசியமாக இருக்கிறது. கவனமாக இருப்பதற்கான சோதனை செய்யுங்கள். தன்னுடைய மனமும் புத்தியும் சதா சுத்தமாகவும் (கிளீன்) தெளிவாகவும் (கிளீயர்) இருக்கிறதா? சுத்தமாகவும் இருக்க வேண்டும். தெளிவாகவும் இருக்க வேண்டும். இதற்காக அதாவது உரிய சமயத்தில் வெற்றி அடைவதற்காக மனதிலும் புத்தியிலும் கேச்சிங் பவர் (புரிந்துணர்வு சக்தி) மற்றும் டச்சிங் பவர் (தொடு உணர்வு சக்தி) இந்த இரண்டும் மிகவும் அவசியம். வரக்கூடிய சூழ்நிலை எப்படிப்பட்டதாக இருக்குமென்றால், எங்கேயோ நீங்கள் இருக்கலாம் ஆனால் கிளின் மற்றும் கிளீயர் மனம், புத்தி இருக்குமானால் பாபாவின் சைகை, டைரக்ஷன் அல்லது ஸ்ரீமத் எது கிடைக்குமோ அதை புரிந்து கொள்ள (கேச் செய்ய) முடியும். இப்படிச் செய்ய வேண்டும். இப்படிச் செய்யக் கூடாது என்று டச் ஆகும். ஆகவே தான் பாப்தாதா இதற்கு முன்பும் கூட கூறியிருந்தார் -தற்சமயம், தளக்குள் அமைதி (சைலன்ஸ்) சக்தி கூடுமான அளவுக்கு சேமிப்பு இருக்க வேண்டும் என்று. இதன் மூலம்

எப்போது வேண்டுமோ, எப்படி வேண்டுமோ. அப்படி மனம், புத்தியை வசத்தில் வைக்க (கன்ட்ரோல்) முடியும். வீணான எண்ணம் சொப்பனத்திலும் கூட தொடக்கூடாது. அப்படி மனதை வசப்படுத்த முடிய வேண்டும். இதனால் தான் பழமொழி இப்படி இருக்கிறது. மனதை வென்றவர் உலகை வென்றவர் என்று. உதாரணமாக உங்கள் கர்மேந்திரியமாகிய கையை, எங்கே வேண்டுமோ எப்போது வேண்டுமோ எவ்வளவு நேரம் வேண்டுமோ அப்படி உங்கள் விருப்பப்படி செய்ய முடிகிறது. இதே போல, மனம், புத்தியை வசத்தில் வைக்கும் அளவுக்கு சக்தி ஆத்மாவில் எப்போதும் எழுச்சியுடன் (எமர்ஜ்) இருக்க வேண்டும். யோகம் செய்யும் சமயத்தில் மட்டும் இந்த சக்தி உள்ளது. மற்றபடி கர்மம் செய்யும்போது வேறு விவகாரத்தில் இருக்கும்போது பிறருடனான சம்மந்தம், தொடர்பில் வரும்போது சக்தி குறைவாக இருக்கிறது என்ற அனுபவம் கூடாது. ஏனெனில், சோதனைத்தாள் தீடீரென வரக்கூடியதாக இருக்கிறது. ஃபைனல் ரிசல்ட்டுக்கு முன்பு கூட இடையிடையே சோதனைகளை எதிர் கொள்ள வேண்டியதிருக்கும்.

ஆகவே, இந்த பிறந்த நாளில் விசேஷமாக என்ன செய்வீர்கள்? சைலன்ஸ் சக்தியை எவ்வளவு சேமிக்க முடியுமோ, ஒரு வினாடி நேரத்தில் ஸ்வீட் சைலன்ஸ் அனுபவத்தில் மூழ்சி யிருங்கள். ஏனெனில், சயின்ஸ் மேலும் சைலன்ஸ், சயின்ஸ் (விஞ்ஞானம்) கூட மிகவும் சக்தியுள்ள நிலையடைந்து கொண்டிருக்கிறது. ஆதலால் சயின்ஸ் மீது, சைலன்ஸ் சக்தியானது வெற்றி கொண்டு பரிவர்த்தனை செய்யும். சைலன்ஸ் சக்தியை தூரத்தில் அமர்ந்து கொண்டே எந்த ஒரு ஆத்மாவுக்கும் உதவி செய்ய முடியும். ஆறுதல் தர முடியும். (சகாஷ்) சஞ்சலப்பட்டுக் கொண்டிருக்கும் மனதை அமைதிப்படுத்த முடியும். பிரம்மாபாபாவைப் பார்த்தீர்கள் அல்லவா? எந்த சமயத்திலும் யாராவது அறிமுகமான குழந்தை சரீர கணக்கு வழக்கு காரணமாக சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தால், அதிகாலையில் எழுந்து அந்த குழந்தைக்கு சைலன்ஸ் சக்தி மூலம் ஆசுவாசப்படுத்தினார், இதை மற்றவரும் அனுபவம் செய்தனர். ஆகவே கடைசியில் இவ்வறாக சைலன்ஸ் சக்தி மூலம் சேவை செய்ய வேண்டியதாக இருக்கும். சூழ்நிலைக்கேற்ப இதை முக்கியமாக கவனத்தில் வையுங்கள். சைலன்ஸ் சக்தி மற்றும் சிரேஷ்ட கர்மத்தின் சக்தியை சேமித்து

வைப்பதற்கான வங்கி இப்போது தான் திறக்கப்படுகிறது. மற்றபடி வேறு எந்த ஒரு பிறப்பிலும் இப்படி சேமிப்பதற்கான வங்கி திறக்கப்படுவதில்லை. ஒருவேளை இப்போது நீங்கள் சேமிக்கவில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். பிறகு சேமிப்பு வங்கியே இல்லை என்றால், எதில் சேமிப்பீர்கள். ஆதலால் சேமிக்கும் சக்தியை எவ்வளவு சேர்க்க முடியுமோ, அவ்வளவு இப்போது நீங்கள் செய்ய முடியும். பொது ஜனங்களும் இப்போது இப்படிக் கூறுகிறார்கள். என்ன செய்ய வேண்டுமோ, அதை இப்போதே செய்து கொள்ளுங்கள் என்று. எதை சிந்திக்க வேண்டுமோ, அதை இப்போதே சிந்தியுங்கள் ஆனால் இப்போது எதைப் பற்றியும் சிந்தித்து கொண்டே இருந்து விட்டால் அது சிந்தனை அளவிலேயே நின்று விடும். பிறகு சமயம் முடியும் தறுவாயை சீக்கிரமாகவே அடைந்து விடும் போது, சிந்தனையானது பச்சாதாபம் என்ற ரூபத்தில் மாறி விடும். இப்படி செய்திருக்கலாம். இதை செய்திருக்க வேண்டும்...... இப்படிப்பட்ட சிந்தனையாக பச்சாதாபமாக மாறி விடும். ஆதலால் பாப்தாதா முன்கூட்டியே சைகை கொடுக்கின்றார். சைலன்ஸ் சக்தி. ஒரு வினாடியில் என்ன நடந்தாலும் சரி. சைலன்ஸில் மூழ்கி விடுங்கள். இந்த முயற்சி செய்யவில்லை எனினும் சேமிப்புக்கான முயற்சி (யுருஷாரந்தம்) இப்போது செய்ய முடியும்.

ஆகவே, பாப்தாதாவுக்கு குழந்தைகளிடம் சிநேகம் இருக்கிறது. பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் கூடவே அழைத்துச் செல்ல விரும்புகின்றார். எந்த ஒரு வாக்குறுதியைக் கொடுத்திருக்கின்றீர்களோ, கூடவே இருப்போம், கூடவே செல்வோம் என்று, அந்த வாக்குறுதி நிறைவேறுவதற்கு சமான் நிலை அடைந்தவர்கள் தான் கூடவே செல்வார்கள். இதற்கு முன்பு கூறினேன் அல்லவா? டபுள் ஃபாரினர்ஸ்களுக்கு கை கோர்த்துக் கொண்டு செல்வது பிடித்தமான பழக்கமாக இருக்கிறது. இப்போது ஸ்ரீமத் என்ற கையோடு, கை கோர்க்க வேண்டும். பாபாவின் ஸ்ரீமத் எதுவோ அது தான் உங்களுடைய வழி (மத்). இதற்குத்தான் கையோடு கை சேர்ப்பது என்று பொருள். அப்படியானால் சரி தான். இன்று பிறந்த நாள் கொண்டாட வந்திருக்கிறீர்கள் அல்லவா. பாப்தாதாவுக்கும் குஷியாக இருக்கிறது. என்னுடைய குழந்தை என்று பாபாவுக்கும் பெருமையாக இருக்கிறது. என்னுடைய குழந்தைகள் சதா உற்சாகமாக இருக்கிறார்கள். உற்சவம்

(பண்டிகை) கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள் என்று பெருமையாக இருக்கிறது. ஒவ்வொரு நாளும் உற்சவம் கொண்டாடுகிறீர்களா? அல்லது விசேஷ நாளில் மட்டுமா? சங்கமயுகமே உற்சவம் தான். யுகம் உற்சவமாக இருக்கிறது. மற்றபடி வேறு எந்த ஒரு யுகமும் சங்கமபயுகத்தைப்போல இல்லை. எல்லோருக்கும் சமானமாக ஆகியேத் தீர வேண்டும் என்ற ஆர்வம், உற்சாகம் இருக்கிறதல்லவா? இருக்கிறதா? ஆகியேத் தீர வேண்டுமா? அல்லது பார்க்கலாம். ஆகலாம். செய்யலாம் என்ற லாம் லாம் இல்லையல்லவா? யார் ஆகியேத் தீர வேண்டும் என்று நினைக்கிறார்களோ, அவர்கள் உயர்த்துங்கள். ஆகியேத் தீர வேண்டும். தியாகம் செய்ய வேண்டியதாயிருக்கும். தவத்தில் (தபஸ்யா) இருக்க வேண்டியதாயிருக்கும். எந்த ஒரு தியாகம் செய்ய வேண்டியிருந்தாலும் தயாராக இருக்கிறீர்களா? எல்லாவற்றிலும் பெரிய தியாகம் எது? தியாகம் செய்வதில் எல்லாவற்றிலும் பெரிதான ஒரு வார்த்தை விக்னம் உண்டாக்குகிறது. தியாகம், தபஸ்யா, வைராக்கியம். பேகத் வைராக்கிய (எல்லையற்ற வைராக்கியம்) இதில் ஒரே ஒரு வார்த்தை விக்னம் உண்டாக்குகிறது. உங்களுக்கு தெரியும் எந்த ஒரு வார்த்தை அது? நான், தேக அபிமானமுடைய நான் என்பது. ஆகவேதான் பாப்தாதா கூறினார் -எப்படி நீங்கள் என்னுடைய (மேரா) என்ற வார்த்தையை உச்சரிக்கும்போது முதலில் என்ன நினைவுக்கு வருகிறது? மேரா பாபா (என்னுடைய பாபா). மேரா பாபா என்று வருகிறதல்லவா? மேரா (என்னுடைய) என்று வேறு எதைப் பற்றிக் கூறினாலும், மேரா என்று சொல்லும்போது, பழக்கமாகி விட்டது. முதலில் பாபா என்று வருகிறது. இது போலவே எப்போது நான் என்று கூறுகிறீர்களோ, எப்படி மேரா பாபா என்பது மறந்து விடவில்லையோ, எப்போது யாரையாவது மேரா என்று சொல்வீர்களோ, அப்போது பாபா என்ற வார்த்தை முதலில் வருகிறது. இதுபோல எப்போது நான் என்று சொல்வீர்களோ, அப்போது முதலில் ஆத்மா நினைவுக்கு வரட்டும். நான் யார்? ஆத்மா. நான் ஆத்மா இதைச் செய்து கொண்டிருக்கிறேன். நான் என்ற லௌகீக எண்ணம் மாறி அலௌகிகமாகி விடட்டும். ஆக முடியுமா? ஆக முடியுமா? தலையையாவது அசையுங்கள். பழக்கப்படுத்துங்கள். நான் என்று சொன்னதும் உடனே ஆத்மா நினைவுக்கு வரட்டும். எப்போது நான் செய்கிறேன் என்று வரும்போது ஒரு வார்த்தை நினைவுக்கு வரட்டும். செய்விப்பவர் யார்? (கராவன்ஹார்) செய்விக்கும் தந்தை செய்வித்துக் கொண்டிருக்கின்றார்.

செய்விப்பவர் என்ற வார்த்தை காரியம் செய்யும்போது சதா நினைவில் இருக்க வேண்டும். அப்போது நான் செய்கிறேன் என்பது வராது. எனது சிந்தனை, எனது கடமை. கடமையிலும் கூட நிறைய நஷா (போதை) உண்டாகிறது. எனது கடமை ஆனால் கொடுக்கக்கூடிய யார்? இந்த கடமைகள் பிரபுவால் கொடுக்கப்பட்டது. பிரபுவால் கொடுக்கப்பட்டதை நான் என்று நினைத்தால் இந்த எண்ணம் சரியா?

ஆகவே பாப்தாதா இன்னும் இரண்டு முறை இருக்கிறது. சீசன் முடிவதற்கு ஒரு மாத காலம் இருக்கிறது அல்லவா? இந்த ஆண்டில் சீசன் முடிவதற்கு ஒரு மாத கால அவகாசம் இருக்கிறது. சீசன் முடிகின்ற சமயத்தில், பாப்தாதா எதை முடித்து விட விரும்புகின்றார்? எவர்ரெடியாக அல்லது யோசித்து சொல்ல வேண்டுமா? அந்த சமயத்தில் (கடைசி குரூப்) இங்கு வருவீர்களோ அல்லது வர மாட்டீர்களோ, ஒவ்வொரு இடத்திலிருந்தும் பாப்தாதா ரிசல்ட் பார்க்க விரும்புகின்றார். ஒவ்வொரு மாதத்திலும், அப்படிப்பட்ட இயற்கையான சுபாவத்தைக் கொண்டு வாருங்கள். (நேச்சுரல் நேச்சர்), ஏனென்றால் இயற்கை சுபாவம் சுலபமாக மாறுவதில்லை. ஆகவே இயற்கை சுபாவமுடையவராகி விடுங்கள். கூறினேன் அல்லவா? சதா உங்களுடைய முகத்தில் தந்தையின் குணம் தெரியட்டும். நடத்தையில் தந்தையின் ஸ்ரீமத் தெரியட்டும். சதா முறுவலுடன் கூடிய முகமாக மலர்ந்திருக்கட்டும். சதா திருப்தியோடிருப்பது, திருப்திப்படுத்தக்கூடிய நடத்தை இருக்கட்டும். ஒவ்வொரு கர்மத்திலும் கர்மம் மற்றும் யோகம். இதில் பேலன்ஸ் இருக்கட்டும் அநேக குழந்தைகள் பாப்தாதாவிடம் நல்ல நல்ல விஷயங்களைக் கூறுகிறார்கள். என்னவென்று கூறட்டுமா? கூறுகின்றார்கள்: பாபா இது என்னுடைய சுபாவம் என்று புரிந்து கொள்ளுங்களேன். வேறொன்றுமில்லை. என்னுடைய சுபாவமே இது தான். இதற்கு பாப்தாதா என்ன சொல்வார்? என்னுடைய சுபாவம்! என்னுடைய பேச்சு, இப்படித்தான் என்று அநேகர் கூறுகின்றார்கள். கோடப்பட்டேனா என்ன? என்னுடைய பேச்சு கொஞ்சம் சத்தமாக இருக்கும். கொஞ்சம் சத்தமாகச் சொன்னேன். கோபப்படவா செய்தேன். கொஞ்சம் சத்தமாகச் சொன்னேன்! பாருங்கள். எவ்வளவு இனிமையான வார்த்தைகள். பாப்தாதா கூறுகின்றார். எதை உங்கள் சுபாவம் என்று கூறுகின்றீர்களோ, அப்படிக் கூறுவதே தவறானது. என்னுடைய சுபாவம் என்று கூறுவது இராவணனுடைய சுபாவமா? அல்லது

உங்களுடைய சுபாவமா? உங்களுடைய சுபாவம் அநாதி காலம் (நிராகார்), ஆதி காலம் (தேவதா) பூஜ்ய காலம் (துவாபர யுகத்தின் பூஜைக்குரிய நிலை) இது தான் உங்களுடைய ஒரிஜனல் (உண்மையான) சுபாவமாகும். இராவணனுடைய பொருளை என்னுடையது, என்னுடையது என்று கூறுவதால் அது போக மாட்டேனென்கிறது. மற்றவர் பொருளை தன்னுடையதாக்கி வைத்துக் கொண்டிருக்கிறீர்கள் அல்லவா? யாராவது அடுத்தவர் பொருளை தன்னிடம் பாதுகாத்து வைத்துக் கொண்டிருந்தால், அல்லது மறைத்து வைத்துக் கொண்டிருந்தால் இது சரி என்று ஏற்றுக் கொள்ள முடியுமா? ஆகவே இராவண சுபாவம் வேறொருவர் சுபாவம், இதை என்னுடையது என்று ஏன் கூறுகின்றீர்கள்? மிகவும் பெருமிதத்துடனும் கூறுகின்றனர். இதில் எனது தவறு ஒன்றுமில்லை. எனது சுபாவமே இது தான் என்று. இப்படி பாப்தாதாவையும் மயங்க வைக்க, மகிழ்விக்க முயற்சி செய்கிறார்கள். இப்போது இதற்கு முடிவு கட்டுவீர்களா? கட்டுவீர்களா? கட்டுவீர்களா? பாருங்கள். மனப்பூர்வமாகக் கூறுங்கள். எங்கே மனம் இருக்குமோ அங்கே எல்லாமே நடந்து விடும். ஆகவே மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளுங்கள். இது எனது சுபாவம் அல்ல, இது வேறொருவருடைய பொருள். இதை வைத்துக் கொள்ளக் கூடாது. நீங்கள் மறுபிறவி எடுத்து விட்டீர்கள் அல்லவா? மர்ஜீவா -இறந்து பிறத்தல்- உங்களுடையது பிராமண சுபாவமா? அல்லது பழைய சுபாவமா? புரிந்து கொண்டீர்களா? பாப்தாதா என்ன விரும்புகின்றார் என்றால் பரவாயில்லை. மகிழ்ச்சியோடிருங்கள். ஆடிப்பாடி மகிழுங்கள். விளையாடுங்கள் ஆனால் ஆனால் என்பது இருக்கிறது. எல்லாம் செய்து கொண்டிருந்தாலும், சமானமாக ஆகியேத் தீர வேண்டும். சமானமாக ஆகாமல் கூடவே எப்படிப் போக முடியும்? சுங்கச்சாவடியில், தர்மராஜபுரியில் பின் தங்கி விடுவீர்கள். கூடவே செல்ல மாட்டீர்கள். அப்படியானால் என்ன? தாதிகள் கூறுங்கள். ஒரு மாத ரிசல்ட் பார்க்கலாம். பார்க்கலாமா? கூறுங்கள் பார்க்கலாமா? பார்க்கலாமா? ஒரு மாதம் கவனமாக இருக்கலாம். ஒரு மாதம் ஒருவேளை கவனமாக இருந்து விட்டால் இயல்பாகி விடும். ஒரு மாதத்தில் ஒரு நாள் கூட தவறக் கூடாது, தாதிகள் நல்ல பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து, ஒருவர்க்கொருவர் சுப பாவனா, சுப காம்னா என்ற கை கொடுத்து உதவுங்கள்..எப்படி யாராவது கீழே விழுந்து விட்டால், அன்புடன் கை

கொடுத்து தூக்கி விடுகிறீர்கள் அல்லவா? அதுபோல சுப பாவனை, சுப காம்னா என்ற கை கொடுத்து கொடுத்து உதவி செய்து முன்னேறுங்கள். சரி தானா? நீங்கள் சோதனை செய்வது குறைவாக இருக்கிறது. செய்த பிறகு சோதிக்கிறீர்கள். முடிந்து விட்டதல்லவா? முதலில் யோசியுங்கள். பிறகு செய்யுங்கள். முதலில் செய்வது, பிறகு யோசிப்பது அல்ல. செய்யத்தான் வேண்டும்.

டபுள் விதேஷி (வெளி நாட்டினர்) என்ன நினைக்கிறீர்கள்? செய்வீர்களா? செய்வீர்களா? டபுள் விதேஷி குழந்தைகள் செய்வீர்களா? மிகவும் நல்லது. டபுள் விதேஷி குழந்தைகள் உதாரணமாகி விட்டால் பாப்தாதா ஏராளமான ஆசீர்வாதங்களை மழையாகப் பொழிவார். டபுள் விதேஷி குழந்தைகளே! என்ன நினைக்கிறீர்கள்? உதாரணமாகத் திகழ்வீர்களா? அப்படி ஆவோம் என்றால் கையை உயர்த்துங்கள். அற்புதமாக இருக்கிறது. பாப்தாதா டபுள் விதேசி குழந்தைகளுக்கு இப்பொழுதிலிருந்தே துணிவும் உற்சாகமும் நிறைந்த ஆசீர்வாதங்களை வழங்கிக் கொண்டிருக்கின்றார். பாரத வாசிகளும் குறைந்தவர்கள் இல்லை. அவர்களும் உள்ளுக்குள்ளே எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். நாங்களும் இப்படி செய்தே காட்டுவோம் என்று நினைக்கின்றார்கள். பாரதவாசிகள் சரி தானே! பாரதம் எதைத்தான் செய்யவில்லை? பாருங்கள். பாரதவாசிகள் பாபாவை மேலே இருந்து கீழே கொண்டு வந்து விட்டார்கள். அதிசயம் செய்து விட்டார்கள் இல்லையா, பாரதவாசிகள்! அதற்கு முன்பாக இந்த காரியம் பெரிய விஷயமா என்ன? நல்லது. யார் யார் பாபாவிடம், தாதியிடமும் மிக மிக அன்பு வைத்திருக்கின்றார்களோ. அவர்கள் கையை உயர்த்துங்கள். அன்பு இருக்கிறது நல்லது. எவ்வளவு அன்பு இருக்கிறது? இப்பொழுது உங்களுடைய உள்ளம் எந்தப் பாட்டைப் பாடுகின்றது! இவ்வளவு அன்பை யார் செய்வார்? எவ்வளவு அன்பை குழந்தைகள் செய்கிறீர்களோ, அவ்வளவு பாபாவும் குழந்தைகளிடம் செய்கிறார். அப்படி என்றால் அன்புக்காக எதை விட்டாலும் அது விடுவது என்று ஆகுமா? அது தான் அடைவதாகும், விடுவதாகாது!

பாப்தாதா சிவ மந்திரத்தை வழங்கி அனைவரையும் சம்பன்னமான (எல்லாம் நிறைந்த) வடிவத்தில் பார்க்கின்றார். உங்களிடம் கூட சிவமந்திரம் இருக்கிறது இல்லையா? இருக்கிறதா? இருக்கிறது

இல்லையா? சூ மந்திரமல்ல, சிவ மந்திரம்! அப்படி என்றால் சிவ மந்திரத்தைப் பயன்படுத்துங்கள். இனி அடுத்த தடவை யோசித்து புரிந்து உங்கள் திட்டத்தை நீங்களே செய்து கொள்ளுங்கள் இது வரை பாபா செய்து கொடுத்திருந்தார் இல்லையா? அதனால் சாக்கு போக்கு நிறைய செய்கிறீர்கள். இது ஆகி விட்டது, இப்படி ஆகி விட்டது… இனி உங்கள் திட்டத்தை (பிளானை) நீங்களே செய்து கொள்ளுங்கள். இன்று பாபாவின் பிறந்த நாள் கொண்டாடுகின்றீர்கள் இல்லையா? பிறந்த தினத்தில் என்ன செய்கின்றீர்கள். ஏதேனும் பரிசு (கிப்ட்) கொடுக்கிறீர்கள். கொடுக்கிறீர்கள் இல்லையா? அப்படி என்றால் பாபாவுக்கு என்ன கிப்ட் (பரிசு) கொடுப்பீர்கள்? எதை பாபா கூறினாரோ அதை செய்து காட்ட வேண்டும். இது தான் பரிசு வழங்குவதாகும். மேலும் பாப்தாதாவும் உங்கள் அனைவருக்கும் பரிசை கொடுத்துக் கொண்டிருக்கிறார். உங்களுக்கும் பிறர் நாள் இல்லையா? என்ன கிப்ட் (பரிசை) தந்து கொண்டிருக்கின்றார். இது உறுதி. யார் எடுக்க விரும்புகிறாரோ அவர் எடுத்துக் கொள்ள முடியும்! அது விசேஷமான வரதானமாகும் ஆனால் இந்த வரதானத்தை தினமும் அமிர்தவேளையில், திரும்ப, திரும்ப நினைக்கும்பொழுது, அது வேலையில் பயன்படும். பரிசைத் திரும்ப திரும்ப படிப்பீர்களா? அப்படியென்றால் பாப்தாதா இந்தப் பரிசையே தந்து கொண்டிருக்கிறார், ஒரு அடி தைரியத்தை ஒருபொழுதும் விடக்கூடாது. அதனால் பாப்தாதா ஆயிரம் அடி உதவியை தருவார். பார்ப்போம். பாபா உதவி செய்கிறாரா இல்லையா என்று இருக்கக் கூடாது. அவரை சோதிக்கக்கூடாது. கட்டுப்பட்டிருக்கிறார், நீங்களும் கட்டுப்பட்டுள்ளீர்கள். பாபாவும் கட்டுப்பட்டுள்ளார். எனவே இந்தப் பரிசை தினமும் அடிக்கடி பயன்படுத்திப் பார்க்கவும். சிறப்பான பரிசாக இருந்தால் மிகச் சிறப்பாக இருக்கிறதே, மிக மிகச் சிறப்பாக இருக்கிறதே என்று அடிக்கடி அதைப் பார்க்கிறார்கள். எனவே தினமும் அமிர்தவேளையில் பார்க்க வேண்டும். மேலும் செயல் புரியும் பொழுதும் இடை இடைய திரும்ப (ரிவைஸ்) பார்க்க வேண்டும். நல்லது. பாபா பரிசைப் பெற்றார். பரிசைக் கொடுத்தது நன்றாக இருக்கிறது.

எல்லோரும் அவரவர் குடிசையிலும், திரையிலும் பார்த்துக் கொண்டிருப்பதை நாலா பக்கங்களிலும் பாப்தாதா பார்த்துக்

கொண்டிருக்கிறார். பாப்தாதாவுக்கு முன்னால் எல்லாம் காணப்படுகின்றன. இங்கே யார் வராவிட்டாலும் எல்லோருக்கும் பாப்தாதா இந்த கிப்ட்'ஐ வழங்கிக் கொண்டிருக்கிறார். பாப்தாதாவுக்கு முன்னால் எல்லாம் காணப்படுகின்றது அனைவரையும் இரவானாலும், பகலானாலும் நேரம் எப்படி வித்தியாசமாக இருந்தாலும், அன்பு விழிக்க வைத்துக் கொண்டிருக்கிறது என்பதை பாப்தாதா பார்க்கின்றார் மற்றும் எல்லா குழந்தைகளும் அவர்கள் கார்டு அனுப்பியிருந்தாலும், அனுப்பாவிட்டாலும், ஈ.மெயில் அனுப்பியிருந்தாலும், அனுப்பாவிட்டாலும் உள்ளத்தின் எண்ணம் என்ற ஈமெயில் பாப்தாதாவிடம் அனைவருடையதும் சேர்ந்து விட்டது. உற்சாகத்தில் ஆடிக் கொண்டிருக்கிறார்கள். இதையும் பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார். ஆகையால் யாராக இருந்தாலும், எங்கே இருந்தாலும் ஏதேனும் ஒரு தந்தையின் அன்பு நினைவு சேரவில்லை என்பது நிகழவே இல்லை. அனைவருடையதும் சேர்ந்து விட்டது. மேலும் பாப்தாதா பதில் தந்து கொண்டிருக்கின்றார். சதா ஊக்கம், உற்சாகம் நிறைந்த உற்சவத்தை கொண்டாடிக் கொண்டிருக்கவும். நல்லது. இப்பொழுது பாப்தாதா எந்த டிரில்லை செய்விக்க விரும்புகிறார். ஒரு நொடியில் சாந்தியின் சக்தி நிறைந்த சொரூபம் ஆகி விடுங்கள். ஒரு முகமான புத்தியும் ஒரு முகமான மனமும் கொள்ளுங்கள். இதை நாள் முழுவதிலும் ஒரு நொடி இடை இடையில் எடுத்து பயிற்சி செய்யுங்கள். அமைதி என்ற எண்ணத்தை செய்ததும் சொரூபம் வந்து விட வேண்டும். இதற்காக நேரம் தேவைப்படும் என்று கிடையாது. ஒவ்வொரு நொடியாகப் பயிற்சி செய்யுங்கள். சைலன்ஸ்.. நல்லது.

சேவைக்கான வாய்ப்பு இந்தூர் மண்டலம்: நல்லது. சக்தி சேவை அதிகமாக இருக்கிறது, பாண்டவர்களும் குறைந்தவரில்லை. பாருங்கள் பெயரே இந்தோர் (In door). சதா உள்முகமாகி தபஸ்யாவில் இருப்பவர்கள். நன்றாக இருக்கிறது. இருங்கள். இந்தூரின் ஸ்தாபனையில் விசேஷம் இருக்கிறது. அறிவீர்கள் இல்லையா? பிரம்மா அவ்யக்தமாவதற்கு முன்னால் பிரம்மாபாபாவின் பிரேரணையால் இந்த இந்தூரின் அடிக்கல் உருவாக்கப்பட்டது. எத்தனை அதிர்ஷ்டசாலிகள். அதன்படி பிரம்மாபாபாவின் ஆசைகளைப் பூர்த்தி செய்து கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? எந்த ஊக்கம், எந்த

சிறப்புகளுடன் பாப்தாதா பிரேரணை கொடுத்தாரோ அதே பிரேரணை பிரகாரம், எல்லோரும் பாப்தாதாவுக்குப் பதிலுக்குப் பதில் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? நன்றாக இருக்கிறது. சேவைக்காக ஊக்கம் உற்சாகம் நன்றாக இருக்கிறது. மேலும் நீடிக்கும். இப்பொழுது இந்தூர் அற்புதம் செய்யலாம். என்ன அற்புதத்தை டீச்சர்கள் செய்யப் போகிறீர்கள்? முதல் நம்பர் வாங்குவீர்களா? மாற்றம் செய்வதில், எதை பாப்தாதா கூறினாரோ அதில் முதல் நம்பர் இந்தூர் எடுக்க வேண்டும். எடுப்பீர்களா? எடுப்பீர்களா? ஏனென்றால் கூட்டு என்ற சக்தி இருக்கிறது. கூட்டத்தின் சக்தியைப் பாருங்கள். 5-பாண்டவர், அப்படி என்றால் 5ன் கூட்டம் எப்பேற்பட்ட அற்புதம் செய்தது? எனவே கூட்டத்தின் சக்தி கண்டிப்பாக இருக்கிறது. அப்படி என்றால் இவ்வளவு பெரிய கூட்டம் என்ன செய்ய முடியாது? எதை விரும்புகின்றீர்களோ அதை செய்ய முடியும். ஆகவே அற்புதம் செய்து காட்டுங்கள். எது இதுவரை செய்யப்படவில்லையோ. அதை செய்து காட்டுங்கள். இருக்கிறதா துணிவு? துணிவு இருக்கிறது இல்லையா, டீச்சர்களே? இருக்கிறதா துணிவு? நல்லது. பாருங்கள். தைரியம் வைத்து பெரிய பெரிய நிகழ்ச்சிகளை நடத்துகின்றீர்கள் இல்லையா? அப்படி என்றால் முதல் நம்பர் ஒவ்வொரு பாடத்திலும் வாங்கித் தான் ஆக வேண்டும். இந்த திடமான எண்ணம் கொள்ளுங்கள். யார் தைரியம் வைக்கின்றாரோ, அவருக்கு பாபாவின் உதவியின் அனுபவம் கண்டிப்பாக ஏற்படுகிறது என்பதைப் பாப்தாதா பார்த்திருக்கின்றார் ஆனால் அலட்சியம் இடையில் வந்து இப்படி எல்லாம் ஏற்படத்தான் செய்யும் என்று எண்ண வைக்கிறது; அதனால் சதா தீவிர புருஷார்த்தத்திற்கு (முயற்சிக்கு) பதிலாக சிற்சில சமயம் தீவிர முயற்சியாளர், சில சமயம் முயற்சியாளர் ஆகி விடுகிறார்கள். சதா தீவிர முயற்சியின் அலையை தனக்குள்ளும், மற்றவருக்குள்ளும், பரப்ப வேண்டும். நான் சரியாகத்தானே செல்கிறேன் என்று நினைக்காமல் ஒருவர் மற்றவருக்கு ஒத்துழைப்பு கொடுத்து கூட்டம் என்ற வடிவத்தில் முதல் நம்பர் வாங்க வேண்டும். ஒருவர் எப்படித்தான் விழுந்து கிடந்தாலும் அவருக்கும் துணை நின்று, எப்படி நடப்பது என்று சுற்றுக் கொடுக்கவும். ஒத்துழைப்பாளர் ஆகவும். எனவே என்ன செய்வீர்கள், இந்தூர்? கூட்டம் தடையின்றி தடை என்ற பெயரும் அடையாளமும் இல்லாமல் செய்யவும். யாரைப் பார்த்தாலும் அவருடைய முகத்தில் பாப்தாதாவின் நடத்தை காணப்பட வேண்டும்! என்ன நினைக்கிறீர்கள், பாண்டவர்களே!

செய்வீர்களா? செய்வீர்களா? சக்திகள் என்ன நினைக்கிறீர்கள்! இப்படியே நினையுங்கள். நாம் செய்யாவிட்டால் யார் செய்வார்கள். நல்லது. முதல் நம்பரில்வெற்றி பெற்றவர் என்ற வரதானத்தை சதா நினைவில் வையுங்கள்.

**55-நாடுகளிலிருந்து 1000-டபுள் விதேஷிகள் வந்திருக்கிறார்கள்:** டபுள் விதேஷிகள் தங்களுடைய விதிமுறைகளை மிகவும் நன்றாகக் கடைப்பிடிப்பதை பாப்தாதா பாரத்திருக்கின்றார். வருவது என்றால் வந்து கொண்டேயிருக்கிறார்கள். மேலும், அனைவரும் மதுபன் சீசனில் அழகூட்ட வேண்டும் என்ற எண்ணம் வைத்திருக்கிறார்கள். ஆகவே மதுபன்னில் டபுள் விதேஷிகள் அழகு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை ஒவ்வொரு முறையும் காண முடிகிறது. கை தட்டுங்கள். நன்றாக இருக்கிறது. ஒவ்வொரு நாளும் வெளிநாட்டு சேவா நிலையங்களில், ஒருவர் இன்னொருவருக்கு ஊக்கம் உற்சாகம் கொடுப்பதை பாப்தாதா பார்க்கின்றார். மேலும் இப்பொழுது ஒருவர் இன்னொரு இடத்திற்கு சென்றும், சுபபாவனை வைப்பதும் நன்றாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சிஸ்டம் (வழிமுறை) நன்றாக செய்யப்பட்டிருக்கிறது. எப்படியாவது வந்து விடுகின்றீர்கள் என்பதை பாப்தாதா கண்டு மகிழ்கின்றார். தூரமான தேசமாகத் தோன்றவில்லை. இங்கே இருப்பவராகத்தான் தோன்றுகிறீர்கள்! அப்படிப் பார்த்தால் எல்லோரையும் விட தூரமான தேசத்தை சேர்ந்தவர் யார்? டபுள் விதேஷிகளா? பாப்தாதாவா? தூர தேசத்திலிருந்து வருபவருக்குத் தன்னைப் போன்று தூர தேசத்திலிருந்து வருபவரை மிகவும் பிடிக்கிறது. நல்லது. டபுள் விதேஷிகள் கொஞ்சம் சபதம் செய்ய விரும்புகின்றார்கள். நியுயார்க் மோகினி பகன் உறுதிமொழியைப் படிக்க, அனைவரும் திருப்பி கூறுகிறார்கள்:

நாங்கள் ஒவ்வொரு அடியிலும் ஸ்ரீமத்தைப் பின்பற்றுவோம்.

(2) நான் அனைத்து தடைகளிலிருந்தும் நிரந்தரமாக விலகி இருப்பேன்.

(3) சுயமரியாதை என்ற ஆசனத்தில் அமர்ந்திருப்பேன், சதா அனைவருக்கும் மரியாதை கொடுப்பேன்.

(4) பாப்தாதாவின் நம்பிக்கையைப் பூர்த்தி செய்வேன்.

(5) இனிமையான பாபா, அன்பான பாபா, நன்றி பாபா!

நன்றி குழந்தைகளே!

**தாய்மார்களுக்கான ரிட்ரீட் நடந்தது:** பாப்தாதாவுக்கு இந்த செய்தி மிக நன்றாக இருக்கிறது. மிக நல்லது, நல்லது. டபுள் விதேஷிகள் முன்னால் வந்து முன்னால் பறந்து செல்லுங்கள். மற்றவரையும் பறக்கச் செய்யுங்கள்.

நல்லது. நான்கு பக்கங்களிலும் பிறந்த நாள் உற்சவத்தைக் கொண்டாடக் கூடிய பாக்கியவான் ஆத்மாக்களுக்கு சதா உற்சாகத்தில் இருக்க கூடிய சங்கமயுகத்தில் உற்சவத்தைக் கொண்டாடக் கூடிய இப்படி அனைத்து ஊக்கம், உற்சாகம் என்ற இறகு மூலம் பறக்கக்கூடிய குழந்தைகளுக்கு சதா மனதையும், புத்தியையும், ஒருமுகப்படுத்துவதில் அனுபவியாகியுள்ள மகாவீர் குழந்தைகளுக்கு சதா சமமாக ஆவதற்கு உரிய ஊக்கத்தை ஸ்தூல நிலையில் கொண்டு வரக்கூடிய தந்தையை பின்பற்றும் குழந்தைகளுக்கு சதா ஒருவர் இன்னொருவருக்கு அன்பையும் ஒத்துழைப்பையும் துணிவையும் கொடுக்கக்கூடிய பாபாவிடமிருந்து உதவி என்ற வரத்தை பெற்று கொடுக்கக்கூடிய வரம் தரும் குழந்தைகளுக்கு மகாதானி குழந்தைகளுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவும் கோடான கோடி வாழ்த்துக்களும் உரித்தாகுக.

**தாதிமார்களுடன்:** பாப்தாதாவின் உள்ளத்தில் நீங்கள் ஒவ்வொருவரும் மகானாக இருக்கின்றீர்கள். ஏனென்றால் நீங்கள் அனேக ஆத்மாக்களுக்கு ஊக்கம், உற்சாகம் பெருகிட கருவியாக உள்ளீர்கள். உங்களது உற்சாகத்தைப் பார்த்து தனக்குத்தானே மற்றவர்களிடம் ஊக்கம் வருகிறது. கொடுக்க அவசியமில்லை, இயல்பாக வந்து விடுகிறது. உங்கள் கூட்டம் மிக மிக உறுதியாக இருக்கிறது உறுதிப்படுத்த தேவையில்லை. உறுதியாகயிருக்கிறது. ஒவ்வொரு ரத்தினமும் கூட்டத்தின் அழகாகும்.

**மனோகர் தாதியிடம்:** வகுப்பிற்கு செல்கிறீர்கள். ஆகவே கட்டளைக்குப் கீழ்படிந்தவராக இருக்கிறீர்கள். பாபா கூறினார் -நீங்கள் செய்தீர்கள், ஆகையால் கீழ்படிந்தவர்களின் லிஸ்ட்'ல் இருக்கிறீர்கள். மேலும் உங்கள் கூட்டம் முழுவதும் ஆமாம் பாபா ஆமாம் பாபா என்று சொல்லக்கூடிய கூட்டம்.

தாதி ஜானகி கூறுகிறார்: பாபா நீங்கள் சொன்னீர்கள், சதா எஜமான் முன் ஆஜராகியிருப்பேன் என்று, அதே அனுபவம் உண்டாகிறது. பாபா கட்டுப்பட்டுள்ளார். பாருங்கள் நிமித்தமாக (சுருவியாக) அமைந்துள்ள குழுவின் மீது விசேஷப் பார்வை இருக்கும் இல்லையா? நிமித்தமாக இருப்பவர் மீது பாப்தாதாவின் அன்பும் பார்வையும் சதா இருக்கிறது. பாபா கண்கள் சிவப்பாகினாலும் பரவாயில்லை அது அன்பாகும். கண்ணீர் அல்ல. இப்பொழுது நான் என்ன செய்ய வேண்டும்? சொரூபமாகி சொரூபமாக்குங்கள். சொரூபமாக்குவது உங்கள் கடமை, பறக்க வைப்பது உங்கள் கடமை. சுலபமாக இருக்கிறது.

மோஹினி சகோதரி. அங்கிள் ஆண்டி, நிர்மல் சாத்தாதாதி, மற்றும் அனைவருடைய நினைவுகளை பாய்தாதாவுக்கு கூறினார். அனைவருடைய நினைவும் பாபாவிடம் வந்து சேர்ந்தது.

பாப்தாதா தன்னுடைய கரங்களால் கொடி ஏற்றி, அனைத்து குழந்தைகளுக்கும் சிவஜெயந்தியின் வாழ்த்துக்களை அளித்தார்! இன்று இந்த ஹாலில் கொடி ஏற்றப்படுகின்றது ஆனால் அந்த நாள் வரும், வரத்தான் செய்யும், அப்பொழுது உலகம் முழுவதிலும் ஒவ்வொரு இடத்திலும் இந்த கொடியேற்றும் விழா நடைபெறும். மேலும் எல்லா ஆத்மாக்களின் உள்ளத்தில் இது தானாகவே பாடலாக ஒலிக்கும் -நம்முடைய பாபா வந்து விட்டார், நம்முடைய முக்தி வள்ளல் வரம் அளிக்கும் வள்ளல் பாபா வந்து விட்டார்! உலகம் முழுவதிலும் இது தானாகவே அனைவருடைய உள்ளத்திலும் பாடலாக ஒலிக்க ஆரம்பித்து விடும். உங்களுடைய உள்ளத்தில் இந்த பாடல் ஒலித்துக் கொண்டிருக்கிறது, இல்லையா? வந்து விட்டார், கிடைத்து விட்டார், வரதானம் கிடைத்து விட்டது, ஆசிர்வாதங்கள் கிடைத்து விட்டன! எனவே இந்தக் கொடி எப்படி உங்கள் உள்ளத்தில் ஏற்றப்பட்டிருக்கிறதோ, அப்படி உலகத்தில் உள்ள ஆத்மாக்களுடைய உள்ளத்தில் கண்டிப்பாக ஏற்றப்படும். அவர்கள் ஆஸ்தி என்ற பிராப்தியை பெற முடியாது ஆனால் ஆஹா பிரபு, ஆஹா பிரபு நீங்கள் வந்து விட்டீர்கள். இந்தப் பாடலைப் பாடியே தீர வேண்டும். அப்படியென்றால் மிகவும் நல்லது. உங்களுக்குக்கெல்லாம் பாக்கியம் இருக்கிறது. அது என்னவென்றால் பாபாவுடன் கொடியை ஏற்றிக் கொண்டிருப்பது, மேலும் எல்லா இடங்களிலும் அமர்ந்து பார்த்துக்

கொண்டிருப்பது, எப்படி நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களோ, அங்கே பாப்தாதாவும் பார்த்துக் கொண்டிருக்கின்றார், ஒவ்வொரு இடத்திலும் கொடியைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். உங்களுடைய சகோதர சகோதரிகளும் இப்படி தலையை அசைத்துக் கொண்டிருக்கிறார்கள். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 18.3.2008 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## காரணம் என்ற சொல்லை நிவாரணம் என்று மாற்றி மாஸ்டர் முக்தி வள்ளல் ஆகுங்கள். எல்லோருக்கும் தந்தையின் தன்மைகள் எனும் வர்ணம் பூசி சமமாக ஆக்குவதற்கான ஹோலி கொண்டாடுங்கள்!

இன்று சர்வ கஜானாக்களின் எஜமானாக இருக்கின்ற பாப்தாதா. நாலா புறமும் உள்ள. பொக்கிஷங்களால் (கஜானா) நிரம்பியிருக்கின்ற தன்னுடைய குழந்தைகளைப்பார்க்கின்றார். தயப்வொரு குழந்தையின் கஜானாவிலும், எவ்வளவு பொக்கிஷங்கள் சேமிப்பாகியிருக்கின்றம என்பதைப் பார்த்து மகிழ்ச்சியடைகின்றார். பொக்கிஷங்கள் எல்லோருக்கும் ஒரே சமயத்தில், ஒரே மாதிரியாகவே கிடைத்திருக்கின்றன இருப்பினும், சேமிப்புக் கணக்கு ஒவ்வொரு குழந்தைக்கும் தனித்தனியாக இருக்கின்றது. ஏனென்றால் காலப்பிரமாணமாக இப்பொழுது பாப்தாதா எல்லா குழந்தைகளையும் எல்லா பொக்கிஷங்களும் நிறைந்திருப்பவர்களாகப் பார்க்க விரும்புகின்றார். ஏனென்றால், இந்த பொக்கிஷங்கள் இந்த ஒரு ஜன்மத்திற்கு மட்டுமல்லாமல் அழிவுற்ற பொக்கிஷங்களாகிய இவைகள் அநேக ஜென்மங்கள் கூடவே தொடர்ந்து வருவதாக இருக்கின்றன. இந்த சமயத்தின் பொக்கிஷங்களைப் பற்றி எல்லா குழந்தைகளும் அறிந்தவர்களாகவே இருக்கின்றார்கள். பாப்தாதா என்னென்ன பொக்கிஷங்களைக் கொடுத்திருக்கின்றார். என்று சொல்லும்போதே. எல்லோர் எதிரிலும் வந்து விட்டது. எல்லோர் முன்னிலையிலும் பொக்கிஷங்களின் எண்ணிக்கை (லிஸ்ட்) தெளிவாகத் தெரிந்து விட்டதல்லவா? ஏனென்றால் பாப்தாதா இதற்கு

முன்பும் கூறியிருப்பதைப்போல, பொக்கிஷங்கள் அனைத்தும் கிடைத்து விட்டன ஆனால் சேமிப்பில் வைத்திருப்பதற்கான விதி எது? யார் எவ்வளவு நிமித்தமாக, பணிவாக இருக்கின்றாரோ. அவ்வளவு பொக்கிஷங்கள் சேமிப்பாகி விடும். நிரம்பியிருக்கும். அவரது நடத்தை மற்றும் முகத்தில் நிரம்பியிருக்கும் ஆத்மாவிடம் ஆன்மீக போதையானது (ரூஹானி நஷா) இயல்பாகவே காணப்படும். அவருடைய முகத்தில் ஆன்மீக போதையும், பெருமிதமும் பளிச்சிடும். மேலும் எவ்வளவு ஆன்மீக போதை இருக்குமோ, அவ்வளவு கவலையற்ற பாதுஷாவாக (சக்கரவர்த்தி) இருப்பார். ஆன்மீகப் பெருமிதம் என்பது ஆன்மீக போதை மற்றும் கவலையற்ற பாதுஷாவின் அடையாளம். ஆதலால், சோதித்துப் பாருங்கள். தன்னுடைய நடத்தையிலும், முகத்திலும் கவலையற்ற பாதுஷா என்ற நிச்சயமும் (நம்பிக்கை) போதையும் (நஷா) இருக்கிறதா? இதைப் பார்ப்பதற்கான கண்ணாடி உங்கள் எல்லோருக்கும் கிடைத்திருக்கிறதல்லவா! ஆகவே உள்ளம் என்ற கண்ணாடியில், உங்களுடைய முகத்தை சோதியுங்கள். ஏதாவதொரு கவலையின் அறிகுறி இருக்கிறதா. என்ன ஆகும்? எப்படி ஆகும்? இப்படி நடந்தது. என்பது போன்ற எண்ணம் இன்னும் இருக்கவில்லை தானே? கவலையற்ற பாதுஷாவின் எண்ணம் இப்படித்தான் இருக்கும். இப்பொழுது என்ன நடக்கிறதோ, அது மிக நன்றாகவே இருக்கிறது. இனி என்ன நடக்குமோ, அது இதைவிட மிக மிக நன்றாகவே இருக்கும். இதற்குத்தான் பெருமிதம். ஆன்மீக பெருமிதம். அதாவது சுவமான்தாரி (சுய மரியாதையுள்ள) ஆத்மா. என்பதாகும். அழியக்கூடிய செல்வமுடையவர்கள் எவ்வளவு சம்பாதிக்கின்றார்களோ, அவ்வளவு கவலையிலும் இருக்கிறார்கள் ஆனால் உங்களுக்கு, உங்களுடைய ஈஸ்வரிய கஜானாவைப்பற்றிய கவலை இருக்கிறதா? கவலையற்றவர்களாக இருக்கிறீர்கள் அல்லவா! ஏனென்றால், யார் கஜானாவுக்கு எஜமானராக இருக்கின்றாரோ, பரமாத்மாவின் குழந்தையாக இருக்கின்றாரோ அவர் எப்பொழுதும் (சதா) கனவிலும் கூட கவலையற்ற பாதுஷாதான். ஏனென்றால், அவருக்கும் நம்பிக்கை இருக்கிறது. இந்த ஈஸ்வரிய கஜானா இந்த ஜன்மத்திற்குமட்டுமல்ல. அநேக ஜன்மங்கள் கூடவே இருக்கும். என்று ஆதலால் இப்படி நிச்சயபுத்தியுள்ளவராக இருப்பதால் கவலையின்றி (நிஷ்சிந்த்) இருக்கின்றார்.ஆதலால் இன்று பாப்தாதா, நாலாபுறமும் உள்ள

குழந்தைகளினுடைய சேமிப்புக் கணக்கைப் பார்த்துக் கொண்டிருந்தார். இதற்கு முன்பும் கூறியிருக்கிறேன். மூன்று விதமாக கணக்கு சேமித்திருக்கிறீர்கள். மேலும் இவ்வாறு செய்ய முடியும் என்று, தன்னுடைய முயற்சியின் (புருஷார்த்தம்) அடிப்படையில் கஜானாவை சேமிப்பது இது ஒரு கணக்கு. இரண்டாவது கணக்கு, ஆசீர்வாதம் என்ற கணக்கு. ஆசிகளின் கணக்கு சேமிப்பதற்கான சாதனம், சதா சம்மந்தம் தொடர்பு மற்றும் சேவை செய்து கொண்டே எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றிலும் தன்மீது தனக்கும் திருப்தி மற்றும் பிறர் எல்லோரும் கூட சதா திருப்தியோடிருப்பது. திருப்தியானது ஆசிகளின் கணக்கை அதிகரிக்கிறது. அடுத்து மூன்றாவது புண்ணியக் கணக்கு, புண்ணியக் கணக்கிற்கான சாதனம். எந்தவித சேவை செய்தாலும், மனம் மூலமாகவோ, வாய் மொழி மூலமாகவோ, செயல் மூலமாகவோ, சம்மந்தம் தொடர்பில் வரும்போதோ, சதா சுய நலமில்லாமலும், எல்லையற்ற விருத்தி (உள்ளுணர்வு) சுபாவம், மனோபாவம் மற்றும் பாவனையுடன் சேவை செய்வது. இதன் மூலமாக புண்ணியக்கணக்கு இயல்பாகவே சேமிப்பாகி விடுகிறது. ஆதலால் சோதித்துப் பாருங்கள். சோதிக்கத் தெரியுமல்லவா? தெரியுமா? யாருக்குத் தெரியாதோ, அவர்கள் கை உயர்த்துங்கள். யாருக்குத் தெரியாதோ, அவர்கள். யாருமில்லை. ஆகவே எல்லோருக்கும் தெரியும். அப்படியானால் சோதித்து பார்த்தீர்களா? சுய புருஷார்த்த கணக்கு, ஆசிகளினுடைய கணக்கு, புண்ணியக் கணக்கு ஆகிய மூன்றும் எத்தனை சதவிகிதம் சேமிப்பாகியிருக்கிறது? என்று சோதித்துப் பார்த்திருக்கிறீர்களா? யார் சோதித்துப் பார்க்கிறார்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள். சோதித்துப் பார்க்கிறீர்கள். முதல் வரிசையில் உள்ளவர்கள் சோதித்துப் பார்ப்பதில்லை. சோதித்துப் பார்ப்பதில்லையா? என்ன சொல்கிறீர்கள்? செய்கிறீர்கள் அல்லவா? ஏனென்றால் பாப்தாதா, சொல்லி விட்டார். சைகையும் கொடுத்து விட்டார். இப்பொழுது சமயத்தின் அருகாமை தீவிர கதியில் முன்னேறிக் கொண்டிருக்கிறது. ஆகவே தன்னுடைய சோதனை அடிக்கடி நடக்க வேண்டும். ஏனென்றால், பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் ராஜா குழந்தையாக, ராஜயோகி ஸோ ராஜா குழந்தையாக பார்க்க விரும்புகின்றார். இது தான் பரமாத்ம தந்தையின் ஆன்மீக விருப்பம். ஒவ்வொரு குழந்தையும் ராஜா குழந்தை. சுய ராஜ்ய அதிகாரியாகி, விஷ்வ ராஜ்ய அதிகாரி பரமாத்ம குழந்தை.

ஆகவே கஜானாவோ, பாப்தாதாவிடமிருந்து கிடைத்துக் கொண்டேயிருக்கின்றது. இந்த கஜானாக்களை சேமிப்பதற்கான எளிய விதி. விதி என்று சொன்னாலும் சரி, சாவி என்று சொன்னாலும் சரி, அது தெரியுமல்லவா? சேமிப்பதற்கான சாவி எது? மூன்று புள்ளிகள் வையுங்கள். கஜானா சேமிப்பாகிக் கொண்டேயிருக்கும். மாதாக்களுக்கு சாவியை உபயோகிக்கத் தெரியுமல்லவா? சாவியைப் பத்திரமாக வைத்துக் கொள்வதில் கெட்டிக்காரர்கள். அல்லவா? ஆகவே எல்லா மாதாக்களும் மூன்று புள்ளிகள் எனும் சாவியை பத்திரமாக வைத்திருக்கிறார்கள். உபயோகிக்கிறார்களா? சொல்லுங்கள். மாதாக்களிடம் சாவி இருக்கிறதா? யாரிடம் இருக்கிறதோ, அவர்கள் கை உயர்த்துங்கள். மாதாக்கள் கை உயர்த்துங்கள். சாவி தொலைந்து போய் விடவில்லைதானே! எப்படி வீட்டிலுள்ள ஒவ்வொரு பொருளுக்குமான சாவியை மாதாக்களுக்கு மிகவும் பத்திரமாக வைத்துக் கொள்ளத் தெரிகிறது. அதுபோல இந்த சாவியும் கூட எப்பொழுதும் கூடவே இருக்கிறதல்லவா? ஆதலால் தற்சமயம் பாப்தாதா இதைத்தான் விரும்புகின்றார். இப்பொழுது சமயம் அருகாமையில் இருக்கின்ற காரணத்தால் பாப்தாதா ஒரு வார்த்தையை எல்லா குழந்தைகளிடமும் எண்ணம், சொல், மற்றும் பிராக்டிக்கல் கர்மத்தில் மாற்றம் கொண்டுவந்திருப்பதைப் பார்க்க விரும்புகின்றார். தைரியம் உள்ளதா? ஒரு வார்த்தையை, பாப்தாதா ஒவ்வொரு குழந்தைகயையும் மாற்றம் செய்விக்க விரும்புகின்றார். அந்த ஒரு வார்த்தை, அடிக்கடி தீவிர புருஷாரத்தம் செய்வதிலிருந்து அலட்சிய புருஷாரத்தியாக ஆக்கி விடுகிறது. இப்பொழுது, இன்றைய சமயப் பிரமாணமாக எப்படிப்பட்ட புருஷாரத்தம் இருக்க வேண்டும்? தீவிர புருஷாரத்தம். எல்லோரும் விரும்பவும் செய்கிறார்கள். தீவிர புருஷாரத்தி என்ற வரிசையில் வர வேண்டும் என்று ஆனால் ஒரு வார்த்தை அலஷியமாக்கி விடுகிறது. அது என்ன தெரியுமா? மாற்றிக் கொள்வதற்குத் தயாரா? தயாராக இருக்கிறீர்கள். தயாராக இருப்பவர்கள் கை உயர்த்துங்கள். பாருங்கள். உங்கள் போட்டோ டி.வியில் வருகிறது. தயாராக இருக்கிறீர்கள். நல்லது. வாழ்த்துக்கள். நல்லது தீவிர புருஷாரத்தத்தின் மூலமாக மாற்றம் செய்ய வேண்டுமா? அல்லது செய்து விடுவோம்? பார்க்கலாம் என்பது இல்லைதானே! அந்த ஒரு வார்த்தை என்னவென்று புரிந்து கொண்டிருப்பீர்கள். ஏனென்றால்,

எல்லோரும் கெட்டிக்காரர்கள். அந்த ஒரு வார்த்தை இதுதான் காரணம் என்ற வார்த்தையை மாற்றம் செய்து நிவாரணம் என்ற வார்த்தையை எதிரில் கொண்டு வாருங்கள். காரணம் எதிரில் வரும்போது அல்லது காரணத்தைப்பற்றி யோசிக்கும்போது நிவாரணம் உண்டாவதில்லை. ஆதலால் பாப்தாதா சங்கல்ப்பம் (எண்ணம்) வரையிலும், பேச்சு வரையிலும் மட்டுமல்ல, சங்கல்பம் வரை இந்த காரணம் என்ற வார்த்தையை நிவாரணம் என்று பரிவர்த்தனை செய்ய விரும்புகின்றார். ஏனெனில், காரணம் விதவிதமானதாக இருக்கிறது. மேலும் அந்த காரணம் என்ற வார்த்தையை யோசிப்பதால் பேசுவதால், கர்மத்தில் வருவதால் தீவிர புருஷாரத்தத்தில் தடையாக (பந்தனம்) இருக்கிறது. ஏனெனில் நீங்கள் எல்லோரும் பாப்தாதாவிடம் உறுதி மொழி கொடுத்திருக்கின்றீர்கள். அன்போடு உறுதிமொழி கொடுத்திருக்கிறீர்கள். நாம் எல்லோரும் கூட தந்தைக்கு உலக பரிவர்த்தனை காரியத்தில், உங்கள் காரியம் என்னவாக இருக்கிறது? எல்லா ஆத்மாக்களின் காரணத்தையும் கூட நிவாரணம் செய்ய வேண்டும். ஏனென்றால், இன்று மெஜாரிட்டி துக்கம் அசாந்தியில் இருப்பதன் காரணமாக, இப்பொழுது முக்தி வேண்டும். என்று விரும்புகிறார்கள். துக்கம், அசாந்தியிலிருந்து, எல்லா வித பந்தனங்களிலிருந்து முக்தியடைய விரும்புகிறார்கள். ஆகவே முக்தியளிக்கும் வள்ளல் யார்? தந்தையோடு கூடவே. குழந்தைகளாகிய நீங்களும் முக்தி வள்ளல்கள் தான். உங்களுடைய ஜட சித்திரங்களின் முன்னால் இன்று வரையிலும் கூட என்ன கேட்கிறார்கள்? இப்போது துக்கம், அசாந்தி அதிகரித்துக் கொண்டேயிருப்பதைப் பார்த்து எல்லோரும் மெஜாரிட்டி ஆத்மாக்கள், முக்தி வள்ளல்களாகிய உங்களை நினைவு செய்கிறார்கள். மனதில் துக்கம் இருப்பதால் கதறுகிறார்கள். ஹே, முக்தி வள்ளல்களே! முக்தி கொடுங்கள். என்ன உங்களுக்கு ஆத்மாக்களின் துக்கம் அசாந்தியின் கூக்குரல் காதில் விழவில்லையா? எனினும் முக்தி வள்ளல் ஆகி முதலில் இந்த காரணம் என்ற சொல்லுக்கு முக்தி கொடுங்கள். இதனால் தானாகவே முக்தியின் சப்தம் உங்கள் காதுகளில் ஒலிக்கும். முதலில் உங்களுக்குள்ளிருக்கும். இந்த வார்த்தையிலிருந்து (காரணம்) அடைவதால், மற்றவர்களுக்கும் முக்தி கொடுக்க முடியும். இனிமேல், நாளுக்கு நாள் உங்கள் முன்னால் முக்தி வள்ளல்களே முக்தி கொடுங்கள் என்று கியூவில் நிற்கப் போகிறார்கள் ஆனால் இப்பொழுது

வரையிலும் உங்களுடைய புருஷாரத்தத்தில் வித விதமான காரணம் என்பது இருப்பதன் காரணமாக முக்திவாசல் மூடிக்கிடக்கிறது. ஆகையால், இன்று பாப்தாதா இந்த சொல்லுக்கும், இத்தோடு வருகின்ற பலவீன சொற்களுக்கும். விசேஷமாக காரணம் பிறகு இதில் இன்னமும் பலவீனங்கள் இருக்கின்றன. இப்படி, அப்படி, எப்படி, இதெல்லாம் காரணம் என்பதோடு சேர்ந்து தொடரும் சொற்களாகும். இவை தான் கதவு மூடி கிடப்பதற்கான காரணம் ஆகும்.

ஆகவே இன்று எல்லோரும் ஹோலி கொண்டாடுவதற்காக வந்திருக்கிறீர்கள் அல்லவா? எல்லோரும் ஒடோடி வந்திருக்கிறீர்கள். சிநேகம் என்ற விமானத்தில் ஏறி வந்திருக்கிறீர்கள். தந்தையிடம் சிநேகம் இருக்கிறது. ஆதலால் தந்தையோடு ஹோலி கொண்டாடுவதற்காக வந்து சேர்ந்து விட்டீர்கள். வாழ்த்துக்கள். தாராளமாக வரலாம். பாப்தாதா வாழ்த்துக்களை அளிக்கின்றார். பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கின்றார், நாற்காலியில் அமர்ந்து வரக்கூடியவர்களும் கூட உடல்நிலை கொஞ்சம் இப்படி அப்படி இருப்பவர்களும் கூட தைரியத்துடன் வந்து சேர்ந்து விட்டனர். பாப்தாதா இந்த காட்சியைப் பார்த்தார். இங்கு வகுப்பிற்கு வருகிறார்கள் அல்லவா? புரோகிராமில் வரும் போது நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, துணைக்கு ஒருவரைப் பிடித்துக் கொண்டு வந்து விடுகிறார்கள். ஆகவே இதை என்னவென்று சொல்வது? பரமாத்ம அன்பு. பாப்தாதாவும் கூட இப்படிப்பட்ட தைரியசாலி ,சிநேகி, உள்ளத்தின் சிநேகி குழந்தைகளுக்கு மிக, மிக உள்ளத்திலிருந்து ஆசிகளை, உள்ளத்திலிருந்து அன்பையும் விசேஷமாக அளிக்கின்றார். தைரியத்துடன் வந்திருக்கிறார்கள். தந்தை மற்றும் பரிவாரத்தினரின் உதவி இருக்கிறது எல்லோருக்கும் தங்கும் இடம் வசதியாக கிடைத்துள்ளதா? கிடைத்துள்ளதா? யாருக்கு வசதியாக இடம் கிடைத்திருக்கிறதோ, அவர்கள் எல்லோரும் கை உயர்த்துங்கள். வெளிநாட்டினருக்கு நல்ல விதமாக கிடைத்திருக்கின்றதா? இது திருவிழா. வெளி உற்சவங்களில் மணல் காற்று வீசிக் கொண்டிருக்கும். உணவருந்துவதும் நடந்து கொண்டிருக்கும். உங்களுக்கு பிரம்மா போஜனம் நன்றாகக் கிடைத்துள்ளதா? கிடைக்கிறதா? நன்றாக கை அசைக்கிறார்கள். உறங்குவதற்கு மூன்றடி இடம் கிடைத்திருக்கிறது.

இப்படிப்பட்ட சந்திப்பு மீண்டும் 5-ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் சங்கமத்தில் மட்டுமே நடக்கும். அதன்பிறகு நடக்காது.

ஆகவே, இன்று பாப்தாதாவுக்கு ஒரு எண்ணம் வருகிறது. எல்லாக் குழந்தைகளுடைய சேமிப்புக் கணக்கைப் பார்க்கலாம் என்று. பார்த்திருக்கிறேன். இனிமேலும் பார்ப்பேன். ஏனென்றால் பாப்தாதா குழந்தைகளுக்கு, முன்கூட்டியே ஒரு தகவல் அளித்திருக்கிறேன். அதாவது சேமிப்புக்கணக்கை. சேமிப்பதற்கான சமயம் இப்போதைய சங்கமயுகம் தான் என்று. இந்த சங்கமயுகத்தில் இப்போது எவ்வளவு சேமிப்பு செய்ய விரும்புகிறீர்களோ. முழு கல்பத்திற்குமான கணக்கு. இப்போது சேமிக்க முடியும். பிறகு சேமிப்புக் கணக்கு வங்கி மூடப்பட்டு விடும். பிறகு என்ன செய்வீர்கள்? ஆதலால் பாப்தாதாவுக்கு குழந்தைகளிடம் அன்பிருக்கிறதல்லவா ஆகவேபாப்தாதாவுக்குத் தெரியும். குழந்தைகள் அலட்சியத்தின் காரணமாக சில சமயம் மறந்து விடுகிறார்கள். நடந்து விடும், பார்த்துக் கொள்ளலாம். செய்து கொண்டு தானே இருக்கிறோம். நடந்து கொண்டு தானே இருக்கிறோம். மிக தெம்போடு கூறுகின்றனர். நீங்கள் பார்க்கவில்லையா, நாங்கள் செய்து கொண்டு தானே இருக்கிறோம். ஆம். செய்து கொண்டு தான் இருக்கிறோம். இதை விட என்ன செய்வது? ஆனால் நடப்பது மற்றும் பறப்பது, இதில் வித்தியாசம் இருக்கிறதல்லவா? நடந்து கொண்டிருக்கிறீர்கள். இதற்காக வாழ்த்துக்கள் ஆனால் இப்போது நடக்கும் நேரம் முடியப்போகிறது. இப்போது பறக்க வேண்டிய நேரம். அப்போது தான் லட்சியத்தை எட்டிப்பிடிக்க முடியும். சாதாரண பிரஜையாக வர வேண்டுமா? பகவானுடைய குழந்தை சாதாரண பிரஜை என்றால், சோபிக்கிறதா? (அழகாக இருக்குமா?). ஆகவே தான் பாப்தாதா இதைத்தான் விரும்புகின்றார். இன்று மூதல், ஹோலி என்பதன் பொருள். நடந்தது, முடிந்தது, ஹோலி கொண்டாட வந்திருக்கிறீர்கள். நடந்தது முடிந்துவிட்டது. ஏதாவதொரு காரணமாக ஒருவேளை பலவீனம் இருக்குமானால், இப்போதே நடந்தது, நடந்து முடிந்துவிட்டதாகக் கருதி தங்களுடைய சித்திரத்தை கண் முன் கொண்டு வாருங்கள். நீங்களே உங்களுடைய சித்திரக்காரராகி, உங்களுடைய சித்திரத்தை வரையுங்கள். தெரியுமா? பாப்தாதா இப்போதும் கூட ஒவ்வொரு குழந்தையையும் எப்படிப்பட்ட சித்திரமாகப் பார்க்கின்றார். தெரியுமா? எந்த சித்திரத்தைப்

பார்க்கின்றார்? இப்போது நீங்கள் எல்லோரும் உங்கள் சித்திரத்தை வரையுங்கள். வரையத் தெரியுமா? வரையத் தெரியுமல்லவா? சிரேஷ்ட சங்கல்பம் என்ற பேனாவால், உங்களுடைய சித்திரத்தை இப்போதே கண் முன் கொண்டு வாருங்கள். முதலில் எல்லோரும் டிரில் செய்யுங்கள் மைண்ட் டிரில். (மன டிரில் கர்மேந்திரியங்களின் டிரில் அல்ல மனதின் மூலமான டிரில். ரெடியாக டிரில் செய்வதற்கு ரெடியாக இருக்கிறீர்கள். தலையை அசையுங்கள். பாருங்கள் எல்லாவற்றையும் விட சிரேஷ்ட சித்திரம் என்னவென்றால், கிரீடம், சிம்மாசனம், திலக்தாரி. ஆகவே உங்களுடைய சித்திரத்தை எதிரில் கொண்டு வாருங்கள். மேலும் மற்ற எண்ணங்களை ஒதுக்கி விட்டுப் பாருங்கள். நீங்கள் எல்லோரும் பாப்தாதாவின் மன சிம்மாசனத்தின் அதிகாரிகள். இருக்கிறதல்லவா! இப்படிப்பட்ட சிம்மாசனம் வேறு எங்கும் கிடைக்காது. ஆதலால் முதலி ஆசனம் ல் இந்த சித்திரத்தை வரையுங்கள். நான் விசேவு ஆத்மா. சுவமான்தாரி ஆத்மா,பாப்தாதாவின் முதல் படைப்பான சிரேஷ்ட ஆத்மா. பாப்தாதாவின் மன சிம்மாசனத்திற்கு அதிகாரியாக இருக்கிறேன். சிம்மாசனத்திற்கு அதிகாரி ஆகி விட்டீர்கள்.. இத்தோடு. பரமாத்ம படைப்பு. என்ற இந்த விருக்ஷத்தின் வேர் பாகத்தில் (அடிமரம்) அமர்ந்திருக்கின்ற முன்னோர்கள் மற்றும் பூஜைக்குரிய ஆத்மாக்கள். இந்த நினைவு எனும் திலகம் அணிந்து கொண்டீர்களா? இத்தோடு கூடவே, கவலையற்ற பாதுஷா. எல்லா வித கவலைகள் என்ற சுமையை பாப்தாதாவிடம் அர்ப்பணம் செய்துவிட்டு, டபுள் லைட் கிரீடதாரி. ஆகவே கிரீடம், திலகம், சிம்மாசனதாரி இவ்வாறாக தந்தை அதாவது பரமாத்ம அன்புக்குப்பாத்திரமான ஆத்மா.

ஆகவே, இந்த சித்திரத்தை வரைந்து விட்டீர்களா? சதா இந்த டபுள் லைட் என்ற கிரீடம் அணிந்தவாறே இங்குமங்கும் சென்று கொண்டிருந்தாலும், தாரணை செய்ய முடியும். எப்போது வேண்டுமானாலும் சரி, உங்களுடைய சுவமானத்தை (சுயமரியாதை) நினைவு செய்து கொண்டேயிருந்தால், இந்த கிரீடம்,திலகம் மற்றும் சிம்மாசனத்திற்கு அதிகாரியாக இருக்கிறேன். இந்த உங்களுடைய சித்திரத்தை திட சங்கல்பம் மூலம் கண் முன் கொண்டு வாருங்கள். நினைவிருக்கிறதா? முதன் முதலில் (யக்ஞத்தின் ஆரம்பத்தில்) உங்களுடைய பயிற்சியில் அடிக்கடி ஒரு வார்த்தை நினைவில்

இருந்தது. அந்த ஒரு வார்த்தை எது? நான் யார்? இந்த நான் யார்? என்ற வார்த்தையை அடிக்கடி உங்களுடைய நினைவில் கொண்டு வாருங்கள். மேலும் உங்களுடைய விதவிதமான சுவமான். டைட்டில் (பகவானிடமிருந்து கிடைத்த பட்டம்), தற்காலத்தில் மனிதர்கள் மனிதர்களுக்கு பட்டம் (டைட்டில்) கொடுக்கிறார்கள். இதை மனிதர்கள் எவ்வளவு மகத்துவம் உடையதாகக் கருதுகிறார்கள் ஆனால் குழந்தைகளாகிய உங்களுக்கு தந்தையிடமிருந்து எத்தனை டைட்டில்கள் கிடைத்திருக்கின்றன? எத்தனை சுவமான் கிடைத்திருக்கின்றன? சதா சுவமானத்தின் லிஸ்ட் தன்னுடைய புத்தியில் ரிவைஸ் செய்து கொண்டேயிருங்கள். நான் யார்? லிஸ்ட் எடுங்கள். இந்த நஷாவில் இருந்தால், காரணம் என்ற வார்த்தை இருக்கிறதல்லவா, அந்த வார்த்தை இல்லாமல் மறைந்து விடும் (மெர்ஜ்) மேலும் நிவாரணம் ஒவ்வொரு கர்மத்திலும் தெரியும். எப்போது நிவாரண சொரூபம் ஆகி விடுகிறீர்களோ அப்போது எல்லா ஆத்மாக்களுக்கும், நிர்வாண்தாம், முக்திதாம் செல்வதற்கான வழியை எளிதாகவே புரிய வைத்து, முக்தி அளித்து விடுவீர்கள்.

திட சங்கல்பம் செய்யுங்கள். திட சங்கல்பம் செய்யத் தெரியுமா? எப்போது எண்ணம் உறுதியாக (திடமாக) இருக்கிறதோ அந்த உறுதி தான் வெற்றிக்கான சாவி. கொஞ்சம் கூட திட சங்கல்பத்தில் குறையை கொண்டு வராதீர்கள். ஏனென்றால் மாயாவின் வேலை தோல்வியடையச் செய்வது ஆனால் உங்களுடைய வேலை எது? உங்களுடைய வேலை தந்தையின் கழுத்தில் மாலை ஆவது. ஒரு போதும் மாயாவிடம் தோல்வியடையக் கூடாது, ஆகவே எல்லோரும் சங்கல்பம் செய்யுங்கள். நான் சதா தந்தையின் கழுத்தில் வெற்றி மாலையாக இருக்கிறேன். கழுத்தில் மாலையாக இருக்கிறேன். கழுத்து மாலை, வெற்றி மாலை.

ஆகவே பாப்தாதா கையை உயர்த்தச் சொன்னால், என்ன ஆவீர்கள் என்று! எல்லோரும் என்ன பதில் கூறுகிறார்கள்? ஒரே பதில் தான் தருகிறார்கள். லஷ்மி நாராயணன் ஆவேன். ராம்-சீதா அல்ல. ஆகவே லஷ்மி-நாராயணன் ஆகக்கூடிய நீங்கள் பாப்தாதாவின் விஜய் மாலையின் மணிகள். பூஜ்ய ஆத்மாக்கள். உங்களுடைய மாலையை ஜபித்து, ஜபித்து பிரச்சனைகளிலிருந்து விடுபடுகிறார்கள். இப்படிப்பட்ட

சிரேஷ்ட மணிகள். ஆகவே இன்று பாப்தாதாவுக்கு என்ன கொடுப்பீர்கள்? ஹோலிக்காக அன்பளிப்பு (கி்ப்ட்) ஏதாவது கொடுப்பீர்கள் அல்லவா? இந்த காரணம் என்ற வார்த்தை இருக்குமானால், காரணம், காரணம் என்று சொல்லிச் சொல்லி கிளி ஆகி விடுவீர்கள் அல்லவா? கிளியாகவும் வேண்டாம். இப்படி அப்படி ஆகவும் வேண்டாம். எந்த விதமான காரணமும் வேண்டாம். நிவாரணம்.

ஆகவே இன்று, ஹோலி பாப்தாதாவின் அருகாமையில் சதா இருப்பதற்கு கம்பைண்டாக இருக்கும் ஹோலி கொண்டாடினீர்கள். எல்லாவற்றையும் விட பக்காவாக (உறுதியாக) கம்பைண்டு ரூபத்தில் இருக்க வேண்டும். அருகில் இருப்பவர்கள், முன்னே, பின்னே சென்று விடக்கூடும் ஆனால் கம்பைண்டு. சதா கூடவே இருப்பார்கள். ஆகவே ஹோலி என்றால் தந்தையின் குணங்களின் தன்மையுடன் இருப்பது. தந்தையின் குணங்களைப் பூசிக் கொள்ள வேண்டும். அதாவது தந்தைக்குச் சமானமாக ஆக வேண்டும். ஆகவே கம்பைண்டு தானே? அல்லது அவ்வப்போதா? அநேக குழந்தைகளைப் பார்க்கும் போது முயற்சி செய்து, செய்து கொஞ்சம் பலவீனமாகி விடுவதால், தனித்திருப்பதை விரும்புகிறார்கள். யாரும்கூட இருப்பதை விரும்புவதில்லை. தனியாக இருப்பது, தனியாக யோசிப்பது, இந்த தனிமையும் சரியல்ல. பிரபு பரிவாரம். இவ்வளவு பிரபு பரிவாரத்தோடு இருப்பவர் எப்படி தனிமையில் இருக்க முடியும்? இது மாயாவின் தந்திரம். முதலில் தனிமைப்படுத்தி விட்டு, பிறகு போர் தொடுக்கிறது. மாலையைப் பாருங்கள் தனியாக மணி இருக்கிறதா? மாலையின் விசேஷம் என்ன? ஒரு மணிக்கும், அடுத்திருக்கும் இன்னொரு மணிக்கும் சம்மந்தமுடையதாக இருக்கும். கொஞ்சம் கூட மணிகளுக்கிடையில் நூல் தெரியாது. சிநேகி, சகயோகி, சாத்தி. இது தான் உங்களுடைய ஞாபகார்த்தம். ஆகவே ஹோலி கொண்டாடினீர்களா? தந்தைக்குச் சமானமாக ஆக வேண்டும். அதாவது தந்தையின் குணங்களில் நிரம்பியவர்களாக வேண்டும். அப்படியானால் எல்லோரும் என்ன நினைக்கிறீர்கள். சமானமாக வேண்டுமல்லவா? தந்தைக்கு குஷியாக இருக்கிறது, பாப்தாதா ஒவ்வொரு குழந்தைக்கும் சமமாக ஆவதற்கு, சிரேஷ்ட சங்கல்பம் செய்வதற்கு நூறு நூறு மடங்கு வாழ்த்துக்களை அளிக்கின்றார். வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்,

வாழ்த்துக்கள்! நஷா இருக்கிறதல்லவா? நம்மைப் போன்று இத்தனை மடங்கு பாக்கியவான் யார்? இதே போதையில் இருங்கள்.

முதல் முறையாக, யார் வநதிருக்கிறார்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள். யார் முதன் முறையாக தைரியத்துடன் வந்திருக்கிறார்களோ, அவர்களுக்கு விசேஷமாக பாப்தாதா இந்த சபையில் மகிழ்ச்சியுடன் கொண்டாடுவதற்கு வாழ்த்துக்களை அளிக்கின்றார். மேலும் கூடவே விசேஷ வரதானத்தையும் அளிக்கின்றார். அமர்பவ: இந்த வரதானம் சதா அமிர்த வேளையில் சந்திப்பு முடித்த பிறகு முழு நாளும் அடிக்கடி நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். நான் அமரன். அமரராக இருக்கின்ற தந்தையின் குழந்தை. அமரபதவி (வைகுண்டம் அடையக்கூடிய ஆத்மா நான். ஜன்மம் எடுப்பீர்கள் ஆனால் சுகம், சாந்தி நிலையானதாக இருக்கும். நல்லது.

**சேவை வாய்ப்பு டெல்லி, ஆக்ரா:** பாப்தாதா பார்த்தார். எந்த ஜோனுக்கு சேவை வாய்ப்பு கிடைத்தாலும், அவர்கள் பெரிய மனதோடு, திறந்த மனதோடு எல்லோருக்கும் வாய்ப்பு அளித்து விடுகிறார்கள். நல்லது. இதனால் டபுள் லாபம் கிடைக்கிறது. ஒன்று யக்ஞ சேவைக்கு, இரண்டாவது யக்ஞ சேவைக்கான புண்ணியமோ மிகப் பெரிது. ஒன்றுக்கு லட்சம் மடங்கு பலன் கிடைக்கிறது. யக்ஞத்தின் மகிமை குறைந்தது அல்ல. ஆகவே யாரெல்லாம் வருகிறார்களோ.அவர்களுக்கு மிகுந்த பலன் இருக்கிறது. இந்த யக்ஞ சேவைக்கான புண்ணியம் சேமிப்டாகிறது. அடுத்தது. இத்தனை சிரேஷ்ட ஆத்மாக்கள் மதுபனில் ஒன்றாக சந்திக்கிறார்கள். பாண்டவர்களானாலும் தாதிகளானாலும், மகாரதி சகோதர சகோதரிகளானாலும், இத்துடன் இவ்வளவு எல்லையற்ற பரிவாரம் எங்கே கிடைக்கும் உங்களுக்கு, சத்யுகத்திலும் கூட சிறு பரிவாரம் தான் இருக்கும். இப்போது எத்தனை பேர் வந்திருக்கிறார்கள்? (17500) சகோதர சகோதரிகள் வந்திருக்கிறார்கள். இதில் 500-குழந்தைகள். 500-குழந்தைகள் வந்திருக்கிறார்கள் என்றால், எவ்வளவு பாக்கியவான்கள். இத்தனை ஆயிரம் பரிவாரம் சத்யுகத்திலும் கிடைக்க மாட்டார்கள். திரேதா யுகத்திலும் கிடைக்க மாட்டார்கள். துவாபர கலியுகத்திலும் கிடைக்க மாட்டார்கள். இப்படிப்பட்ட ஒரு பரிவாரம் (குடும்பம்) 17-ஆயிரம் பரிவாரம்,

எப்போதாவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா? சமாளிப்பதே கஷ்டம் ஆனால் இங்கு பாருங்கள் எல்லோரும் ஆனந்தமாக இருக்கிறார்கள். அப்படியானால் எவ்வளவு லாபம்! பரிவாரத்தோடு சந்திப்பது எப்போதும் நடப்பதில்லை. மேலும் இதுவோ, விசேஷமாக பகவானுடைய பரிவாரம்.

நல்லது. டெல்லிகாரர்கள். வருங்கால இராஜதானியை டெல்லியில் அமைக்க வேண்டுமல்லவா? உறுதிதானே! (பக்காவா). தயாராயிருக்கிறீர்களா? எல்லோருக்கும் மிகப் பெரிய பரிவாரம். எல்லோரும் உங்களுடைய டெல்லிக்கு வருவார்கள். உங்களுக்குத் துணையாக இருப்பார்கள். ஆகவே, தயார் செய்ய வேண்டுமல்லவா? உறுதியாக தயாராக இருக்கிறீர்கள் அல்லவா? அப்படியானால் டெல்லியில் தயார் செய்து விட்டீர்கள்! எல்லோருக்கும் அழைப்பு விடுத்திருக்கிறீர்கள். இப்போது டெல்லி நிலைமை சரியில்லாமல் இருக்கிறது. தினந்தோறும் செய்தி தாளில் என்ன செய்தி வருகிறது? தகராறு, கூச்சல், குழப்பம் இனி என்னவாக ஆகும்? எப்படிப்பட்ட டெல்லி ஆகும்? பொன்னாலான டெல்லி ஆகி விடும். எல்லோருக்கும் இடம் கொடுப்பீர்கள் அல்லவா? எல்லோரையும் ராஜதானியில் வரவழைப்பீர்கள் அல்லவா? ஆதலால் முதலில் டெல்லிக்காரர்கள், டெல்லியை தயார் செய்ய வேண்டியதாயிருக்கும். அப்போது தான் எல்லோரும் வருவார்கள் அல்லவா? டெல்லிகாரர்களிடம் விசேஷம் இருக்கிறது. பாப்தாதா பார்த்தார். டெல்லிக்காரர்கள் அநேக சேவைகளில், விசேஷங்களைக் கொண்டு வந்திருந்தார்கள். நிமித்தமாகியிருக்கிறார்கள். இனி டெல்லியை பொன் மயமான டெல்லி ஆக்குவதற்காக அப்படிப்பட்ட தொரு பிளான் தயார் செய்யுங்கள். அதைப் பார்த்து எல்லோரும் ஆஹா! ஆச்சரியப்படட்டும் என நிமித்தமாயிருக்கும் டெல்லிகாரர்களாகிய நீங்கள் எங்களுக்கு. சொர்க்கத்தின் இராஜ்ய பாக்கியத்தை கொடுத்துவிட்டீர்கள் என்பார்கள். ஏனெனில் டெல்லி தான் சொர்க்கம் ஆக வேண்டும். அங்கு தான் ஸ்தாபனையாகும். நல்லது. குழு நன்றாக இருக்கிறது. சேவைக்கான திட்டம் தயார் செய்வதற்கும் விசேஷ ஆத்மாக்கள் இருக்கிறார்கள். மேலும் டெல்லியில் சாகார் பிரம்மா, ஜகதம்பா, மற்றும் நிமித்தமாகியிருக்கும் எல்லா தாதிகளுடைய அன்பு இருக்கிறது டெல்லிக்குச் செல்லாத தாதி யாருமில்லை. யாருமில்லை. ஆகையால்

டெல்லி காரர்கள் இப்போது சேவையில் ஏதாவது புதிய பிளான் தயார் செய்யுங்கள். இப்போது எல்லா ஜோன்களும் புதுமையை விரும்புகிறது. ஏனென்றால் நிறைய செய்து முடித்து விட்டார்கள் அல்லவா? இப்போது அமிர்த வேளையில் இதற்காக அமர வேண்டும். புதிய பிளான் பற்றி யோசிக்க வேண்டும். தோன்றும். இப்போதும் கூட என்ன சேவை செய்கிறீர்களோ, அது நன்றாகச் செய்கிறீர்கள். எல்லா ஜோன்களும் ஏதாவது செய்து கொண்டே தான் இருக்கிறார்கள். பாப்தாதா கேள்விப்பட்டார். எங்கெல்லாம் பாப்தாதா குழந்தைகளுக்கு சேவை செய்வதற்காக அன்பளிப்பாக இடம் கொடுத்திருக்கின்றாரோ, டெல்லி, ஓ.ஆர்.சி. ஹைதராபாத் ஆகிய இடங்கள், ஹைதராபாத் சகோதரி எங்கே? (குஸ்தீப் சகோதரி) இப்போது அங்கேயும் நல்ல சேவையின் அலை ஆரம்பமாகியிருக்கிறதுதல்ல தைரியபாலிகள். தைரியத்திற்கு பாப்தாதா விசேஷமாக வாழ்த்துக்களை அளிக்கின்றார். டெல்லியிலும் கூட வெவ்வேறு இடங்களில் சுறுசுறுப்பாக வைப்பதற்கு நல்ல முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இது போல பாப்தாதாவிடம், எல்லா ஜோன்களும் விதனிதமான ரூபத்தில், எப்படி குஜராத் யூத் புரோகிராம் செய்து கொண்டிருக்கிறார்கள். கிராமங்களில் செய்து கொண்டிருக்கிறார்கள். இளைஞர்களுக்கான சேவை செய்து கொண்டிருக்கிறார்கள். இது போல, ஒவ்வொரு ஜோனும் தத்தம் கணக்குப்படி சேவையில் நல்ல விருப்பம் கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால், ஒவ்வொரு ஜோனிலும் வெவ்வேறு வர்க்கம் இருப்பதன் காரணமாக, வர்க்க சேவை எளிதாக நடக்கிறது. சமாச்சாரம் பாப்தாதாவிடம் வந்து கொண்டிருக்கிறது. பாப்தாதா குஷி அடைகின்றார் ஆனால், இப்போது வேண்டியது. எப்படி முதலில் சிறிதளவில் மணியடித்துக் கொண்டு விளம்பரம் செய்தார்கள். மேலும் சில இடங்களில் பெரிய அளவில் டமாரம் அடித்து, இது நடக்கும், இது நடக்கும் என்று எச்சரிக்கை செய்தார்கள் இப்படி ஏதாவது குரல் ஓங்கி ஒலிக்குமாறு செய்ய வேண்டும். சிறிதாக மத்தளம் அடித்துக் கொண்டிருக்கிறார்கள். சிவராத்திரியின் போது பாப்தாதா பார்த்தார். அநேகர் போர்டு போட்டிருந்தார்கள் -வந்து விட்டார், வந்து விட்டார் என்று ஆனால் எல்லோருடைய மனதையும் சென்றடையவில்லை. இப்போது எல்லோருடைய மனதிலும் இந்த சப்தம் ஒலிக்க வேண்டும். நம்முடைய பாபா வந்து விட்டார் என்று. ஆகவே எந்த ஜோன் செய்யப்போகிறது? எந்த ஒரு ஜோன் வேண்டுமானாலும் செய்யலாம்

பாப்தாதா எல்லோருக்கும் வாய்ப்பு அளிக்கின்றார். குறைந்தபட்சம் வர்க்க சேவை புரோகிராம் செய்கிறீர்கள் அல்லவா? அதில் வருகின்ற எல்லோரும் மனதார சொல்லட்டும். வந்து விட்டார், வந்து விட்டார் என்று. கோஷம் போட வேண்டாம். மனதார, நம்முடைய பாபா வந்து விட்டார் என்று கூற வேண்டும். கொஞ்சம் பேர் கூறுகிறார்கள். கொஞ்சம் பேர் புரிந்து கொண்டிருக்கிறார்கள் ஆனால் முழு சபையும் தங்களுடைய ஊக்கம் உற்சாகத்துடன் சொல்லட்டும். வந்து விட்டார். (ஆ கயா) இதைச் செய்யலாமல்லவா? முழு சபையையும் தயார் செய்யுங்கள். வருகின்றார்கள் ஆனால் ஏற்றுக் கொள்ள வேண்டும். சமயம் நெருங்கி வந்து கொண்டிருக்கிறது. ஆகையால் வாழ்த்துக்கள் டெல்லிக்காரர்களுக்கு, ஏனெனில் டெல்லிக்காரர்களுக்கு மிகப் பெரிய பொறுப்பு இருக்கிறது. மேலும் முதன் முதலில் சேவை ஸ்தாபனம் நிச்சயிக்கப்பட்டபடி, காலத்தை அனுசரித்து, சென்டர் அல்ல, ஆனால் சேவை டெல்லியிலிருந்து ஆரம்பமானது. ஆகவே இப்போது கமால் (அற்புதம்) செய்து காட்ட வேண்டும். யாருடைய புத்தியிலும் வரக்கூடும். நல்லது. வாழ்த்துக்கள்.

ஆக்ராகாரர்கள் எழுந்திருங்கள்: கொஞ்சப்பேர் தான் இருப்பினும் ஆக்ராகாரர்கள் விசேஷ சேவை செய்ய! முடியும். தற்கால அரசு சார்பாக ஆக்ராவில் சேவை நடந்து கொண்டிருக்கிறது. இதை விட அதிக சேவை ஆல்மைட்டி அரசு மூலமாக நடக்கும். ஆதலால் இப்போது அப்படிப்பட்ட பிளான் ஆக்ராகாரர்கள் செய்ய வேண்டும். இதன் மூலம் ஆல்மைட்டி அரசின் புகழ் ஓங்க வேண்டும். அடுத்த முறை எப்போது வருவீர்களோ அப்போது முழு சேவைக்கான பிளான் உங்களுக்குள் தயார் செய்ய வேண்டும். யாருடைய துணையையும் பெறலாம், யாருடைய உதவியையும் நாடலாம் ஆனால் இந்த ஆண்டு என்னென்ன விசேஷ சேவை நடந்தது என்ற சேவை ரிசல்ட் கொண்டு வர வேண்டும். எங்கே இருக்கிறார்கள் டீச்சர்கள்? செய்வீர்களா? எப்படி ஜோன் பிளான் தாயர் செய்து கொண்டு வருகிறார்கள் அல்லவா? எங்கெங்கே சேவை செய்யப்பட்டது. என்ன புதுமையான சேவை செய்தீர்கள், எந்த அளவு செய்தி பரவியது? போன்ற முழு ரிகார்டு கொண்டு வரவேண்டும். இருப்பது கொஞ்சம் பேர் தான் ஆனால் 5-பாண்டவர்கள் என்ன செய்யவில்லை ஆகவே நீங்கள் கமால் செய்து காட்ட வேண்டும். எண்ணிக்கை குறைவு ஆனால் சேவை எல்லாவற்றிலும் அதிகம். சரி,

நல்லது. பிரம்மாபாபாவுக்கு ஆக்ரா மீது மிகுந்த கவனம் இருந்தது. ஆதலால் பிரம்மாபாபாவுக்கு பலன் கொடுக்க வேண்டும். நல்லது. நல்லது சேவைக்கான வாய்ப்பை எடுத்துக் கொண்டீர்கள். மிகவும் நல்லது,

டபுள் விதேஷி: 50-நாடுகளிலிருந்து 700-சகோதர, சகோதரிகள் வந்திருக்கின்றனர் அங்கிள்'ம் கூட வந்திருக்கிறார். வாஹ், பாப்தாதாவுக்கு குஷியாக இருக்கிறது. இந்த தம்பதியரைப் பார்த்து (யுகல்) பரிவாரத்தைப் பார்த்து குஷி. ஏனென்றால் பிராமண பரிவாரத்தில் யார் சட்டப்படி முதன் முதலில் வி.ஐ.பி. நிமித்தமானாரோ, அது நீங்கள் தான். கரவொலி எழுப்புங்கள். மேலும் அற்புதம் என்னவென்றால், கவர்மெண்ட் டியூட்டியில் இருக்கும் போதே, சென்டர் ஸ்தாபனை செய்தார். மேலும் அநேக வி.ஐ.பிக்களுக்கு அறிமுகம் செய்வித்தார். அதாவது கயானாவில் சென்டர் திறந்தார் ஆனால் கயானா தான். அமெரிக்கா சேவைக்கு நிமித்தமானது. ஆதலால் நீங்கள் கயானாவைச் சார்ந்தவர் மட்டுமல்ல. அமெரிக்கா சேவைக்கும் நிமித்தம். ஆதலால் பாப்தாதாவுக்கு மிகுந்த ஆசிகளும் உளமார அன்பு நினைவுகளும் நூறு மடங்கு இருக்கிறது. ஆன்ட்டி எங்கிருக்கிறார்? குழந்தைகளும் வந்திருக்கிறார்கள் அல்லவா? செல்லங்கள். பரிவாரத்திற்கும் செல்லங்கள். பாப்தாதாவுக்கும் செல்லமான குழந்தைகள் அல்லவா. நல்லது.

டபுள் ஃபாரினர்ஸ்களுக்கு பாப்தாதா என்ன டைட்டில் கொடுத்திருந்தார்? டபுள் தீவிர புருஷார்த்தி. இப்படி சதா பாப்தாதா கூறுகின்றார். டபுள் ஃபாரினர்ஸ் பாப்தாதாவுக்கு விஷ்வ பரிவர்த்தக் என்ற டைட்டிலை உறுதி செய்தார்கள். இல்லையென்றால், எல்லோரும் பாரத கல்யாணி என்று தான் கூறினார்கள். வெளிநாட்டின் காரணமாக, விஷ்வ கல்யாணதாரி ஆனார். பிராக்டிக்கலில் (நிஜமாகவே) மேலும் பாப்தாதா பார்த்தார். ஒவ்வொரு சீசனிலும், வெளிநாட்டினரின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டேயிருக்கிறது. மேலும் விசேஷ மாற்றம் என்னவென்றால் முதலில் முனுமுனுப்பு இருந்தது. எங்களுடைய கலாச்சாரம், பாரத கலாச்சாரம் என்று ஆனால் அந்த சப்தம் இப்போது இல்லை. மாற்றம் வந்து விட்டது. இப்போது எல்லோருக்கும் ஒரே கலாச்சாரமாகி விட்டது. பிராமண கலாச்சாரம்.

விருப்பமாயிருக்கிறதல்லவா? பிராமண கலாச்சாரம் பிடித்தமானதாக இருக்கிறதா? விருப்பமானதா? ஆதலால் பாப்தாதாவுக்கும் கூட டபுள் ஃபாரினர்ஸ்களாகிய நீங்கள் மிகவும் பிடித்தமானவர்களாக இருக்கிறீர்கள். ஏனென்றால், விசேஷம் இது தான் காரியம் ஏதாவது செய்ய ஆரம்பித்து விட்டால், முழுமையாக செய்து முடிப்பார்கள். தைரியமாக, ஆம் என்றால் ஆம், இல்லையென்றால் இல்லை. இதில் கெட்டிக்காரர்கள் ஆனால் மெஜாரிட்டி ஹான்ஜி. செய்பவர்களாக இருக்கிறார்கள். மீட்டா பாபா, மீட்டி தாதிகள். மீட்டா பரிவார் ஹான்ஜி, ஹான்ஜி செய்வதில் நல்ல விதமாக முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். ஆரம்பத்தில் சொல்லிக் கொண்டிருந்தார்கள் வெளிநாட்டில் மாணவர் சேர்க்கை அதிகரிப்பது மிகவும் கஷ்டமானது என்று, இப்போது கஷ்டமாக இருக்கிறதா? இப்போது வருகிறார்கள் அல்லவா? இப்போது வி.ஐ.பி.க்கள் சம்மந்தம் தொடர்பில் வருகிறார்கள் ஆகவே உங்கள் எல்லோருடைய மனப்பூர்வமான ஆர்வம், உற்சாகம் உங்களை முன்னேற்றிக் கொண்டிருக்கிறது. முன்னேறிக் கொண்டிருக்கிறீர்கள் அல்லவா? முன்னேறிக் கொண்டிருக்கிறீர்கள் தானே? திருப்தி தானே? நல்லது. இந்த அபுவில் கூடுகிறீர்கள் அல்லவா, இதன் மூலம் எல்லோரிலும் சக்தி நிரம்புகிறது. ஆதலால் அவசியமாக ஒவ்வொரு சீசனிலும் வந்து கொண்டேயிருங்கள். வந்து கொண்டேயிருங்கள். யக்ஞத்தின் அழகைக் கூடுதலாக்கிக் கொண்டேயிருங்கள். பாப்தாதாவுக்கு, இவர்கள் மீட்டிங் வைக்கிறார்கள் அல்லவா, டயலாக், காலத்தின் அழைப்பு, இது நன்றாக இருக்கிறது. நல்வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்! நல்லது.

மாதாக்கள் எல்லோரும் கை உயர்த்துங்கள். 10-ஆயிரம் மாதாக்கள் வந்திருக்கிறார்கள். நன்றாக கைகள் தெரிகின்றன.பாப்தாதாவும் கை அசைக்கின்றார். மாதாக்களுக்கு வரதானம் இருக்கிறது. விசேஷமாக எந்த சென்டரில் மாதாக்கள் மிக நல்ல புருஷார்த்திகளாக இருக்கிறார்களோ. சிநேகமுள்வர்களாக இருக்கிறார்களோ, பாப்தாதாவின் வரதானம் இருக்கிறது. எங்கே மாதாக்கள் இருக்கிறார்களோ, அங்கு யக்ஞத்தின் பண்டாரா (உண்டியல்) மற்றும் யக்ஞத்தின் சமையற்கிடங்கு (பண்டாரி) சதா நிறைந்திருக்கும். நல்லது. மாதாக்களுக்குப் பிரியமுள்ள எந்த ஒரு யக்ஞ சேவை உள்ளதோ. அதில் செல்வம் நிறைந்திருக்கும். நிறைந்திருப்பதன் காரணமாக பண்டாரா,

பண்டாரி இரண்டும் நிரம்பிவிடுகிறது. ஆதலால் மாதாக்களுக்கு பாப்தாதாவின் விசேஷ வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்! நல்லது.

பாண்டவர்கள் கை உயர்த்துங்கள் பாண்டவர்களும் அதிகமிருக்கிறார்கள் பாருங்கள். பாண்டவர்கள் இல்லையேல் சென்டர் சேவை நடத்த முடியாது. பாண்டவர்கள். ஒன்று சேவைக்காக நல்ல, நல்ல பிளான் தயார் செய்கிறார்கள். அடுத்து சக்திகளுக்கு பாதுகாப்பாக இருக்கிறார்கள். சதா பாண்டவர்கள் இப்படியே புரிந்து கொள்ளட்டும். எங்கே இருந்தாலும் சரி சென்டரில் இருந்தாலும், வீடுகளில் இருந்தாலும், சக்திகளுக்கு பாதுகாவலர்கள் என்று. யாருக்கும் தவறான கண்ணோட்டம் இருக்கக் கூடாது. இப்படிப்பட்ட சேவாதாரிகளாக இருக்க வேண்டும். ஒருக்கால் பாண்டவர்கள் வரவில்லையென்றால், எந்த ஒரு சிரேஷ்ட ஞானத்தில் விசேஷ புதுமை இருக்கிறதோ, பிரவிருத்தியில் (குடும்ப வாழ்க்கை) இருந்தாலும் நியாரே, பியாரே, பரிவாரத்தில் இருந்தாலும் நியாரே, பியாரே, மோஹஜீத், நஷ்ட மோஹா, இந்த பாண்டவர்கள் இருக்க மாட்டார்கள். சக்திகள் மட்டுமே இருந்தால் எப்படி நடக்கும்? ஆதலால் எங்கே சக்திகளுக்கு மகிமை இருக்கிறதோ, எங்கே பாண்டவர்களுக்கு மகிமை இருக்கிறதோ. இதற்கான சித்திரம் தான் சதுர்புஜம் (விஷ்ணு), பாண்டவர்கள் இல்லாமல் தந்தையின் காரியம் முன்னேறாது. மேலும் சக்திகள் இல்லாவிட்டாலும் தந்தையின் காரியம் முற்றுப் பெறாது, ஆதலால் பரிவாரத்தின் அவசியம் என்ன, பரிவாரத்திற்கு மகத்துவம் உண்டு. சிறு குழந்தைகளும் கூட ஒன்றும் குறைந்தவர்கள் அல்ல. சிறு குழந்தைகளைப் பார்த்து எல்லோரும் குஷி அடைகிறார்கள். வந்திருக்கும் சிறு குழந்தைகள் எல்லோரும் எழுந்திருங்கள். கை அசையுங்கள். ஆகவே உங்களுக்கு என்ன சொல்லலாம்? ஆஹா! குழந்தைகளே ஆஹா! குழந்தைகளுக்கும் மகிமை இருக்கிறது. ஒருவேளை குழந்தைகள் இல்லையென்றால், குடும்பம் என்று சொல்ல முடியுமா? குடும்பம் என்றால் குழந்தைகளும் இருக்க வேண்டும். பாண்டவர்களும் வேண்டும் சக்திகளும் வேண்டும். கேட்டீர்களா? குழந்தைகளுக்கும் ரிட்ரீட் நடந்தது. குமாரிகளுக்கும் ரிட்ரீட் நடந்தது. யாருக்கெல்லாம் ரிட்ரீட் நடந்ததோ, அவர்கள் எழுந்திருங்கள். அதர்குமார்களும் எழுந்திருங்கள். இளைஞர்களும் எழுந்திருங்கள்.

பாப்தாதாவிடம் எல்லா சமாச்சாரமும் வந்து விடுகிறது. நீங்கள் எந்த ஒரு புருஷார்த்தம் செய்தீர்களோ. குமார் ஆக இருந்தாலும் அதர் குமாராக இருந்தாலும், பாப்தாதாவுக்கு குஷிதான். மதுபன் வாயுமண்டலத்தில் வந்து தன்னுடைய ஸ்திதியை, தன்னுடைய புருஷார்த்தத்தை முன்னேற்றிக் கொண்டார்கள். இது மிக நன்றாக இருந்தது. ஏனென்றால். இதைப் போன்ற வாயுமண்டலம் வேறெங்கே கிடைக்கும்? இப்போது யூத் குமார் அல்லது அதர்குமார் என்று மாராக இருந்தாலும். இங்கு தீவிர புருஷார்த்தம் மூலம் அனுபவம் செய்தார்கள் அல்லவா! தீவிர புருஷார்த்தத்திற்கான அனுபவம், இதை நிலையாக வைத்திருக்க வேண்டும். (அமர்). அமர்பவ! என்ற வரதானத்தை சதா நினைவில் வைத்திருக்க வேண்டும். மாறாக அங்கு திரும்பிச் சென்ற பிறகு, தீவிர புருஷார்த்தம் இல்லை என்றோ, புருஷார்த்தம் இல்லை என்றோ சொல்லக்கூடாது ஆனால் முன்னை விட நாங்கள் பறக்கும் கலையில் சென்று கொண்டிருக்கிறோம் என்று சொல்ல வேண்டும். சரிதானா? இப்படிப்பட்ட ரிசல்ட் வேண்டும். மிக நன்றாகச் செய்தீர்கள். பாப்தாதாவுக்கு குஷியாக இருக்கிறது நல்லது.

இப்போது ஒரு செகண்டில், எல்லா பிராமணர்களும், தங்களுடைய ராஜயோகத்தின் அப்பியாசம் செய்து கொண்டே மனதை ஏகாக்கிரகம் செய்யும் எஜமானராகி, மனதை எங்கே வேண்டுமோ, எவ்வளவு நேரம் வேண்டுமோ, எப்படி வேண்டுமோ அப்படி, இப்போதே மனதை ஒரு முகப்படுத்துங்கள் (ஏகாக்கிரஹம்) வேறெங்கும் மனம் சஞ்சலப்படக்கூடாது. மேராபாபா, மீட்டா பாபா, பியாரா பாபா, இந்த சிநேகத்தின் தன்மைகளை தன்னுடையதாக்கும் ஹோலி கொண்டாடுங்கள். (டிரில்) நல்லது.

நாலா புறமும் உள்ள சிரேஷ்டமான. விசேஷ ஹோலி மற்றும் ஹைியெஸ்ட் (மிக உயர்ந்த) குழந்தைகளுக்கு, சதா தன்னை பாபா சமானமாக, சர்வ சக்திகள் சம்பன்ன மாஸ்டர் சர்வசக்திவான் என்று அனுபவம் செய்கின்ற, சதா ஒவ்வொரு கர்மேந்திரியத்திலிருந்தும் முக்தியடைந்து, மற்ற ஆத்மாக்களுக்கும் கூட முக்தி அளிக்கக் கூடிய, முக்தி வள்ளல் குழந்தைகளுக்கு சதா சுவமான் ஆசனத்தில் செட் ஆகியிருக்கின்ற, சதா அமர்பவ எனும் வரதானத்தின் அனுபவம்

சொரூபமாக இருக்கின்ற, இப்படி நாலா பக்கமும் உள்ள முன்னால் அமர்ந்திருப்பவர்களானாலும், வெகு தூரத்தில் இருந்தாலும், சிநேகத்தில் மூழ்கியிருக்கின்ற குழந்தைகளுக்கு, அன்பு நினைவுகள் மற்றும் தங்களுடைய ஊக்கம் உற்சாகம் புருஷார்த்தத்தின் சமாச்சாரம் கொடுக்கின்றவர்களுக்கு பாப்தாதாவின் உள்ள பூர்வமான அன்பும் நூறு மடங்கு நினைவுகளும்! மேலும் எல்லா ராஜயோகியிலிருந்து ராஜ்ய அதிகாரி ஆகும் குழந்தைகளுக்கும் நமஸ்தே!

மோகினி சகோதரியிடம்: (உடல் நலம் பற்றி கூறியிருந்தீர்கள்) நன்றாகச் செய்தீர்கள். குறித்த நேரத்திற்குள் முடித்துவிட்டு வந்து விட்டீர்கள். இது புத்தி கூர்மையைக் காட்டுகிறது. மிகவும் நல்லது.

தாதி ஜானகியுடன்: ஆனந்தமாயிருக்கிறதல்லவா? (என்ன சொல்ல, எப்படி சொல்ல) கண்களால் இது நன்றாக இருக்கிறது. நடத்துபவர் நடத்திக் கொண்டிருக்கின்றார். (வயது அடிப்படையில் எல்லோரிலும் பெரியவர்) வாழ்த்துக்கள்! எல்லோரும் பாபாவைப் பார்க்கட்டும், இந்த கண்கள் பார்க்கட்டும், உலகம் பார்க்கட்டும் பாபா என்ன செய்கிறார், எப்படிச் செய்கிறார் என்று. நல்லது.

(தாதிகளுடன்) எல்லோரும் நன்றாக இருக்கிறீர்களா? எல்லோரும் ஆதி ரத்னங்கள். மிகவும் நல்லது. பறக்கின்றீர்கள். நல்லது சரி. அமருங்கள். பழைய வஸ்துக்கள் இருக்கின்றதல்லவா? அது விலை மதிப்புள்ளதாக இருக்கும் இதன் மதிப்பு மிக அதிகம்.

ரமேஷ் சகோதரர், உஷா சகோதரி, டாக்டர் அனிலா சகோதரிகளுடன்: மிக நன்றாகச் செய்தீர்கள். இவரோ ஆதி ரத்தினம். சேவையில் ஆதி ரத்தினம். இது முதல் பரிவாரம். எங்கே ஐகதம்பா இருந்தாரோ அங்கே ஆகவே லக்கி பரிவாரம் (அதிர்ஷ்டமுள்ள) (உஷா சகோதரியுடன்) நல்ல பார்ட் செய்தீர்கள் ஆனால் எப்படி இவருடைய சுபாவம் இருக்கிறதோ. அதே பிரகாரம் மிக மிக மிக நன்றாக பார்ட் செய்தீர்கள். ஆதலால் எல்லோரும் அன்புடன் இருக்கிறார்கள். மேலும் எல்லோரும் குஷியாகவும் இருக்கிறார்கள். மிக நல்ல பார்ட் செய்தீர்கள். நன்றாகச் செய்தீர்கள். நேர்முக பாலனை எடுத்துக் கொள்ளக் கூடியவர். இது ஆதி பரிவாரம். இவர் சாகார் பாபாவின் பாலனையையம் நேர்முகமாகவே

மிக அருகாமையில் இருந்து அனுபவம் செய்தவர். மேலும் சேவையிலும் பார்ட் செய்தார் (டாக்டர் அனிலா சகோதரியுடன்) இவருக்கும் கூட வரதானம் இருக்கிறது.

**சாந்தி சகோதரியுடன் (சிறிபோர்ட்):** பார்க்கும் போது, இப்போது சரீரத்தின் கணக்குப்படி மெஜாரிட்டி பாஸ் செய்வதில் பாஸாகி விடுகின்றனர். இந்த வித்தியாசத்தை பார்க்கிறீர்கள் அல்லவா? பிராக்டிக்கலில் வாழ்க்கை. இதன் பாதிப்பு இருக்கிறது. (சேவை செய்யும் சகோதரிகளுடன்) இவர் மிகவும் செல்லமானவர். இந்த இளையவர் மிகவும் செல்லக் குழந்தை. மனதார சேவை செய்திருக்கின்றார். மனதார செய்யும் சேவைக்கு மிகவும் மகத்துவம் இருக்கிறது. சேவை எல்லோரும் செய்கிறார்கள் ஆனால் யார் மனப்பூர்வமாக செய்கிறார்களோ, அதற்கு மகத்துவம் இருக்கிறது. இவர் புருஷார்த்தத்தில் முன்னே செல்கிறார். மிகவும் நல்லது.

(**டாக்டர் அனிலா சகோதரியுடன்**) தந்தையிடம் உள்ளன்பு இருக்கிறது. பரிவாரத்தில் உள்ள பூர்வமான அன்பு, ஆகையால் பரிவாரத்தின் ஆசிகள் உண்டு. தந்தையின் ஆசிகளும் உண்டு.

**வெளிநாட்டின் முக்கிய மூத்த சகோதரிகளுடன்:** நல்லது. மதுபனில் இருப்பதற்கும் வாய்ப்பு. சேவைக்கும் விசேஷ வாய்ப்பு. எனினும் பாருங்கள். நீங்கள் சேவைக்காக இரண்டாவது குரூப்பிற்கு நிமித்தமானீர்கள், அதன் முக்கிய ஆக்டர் நீங்கள், ஆதிகால சேவை குரூப் அமர்ந்திருக்கிறார்கள் ஆனால் சேவையில் ஆதி ரத்தினம், சேவையில் துணையாக இருந்து, துணையாக இருப்பவர்களையும் தயார் செய்பவர்கள். என்றால் அது உங்களுடைய குரூப் தான். ஆகவே பாப்தாதா, எவ்வளவு இவர்களை மகிமை செய்கிறாரோ, ஆதி ஸ்தாபனையின் ரத்தினங்களை, அவ்வளவு அதில் அவர்களுக்கு துணையாக இருந்தவர்களுக்கும் மகிமை உண்டு. வெளிநாட்டினராக இருந்தாலும், நிமித்தமாயிருந்தவர் உங்கள் குரூப். மெஜாரிட்டி எல்லோரும் சேவை ஸ்தாபனையில் ரத்தினங்கள் ஆதலால் உங்களுக்கும் வாய்ப்பு நன்றாகக் கிடைத்திருக்கிறது. கஷ்டப்பட்டு முயற்சி செய்ய வேண்டியதாக இருக்கும். ஏனெனில் அவர்களுக்கு இருப்பது, சகிப்பது, கலாச்சாரம் தனிப்பட்டதாக இருக்கிறது. அவர்களை

ஒரு கலாச்சாரத்தில் ஒருங்கிணைப்பது அவ்வளவு எளிதல்ல. இதற்காக உங்களுக்கு வாழ்த்துக்கள். நல்ல முயற்சி செய்திருக்கிறீர்கள். முயற்சி செய்ய வேண்டியதாகத்தான் இருந்தது. எனினும் வெற்றி கிடைத்தது. முயற்சி வீணாகவில்லை. இதற்குப் பிரதிபலன் கிடைக்கிறது. வெளிநாட்டினரும் கூட சேவையில் நல்ல துணைவர்களாகிறார்கள். ஒவ்வொரு சென்டரிலும் உங்களுக்குத் துணை ஆகியிருக்கிறார்கள். ஆகியிருக்கிறார்களா? பாப்தாதாவுக்கு குஷியாக இருக்கிறது. ஆதலால் ஒவ்வொருவருக்கும் நூறு மடங்கு வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்!

**சந்திரஹாஸ் பாபுஜியுடன்:** நன்றாக இருக்கிறீர்கள். மனம் சக்திசாலியாக இருக்கிறது. மனம் சக்திசாலியாக இருக்கிறதென்றால் உடலும் சரியாக இருக்கும். மனம் சதா குஷியில் ஆனந்த நடனமாடிக் கொண்டிருக்கட்டும். ஸ்டிரச்சரில் சென்று கொண்டிருந்தாலும், மனம் ஆனந்தமாயிருக்கட்டும். கவலை இல்லைதானே? கவலையற்ற பாதுஷா.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 02.04.2008 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# இந்த ஆண்டு நான்கு பாடங்களிலும், அனுபவத்தின் அதாரிட்டி ஆகுங்கள், லட்சியம் மற்றும் லட்சணத்தை சமமாக வையுங்கள்!

இன்று பாப்தாதா தனது நாலா புறங்களிலுமுள்ள, திருப்தியாக வாழக்கூடிய, சந்துஷ்ட மணிகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். ஒவ்வொருவர் முகத்திலும் திருப்தியின் பிரகாசம் எரிந்து கொண்டிருந்தது. சந்துஷ்ட மணிகள் சுயம் தனக்கு பிரியமாகவும், பாபாவுக்குப் பிரியமாகவும் இருக்கின்றனர். மேலும் ஈஸ்வரிய குடும்பத்தினருக்கும் பிரியமாகயிருக்கின்றனர். ஏனெனில் திருப்தி என்பது மகா சக்தி. அனைத்து பிராப்திகளும் கிடைக்கும்போது திருப்தி தாரணை ஆகிறது. திருப்தி பிற சக்திகளையும் சேமிக்கச் செய்கிறது. திருப்தியின் வாயுமண்டலம் முடிந்த அளவு பிறருக்கும் கூட திருப்தியின் அதிர்வலைகளைத் தருகிறது. யார் திருப்தியாக இருக்கிறாரோ அவர் சதா பிரகாசமாய் தென்படுகிறார். சதா முகமானது மலர்ச்சியுடன் தானாகவே விளங்குகிறது. திருப்தியான ஆத்மாவை எவ்வித பிரச்சனையும் அசைக்க முடியாது. எவ்வளவு தான் பெரிய பிரச்சனையாக இருந்தாலும் சரி ஆனால் திருப்தியான ஆத்மாவிற்கு முன்னர் கார்ட்டூன் படம் போன்று கேளிக்கையாகவே தென்படுகிறது. எனவே பிரச்சனை காலங்களில் தொந்தரவாக உணர்வதில்லை, அத்தொந்தரவு அவர் மீது போரிடுவதில்லை; தோற்றுப் போய் விடுகிறது. எனவே அதீந்திரிய சுகம் நிறைந்த, மன மகிழ்ச்சியான வாழ்க்கையை அனுபவம் செய்கிறது. கஷ்டப்பட்டு முயற்சி செய்ய வேண்டியிராது. மனமகிழ்ச்சி அனுபவமாகிறது. ஆக ஒவ்வொருவரும் தன்னை சோதித்துப் பார்க்கட்டும். சோதனை செய்ய வருகிறதல்லவா? யாருக்குத் தன்னை சோதிக்க வருகிறதோ பிறரை அல்ல, தன்னை

சோதிக்க வருகிறதோ அவர்கள் கையைத் தூக்குங்கள். நல்லது. வாழ்த்துக்கள்!

பாப்தாதாவின் வரதானம் கூட தினமும் அமிர்தவேளையில் வித வித ரூபங்களில் இது கிடைக்கிறது. குஷியாய் இருங்கள், நீடுழி வாழ்க! தினமும் வரதானம் எல்லோருக்கும் கிடைக்கிறதல்லவா? பாப்தாதா அனைவருக்கும் ஒட்டு மொத்தமாக வரதானமளிக்கிறார் ஆனால் எதில் வித்தியாசமாகி விடுகிறது? நம்பர்வார் ஏன் ஆகி விடுகிறார்கள்? வழங்குபவர் ஒருவரே, வழங்கப்படுவதும் ஒன்றே! சிலருக்கு கொஞ்சமாகவும், சிலருக்கு அதிகமாகவும் வழங்குவதில்லை, பரந்த உள்ளத்துடன் வழங்குகிறார், ஆனால் என்ன வித்தியாசம் ஏற்பட்டு வருகிறது? இதன் அனுபவமும் எல்லோருக்கும் உள்ளது. ஏனெனில், இன்னும் பாப்தாதாவிடம் இந்த ஒலி (சப்தம்) வந்து கொண்டிருக்கிறது. என்னவென்று தெரிகிறதல்லவா? அவ்வப்போது கொஞ்சம் கொஞ்சம் இந்த வார்த்தை இன்னும் கூட வந்து கொண்டிருக்கிறது. பாப்தாதா கூறியுள்ளார் -பிராமண ஆத்மாக்களின் வாழ்வு என்னும் அகராதியில் இந்த இரு வார்த்தைகளும் இருக்கக்கூடாது. -அவ்வப்போதா அல்லது சதாவா? ஒவ்வொரு கஜானாவையும் சோதனை செய்யுங்கள் -சர்வ சக்திகள் நிரந்தரமாய் உள்ளதா? சர்வ குணங்களும் நிரந்தரமாய் உள்ளதா? உங்கள் அனைவரின் பக்தர்கள், உங்கள் குணங்களை மகிமை செய்யும்போது என்ன கூறுகிறார்கள்? அவ்வப்போது குணத்தை வழங்கும் வள்ளலே என்றா கூறுகின்றனர்? பாப்தாதா ஒவ்வொரு வரதானத்திலும் சதா என்னும் வார்த்தையைக் கூறியுள்ளார். சதா சர்வ சக்திவான் அவ்வப்போது சக்திவான், அவ்வப்போது சர்வ சக்திவான் என்று கூறவில்லை. ஒவ்வொரு சமயத்தில் இரண்டு வார்த்தைகளை நீங்களும் கூறுகிறீர்கள், பாபாவும் கூறுகிறார் -சமமாய் ஆகுக! கொஞ்சம் கொஞ்சம் சமம் ஆகுங்கள் என்று கூறுவதில்லை. சம்பன்னம் மற்றும் சம்பூரணம் ஆனால் குழந்தைகள் சில சமயம் என்ன செய்கிறீர்கள், இந்த விளையாட்டை பாப்தாதாவும் பார்க்கத்தானே செய்கிறார். குழந்தைகளின் விளையாட்டை பார்த்துக் கொண்டேயிருக்கிறார். குழந்தைகள், ஒரு சிலர் என்ன செய்கின்றனர் அனைவருமல்ல! என்ன வரதானம் கிடைத்ததோ அதை நினைத்து, வர்ணனை செய்து, நோட்டில் குறித்துக் கொள்கின்றனர். நினைவும் செய்கின்றனர் ஆனால் வரதானம் என்னும் விதையை வளர விடுவதில்லை, விதையிலிருந்து பழத்தை

எடுக்க முடிவதில்லை. மிக அருமையான வரதானம் என்றும் வர்ணனை செய்து குஷி ஆகி விடுகின்றனர். வரதானம் என்பது விதை, ஆனால் விதையை எந்தளவு வளர்க்கிறீர்களோ, அந்த அளவு அது விருத்தி அடைகிறது. பலன் தருவதற்காள ரகசியம் என்ன? சரியான நேரத்தில் காரியத்தில் கொண்டு வர வேண்டும். காரியத்தில் ஈடுபடுத்துவதை மறந்து விடுகிறீர்கள். எழுதி வைத்திருப்பதைப் பார்த்து, மிக நல்லது என வர்ணணை செய்கின்றனர். பாப்தாதா மிக அருமையான வரதானத்தைத் தந்துள்ளார் என வர்ணிக்கின்றனர் ஆனால் எதற்காகத் தந்துள்ளார். அதன் பயனை அடைவதற்குத் தந்துள்ளார். விதையில் இருந்து பழத்தின் விஸ்தாரம் வளர்ச்சி ஏற்படுகிறது. வரதானத்தை என்னமோ நினைவில் கொண்டு வருகின்றனர் ஆனால் வரதான சொரூபம் ஆவதில் நம்பர் பிரகாரம் ஆகி விடுகின்றது. பாப்தாதா ஒவ்வொருவரின் பாக்கியத்தைப் பார்த்து புன்சிரிக்கின்றார் ஆனால் பாப்தாதாவின் உள்ளத்து ஆசை என்ன என்பதை ஏற்கனவே கூறியுள்ளோம். அனைவரும் கையை உயர்த்தினர், நினைவிருக்கிறதா? “காரணத்தை முடித்து விட்டு தீர்வான சொரூபமுடையோர் ஆவோம்" என்றீர்கள். இந்த வீட்டுப்பாடம் நினைவிருக்கிறதா? அனேக குழந்தைகள் ரூரிஹானின் போது (தனிப்பட்ட உரையாடல்) அல்லது கடிதங்களின் மூலம், இ-மெயில் மூலம் முடிவை அனுப்பியுள்ளனர். நல்லது. கவனம் சென்றுள்ளது ஆனால் பாப்தாதாவிற்கு விருப்பமான வார்த்தை சதா அது இருக்கிறதா? நீங்கள் யாரெல்லாம் வந்துள்ளீர்களோ அல்லது கேட்டிருக்கிறீர்களோ, அல்லது படித்திருக்கிறீர்களோ ஆனால் 1-மாத வீட்டுப்பாடத்தில், 1-மாதம் ஆகியுள்ளது அதிகம் ஒன்றும் ஆகவில்லை. ஆக ஒரு மாதத்தில் லட்சியத்தை வைத்துள்ளீர்கள். வர்ணனையும் செய்துள்ளீர்கள், ஆனால் ஒரு மாத வீட்டுப் பாடத்தில், நல்ல மார்க் எடுக்கக் கூடியவர்கள் கை தூக்குங்கள் பார்க்கலாம்.

அப்படி பாஸ் ஆனவர்கள் வெறும் பாஸ் மட்டும் தானா? அல்லது பாஸ் வித் ஹானர் (மதிப்புடன் தேர்ச்சி) ஆகியுள்ளீர்களா? தகுதியுடன் தேர்ச்சி பெற்றோர் எழுந்திருங்கள். தகுதியுடன் தேர்ச்சி பெற்றோரை அனைவரும் பார்க்க வேண்டுமல்லவா? தாய்மார்களில் யாரும் இல்லை? சகோதரிகள், டீச்சர்கள் கை தூக்கவில்லை. யாருமில்லை? மதுபன் வாசிகள் கூட இல்லையா? இது மிகவும் குறைவான ரிஸல்ட்,

(ஒரு சிலரே எழுந்திருந்தனர்). சென்டர்களில் ஒரு சிலர் இருக்கலாம். வாழ்த்துக்கள். கை தட்டலாம்! பாப்தாதாவோடு அன்பு யாருக்கு உள்ளது என்று கேட்கும்போது பாப்தாதா புன்சிரிக்கிறார். மேலும் எவ்வளவு அன்பு? அதற்கு என்ன பதில் கூறுகின்றனர்? பாபா, (அந்த அளவை) கூறவே முடியாது. அதிகம் என்கின்றனர் பதில் என்னவோ மிக அழகாக கூறுகின்றனர். பாப்தாதாவும் குஷி அடைகிறார் ஆனால் அந்த அன்புக்கு அடையாளம் என்ன? இவ்வுலகில் யாரோடு அன்பு ஏற்படுகிறதோ, தேக அபிமான உணர்வின் அடிப்படையில் தங்கள் உயிரைக் கூட தியாகம் செய்ய தயாராகி விடுகின்றனர். பரமாத்ம அன்பின் அடிப்படையில், பாபா கூறும்போது அதைச் செய்வதில் குழந்தைகளுக்கு என்ன கஷ்டம்? பாட்டு என்னமோ மிக நல்ல நல்லதாகப் பாடுகிறீர்கள். பாபா, நாங்கள் உங்கள் முன் பலி ஆகக்கூடிய விட்டில் பூச்சிகள், விளக்கில் எரிந்து மடியக் கூடியவர்கள்! என்கிறீர்கள். அப்படியானால் இந்த காரணம் என்னும் வார்த்தையை சுவாஹா (அர்ப்பணம்) செய்ய முடியாதா?

இப்போதோ இந்த ஆண்டின் இறுதி சந்திப்பு. அடுத்த ஆண்டில் என்ன நடக்கும் அதை நீங்களும் பாபாவும் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் ஆனால் காலத்தைப் பார்த்து நீங்கள் கூறுகிறீர்கள் அல்லவா? காலத்தின் அழைப்பு. பக்தர்களின் அழைப்பு. காலத்தின் அழைப்பு, துக்கமான ஆத்மாக்களின் அழைப்பு, உங்களின் சிநேகமான சயோகம் அளித்து வரும்ஆத்மாக்களின் அழைப்பு, ஆகியவற்றை நீங்கள் தானே பூர்த்தி செய்வீர்கள்! உங்களது பட்டம் என்ன? உங்களது கடமை என்ன? எந்த ஒரு கடமைக்காக பிராமணர்களாக ஆனீர்கள்? உலகை மாற்றுவோர் -உங்களது பட்டம், உலக மாற்றம் உங்களது காரியம். மேலும் கூட துணை யார்? பாப்தாதாவின் கூடவே இந்த காரியத்தில் நிமித்தமாயுள்ளீர்கள். என்ன செய்ய வேண்டும்? இப்போது கூட கை உயர்த்தக் கூறினால் அனைவருமே உயர்த்துவர். லட்சியம் வைத்துள்ளனர், பாப்தாதா பார்த்தார். இந்த ஆண்டு சீசனில் மொத்தமாக அனைவருமே சங்கல்பம் வைத்தனர் ஆனால் வெற்றிக்கான சாவி -திடத்தன்மை செய்தே தீர வேண்டும். அதற்குப் பதிலாக எப்போதாவது செய்கின்றனர். நடந்து கொண்டிருக்கிறோம், நடந்து விடுவோம் -இந்த சங்கல்பங்கள் திடத்தன்மையை சாதாரணமாய் ஆக்கி விடுகிறது. திடத்தன்மையில் காரணம் என்ற வார்த்தையே வருவதில்லை. நிவாரணம் (தீர்வு) ஆகி விடுகிறது. காரணங்கள் வரத்தான் செய்கின்றன

ஆனால் சோதனை நடைபெறுவதால் காரணம் நிவாரணமாக மாறி விடுகிறது.

பாப்தாதா ரிஸல்ட்டை சோதனை செய்யும்போது என்ன பார்த்தார். ஞானி, யோகி, தாரணை சொரூபம், சேவாதாரி -நான்கு பாடங்களிலும் அவரவர் சக்திக்குத் தகுந்தாற்போல் ஞானியாகவும் உள்ளனர். யோகியாகவும் இருக்கின்றனர். தாரணையும் செய்து கொண்டிருக்கிறார், சேவையும் செய்கிறார் ஆனால் நான்கு பாடத்திலும் அனுபவ சொரூபம், அனுபவத்தின் அதாரிட்டி -இதில் குறைவு தென்படுகிறது. அனுபவி சொரூபம், ஞான சொரூபத்திலும் அனுபவ சொரூபம். அதாவது ஞானமானது அறிவு என்று கூறப்படுகிறது. அப்படியாயின் அனுபவி மூரத் ஆத்மாவில் ஞானம் அதாவது அறிவு என்ன செய்ய வேண்டும். என்ன செய்யக்கூடாது, ஞானத்தின் ஒளி மற்றும் சக்தி ஆக, அனுபவி சொரூபத்தின் அர்த்தமே ஞானம் நிறைந்த ஆத்மாவின் ஒவ்வொரு செயலிலும் ஞானமும் சக்தியும் இயற்கையாகவே இருத்தல் வேண்டும். ஞானி என்றால் ஞானம், அறிவை உணர்தல், வர்ணித்தல், அதன் கூடவே ஒவ்வொரு கர்மத்திலும் ஒளி மற்றும் சக்தி இருத்தல் வேண்டும். அனுபவி சொரூபத்தின் மூலம் ஒவ்வொரு செயலும் இயற்கையாகவும், சிரேஷ்டமாகவும், வெற்றியுடனுமிருக்கும். கஷ்டப்பட்டு முயற்சிக்க வேண்டியிராது. ஏனெனில் ஞானத்தின் அனுபவி மூரத். அனுபவத்தின் அதாரிட்டி அனைத்து அதாரிட்டியிலும் சிரேஷ்டமானது. ஞானத்தை அறிவது மற்றும் ஞானத்தின் அனுபவ சொரூபத்தின் அதாரிட்டியில் ஒவ்வொரு செயலையும் செய்வது. இதில் வேறுபாடு உள்ளது. ஆக அனுபவி சொரூபம் உள்ளதா? சோதனை செய்து பாருங்கள். நான்கு பாடத்திலும், ஆத்மா நான் ஆனால் அனுபவ சொரூபமாகி ஒவ்வொரு செயலையும் செய்கிறோமா? அனுபவத்தின் அதாரிட்டியின் இருக்கையில் (சீட்) சரியாக (செட் ஆகி) அமர்ந்திருந்தால் சிரேஷ்ட கர்மமாகும். வெற்றி நிறைந்த கர்மம் -அதாரிட்டியின் முன்னால் இயற்கையான இயல்புத்தன்மை தென்படும். நினைக்கிறார்கள், ஆனால் அனுபவ சொரூபம் ஆவது, யோக யுக்த், ராஸ்யுக்த் (ரகசிய) இயல்பாக ஆகி விடட்டும், இயற்கையானதாக ஆகி விடட்டும். தாரணையிலும் அனைத்து குணங்களும் தானாகவே ஒவ்வொரு கர்மத்திலும் தென்படட்டும். அப்படி அனுபவி சொரூபத்தில் சதா இருக்க வேண்டும்.

அனுபவத்தின் சீட்டில் சரியாக (செட்டாகி) பொருந்தி இருத்தல் வேண்டும் என்பதன் அவசியத்தில் கவனம் கொள்ள வேண்டும். இது மிக அவசியம். அனுபவத்தின் அதாரிட்டியின் செட் மிகவும் மகான் ஆனது. அனுபவியானவர்களை மாயாவும் கூட அழிக்க முடியாது. ஏனெனில் மாயாவின் அதாரிட்டியை விட அனுபவத்தின் அதாரிட்டி பன்மடங்கு உயர்ந்தது. நினைப்பது என்பது வேறு, மனதில் சிந்தனை செய்வது வேறு. சொரூபத்தில் அனுபவி சொரூபமாகிச் செல்ல வேண்டும். தற்போது இதன் அவசியம் தேவையாக உள்ளது.

ஆக, இந்த வருடத்தில் என்ன செய்யப் போகிறீர்கள்? ஒரு பாடத்தில் பெரும்பாலோர் பாஸ் என பார்த்தார். எந்தப் பாடம்? சேவை என்னும் பாடம். நாலா புறங்களிலிருந்தும் பாப்தாதாவிடம் சேவையின் பதிவேடு மிக நன்றாகவே வந்துள்ளது. சேவையின் உற்சாகம் ஆர்வம் இந்த ஆண்டு சேவை செய்திகளின் கணக்கின்படி, நன்றாகவே தெரிந்தது. ஒவ்வொரு வர்க்கமும், ஒவ்வொரு மண்டலமும் விதவிதமான ரூபத்தில் சேவையில் வெற்றி அடைந்துள்ளது ஆனால் தற்போது சமயத்தின் பிரகாரம் திடீரென நடக்கும் சீசனாக உள்ளது. இந்த ஆண்டு எவ்வளவு பிராமணர்கள் திடீரென சென்று விட்டனர், கேட்டிருப்பீர்கள். தற்போது திடீரென நடக்கும் மணி வேகமாக அடித்துக் கொண்டிருக்கிறது. அதன் பிரகாரம் இந்த ஆண்டில் நான்கு பாடத்திலும் அனுபவி சொரூபமாக எதுவரை ஆகியுள்ளேன், ஏனெனில் நான்கு பாடங்களிலும் நல்ல மார்க் வேண்டும். ஏதேனும் ஒரு பாடத்தில் பாஸ் மார்க்குக்கு குறைவாக இருந்தால் தகுதியுடன் தேர்ச்சி பெற்றோர் மாலையின் மணியாக பாப்தாதாவின் கழுத்து மணியாக எப்படி ஆக முடியும்? ஏதேனும் ரூபத்தில் தோல்வியைத் தழுவுவோர் பாப்தாதாவின் கழுத்து மணியாக ஆக முடியாது. இங்கே கை தூக்கச் செய்தால் எல்லோரும் என்ன சொல்வர்? லஷ்மி-நாராயணன் ஆவோம் என்பர். லக்ஷ்மி நாராயணனோடு அல்லது லட்சுமி நாராயணர் குடும்பத்தில் ஒருவராக பிறப்பதும் கூட சிரேஷ்ட பதவி தான். எனவே பாப்தாதா ஒரே ஒரு வார்த்தை கூறுகிறார் -இப்போது மிக வேகத்துடன் பறக்கும் கலையில் பறந்து கொண்டேயிருங்கள். மேலும் தனது பறக்கும் கலையின் அதிர்வலைகளின் மூலம் வாயுமண்டலத்தில் (சூழ்நிலை) உதவி புரியும் மனப்பான்மையின் சூழ்நிலையைப் பரப்புங்கள். நீங்கள் அனைவரும் இயற்கையோடு உறுதி

பூண்டுள்ளீர்கள். இயற்கையையும் மாற்றியே தீருவோம் என்று. உறுதிமொழி இருக்கிறதல்லவா? உறுதிமொழி செய்துள்ளீர்கள் இல்லையா? தலையை அசையுங்கள் கையை அல்ல! அப்படியென்றால் உங்களது உடனிருக்கும் மனித ஆத்மாக்களை துக்கம் மற்றும் அசாந்தியிலிருந்து மாற்ற முடியாதா? ஒன்று நீங்கள் சவால் விட்டிருக்கிறீர்கள். அடுத்து பாப்தாதாவிற்கும் உறுதி அளித்துள்ளீர்கள் -நாங்கள் அனைவரும் இப்போது கூட உங்கள் காரியத்தில் கூடவே இருக்கிறோம்.. பரந்தாமத்திலும் கூடவே இருக்கிறோம். இராஜ்யத்திலும் பிரம்மாபாபாவின் கூடவே இருப்போம். இந்த உறுதிமொழியை எடுத்துள்ளீர்கள் அல்லவா? கூடவே இருப்போம். கூடவே செல்வோம். இப்போது கூட கூடவே இருக்கிறோம். ஆக பாபாவின் சைகைய அவ்வப்போது நடைமுறையில் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். எப்போது வேண்டுமானாலும் தயார், ரெடி! தாதி செல்லக் கூடும் என நினைத்தீர்களா? திடீரென விளையாட்டைப் பார்த்தீர்கள் இல்லையா?

ஆக இந்த ஆண்டு எவரெடி! பாபாவின் உள்ளத்து ஆசைகளை பூர்த்தி செய்யக்கூடிய ஆசை தீபங்களாக ஆகியே தீர வேண்டும். பாபாவின் ஆசைகளை நீங்கள் அறிவீர்கள் அவ்வாறு ஆக வேண்டும்! ஆகி விடுவோம், பார்த்துக்கலாம்... ஆகியே தீர வேண்டும் என்ற எண்ணுபவர்கள் கை தூக்குங்கள் பார்க்கலாம். கேமராவில் வந்து கொண்டிருக்கிறீர்கள், பாப்தாதாவை மிக அழகாக குஷிப்படுத்துகிறீர்கள். பாப்தாதாவும் கூட குழந்தைகள் இல்லாமல் தனியாகப் போக முடியாது. பிரம்மாபாபா கூட குழந்தைகளாகிய உங்களை முக்தியின் வாசலைத் திறப்பதற்காக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். அட்வான்ஸ் பார்ட்டி கூட எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறது. நீங்கள் ஏற்பாடு (இந்த்ஜாம்) செய்யக்கூடியவர்கள். எனவே, இந்த ஆண்டு லட்சியம் வையுங்கள் ஆனால் லட்சியத்தையும், லட்சணத்தையும் ஒன்றன வையுங்கள். லட்சணம் என்னமோ மிக உயர்வாகவும், லட்சணம் பலஹீனமாயும் இருத்தல் கூடாது. லட்சியமும், லட்சணமும் சமமாக இருக்கட்டும். சமான் ஆவதற்கான உங்கள் உள்ளத்தின் ஆசை, அது உங்கள் லட்சியமும், லட்சணமும் சமமாய் இருக்கும் போதே பூர்த்தியாகும். இப்போது கொஞ்சம் கொஞ்சம் லட்சணம்-லட்சியத்தில் வித்தியாசம் உள்ளது. திட்டங்கள் எல்லாம்

அருமையாகத் தீட்டுகிறீர்கள். உங்களிடையே உரையாடல்கள் (ரூரிஹான்) அற்புதமாய் செய்கிறீர்கள். ஒருவர் மற்றொருவருக்கு ஞாபகப் படுத்துகிறீர்கள். திடத்தன்மை நமது பிறப்புரிமை என்று இப்போது இந்த சங்கல்பத்தை அனுபவ சொரூபத்தில் கொண்டு வாருங்கள். என்ன கூறுகிறோமோ அதனை அனுபவம் செய்கிறோமா என சோதித்துப் பாருங்கள். முதல் வார்த்தை நான் ஆத்மா இதையே சோதித்துப் பாருங்கள் இந்த ஆத்ம சொரூபத்தின் அனுபவ அதாரிட்டியில் நான் இருக்கிறேனா என சோதித்துப் பாருங்கள். ஏனெனில் அனுபவத்தின் அதாரிட்டியே நம்பர்-1 ஆகும். நல்லது.

(ஹாலில் ஏதோ சலசலப்பு உண்டானது). நீங்கள் அனைவரும் எந்த ஸ்திதியில் இருக்கிறீர்கள்? குழப்பத்தில் உள்ளீர்களா? கவனமாய் இருங்கள் என கூறுவோர் கூறிக் கொண்டுதானிருக்கிறார்கள். நீங்கள் என்ன செய்ய வேண்டும்? சுப பாவனையின் அதிர்வலைகள் தர வேண்டும். ஆக நினைத்துப் பாருங்கள். ஒவ்வொரு விஷயத்தையும் முன்னே கொண்டு வாருங்கள். ஆத்மாவாக இருக்கட்டும், பரமாத்மாவாக இருக்கட்டும், சக்கரமாக இருக்கட்டும். அனைத்திலும், அனுபவி மூரத் ஆக எவ்வளவு தூரம் ஆகியுள்ளீர்கள்? இப்போது எவ்வித பரஸ்திதி (பிரச்சனையான காலங்கள்) சுய ஸ்திதியில் ஸ்திரமாய் இருக்க முடியுமா? மனதின் ஒருமுகநிலை (ஏகாக்ரதா) மூன்று பிந்திகளின் நினைவு சொரூபத்தில் வர முடிகிறதல்லவா? முற்றுப்புள்ளி, அவ்வளவே! நல்லது!

**இந்த தடவை சேவை முறை பஞ்சாப் மண்டலத்தினுடையது: (பஞ்சாப், ஹிமாசல், ஹரியானா. ஜம்மு-காஷ்மீர், மற்றும் உத்ராஞ்சல்):** பஞ்சாப் சிங்கம் என புகழப்படுகிறது. எண்ணிக்கை கூட அதிகமாக கொண்டு வந்துள்ளனர். எல்லோருக்கும் தெரிந்திருக்கிறது. பஞ்சாப் சிங்கம் எனவே அனைவரும் ஆர்வம் உற்சாகத்துடன் வந்து சேர்ந்துள்ளனர். மேலும் பஞ்சாபிற்கு எவ்வளவு பெரிய புண்ணியம் சேர்ந்துள்ளது. ஒரு பிராமணருக்கு சேவை செய்து அதுவும், எப்படிப்பட்ட பிராமணர்? மேலும் நீங்கள் எவ்வளவு பிராமணர்களுக்கு, அதுவும் உண்மையான பிராமணர்களுக்கு சேவை செய்துள்ளீர்கள். தினமும் தனது புண்ணியத்தின் கணக்கை சேமித்தார். இதுவும் நாடகத்தில் புண்ணிய கணக்கில் எளிய முறையில் அதிகரிப்பதற்கான சாதனம். யார் இந்த

உற்சாகம் ஆர்வத்தோடு வருகிறாரோ அவர் சிறிது நாட்களிலேயே தனது புண்ணிய கணக்கை சேமித்துக் கொள்ள முடியும். மேலும் தற்போதைய சங்கம யுகத்தின் சமயத்தின் புண்ணிய கணக்கு வெகு காலத்திற்கு அதன் பயனைத் தரும். மற்றப்படி பஞ்சாபின் சேவை அறிக்கையையும் பார்த்தோம். பாப்தாதா முன்பே வாழ்த்துக்களை வழங்கியுள்ளார். சேவா நிலையங்களும் உள்ளன. கீதா பாடசாலைகளும் உள்ளன. அதிகமாகிக் கொண்டுமிருக்கிறது. அனைவரது இம்முறை சிவராத்திரி காலத்தின் அதிகப்படியான சேவையின் உற்சாக ஆர்வத்தின் அலைகள் உள்ளன. மீடியாவின் மூலமாகவும், விழாக்கள் மூலமாகவும் எல்லா இடங்களிலும் சேவையின் உற்சாகம், ஆர்வத்தினை காண்பித்துள்ளீர்கள். இப்போது என்ன செய்ய வேண்டும்? பாபாவை வெளிப்படுத்தியே ஆக வேண்டும் என ஒவ்வொருவரும் திட சங்கல்பம் செய்துள்ளீர்கள். அந்த நாளை உங்கள் மாற்றத்தின் பேனா மூலம் சரி செய்யுங்கள். பென்சில் மூலம் சரியாகாது. உங்களது மாற்றத்தின் தீவிர புருஷார்த்தத்தின் பேனா மூலம் பாபாவை வெளிப்படுத்தும் (பிரத்யக்ஷதா) நாள் மிக எளிதில் நிர்ணயிக்கப்பட்டு விடும். ஆக இப்போது எந்த முழு மண்டலத்திலும் எண்ணம், சொல், செயலில் சம்பந்தம் தொடர்பில் தடைகளற்று இருக்கப் போகிறது என்கிற ரிப்போர்ட் முதலில் வரப் போகிறது என்று பாப்தாதா பார்க்கப் போகிறார். இதில் நம்பர்-1 யார்? சென்டர் மட்டுமன்று, முதலில் சென்டரை உறுதிப்படுத்துங்கள். பிறகு தனது சம்பந்தப்பட்ட தொடர்பு சென்டர்களை உறுதியாக்கிக் கொள்ளுங்கள், பிறகு மொத்த மண்டலத்தையும் உறுதியாக்குங்கள். உள்நாடு, வெளிநாடு அனைவருக்குமே இந்த காரியத்தைத் தருகிறார். நம்பர்-1ல் யார் வரப் போகிறார்? பாரதத்தில் மண்டலங்களின் ரூபத்தில் உள்ளது. வெளிநாடுகளில் அவர்களின் முறையில் பிரித்துள்ளனர். அமெரிக்கா மண்டலம் ஆப்ரிக்கா மண்டலம் என்று ஏற்படுத்தியுள்ளனர்? இதில் யார் நம்பர்-1 வரப்போகிறார்கள்? நிர்விக்ன, தடைகளற்ற நிலை ஆக முடியும் தானே! முழு மண்டலமும் தடைகளற்று ஆகி விட வேண்டும். முடியுமா? முடியும் தானே! முதல் வரிசையில் அமர்ந்திருப்போர் கூறுங்கள். ஜெயந்தி சொல்லுங்கள். முடியும் தானே! நல்லது. டீச்சர்கள் எழுந்திருங்கள். இவ்வளவு டீச்சர்களைக் கண்டு பாப்தாதா மகிழ்ச்சியடைந்து கொண்டிருக்கிறார். ஏனெனில் டீச்சர்கள் என்போர் குருபாயி (2100-டீச்சர்கள் வந்துள்ளனர்) டீச்சர்கள் நிர்விக்னமாகி

நிர்விக்ன சூழ்நிலையை உருவாக்குவதற்கு நிமித்தமானவர்கள். ஆக டீச்சர்கள் லட்சியம் வைப்பவர்கள், நீங்கள் நாளைக் குறியுங்கள். பாபா குறிக்க மாட்டார். ஒவ்வொரு மண்டலத்திலும் திட்டம் தீட்டி மற்றவர்களுக்கும் (பிரேரணை) ஆவலைத் தூண்டுங்கள். எந்த மண்டலத்திலாவது அம்மாதிரி புதிய திட்டம் கிடைத்தால் அதை பிற மண்டலங்களுக்கும் கூறி, உற்சாகம் மூட்டி அனைவரையும் தடைகளற்றவராக்குங்கள். இப்போது புருஷார்த்தத்திற்காக கை உயர்த்துகின்றனர். நாங்கள் சதா தடைகளற்றவர்கள், தடைகளில்லாமல் வாழ்வோம் என்று பாபாவின் பிரத்யக்ஷத்தாவிற்கு முன்னர் கை தூக்க வேண்டும். சபையின் நடுவே அனைவரின் கை இவ்வாறு உயர்ந்தால் எவ்வளவு வாழ்த்தொலி கிளம்பும். உங்களது பக்தர்களும் குஷி அடைந்து விடுவார்கள். அவரவர்கள் இடத்திலிருந்தபடியே கை தட்டுவார்கள். ஆஹா! என்னே என் இஷ்ட தேவதை! ஆஹா அப்படியென்றால் இவ்வாறு செய்ய வேண்டுமல்லவா? மதுபன் காரர்கள் முதல் நம்பரில் வர வேண்டும், வர வேண்டுமென்பதில்லை. செய்ய வேண்டும். ஏனெனில் மதுபனின் பக்கம் அனைவரின் ஈர்ப்பு உள்ளது. மதுபன் என்ற சொன்னவுடனேயே மதுபன் பாபாவின் நினைவு வந்து விடுகிறது. மதுபனின் விசேஷமே இது தான் ஆக பாபாவுக்கு சமமாக நம்பர்-1 ஆக வேண்டும். ஒரு விஷயம் மதுபன் வாசிகளுக்கு பாபா கூற வேண்டும். சொல்லட்டுமா? கை தூக்குங்கள். செய்து தான் ஆக வேண்டும்! செய்வீர்களா? செய்வீர்களா? இதில் குறைவானவர்களே கை தூக்குகின்றனர். மதுபன்வாசி ஒவ்வொருவரும் நான் பாபாவைப் போன்று ஆக வேண்டும் என பொறுப்பை எடுத்துக் கொள்ள வேண்டும், யார் ஆனாலும் சரி ஆகாவிட்டாலும் சரி நான் ஆக வேண்டும். தனது பொறுப்பை எடுத்துக் கொள்ள முடியும் தானே! பிறரைப் பற்றி விடுங்கள். நான் ஆக வேண்டும் என தனது பொறுப்பை எடுத்துக் கொள்ளட்டும். நான் செய்து காண்பிக்க வேண்டும். உங்கள் அனைவரின் வாயுமண்டலம் அனேகருக்கு உதவி செய்யும். இவர் செய்வதே இல்லை. இவர் மாறுவதேயில்லை என்று பார்க்காதீர்கள். நான் மாற வேண்டும். அப்போது பிறர் தானாகவே மாறி விடுவர். நான் எனது பொறுப்பை எடுக்க வேண்டும். செய்வீர்களா? மதுபன் வாசிகள் பின்னால் கூட அமர்ந்துள்ளனர். சரி. எவ்வளவு காலம் தரட்டும். 6-மாதத்திற்குப் பின் ரிஸல்ட்டை கேட்கட்டுமா? 6-மாதம் சரியா? நான்

மாற வேண்டுமானால் பிறரைப் பார்க்கக் கூடாது. பிறரை பாப்தாதா பார்த்துக் கொள்வார். இவர் இப்படி, அவர் அப்படி என பிறரை வர்ணிக்காதீர்கள். அதை பாபா பார்த்துக் கொள்வார். நான் மாற வேண்டும். மதுபன் சகோதர்கள் இருக்கின்றனர். கை உயர்த்துங்கள். சரி. சகோதரிகளும் கூட செய்வார்கள் இல்லையா? சேனை முன்னால் போயே ஆக வேண்டும். 6-மாதம் பிறரைப் பார்க்கக் கூடாது. இவர் செய்தாரில்லையா? என காரணம் கூறக்கூடாது. அவர்கள் அப்படித்தான் செய்வார்கள். தொந்தரவு கொடுப்பார்கள். ஏனெனில் மாயை கேட்டுக் கொண்டிருக்கிறது. பல்வேறு விஷயங்கள் வரும். ஒன்றும் என்னிடம் வரக்கூடாது என்று நீங்கள் சொன்னால் இது நடக்காது ஆனால் நான் மாற வேண்டும். சரியா? நல்லது. டீச்சர்கள், டீச்சர்களோ நிமித்தமானவர்கள் அனைத்து டீச்சர்களும் சிறியோரானாலும் சரி, பெரியவர்களானாலும் சரி. இந்த விஷயத்தில் சிறியவர்கள் ஆகக் கூடாது. அனைவரும் பெரியவர்களே! அனைத்து டீச்சர்களும் தைரியம் வைக்கிறீர்களா? 6-மாதங்கள் தருகிறோம் யார் செய்வார்களோ கை தூக்குங்கள். விஷயங்கள் வரும். நான் முயற்சி செய்தேன் என்று கூறக்கூடாது. முயற்சி இல்லை. பாபா மீதான கவர்ச்சி. சரியா?. டீச்சர்கள் கை தூக்குங்கள், இரண்டிரண்டு கைகளைத் தூக்குங்கள். அனைவரும் பார்க்கிறார்கள். கை உயர்த்தியுள்ளீர்கள். வாழ்த்துக்கள்! டீச்சர்கள் மற்றும் மதுபன் வாசி நம்பர்-1 யார் முதலோ அவர்களே அர்ஜுன்! அர்ஜுன் என்றால் பாபாவுக்கு சமம்! காராணம் கூறக் கூடாது. மலை போன்ற காரணங்கள் வரும். தைரியத்தை இழக்கக்கூடாது. வரட்டும். நல்வரவு! காரணங்களை வரவேற்று ஒரு வினாடியில் அதற்கு விடை கொடுங்கள். மூன்று பிந்திகளின் சாவி அது தான். வெற்றிக்கான சாவியும். அந்த மூன்று பிந்திகள் (புள்ளிகள்), இதை எப்போதும் கூடவே வைத்துக் கொள்ளுங்கள். நல்லது. இப்போது டீச்சர்கள் அமர்ந்து கொள்ளுங்கள். கர்நாடக மண்டலத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு வருடமாக சொர்ணமயமான கர்நாடகத்தை உருவாக்கும் சேவை செய்து விட்டு வந்துள்ளார்கள். நன்றாக சேவை செய்துள்ளீர்கள் என்பதை பாப்தாதா பார்த்தார். உடல் மனம் பொருள் ஊக்கம் உற்சாகம் என்று எத்தனை நீங்கள் ஈடுபடுத்தி இருந்தாலும் நீங்கள் மனதார செய்துள்ளீர்கள். சொர்ணமயமான கர்நாடகத்தை அமைக்க அரும்பாடுபட்டுள்ளதைப் பார்த்து பாப்தாதா கோடிக் கணக்கில் மனதார தன்னுடைய வாழ்த்துக்களை சொல்கிறார். திட்டங்களும்

அதற்குரிய செயல்களும் நன்றாகவே செய்துள்ளீர்கள். நீங்கள் இங்கு கொண்டு வந்து காட்ட வேண்டும் என்று நினைத்து அதைக் காட்டுவதற்கு முன்பாகவே அந்த போர்டை பாபா பார்த்து விட்டார்.

இரட்டை வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள்: வெளி நாட்டைச் சேர்ந்தவர்களை இனி அவ்வாறு சொல்லாமல் இரு மடங்கு தீவிர புருஷார்த்தம் செய்பவர்கள் என்று சொல்லலாம். இரு மடங்கு புருஷார்த்தம் செய்பவர்கள் அல்லவா? சுய புருஷார்த்தத்திற்காக ஒவ்வொரு முறையிலும் தவறாமல் வந்தவர்களுடைய கவனம் மிக நன்றாக உள்ளது. டீச்சர்கள் கூட உழைத்துள்ளனர் மற்றும் சுயமாகவும் புருஷார்த்தம் செய்துள்ளனர். பலர் எழுதிய கடிதங்கள் வந்து சேர்ந்தன. தீவிரமான புருஷார்த்தம் எது என்பதை அனுபவம் செய்து பார்த்தனர். அதனால் அவர்கள் வெறும் இரட்டை புருஷார்த்திகள் அல்ல ஆனால் டபுள் தீவிர புருஷார்த்திகள் ஆவார்கள். ஒரு கிராமத்தைக் கூட தவற விடாமல் கவனத்துடன் நன்றாகவே செய்துள்ளனர். மேலும் பல திட்டங்களைச் செய்துள்ளனர். யாரும் நாளை புகார் செய்ய மாட்டார்கள் அல்லவா? நம்முடைய தந்தை வந்திருந்தார், நீங்கள் சொல்லத் தவறி விட்டீர்கள் என்று குறை சொல்ல மாட்டார்கள். கடைசி சமயத்தில் கதறுவார்கள். ஆகவே சேவை செய்யும் ஆர்வம் உண்டு. சுய முன்னேற்றத்தில் கவனம் இருக்கிறது. தீவிர புருஷார்த்தம் என்றால் ஒரு முறை சரியாக்கப்பட்ட தவறை மறுபடியும் செய்யாமல் இருப்பது தான். ஒரே தவறை அடிக்கடி செய்யக்கூடாது. செய்து விட்டு நான் தீவிர புருஷார்த்தி என்று சொல்லக் கூடாது. இதை தீவிர புருஷார்த்தம் என்று சொல்ல மாட்டார்கள். மதுவனத்தில் உள்ள தீவிர புருஷார்த்திகள் யார்? சகோதரிகள் யாருமில்லையா? தீவிர புருஷார்த்தத்தின் பொருள் என்ன? ஒரு முறை ஒரு தவறு நடந்து விட்டால் அதை மறுபடி திரும்பச் செய்யக்கூடாது என்பதைப் பற்றி ஜகதம்பா அம்மா ஆரம்பத்திலேயே சொல்லி கவனத்தைத் திருப்பினார். தீவிர புருஷார்த்தி என்று சொல்லிக் கொண்டு ஒரு தவறை அடிக்கடி செய்து வந்தால் என்ன திருத்தம் செய்தீர்கள்? தீவிர புருஷார்த்திகளின் குழு மதுவன வாசிகளாக இருக்கலாம், அதற்கு அருகில் இருப்பவர் ஆகலாம். டபுள் வெளிநாட்டவர் ஆகலாம். அவர்களுக்கு பாப்தாதா டைட்டில் பெயர் கெட்டு விடும். ஆகவே தீவிர புருஷார்த்திகளின் குழு கவனம் வைக்கவும். நன்று தமக்குள் குழுக்களை அமைத்தது நல்லது.

சரி டபுள் விதேஷிகளே! பாப்தாதா சந்தோஷப்படுகிறார். மற்றொரு விஷயத்தில் கூட சந்தோஷப்பட வேண்டும். தன்னை இணைந்த (கம்பைண்டு) ரூபத்திலிருந்து தனிப்படுத்தக்கூடாது. தனிப்படுவது அதிலிருந்து பிரிந்து விடுவது என்றால் மாயை அருகில் அழைத்துக் கொள்வது போல் ஆகும். ஆகவே, இணைந்த சர்வ சக்திவானின் பயன் பெற வேண்டும். மேலும் தக்க சமயத்தில் மாயை ஒருவரை பாபாவிடமிருந்து பிரித்து தனியானவராக ஆக்கி விடும். இதில் கவனம் தேவை. எப்போதும் பாப்தாதாவுடன் இணைந்தவர். வெளிநாட்டினருக்கு நட்பு அல்லது கம்பெனி என்ற உடன் இருத்தல் மிகவும் பிடிக்கும். நண்பர்களையும் பிடிக்கும். தனியாக பிரியக்கூடாது. நான் உங்கள் நண்பனாகவும் துணையாகவும் என்றும் எப்போதும் இருப்பேன் என்று பாப்தாதா உறுதியளிக்கிறார். நல்ல ரிசல்ட்டைக் கொடுக்க வேண்டும். நல்லது. ஒவ்வொரு முறையிலும் வருவதற்கான ஏற்பாடு மிக நல்லது. இந்தியா ஏதோ ஒரு வெளி நாட்டைப் போலவும், வெளிநாடு மிக அருகிலுள்ள உள் நாட்டைப் போலவும் தெரிகிறது. வெளிநாட்டினர் அடுத்த வருடத்திற்காக இப்போதிருந்தே டிக்கட்டுகளைப் பதிவு செய்து கொள்ளும் ஏற்பாட்டைச் செய்து விடுகிறார்கள். அவ்வளவு சாமர்த்தியசாலிகள்.

இப்போது தாய்மார்கள் எழுந்திருங்கள்: தாய்மார்களும், குமாரிகளும் முக்கால் பாகம். அவர்களால் இந்த ஹால் நிரம்பியுள்ளது. அவர்களுக்கு போதையுண்டு. சங்கமயுகம் தாய்மார்களும், சிவ சக்திகளும் சாதாரணமானவர்கள் அல்ல. பாப்தாதா அவர்களைப் பார்த்து ஒரு விஷயத்தில் சந்தோஷப்படுகிறார். பாண்டவர்களைப் பார்த்து சந்தோஷப்படுகிறார் ஆனால் அபலைகள் என்று பலவீனமானவர்களாக இருந்தவர்கள் சிவசக்தியாக உயர்ந்தனர். பாரத தேசத்தை நாம் சொர்க்கமாக ஆக்கித் தீருவோம் என்று அவர்கள் சவால் விடுகிறார்கள். தாய்மார்களுக்கு தைரியம் மிகவும் அதிகம். பாப்தாதா விசேஷமாக தாய்மார்களை நமஸ்காரம் செய்கிறார். சரி. சிவசக்தி சேனை இருக்க வேண்டும் ஏதாவது உயர்ந்த அற்புதச் செயல் செய்து காட்ட வேண்டும். நாம் செய்து காட்டாமல் வேறு யார் செய்வார்கள் என்று போதையுள்ளவர் ஆகுக. நல்லது.

# 2008 அவ்யக்த முரளி

பாண்டவர்களே! எழுந்திருங்கள். பாண்டவர்கள் கூட விசேஷமானவர்கள். சதா பாண்டவ பதியுடன் கூட இருந்துள்ளார்கள். வெற்றியின் அடையாளமாக பாண்டவர்கள் காட்டப்பட்டுள்ளனர். பாண்டவ பதியின் அன்புக்குப் பாத்திரமானவர்கள் என்ற விசேஷமுள்ளவவர்கள் பாண்டவர்கள் பாண்டவ பதியின் நண்பர்கள் என்ற பெயர் அவர்களுக்கு உள்ளது. சிவசக்திகளின் பங்கு தனிப்பட்டது. பாண்டவர்கள் இல்லையெனில் சேவைக்கான ஆதாரம் குறைவது போல ஆகி விடும். சிவசக்திகள் சகாஷ் கொடுப்பவர்கள் மேலும் பாண்டவர்கள் வாரிசுகளையும் சக உதவியாளர்களையும் உருவாக்குபவர்கள். பெரிய நிகழ்ச்சி பாண்டவர்கள் இல்லாமல் நடக்காது. ஆகவே, சதுர்புஜ ரூபத்தின் நினைவுச்சின்னம் உள்ளது. பாண்டவர்களைத் தவிர்த்து சிவ சக்திகள் ஒன்றும் செய்ய மாட்டார்கள். சிவசக்திகளில் லாம் பாண்டவர்களும் ஒன்றும் செய்ய மாட்டார்கள். அதனால் ஒவ்வொரு பாண்டவனின் நெற்றியில் விஜய திலகம் உண்டு. அதை வெளியே தட்டி எடுங்கள். இந்த வருடத்தில் இன்று சந்திப்பதற்கான கடைசி நாள். ஆகவே அனைவரும் சந்திக்க விரும்புவார்கள்.

மதுபன் வாசிகளைச் சந்திக்க வேண்டும். பாப்தாதாவுக்கு சிறிய சங்கம பவனம் கூட நினைவிலுண்டு. இடினமாக உழைக்கிறார்கள். அன்பாக உழைக்கிறார்கள். அவர்கள் எழுந்திருங்கள். சேவையில் இருந்தாலும் சரி, மனதார சேவை செய்கிறார்கள். இரவும் பகலுமாக உழைக்கிறார்கள். அன்பாக செய்கிறார்கள். சிறியது ஆனால் அவர்கள் செய்யும் காரியமோ மிகப் பெரியது. அவர்களுடைய அன்பு சேவையின் காரணமாக உங்களுக்கு நிறைய சௌகரியங்கள் கிடைக்கின்றன. இதற்கு முன்னர் இவ்வளவு ரயில்கள் இங்கு வராது, ஆனால் இன்று! ரயில்கள் இங்கு வருகின்றன. இவர்களின் சேவையின் ஆதாரமாக அனைவருக்கும் பல சௌகரியங்கள் கிடைத்துள்ளன. மிகக் குறைந்த இந்த சேவாதாரிகளை வாழ்த்துங்கள். இப்போது சந்தித்தீர்கள். யாருமே பிறகு குறை சொல்ல மாட்டார்கள். அனைவரையும் சந்தித்தோம் அல்லவா?

குழந்தைகள் மிச்சம் இருக்கிறார்கள். நிறைய சிறு பிள்ளைகள் உள்ளனர். நல்லது. குழந்தைகள் இன்றி ஒரு களை இருக்காது.

குழந்தைகளைப் பார்த்து அனைவருக்கும் அன்பு பிறக்கிறது, ஆஹா! என்ன அதிர்ஷ்டசாலி குழந்தைகள். எத்தனையோ விஷயங்களில் அவர்கள் தப்பித்தனர். மாயையிடமிருந்து தப்பித்துக் கொண்டனர். அப்படிப்பட்ட பிள்ளைகள்தானே! செல்லமானவர்கள், பாதுகாப்பாக இருங்கள். பெரியவர்கள் என்றும் பெரியவர்கள் ஆனால் சிறியவர்கள் அல்லாவுக்கு சமமானவர்கள். அப்பாவுக்கு சமமாக ஆவீர்கள். உலகிற்கு நீங்கள் எடுத்துக்காட்டு. தீவிர புருஷார்த்தம் செய்யுங்கள். பெற்றோர்கள் புருஷார்த்தத்தில் சற்று ஏறத்தாழ இருந்தால் டீச்சர்களிடம் சொல்லி விடுவார்கள். அன்பாக சொல்வார்கள். கோபமாக சொல்ல வேண்டாம். ஜனக், குழந்தைகளுக்கு நிர்வயர் சகோதரருடன் சேர்ந்து விருந்து வைக்கவும். சந்தோஷப்படுவார்கள். எப்போதும் சந்தோஷமாக இருங்கள். அழக்கூடாது. கோடப்படக்கூடாது. சரி.

முதல் முறையாக வந்தவர்கள்: அவர்கள் செல்லமானவர்கள். வாழ்த்துக்கள். புருஷார்த்தம் செய்து தான் இங்கு வந்துள்ளீர்கள். அப்போது இந்த பாக்கியம் கிடைத்தது. இதைப்போல அமர பவ, மாயைக்கு வாசல் திறக்க வேண்டாம். தேகப்பற்றுதல் உள்ள நானும், எனது என்பதும் தான் மாயையின் வாசல்கள். இந்த வாசலை அடைத்து விட்டால் அமரராக இருப்பீர்கள். அமரராக உள்ளீர்கள் அல்லவா? மாயை வந்தால் என்ன செய்வீர்கள்? தீவிர புருஷார்த்தம் செய்வீர்களா? அமரராக இருந்து மற்றவர்களை அமரராக்குவீர்களா? நன்று இப்போது ஒரு விநாடியில் தன்னுடைய பாப்தாதாவின் மன சிம்மாசனத்தில் இடம் பிடிக்கும் அருகதையுள்ள கிரேஷ்ட சுவமானத்தில் நிலைத்து அந்த ஆன்மீக போதையில் நிலைத்திருங்கள். சிம்மாசன அருகதையுள்ள ஆத்மா நான் என்ற அனுபவத்தில் மூழ்கி விடுங்கள்.

நான்கு புறத்தில் உள்ள அளவு கடந்த அன்புள்ள பாப்தாதாவின் அன்பில் மூழ்கியுள்ள, சதா சுவமானத்தில் இருக்கின்ற சுய இராஜ்ய அதிகாரியான விசேஷமான ஆத்மாக்களுக்கு, நான்கு திசைகளிலும் ஊக்கம், உற்சாகம் என்ற இறக்கைகள் கொண்டு பறக்கின்ற, மேலும் தன் மனதின் அதிர்வுகள் மூலம் வாயுமண்டலத்தை சாந்தமாகவும் சிரேஷ்டமாகவும் ஆக்குகின்ற அனைவருக்கும் பாப்தாதாவின் செய்தியைக் கொடுத்து துக்கத்திலிருந்து விடுவித்து முக்தி என்ற ஆஸ்தியைக் கொடுப்பவர்கள், எப்போதும் உறுதியின் மூலமாக

வெற்றியை அடைகின்ற, நான்கு திசையிலும் உள்ள மனதிற்கு அருகில் நேருக்கு நேர் வருகின்ற அனைத்து குழந்தைகளுக்கும் மனதின் ஈர்ப்பும். நல்லாசிகளும் நினைவும் அன்பும், நமஸ்காரமும் உரித்தாகுக.

தாதிகளிடம்: நீங்கள் ஆதி ரத்தினங்கள். உங்களைப் பார்த்து அனைவரும் சந்தோஷப்படுகிறார்கள். நிமித்தமானவர்கள் ஒருவர் மற்றவரின் ஆலோசனைக்கு மதிப்புக் கொடுத்து இந்த பரிவர்த்தனைக்கான காரியங்களைச் செய்துள்ளீர்கள், செய்வீர்கள். இது சிறிய ஒரு குழுவாகும். ஆலோசனைகளுக்கு மதிப்பு கொடுத்து அனைவரையும் நிமித்தமாகவும், ஆக்கப்பூர்வமாகவும் செய்கின்ற விசேஷமான காரியத்திற்கு நிமித்தமானவர்கள். இந்தக் குழுவை நன்றாக முன்னேற்றி அதற்காக சமயத்தை ஒதுக்கும் அனைவருக்கும் ஊக்கம் உற்சாகத்தை அதிகரிப்பீர்கள். சரியாக நடக்கும். பாப்தாதா கவனித்து வருகிறார். இக்குழுவானது சௌகரியங்களைக் கொடுக்கும் அளவுக்கு நிமித்தமாகும்போது அதன் அதிர்வுகள் சக்தியுடன் நான்கு புறமும் பரவும். தன்னை பாபாவுக்குச் சமமாக ஆக்க வேண்டும். ஒவ்வொரு வரும் தன்னை பாபாவுக்குச் சமமாக ஆக்கும்போது குழுவானது தானாகவே மாறி விடும். சுய பரிவர்த்தனை மூலம் மற்றவர்களில் பரிவர்த்தனை. உலகில் பரிவர்த்தனை, தமக்குள் பரிவர்த்தனை. பிறகு உலகில் பரிவர்த்தனை. சரியாக நடக்கிறதா? சுலபமாக நடக்கிறதா? வரதான சொரூபமான ஸ்திதியை ஞாபகப்படுத்துங்கள். வரதானம் நன்றாக உள்ளது என்று சொன்னால் போதாது நல்லவராக ஆக வேண்டும். சரி.

ரமேஷ் சகோதரருடன்: கணக்கு வழக்கு (அக்கௌண்ட்) சுலபமாகி விட வேண்டும். மற்றவர்கள் சொல்வதை சைகை மூலமாகப் புரிந்து கொண்டு சைகை கொடுத்து வாருங்கள். சகோதரிகள் இந்த கணக்குகளைப் பற்றி குறைவாகவே அறிந்துள்ளார்கள். நீங்கள் அவர்களை தகுதியுள்வர்களாக ஆக்கியுள்ளீர்கள். இப்போது மற்றவர்களை தகுதியுள்ளவர் ஆக்குங்கள். மற்றவர்களை அனுபவம் உள்ளவராக ஆக்குங்கள். சட்டங்கள் மாறும். அவற்றின் வேலை தான் என்ன? இப்படியே நடத்தினால் எல்லோரும் சொல்வார்கள், இந்த அரசாங்கம் என்ன செய்தது? சிலவற்றை மாற்றம் கொண்டு வரும். இவ்வாறு இது நடப்பது சகஜம். (உடனிருக்கும் சகோதரியைப் பார்த்து)

இவர் படித்து வருகிறார், போதுமான அளவு படித்துள்ளார், கற்பித்தால் மேலும் நல்ல புத்திசாலியாகி விடுவார்.

உஷா சகோதரியுடன்: சரி. நன்றாக உள்ளது. கடப்பாறையிலிருந்து முள்ளாக மாறி விட்டது. தைரியம் உள்ளதா? தைரியமாக இருந்தால் சுலபமாகி விடும். யோசிப்பதால் பெரிய விஷயமாகி விடும். தைரியத்தினால் சிறிய விஷயமாக ஆகி விடும். தைரியமாக இருக்கிறீர்கள். அந்தத் தைரியத்தை பாப்தாதா பாராட்டுகிறார்.

டாக்டர் அனிலா சகோதரியுடன்: இவர் எப்போதும் சமமாக இருந்துள்ளார். குழப்பங்களில் மாட்டிக் கொள்வதில்லை. நல்லது. நல்ல விதமாக உங்கள் பாத்திரத்தை (பார்ட்) செய்கிறீர்கள். இப்போது தைரியம் உள்ளதா? சோதனைத்தாள் வரும் ஆனால் நீங்கள் அனைவருடன் பாசமாக இருக்க வேண்டும். சரிதானே? சுலபமாக உள்ளதா? கஷ்டமாகயில்லையே? தைரியம் உண்டு அனைவருடைய அன்பும் உண்டு. அனைத்து குடும்பத்துடனும் அன்பு உண்டு.

சகோதரர் பூபாலுடன்: நிர்விக்னமான செயல்பாடுகள் நன்று.

சகோதரர் கோகுலுடன்: காரியம் நடக்கிறது, நடத்திச் செல்லுங்கள்.

வருடாந்திர மீட்டிங் பற்றி விசேஷமாக: ஒவ்வொரு இடத்திலும் 4-பாடங்களை எவ்வாறு கவனம் செய்வது, சில சமயம் சேவை முன்னால் உள்ளது. சில சமயம் சுய முன்னேற்றம், தாரணை முன்னால் போகிறது. பாடங்களிலும் மதிப்புடன் தேர்ச்சி பெற வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும் என்பதில் கவனம் திருப்புங்கள். ஒரு பாடத்திலும் முழுமையாக வெற்றி அடையவில்லை என்றால் விஜய மாலையில் ஒரு மணியாக ஆவது கடினமாகி விடும். அவர் எப்படிப்பட்டவராக இருப்பினும் பிராமண பரிவாரத்தைச் சேர்ந்தவர். ஒவ்வொருவருக்காகவும் அறிவுறுத்தலும் இருக்க வேண்டும். அத்துடன் கூடவே மன்னிப்பும் இருக்க வேண்டும். இந்த விதிப்படி குழுவை பலப்படுத்த வேண்டும். ஒவ்வொரு சென்டரும் நிர்விக்னமாக ஆக வேண்டும். ஒவ்வொருவரும் தன்னுடைய விதிப்படி புதிய விஷயங்களைக் கண்டுபிடிக்க வேண்டும். சென்டரில் நடப்பதைப்

பற்றி ஒவ்வொருவரும் அனுபவம் உள்ளது. அதற்கு என்ன செய்ய வேண்டும். எந்த விஷயத்தில் கவனம் வைக்க வேண்டும். முதலில் சென்டர் நிர்விக்னமாகி, அதன் பின் மண்டலம் நிர்விக்னமாக வேண்டும். விதவிதமான சுபாவமுள்ளவர்கள் சோதனைத்தாள் வரும். இதை எப்படிப் வெற்றி அடைவது, அந்த விதியை நன்றாக தணத்தில் வைக்க வேண்டும். அதற்காக ஒவ்வொரு மண்டலமும் தமக்குள் ரிசல்ட் எடுக்க வேண்டும். இனி என்ன செய்வது, இதன் பிறகு என்ன செய்வது... இப்படி நடந்தது. அப்படி நடந்தது போன்றவைகளைக் குறைத்துக் கொண்டு மேற்கொண்டு என்ன செய்ய வேண்டும் என்பது மிகவும் அதிகமான தெளிவுடன் இருக்க வேண்டும். (இந்த வருடத்தின் தலைப்பு என்ன?) நீங்கள் தயார் செய்யுங்கள். பின்னர் அதைப் பற்றி ஒரு முடிவுக்கு வாருங்கள்.

**வெளிநாட்டு அனுபவசாலி மூத்த சகோதரிகளுடன்:** இம்முறை மிகவும் கவனமாக இருந்ததை பாப்தாதா பார்த்தார். கடைசி குருப்பிற்கும் மனதார சேவை செய்து காட்டினீர்கள். மற்றும் ரிசல்ட்டையும் பார்த்தார். ஒன்று கூடுவதற்கான சந்தர்ப்பம் இங்கு மதுவனத்தில் மட்டுமே கிடைக்கிறது. குருப்பாக இருப்பினும் அனைத்து இடங்களிலுமிருந்து ஒரு இடத்தில் கூடுகிறார்கள். இம்முறை இந்த ரிசல்ட் நன்றாகத் தென்பட்டது. உழைப்பும் கொடுத்தீர்கள். (இத்தாலியைச் சேர்ந்தவர்களின் நினைவுகளை சகோதரி ஜெயந்தி அளித்தார்.) உங்களுடைய சந்தோஷம், தைரியம், ஊக்கம், உற்சாகம் என்றும் குறைந்து விடாது என்று சொல்லுங்கள். இத்தாலி என்றால் என்றும் குறைந்து விடாது என்று பொருள்படும்.

**சகோதரி மீராவுடன்:** இவரும் கூடவே துணையாக இருந்தார். நல்லது. அனைத்து விஷயங்களையும் இப்போது வெளி நாட்டினர் புரிந்துள்ளார்கள். முதலில் புதியவர்களாக இருந்தனர். இப்போது என்ன செய்ய வேண்டும், எதை செய்யக்கூடாது என்று புரிந்து கொண்டனர். தம்முடைய புருஷார்த்தம் என்னவென்றும் புரிந்துள்ளனர். நல்லது. வெளிநாட்டினைச் சேர்ந்தவர்களின் நினைவை சகோதரி மோகினி சொன்னார்கள். அனைவரது நினைவும் வந்து சேர்ந்து விட்டது.

சந்திரஹாஸ் பாபுஜியுடன்: கணக்கு வழக்கு வந்துள்ளது. கணக்கு வழக்கைத் தீர்த்துக் கொள்ள வேண்டும். தனக்குள் தைரியம் உள்ளதாக நினைக்கிறீர்களா? ஆப்ரேஷன் செய்து கொள்ள தைரியம் உள்ளதாகச் சொல்கிறீர்களா? (டாக்டர்கள் இந்த வயதில் ஆப்ரேஷன் செய்ய வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்கள்) இது சரி தான். மருந்தும், ஆசீர்வாதங்களும் -ஆசீர்வாதத்தை நிறைத்துக் கொண்டு மருந்தை எடுத்தால் இரு மடங்கு வேலையாகி விடும். அப்போது முக்தி கிடைக்கும்.

நிர்மா குழுமத்தின் உரிமையாளர் கர்சன் பாயீ படேலுடன்: உங்களிடமுள்ள விசேஷத்தை அறிவீர்களா? உங்களுக்கு முரளியிடம் மிக அன்புள்ளது. அதுவே விசேஷம். முரளியை விரும்பினால் முரளிதரனையும் விரும்புவார்கள். முரளியின் காரணமாக முன்னேறுகிறீர்கள். முரளி நல்ல ஸ்ரீமத்தைக் கொடுக்கிறது. மேலும் ஸ்ரீமத் கிடைத்து அதன்படி நடக்கும்போது சக்தி தானாகவே கிடைக்கிறது. இரண்டினாலும் பாபா சந்தோஷமாக இருக்கிறார். அனைவரும் பாபாவை சொந்தமாக்க வேண்டும். ஆகாமல் எங்கு போவார்கள்? ஆகி விடுவார்கள். ஒரு குழுவை அமைத்து அழைப்புகளைக் கொடுத்து செய்தியைக் கொடுத்து விட வேண்டும். புகார் செய்யக் கூடாது. இவர் திறமைமிக்கவர். அவர் செய்வார்.

விருந்தினர்களுடன்: நிமித்தம் என்று புரிந்து நடக்க வேண்டும். தன்னை கவலையில்லாத பாதுஷாவாக வையுங்கள். யாருக்கும் கவலை வேண்டாம். கவலை வந்தால் சகோதரிகளிடம், பாபாவிடம் கொடுத்து விடுங்கள். நீங்கள் நிமித்தம், பாபா எஜமானர். விஷயம் எதுவானாலும் எஜமானரிடம் விட்டு விடுங்கள். நீங்கள் டிரஸ்டியாக இருந்து நடந்தால் கவலையற்று இருப்பீர்கள். தனக்கு ஒரு அனுபவம் கிடைத்தால் மற்றவர்களுக்கு அதைக் கொடுக்காமல் இருக்க முடியாது, சந்தோஷமுண்டு எனில் மற்றவர்களுடன் சந்தோஷத்தைப் பகிர்ந்து கொள்ளாமல் இருக்க முடியாது, நீங்களும் சந்தோஷத்தைக் கொடுப்பீர்கள். இவர் எப்படி இவ்வளவு சந்தோஷமாக இருக்கிறார் என்பதைப் பார்த்து அனைவரும் சந்தோஷப்பட்டால் சேவையாகி விடும். இவ்வாறு சேவை செய்யலாம். முரளியை ஒருவர் விரும்பினால் அவர் நிர்விக்னமாக இருப்பார் என்று புரிந்து

கொள்ளுங்கள். முரளியைக் படிக்கிறீர்கள். கேட்கிறீர்கள் அல்லவா! வீட்டில் படிக்கலாம் ஒரு கருத்தையாவது (பாயிண்ட்) படியுங்கள் ஆனால் முரளியை கட்டாயமாக படிக்க வேண்டும். அப்போது அன்பு பிறக்கும். அதன் பிறகு அதைச் செய்ய வேண்டாம் என்று எவரேனும் கூறினாலும் அதைச் செய்யாமல் (முரளி படிக்காமல்) இருக்க மாட்டீர்கள். நல்லது. அனைவரும் சகயோகிகளாகவும் சிநேகமுள்ளவராகவும் உள்ளீர்கள் இனி சகஜயோகத்தில் முதல் நம்பரில் குரூப் முழுவதும் சகயோகத்தில் முதல் இடத்தில் இவருக்கும் ஊக்கம் அதிகம். மூன்று நான்கு பேருக்கும் உண்டு. பாப்தாதா ஊக்கம் உற்சாகத்தைப் பாராட்டுகிறார். இப்போது பிராமண குடும்பத்தைச் சேர்ந்து விட்டீர்கள். பிராமண குடும்பம் மிகவும் உயர்ந்தது. மேலும் எவ்வளவு பெரிய குடும்பம். பிராமணன் ஆவது மிகப் பெரிய ஒரு பாக்கியம். உங்கள் பாக்கியத்தை நீங்கள் எடுத்தீர்கள். எடுத்தீர்கள் அல்லவா? ஒவ்வொரு அடியிலும் தன்னுடைய சிரேஷ்டமான பாக்கியத்தை நினைவில் நிறுத்தி முன்னேறுங்கள்.

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳ ✳✳✳✳✳✳✳✳

## 20.10.2008 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சந்துஷ்டமணி (திருப்தி) ஆகி உலகில் திருப்தியின் ஒளியினைப் பரப்புங்கள், திருப்தியாயிருங்கள், எல்லோரையும் திருப்தி செய்யுங்கள்!

இன்று பாப்தாதா சதா திருப்தியாக இருக்கும் தன்னுடைய சந்துஷ்டமணிகளைப் பார்க்கின்றார். ஒவ்வொரு சந்துஷ்டமணியின் ஒளி நாலா பக்கமும் எவ்வளவு அழகிய பிரகாசமாக ஜொலித்துக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு சந்துஷ்ட மணியும் எவ்வளவு தந்தையின் அன்பிற்கும், ஒவ்வொருவரின் அன்பிற்கும், தனக்கும் கூட அன்பிற்குரியவராக இருக்கின்றார். திருப்தி எல்லோருக்கும் பிரியமானது. திருப்தி சதா எல்லா பாக்கியமும் நிறைந்ததாக இருக்கின்றது. ஏனெனில் எங்கே திருப்தி இருக்கிறதோ. அங்கே அடையாதது என்று ஒரு பொருளும் இல்லை. திருப்தியுள்ள ஆத்மாவிடம் திருப்தி என்பது இயற்கையான சுபாவமாக இருக்கிறது. திருப்தி எனும் சக்தி இயல்பாகவும், எளிதாகவும் நாலா பக்கமும் வாயுமண்டலத்தில் பரவுவதாக உள்ளது. திருப்தியுடன் இருப்பவருடைய முகம், அவருடைய கண்கள் வாயுமண்டலத்திலும் கூட திருப்தியின் அலைகளைப் பரப்புகிறது. எங்கே திருப்தி இருக்கிறதோ, அங்கு இன்னும் அநேக விசேஷங்கள் தானாகவே வந்து விடுகிறது. திருப்தி சங்கமத்தில் தந்தையின் விசேஷ அன்பளிப்பாகும். திருப்தியின் ஸ்திதி, பரஸ்திதியின் மீது எப்போதும் வெற்றி அடைவதாக இருக்கிறது. பரஸ்திதி மாறிக் கொண்டேயிருக்கிறது ஆனால் திருப்தியின் சக்தி சதா முன்னேற்றத்தை அடையும்படியாகச் செய்து கொண்டேயிருக்கிறது. எவ்வளவு பெரிய அளவில் பரஸ்திதி எதிரில் வந்தாலும் (பரஸ்திதி- எதிர்மறையான சூழ்நிலை) அது சந்துஷ்ட மணியின் முன்னால் ஒவ்வொரு சமயத்திலும் சூழ்நிலை

ஒரு பொம்மலாட்டம் போலவே கண்களுக்குத் தெரிகிறது. மாயை மற்றும் இயற்கையின் பொம்மலாட்டம். ஆதலால் திருப்தியுள்ள ஆத்மா ஒருபோதும் குழப்பமடைவதில்லை. (அலைக்கழிக்கப்படுவதில்லை) பரஸ்திதி (எதிர்மறையான சூழ்நிலை)யின் தோற்றமானது, ஒரு மனமகிழ்வு தரும் விளையாட்டைப் போலவே அனுபவம் ஆகிறது. இந்த மன மகிழ்ச்சியை அனுபவம் செய்வதற்காக தனது ஸ்திதி ஆகிய ஆசனத்தில் சதா சாட்சியாயிருந்து பார்க்கின்ற பார்வையாளராக யார் இருக்கின்றார்களோ, அவர்கள் விளையாட்டாக அனுபவம் செய்வார்கள். காட்சியானது (தோற்றம்) எவ்வளவு மாறுபட்டதாக இருப்பினும், பார்வையாளர் என்ற ஸ்தானத்தில் நிலைத்திருக்கும் திருப்தியுள்ள ஆத்மா, சாட்சிடாக இருந்து, ஒவ்வொரு பரஸ்திதியையும், ஆத்ம ஸ்திதியின் மூலமாக (சுய ஸ்திதி) மாற்றிவிடுகிறது. ஆகையால் ஒவ்வொருவரும் நான் சதா திருப்தியுடன் இருக்கிறேனா? என்று தன்னை பரிசோதிக்க வேண்டும். சதா? எப்போதுமே அப்படி இருக்கிறோமா? அல்லது அவ்வப்போது அப்படி இருக்கிறோமா?

பாப்தாதா எப்போதும் ஒவ்வொரு சக்திக்காகவும், குஷியுடனிருப்பதற்காகவும். டபுள் லைட் ஆகி (ஃபரிஸ்தா) பறப்பதற்காகவும், 'சதா' என்ற வார்த்தை எப்போதும் (சதா) நினைவில் இருக்க வேண்டும் என்று குழந்தைகளுக்குக் கூறுகின்றார். அவ்வப்போது என்ற வார்த்தை பிராமண வாழ்க்கையின் அகராதியில் இல்லவேயில்லை. ஏனெனில் திருப்தி (சந்துஷ்டதா) என்பதன் பொருளே சர்வ பிராப்தி. (எல்லா பாக்கியமும் உள்ளது. எங்கே சர்வ பிராப்தி உள்ளதோ, அங்கு அவ்வப்போது என்ற வார்த்தைக்கே இடமில்லை. அப்படியானால், இம்மாதிரி சதா அனுபவம் செய்து கொண்டிருப்பவர்களா? அல்லது புருஷாரத்தம் (முயற்சி) செய்து கொண்டிருக்கிறீர்களா? ஒவ்வொருவரும் தன்னிடம் கேட்டீர்களா? சோதனை செய்தீர்களா? ஏனென்றால் நீங்கள் எல்லோரும் தந்தையின் விசேஷ அன்பிற்குரியவர்கள். துணையாக இருப்பவர்கள், செல்ல மானவர்கள், இனிமையிலும் இனிமையான ஆத்ம பரிவர்த்தனை செய்யும் குழந்தைகள். அப்படித்தானே? அப்படியிருக்கிறீர்களா? தந்தை உங்களை எப்படிப்பார்க்கின்றாரோ அதே போலவே நீங்களும் அனுபவம்

செய்கிறீர்களா? கை உயர்த்துங்கள். யார் சதா, அவ்வப்போதல்ல, சதா திருப்தியுடனிருப்பவர்கள். 'சதா' என்ற வார்த்தை நினைவிருக்கிறதல்லவா? கொஞ்சம் மெல்ல, மெல்ல கை உயர்த்துகிறார்கள். நல்லது. மிகவும் நல்லது. கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்துகிறீர்களா? யோசித்து, யோசித்து உயர்த்துகிறார்கள் ஆனால் பாப்தாதா அடிக்கடி கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றார். இப்போதைய சமயம் மற்றும் தன்னுடைய ஸ்திதி இரண்டையும் பாருங்கள் என்று, சமயத்தின் வேகம் மற்றும் தன்னுடைய வேகம். இந்த இரண்டையும் சோதிக்க வேண்டும். பாஸ் வித் ஆனர் (மதிப்புடன் தேர்ச்சி) ஆகியே தீரவேண்டும் அல்லவா ஒவ்வொருவருமே யோசித்துப் பாருங்கள். நான் தந்தைக்கு செல்லமான ராஜகுமாரனாகவே எப்போதும் இருக்கின்றேனா? உங்களை எப்போதும் செல்லமான ராஜகுமாரன். ராஜகுமாரி என்று கருதுகிறீர்கள் அல்லவா? தினந்தோறும் பாப்தாதா உங்களுக்கு எந்த மாதிரி அன்பு நினைவுகளை அளிக்கின்றார். செல்லப்பிள்ளை (லாடுலே) என் செல்லமே என்று அழைக்கப்படுபவர்கள் யாராக இருப்பார்கள். அப்படிப்பட்ட செல்லப் பிள்ளைகள் யார் என்றால், யார் தந்தையைப் பின்பற்றி நடப்பார்களோ அவர்கள். (ஃபாலோ ஃபாதர்), தந்தையைப் பின்பற்றி நடப்பதென்பது மிக, மிக, மிக எளிது ஒரு கஷ்டமுமில்லை. ஒரு விஷயத்தில் பின்பற்றினால் போதும். எளிதாக எல்லா விஷயங்களிலும் பின்பற்ற முடியும். ஒரே ஒரு வரி. தினந்தோறும் தந்தை நினைவு படுத்துகின்றார். அது நினைவிருக்கிறதல்லவா? தன்னை ஆத்மா என உணர்ந்து, தந்தையாகிய என்னை நினைவு செய்யுங்கள் என்பது தான். ஒரே ஒரு வரி தானே! நினைவு செய்கின்ற ஆத்மாவுக்கு பொக்கிஷம் (கஜானா) கிடைத்துவிட்டது. அவர் சேவை செய்யாமல் இருக்க முடியாது. ஏனெனில் அளவற்ற பாக்கியம், அளவிட முடியாத பொக்கிஷம் இருக்கிறது. வள்ளலின் குழந்தைகள். இவர்கள் கொடுக்காமல் இருக்க முடியாது மேலும் மெஜாரிட்டி உங்கள் அனைவருக்கும் என்ன பட்டம் (டைட்டில்) கிடைத்திருக் கிறது? டபுள் ஃபாரினர்ஸ். இப்படி டைட்டில் டபுளாக (இரண்டு மடங்கு) இருக்கிறது பாப்தாதாவுக்கும் உங்கள் எல்லோரையும் பார்த்து குஷியாக இருக்கிறது. மேலும் சதா இயல்பாகவே மகிமை செய்து கொண்டேயிருக்கின்றார். ஆஹா, எனது குழந்தைகள் ஆஹா நன்றாக இருக்கிறது வெவ்வேறு நாடுகளிலி ருந்து எந்த விமானத்தில் வந்து சேர்ந்தீர்கள்? ஸ்தூலத்தில் ஏதாவதொரு

விமானத்தில் வந்திருக்கலாம்; ஆனால் பாப்தாதா எந்த விமானத்தைப் பார்க்கின்றார்? ஆழமான அன்பு என்ற விமானத்தில், தன்னுடைய அன்பான வீட்டிற்கு வந்து சேர்ந்து விட்டீர்கள். பாப்தாதா ஒவ்வொரு குழந்தைக்கும் இன்று விசேஷமாக இதே வரதானத்தையே அளிக்கின்றார். ஹே, செல்லமான, அன்டான குழந்தைகளே, சதா சந்துஷ்டமணியாகி, உலகமுழுவதிலும் திருப்தி எனும் ஒளியினைப் பரப்புங்கள். திருப்தியுடனிருக்க வேண்டும். திருப்தி செய்ய வேண்டும். அநேக குழந்தைகள் கூறுகின்றனர். திருப்தியுடனிருப்பது எளிது ஆனால் திருப்தி செய்வது கொஞ்சம் கஷ்டமானது என்று. பாப்தாதாவுக்குத் தெரியும். ஒரு ஆத்மாவைத் திருப்திப்படுத்து வதற்கான ஒரு விதி மிக எளிதானது. உதாரணமாக, யாரோ ஒருவர் உங்களிடம் அதிருப்தியுள்ளவராக இருக்கிறார் அல்லது அதிருப்தியுடன் இருக்கிறார் எனில் அவருக்கும் அதிருப்தி, உங்களுக்கும் அதிருப்தி இதனால் கொஞ்சம் பிரபாவம் இருக்கவே செய்யும். வீண் எண்ணங்களும் உண்டாகும். பாப்தாதா சுப பாவனை மற்றும் சுப காம்னா (சுபமான ஆசை) என்ற மந்திரத்தைக் கொடுத்திருக்கின்றார். இந்த மந்திரத்தை உங்கள் நினைவில் வைத்திருந்தால், உங்களிடம் வீண் எண்ணம் உண்டாகாது. உங்களைப் பற்றி நீங்கள் இப்படிப்பட்டவர், அல்லது அப்படிப்பட்டவர் என அறிந்திருப்பவராக இருப்பதால், நீங்கள் உங்களை சதா நியாராவாக (விலகியிருக்கும் நிலை), அதாவது அத்தகைய அதிர்வலைகளிலிருந்து (வைப்ரேஷன்) நியாராகவாக, தந்தையிடம் அன்புள்ளவராக அனுபவம் செய்யுங்கள். அப்போது இத்தகைய உங்களுடைய நியாரா மற்றும் பாபாவிடம் அன்பு எனும் சிரேஷ்ட ஸ்திதியின் அதிர்வலைகள் அந்த ஆத்மாவைச் சென்றடையாவிட்டாலும் கூட, நிச்சயமாக வாயுமண்டலத்தில் பரவத்தான் செய்யும். ஒருக்கால், எந்த ஒரு மாற்றமும் உண்டாகவில்லை, உங்களிடம் அந்த ஆத்மாவின் பிரபாவம் படுகிறது. என்றால், அது வீண் எண்ணம் என்ற ரூபத்தில் வாயுமண்டலத்தில் இது பற்றிய மற்ற எல்லோருடைய சங்கல்பமும் பரவும். ஆதலால் நீங்கள் நியாராவாகி, பாபாவிடம் அன்புடையவராகி, அந்த ஆத்மாவின் நன்மையின் பொருட்டு, சுபபாவனை, சுபகாம்னா (சுப அபிலாஷை) வைக்க வேண்டும். அநேக முறை, குழந்தைகள் கூறுகிறார்கள். ஒருவர் தவறாக நடந்து கொள்ளும் போது, நாங்களும் கூட சத்தமாகச் சொல்லும்படியாக ஆகி விடுகிறது என்று கொஞ்சம், தங்களுடைய

சுபாவமும், வாய்ச் சொல்லும் கூட ஆவேசமுடையதாக ஆகி விடுகிறது என்று. சரி. அவர் தவறு செய்தார். நீங்கள் ஆவேசத்துடன் நடந்து கொண்டால், அது தவறு இல்லையா? அவர் மீண்டும் தவறு செய்கின்றார். இதற்குப் பதிலாக நீங்களும் ஆவேசமாகப் பேசுகிறீர்கள் என்றால், அது கோபத்தின் அம்சம் அல்லவா? அப்படியானால் அது சரியா? தவறை, தவறால் சரி செய்ய முடியுமா? தற்கால சூழ்நிலைப்படி உங்களுடைய வாய்ச்சொல் ஆவேசமாக இருக்குமானால், இதில் விசேஷ கவனம் வேண்டும். ஏனென்றால் சப்தமாக பேசுவதால், பொறுமை இழந்து பேசுவதால், அவர் மாறப்போவதில்லை. மேலும் நீங்கள் இப்படி நடந்து கொள்ளும் விதமும் கூட இரண்டாம் நம்பர் விகாரத்தின் அம்சம். கூறுகிறார்கள் அல்லவா? வாய்ச்சொல் பூ மழையாகப் பொழிகிறது என்று. இனிமையான சொல், மலர்ந்த முகம். இனிமையான உள்ளுணர்வு (விருத்தி) கனிவான பார்வை, இனிமையான சம்மந்தம், அணுகுமுறை, ஆகியன சேவைக்குரிய சாதனங்களாகும். ஆகவே ரிசல்ட்டை (முடிவ) பாருங்கள். அதாவது ஒருவர் தவறு செய்து விட்டார் என்று வைத்துக் கொள்ளுங்கள். தவறு தான். நீங்கள் அவருக்குப் புரிய வைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, வேறு எந்த நோக்கமுமல்ல, உங்கள் நோக்கம் மிகவும் நல்லது தான். இவருக்கு அறிவுறுத்துகிறோம். புரிய வைக்கிறோம் என்பது ஆனால் இதன் முடிவு என்ன என்று பார்க்கும்போது, அவர் மாறிவிடு கின்றாரா? இன்னும் அதிகமாக உங்கள் எதிரில் வரப்பயப்படுவார். ஆதலால் உங்களுடைய நோக்கம் நிறைவேறவில்லை. ஆதலால் உங்களுடைய எண்ணம். சொல், அதாவது பேச்சு, சம்மந்தம், தொடர்பு ஆகியவற்றை சதா இனிமையுள்ளதாக, மதுரமானதாக அதாவது மகான் தன்மையுடையதாக ஆக்கிக் கொள்ளுங்கள். ஏனென்றால், தற்காலத்தில் மனிதர்கள் நடைமுறையில் பார்க்க விரும்புகிறார்கள். நீங்கள் வாய்ச்சொல் மூலமாக சேவை செய்யும் போது அதன் பிரபாவத்தின் காரணமாக உங்களை நாடி வரலாம், இதுவும் நல்லது தான் ஆனால் நடத்தையில் இனிமை, மகானத்தா, சிரேஷ்ட பாவனை, நன்னெறி முகபாவம் ஆகியவை தான் தாங்களும் மாற வேண்டும் என்ற பிரேரணையைக் கொடுக்க வல்லதாக இருக்கும். எடுத்தும் செல்வார்கள். இன்னும் போகப்போக, வரவிருக்கும் காலங்களில், சூழ்நிலை அப்படிப்பட்டதாக மாறத்தான் போகிறது. அப்போது நீங்கள் உங்கள் முகபாவம் மற்றும் நடத்தை மூலமாக அதிகமான சேவை

செய்ய வேண்டியதாக இருக்கும். ஆதலால் உங்களை நீங்களே சோதித்துப் பாருங்கள். எல்லா ஆத்மாக்களுக்காகவும், சுபபாவனை, சுபகாம்னாவுடைய விருத்தி மற்றும் திருஷ்டி, சம்ஸ்கார சுபாவம் இயற்கையானதாக இருக்கிறதா?

பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும், மாலையின் மணியாக, வெற்றி மாலையின் மணியாகப் பார்க்க விரும்புகின்றார். ஆகையால் நீங்கள் எல்லோரும் கூட, மாலையின் மணியாக ஆகத்தான் போகிறோம் என்று கருதுகிறீர்களா? அநேக குழந்தைகள் நினைக்கிறார்கள். 108-மணி மாலையில் ஏற்கனவே நிமித்தமாகியுள்ள குழந்தைகள் தான் வருவார்கள் என்று ஆனால் பாப்தாதா இதற்கு முன்பும் கூறியிருக்கின்றார். 108-மணி மாலை என்பது பக்தியின் மாலையாகும் ஆனால் நீங்கள் ஒவ்வொருவரும் வெற்றி மாலையின் மணியாக ஆவீர்கள் என்றால், பாப்தாதா மாலைக்குள்ளே இன்னும் ஒரு மாலைக்கு இடமளிப்பார். தந்தையின் உள்ளத்தின் மாலையில் உங்கள் ஒவ்வொரு வெற்றிக் குழந்தைக்கும் இடம் உள்ளது. இதில் தந்தையின் உத்தரவாதமுள்ளது. நீங்கள் உங்களை மனம், சொல். செயல் மற்றும் நடத்தை, முகபாவத்தை வெற்றி முகமாக வைத்துக் கொள்ளுங்கள். விருப்பமுள்ளதாக இருக்கிறதா? ஆவீர்களா? வெற்றி மாலையின் மணியாக ஆக்குவதில் பாப்தாதாவின் உத்தரவாதமுள்ளது. யார் ஆகப்போகிறீர்கள்? நல்லது. பாப்தாதா மாலைக்குள், மாலை தயாரிப்பதை ஆரம்பிப்பார். டபுள் ஃபாரினர்ஸ்களுக்கு விருப்பமானதாக இருக்கிறதல்லவா? வெற்றி மாலையில் கொண்டு வருவது தந்தையின் வேலை ஆனால் உங்கள் வேலை வெற்றியாளர் ஆவது கடைமானதா? கஷ்டமானது என நினைக்கிறீர்களா? யார் கஷ்டமானது என்று நினைக்கிறார்களோ, அவர்கள் கை உயர்த்தட்டும். கஷ்டமானது என நினைக்கிறீர்கள்! இங்குமங்கும் கொஞ்சப்பேர் இருக்கிறார்கள். பாப்தாதா கூறுகின்றார். எப்போது நீங்கள் பாப்தாதா என்று அழைக்கிறீர்களோ, பாபா என்று கூறுகிறீர்கள் என்றால் பாபாவின் ஆஸ்தி கிடைக்காதா? நீங்கள் எல்லோரும் ஆஸ்திக்கு அதிகாரி ஆகி விட்டீர்கள். எவ்வளவு எளிதாக பாபா ஆஸ்தியை வழங்கி விட்டார் ஒரு விநாடி விஷயம். நீங்கள் ஏற்றுக் கொண்டு விட்டீர்கள். (பாபா என்று). என்னுடைய பாபா எனவும் புரிந்து கொண்டு விட்டீர்கள். இதற்கு பாபா என்ன சொன்னார்? என்னுடைய குழந்தை. நீங்கள் மேரா பாபா என்று ஏற்றுக் கொண்டீர்கள்.

பாபா மேரா பச்சே என்று ஏற்றுக் கொண்டு விட்டார்). ஆகவே குழந்தை என்றால் தானாகவே ஆஸ்திக்கு அதிகாரியாகி விடுகின்றார். பாபா என்று அழைக்கிறீர்கள் அல்லவா எல்லோரும் ஒரே விதமாகக் கூறுகின்றீர்கள் மேரா பாபா அப்படித்தானே! மேரா பாபா தானே? இதில் கை உயர்த்துங்கள். மேரா பாபா என்றால் பாபாவின் ஆஸ்தி இருக்காதா? எப்போது மேரா பாபா என்று கூறினீர்களோ, அப்போதே என்னுடைய (பாபா) ஆஸ்தியும் அதிலேயே அடங்கி விட்டது ஆஸ்தி எது? பாப்சமான் ஆவது வெற்றியாளர் ஆவது பாப்தாதா பார்த்திருக்கின்றார். மெஜாரிட்டி ஃபாரினர்ஸ் (அநேக இரட்டை வெளிநாட்டவர்) கை கோர்த்து நடந்து செல்கிறார்கள். கையோடு கை சேர்ப்பது, நடப்பது; பழக்கம் (ஃபேஷன்). ஆகவே இப்போதும் கூட தந்தை கூறுகின்றார். தந்தை சிவபாபாவின் கை எது? இது கை அல்ல. சிவபாபாவின் கையைப் பற்றிக் கொண்டீர்கள். அந்தக் கை எது? ஸ்ரீமத் தான் பாபாவின் கை. எப்படி ஸ்தூலத்தில் கையோடு கை சேர்த்து நடப்பது விருப்பமுள்ளதாக இருக்கிறதோ. அப்போது ஸ்ரீமத் என்ற கையோடு கை கொடுத்து நடப்பதில் என்ன கஷ்டம்? பிரம்மாபாபாவைப் பார்த்தீர்களா? நடைமுறையில் ஒரு சான்றாகவே விளங்கினார். ஒவ்வொரு அடியிலும் ஸ்ரீமத்படி நடந்ததால் சம்பூரண பரிஷ்தா எனும் இலக்கை அடைந்து விட்டார் அல்லவா? அவ்யக்த பரிஷ்தா ஆகி விட்டார் அல்லவா? ஆகவே தந்தையை பின்பற்றவும், ஒவ்வொரு ஸ்ரீமத் காலையில் எழுந்த நேரம் முதல், இரவு வரை, ஒவ்வொரு அடியிலும் ஸ்ரீமத் பாப்தாதா கூறியிருக்கின்றார். எழுந்திருப்பது எப்படி? நடப்பது எப்படி? காரியம் செய்வது எப்படி? மனதில் என்னென்ன சங்கல்பம் செய்ய வேண்டும்? நேரத்தை எப்படி சிரேஷ்டமாக உபயோகப்படுத்துவது? இரவு உறங்கும் வரையிலும் ஸ்ரீமத் கிடைத்துள்ளது. எப்படி என்று யோசிக்க வேண்டிய அவசியமில்லை. செய்யலாமா? வேண்டாமா? பிரம்மாபாபாவை பின்பற்றவும். பாப்தாதாவுக்கு உள்ளன்பு இருக்கிறது. பாப்தாதா, ஒரு குழந்தை கூட வெற்றியடையவில்லை, ராஜா ஆகவில்லை என்பதை பார்க்க விரும்பவில்லை. ஒவ்வொரு குழந்தையும் ராஜா குழந்தை. சுய இராஜ்ய அதிகாரி. ஆதலால் தன்னுடைய சுய இராஜ்யத்தை மறந்து விடக்கூடாது, புரிந்ததா?

பாப்தாதா அநேக முறை சைகை காட்டியிருக்கின்றார். சமயம் திடீரென மாறும். மேலும் இப்படி ஆகி விட்டதே என்ற நிலை உருவாகும். ஆதலால் எவர்ரெடி அசரீரியாக இருக்கும் அனுபவம் அவசியமானது. எவ்வளவு வேலைப்பளு இருந்தாலும், (சேவையில் மூழ்கியிருந்தாலும்) கூட ஒரு விநாடி அசரீரி அனுபவத்தில் இருக்கும் பயிற்சியை இப்போதிருந்தே செய்து பாருங்கள். நீங்கள் கூறலாம். எங்களுக்கு நேரமே இல்லை என்று ஆனால் நீங்கள் வேலையில் அதிகமாக மூழ்கியிருக்கின்றீர்கள் என்றே வைத்துக் கொள்ளுங்கள். தாகமாக இருக்கிறதென்றால் என்ன செய்வீர்கள்? தண்ணீர் குடிப்பீர்கள் அல்லவா? ஏனென்றால், தாகமாயிருக்கிறதென்றால், தண்ணீர் குடிப்பது அவசியம் என்பதை புரிந்திருக்கிறீர்கள். இதுபோல, இடையிடையே அசரீரி ஆத்மீக ஸ்திதியில் நிலைத்திருக்கும் பயிற்சியும் அவசியம். ஏனென்றால், வரவிருக்கும் காலங்கள் நாலா பக்கமும் குழப்பமும், கூச்சலும் நிறைந்ததாக இருக்கும். அந்த சமயத்தில் ஒரு நிலையில் நிலைத்திருக்கும் ஸ்திதி அவசியமானதாகும். ஆதலால் இப்போதிருந்தே அதிக நேர அப்பியாசம் செய்யவில்லையேல், அதிகமான குழப்பம் நிறைந்த சமயத்தில் ஒரு நிலையில் எப்படி நிலைத்திருக்க முடியும்? முழு நாளில், ஓரிரண்டு நிமிடங்கள் எடுத்துக் கொண்டு சோதித்துப் பாருங்கள். அவசியமான நேரத்தில் ஆத்மீக ஸ்திதி மூலமாக அசரீரி ஆக முடிகிறதா? சோதியுங்கள். மாற்றிக் கொள்ளுங்கள். சோதித்தால் மட்டும் போதாது. மாற்றிக் கொள்ளவும் வேண்டும். இப்படி அடிக்கடி இந்தப் பயிற்சி பற்றி சோதித்துப் பார்த்துக் கொள்வதால், திரும்பத்திரும்பச் செய்வதால், இயற்கையான ஸ்திதி அமைந்து விடும். பாப்தாதாவிடம் சிநேகம், முழு அன்பு இருக்கிறது. முழு அளவில் இருக்கிறதா? பாதியா? பாதியளவாக இல்லைதானே! சரி அன்பு இருக்கிறதென்றால், உறுதிமொழி என்ன கொடுத்திருக்கிறீர்கள்? என்ன உறுதிமொழி கொடுத்தீர்கள். கூடவே செல்வோம் என்று. அசரீரியாகி கூடவே வருவீர்களா? அல்லது பின்னால் தாமதமாக வருவீர்களா? கூடவே வருவீர்களா? மேலும் கொஞ்ச சமயம் வதனத்தில் (பரந்தாமம்) கூடவே இருப்பீர்கள். கொஞ்சம் பிறகு பிரம்மாபாபாவுடன் முதல் ஜன்மத்தில் வருவீர்கள், இந்த உறுதிமொழி இருக்கிறது. இருக்கிறதல்லவா? கை உயர்த்தும்படி சொல்லவில்லை. தலையசைத்தால் போதும். கை உயர்த்துவதால் களைத்துப்போய் விடுவீர்கள் அல்லவா? எப்போது கூடவே செல்லத்தான் வேண்டும்

எனும்போது, பின்தங்கி விடக்கூடாது எனும் போது தந்தையும் கூட வேறு யாரை அழைத்துச் செல்வார்? தந்தை சமமாக இருப்பவர்களை உடன் அழைத்துச் செல்வார். தந்தைக்கும் கூட தனியாகச் செல்வதில் விருப்பமில்லை. குழந்தைகளோடு தான் செல்ல வேண்டும். ஆகவே கூடவே செல்வதற்குத் தயாராக இருக்கிறீர்கள் அல்லவா? கழுத்தை அசைத்துக் காட்டுங்கள். எல்லோருமே செல்வீர்களா? நல்லது எல்லோரும் கூடவே செல்வதற்குத் தயாராக இருக்கிறீர்களா? எப்போது தந்தை செல்வாரோ அப்போது உடன் செல்வீர்கள். இப்போது செல்ல மாட்டர்கள். இப்போதோ வெளிநாடு செல்ல வேண்டும். திரும்பிச் செல்ல வேண்டும். தந்தை கட்டளை இடுவார். நஷ்டமோஹா ஸ்மிருதி லப்தாவின் (பற்றிலிருந்து விடுபட்டு இறைவன் நினைவில் இருப்பதற்கான) மணி அடிக்கப்படும். அப்போது புறப்பட்டுச் செல்வோம். ஆகவே தயாராக இருக்கிறீர்கள் தானே? அன்பின் அடையாளம் கூடவே செல்வது நல்லது.

பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் தூரத்தில் இருந்தாலும் அருகாமையில் அனுபவம் செய்கின்றார். விஞ்ஞான சாதனம் தூரமாக இருப்பதை அருகில் கொண்டு வரமுடிகிறது, பார்க்க முடிகிறது. பேச முடிகிறது. ஆகவே பாப்தாதாவும் கூட அமர்ந்திருந்தவாறே. குழந்தைகளை எல்லா வற்றையும் விட மிக அருகாமையில் பார்க்கின்றார். தூரத்தில் இல்லை. உள்ளத்தில் அமர்ந்திருக்கிறீர்கள். ஆகவே பாப்தாதா விசேஷ சந்திப்பில் வந்திருக்கும் குழந்தைகளை தனது உள்ளத்தில், கண்களில் அடக்கியவாறே கூடவே வரவிருக்கின்ற, கூடவே இருந்து கொண்டிருக்கின்ற, கூடவே இராஜ்யம் செய்யவிருக்கின்ற ஒவ்வொரு குழந்தையையும் பார்க்கின்றார். ஆதலால் இன்று முதல், எல்லா நாட்களிலும் அடிக்கடி எத்தகைய டிரில் செய்வீர்கள்? இப்போதே ஒரு வினாடியில் ஆத்ம அபிமானி, தனது சரீரத்தையும் பார்த்துக் கொண்டே அசரீரி ஸ்திதியில் நியாரா மற்றும் தந்தையின் அன்பையும் அனுபவம் செய்யமுடியுமல்லவா? ஆகவே இப்போது ஒரு வினாடியில் அசரீரி பவ நல்லது (டிரில்). இதேபோலவே இடையிடையே முழு நாளில் எப்படியாவது ஒரு நிமிட நேரம் எடுத்துக் கொண்டு இந்தப் பயிற்சியை நன்றாக உறுதி செய்து கொண்டேயிருங்கள்.

மற்றபடி குழந்தைகள் இங்குள்ள குழந்தைகளாயினும், வெளி நாடுகளிலுள்ள குழந்தைகளாயினும் சரி, இரு சாராரும் சந்தித்து எந்த ஒரு பிளான் தயார் செய்திருந்தாலும், அதை பாப்தாதா பார்த்தார். கேட்டார். பாப்தாதா இடையிடையே உங்களுடைய புரோகிராமையும் (நிகழ்ச்சிகளை) சுற்றி வந்து பார்த்தார். ஆதலால் பாப்தாதாவுக்கு குஷியாக இருக்கிறது. ஏனெனில் எல்லோரும் சேர்ந்து வருங்காலத்திற்காக எந்த ஒரு தீவிர புருஷார்த்தம் மற்றும் சுய மாற்றத்திற்கான பிளான் தயார் செய்தார்களோ அது பாப்தாதாவுக்கு பிடித்தமானதாக உள்ளது ஆனால் எந்த ஒரு பிளான் செய்தார்களோ அதை நடைமுறையில் கொண்டு வந்து நிறைவேற்றியவர்களுக்கு பாப்தாதா அடுத்த ஆண்டில் விசேஷமாக குப்தமான அன்பளிப்பு அளிப்பார். ஆகவே முன்னேறுங்கள். இந்த முறை, இருசாராரும் சேர்ந்திருக்கின்ற சபையில் பரோபகாரி, சகயோகி ஆவதற்கான ஊக்கம், உற்சாகத்தைப் பார்த்தார். இனி டபுன் விதேஷி என்பதற்குப் பதிலாக டபுள் புருஷாரத்தி எனக் கூற வேண்டும். பாப்தாதா உலக மேடையில் ஹீரோ பார்ட் செய்யக்கூடிய குழந்தைகளாகிய உங்கள் அனைவரையும் உலகின் முன்பாக ஹீரோவாக காண்பிக்க விரும்புகினறார். எல்லோரும் ஊக்கம், உற்சாகத்துடன் வந்து விட்டீர்கள். கடிதங்களும் நிறைய வந்திருக்கின்றன. ஒவ்வொரு குரூப்பும் தங்களுடைய நினைவின் அடையாளங்களை அனுப்பியிருக்கின்றனர். பாப்தாதா பார்த்தார், யாரெல்லாம் அன்பு நினைவுகளை, இ.மெயில், கடிதங்கள் மூலமாக அனுப்பியிருக்கிறீர்களோ அவர்கள் அனைவருக்கும் பாப்தாதா பெயர் சகிதமாக எதிரில் பார்த்து நூறு மடங்கு அன்பு நினைவுகளை அளிக்கின்றார். தூரத்தில் இருந்தாலும், உள்ளத்தில் அமர்ந்திருக்கின்றனர். மேலும் எல்லா பிராமண பரிவாரத்தினருக்கும் குஷி உண்டாகிறது. ஏனெனில் ஒரே சமயத்தில் 100-நாடுகளிலிருந்து ஒன்றாக வந்திருக்கின்றனர். இந்த சபை எவ்வளவு நன்றாக இருக்கிறது. எங்கெங்கிருந்தெல்லாம் வந்திருக்கிறார்கள்! மேலும் தங்களுடைய வீடு, பரிவாரம் மற்றும் பாப்தாதாவை சந்தித்து மகிழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே தான் பாப்தாதா டபுள் ஃபாரினர்ஸ்களுக்கான சந்திப்பு. விசேஷமாக டபுள் ஃபாரினர்ஸ்களுக்கு தனியாக குரூப் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே விசேஷமாக பறக்க வேண்டியதிருக்கும் நடக்கக்கூடாது. பறக்க வேண்டும். மேலும் டபுள் தீவிர புருஷாரத்தி டெயரே உங்களுக்கு இது தான்.

டபுள் புருஷாரத்தி குரூப்: விதவிதமான பொருட்கள் பார்ப்பதற்கு நன்றாக இருக்கிறதல்லவா? அதுபோல இதுவும் கூட விதவிதமான நாடுகளிலிருந்து வந்து ஒரே இடத்தில் கூடியிருக்கும் காட்சி மிக நன்றாக இருக்கிறது. இப்போது இக்காட்சியை உங்களால் பார்க்க முடியாது தந்தையால் பார்க்க முடியும் விஞ்ஞானம் உங்களுடைய சேவைக்காக, புருஷாரத்தத்திற்காக உருவாகியிருக்கிறது. நீங்கள் சம்பன்னமாகி விடுவீர்கள். விஞ்ஞானம் சமாப்தி ஆகி விடும். இந்த விஞ்ஞானம் அதி நுட்பமாக இதை விட சிறப்பாக உங்கள்! இராஜ்யத்தில் வரும். விஞ்ஞான சாதனம் உங்கள் எல்லோருக்கும் சேவை செய்யும் ஆனால் நிர்விக்னமாக இருக்கும் யாரெல்லாம் நிமித்தமாகி திட்டம் செய்திருக்கிறார்களோ, நடைமுறையில் கொண்டு வந்திருக்கிறார்.. களோ, அப்படிப்பட்ட நிமித்த டீச்சர்கள் எழுந்து நில்லுங்கள் இங்கேயே யார் சேபையில் ஃபாரின் டீச்சர்ஸ் நிமித்தமாகியிருந்தார்களோ. அவர்கள் எழுந்திருங்கள். ஆகவே பாப்தாதா நிமித்தமாகியிருக்கின்ற சேவாதாரி (சர்வீஸபுள்) குரூப்பிற்கு, விசேஷமாக அன்பு நினைவுகளை அளிக்கின்றார். ஆம். அப்படியே செய்கிறோம் என்று யார் தயாரானார்களோ, அவர்களுக்கு மிக, மிக வாழ்த்துக்கள். நல்லது.

இப்போது யாரெல்லாம் டபுள் புருஷாரத்தி பாண்டவர்கள் வந்திருக்கிறார்களோ, அந்த பாண்டவ சேனை எழுந்திருங்கள். டபுள் ஃபாரினர்ஸ் பாண்டவ சேனை. பாருங்கள். பாண்டவர்களின் விசேஷம் எப்படி மகிமை செய்யப்பட்டிருக்கிறது? பாண்டவர்களின் விசேஷ மகிமை இது தான், அதாவது அவர்கள் எப்போது வெற்றி அடைந்தார்கள் என்றால், எப்போது தந்தையை கூடவே வைத்திருந்தார்களோ. அப்போது தான் பாண்டவ பதியை துணையாக வைத்துக் கொண்டபோது வெற்றி அடைந்து விட்டார்கள். ஆகவே பாண்டவர்கள் இதை நினைவில் வைக்க வேண்டும். அதாவது நாங்கள் பாண்டவ பதியின் கூடவே இருக்கிறோம். பாண்டவ பதிக்கு துணையாகவும் இருக்கிறோம், துணைவர்களாயுமிருக்கிறோம். ஆதலால் உங்களுடைய டைட்டில் எது? சாதாரண பாண்டவர்கள் அல்ல, வெற்றிப் பாண்டவர்கள் (விஜயி பாண்டவ்) எப்போது பாண்டவர்களின் பெயரை எடுத்தாலும், வெற்றிப் பாண்டவர்கள் என்பது பிரசித்தமாக இருக்கிறது. நீங்கள் அந்த பாண்டவர்கள் தானே எத்தனை முறை வெற்றி

அடைந்திருக்கிறீர்கள். அநேக முறைகள் வெற்றி அடைந்திருக்கிறீர்கள். அநேக முறை ஆகிக் கொண்டேயிருப்பீர்கள். குழு நன்றாக இருக்கிறது.

இப்போது இந்நாட்டிலும், வெளிநாடுகளிலுமுள்ள எல்லா சிவசக்திகளும் எழுந்திருங்கள். பாருங்கள் சிவசக்திகளின் கூட்டம் பெரிதாக இருக்கிறது. உங்களுடைய விசேஷம் என்ன? சிவசக்திகளின் விசேஷம் என்ன? பாருங்கள். உங்களுக்கு தந்தையிடம் இவ்வளவு சம்மந்தம் இருப்பதன் காரணமாக, ஞாபகார்த்தத்திலும் கூட சிவசக்தி என்று அழைக்கின்றார்கள். தந்தையிடம் உள்ள உறவு முழு அரைக்கல்பத்திலும் கூட சிவசக்தி எனும் பெயரில் மகிமை உள்ளது. மேலும் இப்போதும் கூட சிவதந்தையுடன் இருக்கின்றீர்கள். துணைவர்களாயும், இருக்கின்றீர்கள். பாப்தாதா எப்போது சேவாதாரி குழந்தைகளாக இருக்கும் சகோதரர்கள், அல்லது சகோதரிகளைப் பார்க்கின்றாரோ அவர்களைப் பார்த்து பெருமையாக இருக்கிறது. ஆஹா எனது விஷ்வ பரிவர்த்தனை செய்யும் துணைவர்களே ஆஹா! ஆதலால் எல்லோரையும் சந்தித்து விட்டேனல்லவா? இது அவ்வப்போது சமயத்திற்குத் தகுந்தாற்போல கொஞ்சம் மாற்றம் இருக்கத்தான் செய்யும்.

பாப்தாதாவுக்கு சரீரத்தைக்கூட நடத்த வேண்டியதாக இருக்குமல்லவா? பார்க்க வேண்டுமல்லவா? எனினும் பாப்தாதாவுக்கு இரண்டையும் சமாளிக்கும் பார்ட் உள்ளது. குழந்தைகளும் கூட நன்றாகவே செய்திருக்கிறார்கள். 40-ஆண்டு பார்ட் செய்ய வேண்டியது நடந்து கொண்டிருக்கிறது. இப்போது 39-ஆண்டுகள் ஆகி விட்டன. மகிமைக்குரியதாக இருக்கிறது அவ்யக்த் பார்ட், பாப்தாதா இந்த இரண்டு பேருக்கும் (வாருங்கள் நீலு மற்றும் ஹம்சா) மேலும் துணைவர்களும் இருக்கின்றார்கள், துணையாக இருப்பவர்களும் கை உயர்த்துங்கள். சரீரத்தின் நாடி பார்த்து யோக யுக்தமாகி நடத்துகின்ற மிக நல்ல பார்ட் செய்து கொண்டிருக்கிறார்கள். மேலும் செய்து கொண்டேயிருக்க வேண்டும். நல்லது. இப்போது பாரதத்திலிருந்து விசேஷ அழைப்பின் பேரில் வந்திருப்பவர்கள் எழுந்திருங்கள். பாண்டவர்களும் வந்திருக்கிறார்கள். விசேஷ அழைப்பின் பேரில் வந்த பாண்டவர்களும் எழுந்திருங்கள். நல்லது. பாரதவாசிகளோ, தங்களுக்கும் கூட மேலும் தந்தையும் அறிந்திருக்கின்றார். இந்த

ஆத்மாக்களுக்கும்கூட விசேஷ பார்ட் உள்ளது. இவர்களுக்குப் பாலனையும் கிடைத்திருக்கிறது. பால்னை செய்துக் கொண்டுயிருக்கிரார்கள். மேலும் யாரெல்லாம் பாலனைக்கு நிமித்தமாகியிருக்கிறார்களோ அவர்களுக்கு அதிகப்படியான டாக்கியம் கிடைத்திருக்கிறது. பாண்டவர்களாயிருந்தாலும், சக்தியிருந்தாலும் விசேஷ பார்ட் செய்பவர்களுக்கு விசேஷ பாக்கிபத்தின் ரேஜை நெற்றியில் ஜொலிக்கிறது. பாப்தாதா இப்போது டாரத சீனில் ஹோம் ஓர்க் கேட்டார். எந்த ஜோன் நம்பர்-1 ஆனது ஜோன் (மண்டலம்) சென்டர் அல்ல எந்த ஜோன்? மதுபன்னாக இருந்தாலும், மதுடன் கூட இந்த பந்தயத்தில் உள்ளது. நம்பர்-1 யார்? இந்தஹோம் ஓர்க் கொடுத்திருந்தேனல்லவா? அதன் ரிசல்ட் கேட்டார்? இப்போது இன்னும் கொஞ்சம் சமயம் உள்ளது ஆனால் பரிவர்த்தனை வருவதில் கொண்டு வருவதில் நேரம் ஒன்றும் ஆகாது திடசங்கள்டம் வைத்தால் மட்டும் போதும் மதுபன் காரர்களுக்கும் வாய்ப்பு உள்ளது. நம்பர் எடுக்க முடியும். மற்றட்டி நன்றாக உள்ளது. பாப்தாதாவுக்கு குஷி தான். டபுள் லாட்டரி கிடைத்து விட்டது. கூட்டமும் கூட இவ்வளவு எங்கெங்கிருந்தெல்லாம் வந்திருக்கிறார்கள். ஆதலால் ஒரே சமயத்தில் இத்தனை பரிவாரத்தினருடன் சந்திப்பது தந்தையை சந்திப்பது புரோகிராம் செய்வது என்றால் அதிர்ஷ்டசாலிகள்! நல்லது ஆகவே எல்லோருடனும் சந்தித்தீர்களல்லவா? சந்திக்கவில்லை என்று சொல்ல முடியுமா? எல்லோரையும் சந்தித்து விட்டீர்கள் அல்லவா?

உங்கள் எல்லோருடைய சுப பாவனை மற்றும் சுப ஆசிர்வாதத்தால் இந்த ரதமும் கூட இயங்கிக் கொண்டிருக்கிறது. உங்கள் எல்லோருடைய அன்பின் காரணமான சத்துணவு இருக்கிறதல்லவா? அது பார்ட்டை நடத்திக் கொண்டிருக்கிறது குழந்தை இங்குமங்கும் சென்று கொண்டிருக்கும்போது கூறுகிறது. பழமொழி இருக்கிறது பாதையில் சென்று கொண்டிருந்த பிராமணன் மாட்டிக் கொண்டான் என்று அதுபோல நானும் கூட மாட்டிக் கொள்ளவில்லை ஆனால் நிமித்தமாகி விட்டேன் ஆனால் கொஞ்சம் கவனிக்கவும் வேண்டும் நீங்கள் திருப்தியுடன் இருக்கின்றீர்களா? ஒவ்வொரு குழுவோடும் சந்திக்க முடியாது. பாப்தாதா இந்த பார்ட்டைப் பார்த்து புன் முறுவல் செய்கின்றார். தாதி தைரியமாக நிமித்தமாக்கினார்.

நல்லது. டிரில் நினைவிருக்கிறதல்லவா? மறந்து விடவில்லை தானே? ஏனென்றால், பாப்தாதாவுக்குத் தெரியும் வரக்கூடிய சமயம் மிகவும் கூச்சல் குழப்பம் நிறைந்து மிகப் பயங்கரமானதாக இருக்கும். நீங்கள் எல்லோரும் அதிர்வலைகள் மூலம் உதவி செய்ய வேண்டியதாயிருக்கும். மேலும் ஆசுவாசப்படுத்தும் சக்தி கொடுப்பதிலேயே உங்களுக்கு தீவிர புருஷாரத்தம் ஆகி விடும் கொஞ்ச சமயத்தில் அதிர்வலைகள் மூலமாக சர்வ சக்திகளையும் கொடுக்க வேண்டியதாயிருக்கும் மேலும் யார்: இத்தகைய நாசூக்கான நேரத்தில் சக்தி கொடுப்பார்களோ, எத்தனை பேர்களுக்குக் கொடுப்பார்களோ, அதிகம் பேர்களுக்கானாலும், கொஞ்சம் பேர்களுக்கானாலும் அவ்வளவு தான். துவாபர மற்றும் கலி யுகத்தில் அவர்களுக்கு பக்தர்கள் ஆவார்கள். ஆதலால் சங்கமத்தில் ஒவ்வொருவரும் பக்தர்களையும் தங்களுடையவர்களாக ஆக்கிக் கொண்டிருகிறார்கள். ஏனெனில் கொடுக்கப்பட்ட சுகம் மற்றும் சாந்தி அவர்களுடைய உள்ளத்தில் அடங்கி விடும் பிறகு பக்தி ரூபத்தில் உங்களுக்குத் திருப்பித் தருவார்கள். நல்லது.

நாலா பக்கமுள்ள பாப்தாதாவின் கண்மணிகள், உலகத்திற்கு ஆதாரமாக இருப்பவர்கள் மற்றும் முன்னேற்றம் செய்யக்கூடிய ஆத்மாக்கள் மாஸ்டர் துக்க ஹர்த்தா, சுகர்த்தா துக்கத்தை நீக்கி சுகம் கொடுப்பவர்கள், விஷ்வ பரிவர்த்தனை செய்யும் குழந்தைகளுக்கு மிக மிக உள்ளத்தின் சிநேகம், உள்ளத்தின் அன்பு நினைவுகள் மற்றும் நூறு நூறு மடங்கு வரதானத்தை ஏற்பிராக? தாதிகளுடன்: எல்லோரும் குஷி அடைந்தீர்கள் அல்லவா நல்லது. இனி என்ன செய்ய வேண்டும். நல்லது. சாட்சியாகி கணக்கு வழக்குகள் முடிந்துக் கொண்டிருக்கிறது.

**பரதாதியுடன் நிர்மல் சாந்தாஜி:** பாருங்கள். எல்லோருக்கும் அன்பான, நிபாராவான ஆன்மா நீங்கள். எல்லோரும் நீங்கள் படுக்கையில் இருந்தாலும் கூட எல்லோருக்கும் உள்ளன்பு நிறைய உள்ளது. படுக்கையில் இல்லை. எல்லோருடைய உள்ளத்திலும் இருக்கிறிர்கள். நல்லது.

**வெளி நாட்டின் மூத்த சகோதரிகளுடன்:** (ஒரு புத்தகத்தை பாப்தாதாவுக்கு கொடுத்தார்கள்) நல்ல முயற்சி செய்திருக்கிறீர்கள்.

நல்லது. ராயலாக செய்திருக்கிறீர்கள். யாருக்கும் கொடுப்பதற்கு நல்ல அன்பளிப்பு ஆகி விட்டது. நன்றாக முயற்சியும் செய்திருக்கிறீர்கள். அன்பையும் காட்டியிருகிகிறீர்கள். டபுள் விதேஷிகளுக்கு பாலனையும் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். இதுவும் கூட, நல்லமுறையில் துணிச்சலாக முன்னேறிக் கொண்டிருக்கிறீர்கள். இன்னும் முன்னேறிக் கொண்டேயிருப்பீர்கள். நல்லது. குழுவினரையும் தங்களுக்குள் நன்றாகச் செய்திருக்கிறீர்கள். பாப்தாதா குஷி அடைகின்றார். ஊக்கம், உற்சாகம் அடைவதற்கு ஒரு சாதனமாகும். எல்லோருக்கும் புதுமை வேண்டுமல்லவா? நன்றாக உள்ளது. இவரைப் பின் தொடர்ந்தால் போதும். இதன் காரணமாக எல்லோரிடமும் ஆர்வம் உண்டாகட்டும். நாமும் கூட பார்ட் செய்யலாம். நாமும் கூட செய்து காண்பிக்கலாம் என்று ஆகி விடும்.

(சுதேஷ் சகோதரி லண்டன் செய்திகள் கூறினார்) பாப்தாதாவுக்கு வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்!

<u>மன்மோகினி காம்ப்ளெக்ஸ் இலாகா கட்டுமானத்தின் நிமித்த சகோதரர்கள்:</u> பிராமணர்களாகிய உங்களுக்கு பாப்தாதாவின் சார்பாக, குழந்தைகளின் சார்பாக, பரிவாரத்திற்காக மன்மோகினி வனத்தில் பவனம் தயாராகிக் கொண்டிருக்கிறது. பாப்தாதாவுக்கு குஷியாக இருக்கிறது. எல்லோருடைய சகயோகத்தின் மூலமாக பிராமண ஆத்மாக்கள் சௌகரியமாக இருப்பதற்கு தங்களை உற்சாகப்படுத்திக் கொள்வதற்கு எல்லோரும் அன்போடு தயார் செய்து கொண்டுமிருக்கிறீர்கள். மேலும் சகயோகமும் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆகவே கொஞ்சம் தயாராகி விட்டது. கொஞ்சம் தயாராகிக் கொண்டிருக்கிறது. ஆகவே எல்லோருடைய சகயோகத்தின் மூலமாக பிராமணர்களுக்காக எவ்வளவு தயாரானாலும், அது குறைவாகத்தான் ஆகி விடுகிறது. ஏனென்றால் பிராமணர்கள் அதிகமாகிக் கொண்டே இருக்கிறார்கள். ஆதலால் உங்கள் எல்லோருடைய ஒவ்வொரு துளி மூலமாக இது முடிந்து கொண்டிருக்கிறது. குஷியாக இருக்கிறதல்லவா? நம்முடைய சகோதர, சகோதரிகள் வருவார்கள், சுகமாக இருப்பார்கள், மேலும் வெற்றியை அடைவார்கள். உங்கள் எல்லோருக்கும் குஷியாக இருக்கிறது. ஆஹா, நமது வீடு பெரிதாகிக் கொண்டேயிருக்கிறது. ஆகவே தங்களுடைய

வீட்டைப் பார்த்து எவ்வளவு குஷியாக இருக்கிறது. இப்போதோ உலகாயதத்திலிருந்து வைராக்கியம் வரட்டும். பிறகு பாருங்கள். உங்களிடம் எத்தனை ஆத்மாக்கள் ஆசிகள் பெறுவதற்காகவும், சுகம் சாந்தி அடைவதற்காகவும் வரப் போகிறார்கள். அப்போது சுகம் அளிக்கும் வள்ளலாகிய நீங்கள் அவர்களுக்கு சரீர சுகமளிக்கும் சக்தி கொடுப்பீர்கள் அல்லவா? இது அதிகரித்துக் கொண்டேயிருக்கும். நீங்கள் அதிகமாக்கிக் கொண்டேயிருப்பீர்கள். தற்சமயத்தில் இப்படி. இதன் பிறகு இதை விட அதிகமாகும். செய்வீர்களா? அல்லது நிறைய செய்து விட்டீர்களா? நீங்களோ அழைத்துக் கொண்டு தான் இருக்கிறீர்கள் அல்லவா? யார் வந்தாலும் சரி, அஞ்சலியாவது பெற்றுக் கொள்ளட்டும். ஆசீர்வாதம் எவ்வளவு கொடுப்பீர்கள்? குஷியாக இருக்கிறது. நமது வீடு தயாராகிக் கொண்டிருக்கிறது. இல்லை, மதுபன்னுக்கு வீடு தயாராகிக் கொண்டிருக்கிறது அப்படியா? உங்களுக்காக தயராகிக் கொண்டிருக்கிறது அல்லவா? மிக்க நன்று. முயற்சி செய்பவர்களும் மிக நன்றாக அன்போடு செய்து கொண்டிருக்கிறார்கள். நல்லது.

மனோகர் தாதியின் நினைவு கொடுக்கப்பட்டது: உங்கள் எல்லோருக்கும் உங்களுடைய அன்பான தாதி மனோகர் இந்திரா நினைவிருக்கிறதல்லவா? சதா தனது பார்ட்டை நன்றாகவும், மிக நன்றாகவும் செய்து கொண்டேயிருந்தார். ஆதலால் இப்போதும் கூட எல்லோருக்கும் சிநேகம் மற்றும் சுப சங்கல்பத்தோடு தன்னுடைய பார்ட்டை செய்து கொண்டிருக்கின்றார். இன்னும் செய்து கொண்டேயிருப்பார். ஒவ்வொருவருக்கும் நிச்சயிக்கப்பட்ட பார்ட் உள்ளது. அவரோ, வதனத்தில் மகிழ்ச்சியோடிருக்கின்றார். இந்த சரீரத்தில் இல்லை ஆனால் வதனத்தில் மகிழ்ச்சியோடிருக்கின்றார். அவருடைய உள்ளத்தின் விருப்பம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. நல்லது!

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 15.11.2008 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உண்மையான தூய உள்ளத்தோடு பரமாத்மாவிடம் சிநேகம் உள்ளவராகி ஒவ்வொரு பிராப்தியின் அனுபவத்தின் அதாரிட்டி ஆகுங்கள்!

இன்று பாப்தாதா தன்னுடைய நாலா பக்கமும் உள்ள உண்மையான மனம், மற்றும் சுத்தமான மனதுடன் சிநேக பூர்வமாக போலாநாத் (கள்ளங்கபடமில்லாத) பாப்தாதாவை தன்னுடையவராக ஆக்கிக் கொண்ட குழந்தைகள் மற்றும் சிநேகமுள்ள குழந்தைகளைப் பார்க்கின்றார். இப்படிப்பட்ட உள்ளன்பு கொண்ட குழந்தைகளைப் பார்த்து பாப்தாதாவும் கூட ஆஹா! எனது சிநேகமுள்ள குழந்தைகளே ஆஹா என புகழ் பாடுகின்றார். இந்த பரமாத்ம சிநேகத்தை இந்த சங்கமத்தில் மட்டுமே அனுபவம் செய்ய முடியும். யார் உள்ளன்போடு தந்தையை நினைவு செய்கிறார்களோ. அப்படிப்பட்ட சிநேகமுள்ள குழந்தைகள் எப்பொழுதும் தந்தையின் நினைவில், தந்தையின் மன சிம்மாசனத்தின் அதிகாரி ஆகிறார்கள். பாப்தாதா இப்படிப்பட்ட சிநேகமுள்ள குழந்தைகளுக்கு விசேஷமாக அமிர்த வேளையில் ஏதாவதொரு விசேஷ வரதானம் அளிக்கின்றார். ஏனென்றால், சிநேகம் கொடுக்கக்கூடிய உள்ளன்புடைய குழந்தைகள் பாப்தாதாவையும் கூட தன் பக்கமாக கவர்ந்து விடுகிறார்கள், ஏனெனில் உண்மையான உள்ளன்பு உள்ளது. மேலும் வாழ்க்கையில் சிநேகமில்லையேல், வாழ்க்கையானது மகிழ்ச்சியாக இருக்க முடியாது. உங்கள் எல்லோருக்கும் அனுபவம் இருக்கிறது. தந்தையின் தன்னலமில்லாத சிநேகம் ஒவ்வொரு குழந்தைக்கும் எவ்வளவு பிரியமானதாக இருக்கின்றது! ஆதலால் பரமாத்ம சிநேகம் இந்த பிராமண வாழ்க்கைக்கு அஸ்திவாரமாகும். நீங்கள் எல்லோருக்கும் சிநேகத்திற்கு பாத்திரமுள்ளவர்களாகவும் அன்பை அனுபவம் செய்து

கொண்டிருக்கின்ற குழந்தைகள் ஆவீர்கள். ஞான முள்ளது ஆனால் ஞானத்தோடு கூடவே, பரமாத்ம சிநேகமும் கூட அவசியமானதாக இருக்கிறது. ஏனெனில் எங்கே சிநேகம் உள்ளதோ, அங்கே எல்லாவற்றையும் அனுபவம் செய்வது எளிதாக ஆகி விடுகிறது. சிநேகத்தின் சக்தியானது மிக அதிக அளவில் தந்தைக்கு அருகாமையில் கொண்டு வந்து விடுகிறது. சிநேகத்தின் சக்தியானது எப்போதும் தந்தையின் வரதானக்கரம் தன் தலை மீது இருக்கிறது என்ற அனுபவம் செய்விக்கிறது. சிநேகம் எப்போதும் தந்தையின் குடை நிழலாக ஆகி விடுகிறது. சிநேகமுள்ள ஆத்மா தன்னை தந்தையோடு கூடவே இருப்பதாக நினைக்கின்றார். சிநேகமுள்ள ஆத்மா சதா இனிமையுள்ளவராக இருக்கின்றார். சோர்வுடன் இருக்க மாட்டார். இனிமையுடன் இருப்பார். சிநேகமுள்ள ஆத்மா எப்போதும் நம்பிக்கை உடையவராக கவலையற்றவராக இருப்பார். சிநேகமுள்ளவர் சதா தன்னை தந்தையை நினைவு செய்வதில் சகஜயோகியாக அனுபவம் செய்வார். ஞானம் விதை போன்றது ஆனால் விதையோடு சிநேகம் என்பது தண்ணீராகும். ஒருவேளை விதைக்கு தண்ணீர் கிடைக்கவில்லையென்றால், பலனை அடைந்து விட்டதன் அனுபவம் இருக்காது. ஞானத்தோடு கூடவே, இந்த பரமாத்ம சிநேகமும் சதா எல்லா பிராப்திகளின் பலனை அனுபவம் செய்விக்கிறது. சிநேகத்தில் பிராப்திகளின் அனுபவம் மிக எளிதாக ஆகிறது. ஞானம் மட்டுமே இருந்து, சிநேகம் இல்லையென்றால் ஏன்? என்ன? என்ற கேள்விகள் எழக்கூடும் ஆனால் சிநேகம் இருந்தால், சதா சிநேக சாகரத்தில், அன்பில் மூழ்கியவர்களாக இருக்கின்றார்கள். சிநேகமுள்ள ஆத்மாவுக்கு தந்தைதான் உலகம். சதா ஸ்ரீமத் என்ற கை தலைமீது இருப்பதாக அனுபவம் செய்கிறார்கள். அவிநாஷி (அழிவற்ற) சிநேகம். முழு கல்பத்திற்கும் சிநேகமுள்ளவர்களாக ஆக்கி விடுகிறது. ஆதலால் ஒவ்வொருவரும் தனக்குத்தானே சோதனை செய்யுங்கள். உள்ளன்பின் அனுபவம் இருக்கிறதா? அல்லது இடையிடையே அன்பில் (சிநேகம்) கசிவு ஆகவில்லை தானே? ஏதாவதொரு ஆத்மாவின் மீது பிரபாவப்பட்டிருக்கிறீர்களா? ஒருக்கால், ஒருவரிடமுள்ள விசேஷத்தின் காரணமாக அல்லது விசேஷ குணத்தின் காரணமாக பிரபாவப்பட்டிருப்பீர்களேயானால், பரமாத்மாவின் அன்பில் நிறைந்திருப்பதில் கசிவு உண்டாகி விடுகிறது என்பதாகும். ஆதலால் ஒவ்வொருவரும் தன்னைத்தானே சோதிக்கட்டும், கசிவுள்ளவர்கள்,

சதா தந்தைக்கு சிநேகியாக சதா தந்தையுடனேயே இருப்பவராக, சதா தந்தையின் வரதானக்கை தலை மீது இருப்பதாக அனுபவம் செய்ய முடியாது. ஆதலால் ஞானி ஆத்மா மிகப் பிரியமானவர்கள்தான். ஆதலால் ஞானத்தோடு கூடவே உண்மையான. உள்ளம் அழிவற்ற தந்தையின் சிநேகம் அவசியமாக இருக்கிறது. ஒருவேளை ஞானம் உள்ளது ஆனால் பாபாவுடனான சிநேகம் கொஞ்சம் குறைவாக உள்ளது. உண்மையான மனம் மற்றும் சுத்தமான மனதில் அன்பு கொஞ்சம் குறைந்து விட்டாலும், காரியத்தில் கடின முயற்சி செய்ய வேண்டியதாயிருக்கும். முயற்சியில் யுத்தம் செய்ய வேண்டியதாயிருக்கும். ஆதலால் நிரந்தர நினைவு, நிரந்தர அன்பு, மலையையும் கூட கடுகு போல ஆக்கி விடுபவர்களாக ஆகி விடுவார்கள். ஏனெனில் சிநேகத்தில் பிராப்திகள் தெளிவாக அனுபவம் ஆகின்றன. மேலும் எங்கே அன்பு உள்ளதோ, அங்கு கடின முயற்சி குறைவு ஒருவேளை அன்பு உள்ளது சிநேகம் குறைவாக இருந்தால் முயற்சி அதிகம் செய்ய வேண்டியதாயிருக்கும்.

ஆகவே பாப்தாதா, இன்று நாலா பக்கமும் உள்ள குழந்தைகளின் உண்மையான உள்ளத்தோடு தந்தையிடம், சிநேகமுள்ளவர்களாக இருக்கிறார்களா? கடின முயற்சியிலிருந்து விடுதலையாகி சதா அன்புக்கடலில் எவ்வளவு மூழ்கியிருப்பவர்களாக இருக்கிறார்கள் என்பதை சோதித்துப் பார்த்தார். ஞானம், விதை போன்றது ஆனால் விதைக்கு சிநேகம் என்ற தண்ணீரும் அவசியம். இல்லையேல் எளிதாகக் கிடைக்க வேண்டிய பலன், அனுபவம் என்ற பலன் மிகக்குறைவாகவே அனுபவம் ஆகும். ஆதலால் தற்காலத்தில் பாப்தாதா குழந்தைகளை பிராப்தியின் அனுபவ மூர்த்திகளாகப் பார்க்க விரும்புகின்றார். நீங்கள் உங்களை சோதித்துப்பாருங்கள். ஒவ்வொரு சக்தி, ஒவ்வொரு பிராப்தி ஒவ்வொரு குணத்தின் அனுபவம் இருக்கிறதா? இவற்றில் அனுபவத்தின் அத்தாரிட்டியாக இருப்பீர்களானால் எப்படிப்பட்டதொரு பிரச்சனையும், அனுபவ அத்தாரிட்டியின் முன் கொஞ்சம் கூட பிரபாவத்தை ஏற்படுத்த முடியாது. எல்லா குழந்தைகளும் அறிவார்கள். ஞானத்தின் ஆதாரத்தில் நான் ஆத்மா என்று. புரிந்து கொண்டுமிருக்கிறார்கள். வாய் மொழியாகவும் கூறுகின்றார்கள் ஆனால் இங்குமங்கும் சென்று கொண்டிருக்கும் போது, ஆத்ம சொரூபத்தின் அனுபவம் இருக்கிறதா?

ஞானத்தின் ஒவ்வொரு உட் பொருளையும் (பாயிண்ட்) அனுபவம் செய்கிறீர்களா? அனுபவ மூர்த்தியாக இருக்கின்றவர், ஒருபோதும் எந்த ஒரு பிரச்சினையிலும் ஸ்திரமாகவும், உறுதியாகவும் இருப்பார். குழப்பத்தில் வர மாட்டார். ஏனென்றால், அதாரிட்டி என்பது நிறைய உண்டு ஆனால் எல்லாவற்றிலும் பெரிய அத்தாரிட்டி அனுபவம் என்பதாகும் ஆதலால் அனுபவத்தில் அதாரிட்டியாக இருந்தால் ஒவ்வொரு சக்தியும், ஒவ்வொரு ஞானத்தின் உட்பொருளும், ஒவ்வொரு குணமும் தன்னுடைய கட்டுப்பாட்டில் இருக்கும். அவசியமானால், எந்த சமயத்தில் எந்த சக்தி வேண்டுமோ அது ஒரு நொடியில் உதவிக்கு வந்து விடும் ஆனால் அனுபவத்தின் அத்தாரிட்டி குறைவாக இருக்குமானால், கடின முயற்சி செய்ய வேண்டியதாயிருக்கும். அனுபவம் என்பது மாஸ்டர் சர்வ சக்திவான். மாஸ்டர் கட்டளை இடுகிறார். அப்போது அந்த சக்தி உதவி செய்யாமலிருந்தால், கஷ்டப்பட வேண்டியதாக இருந்தால், கால தாமதம் ஏற்பட்டுக் கொண்டேயிருந்தால், மாஸ்டர் சர்வ சக்திவான் என்று சொல்ல முடியுமா? ஆதலால் ஒவ்வொரு பாடத்திலும், ஒவ்வொரு ஞானக்கருத்திலும் அனுபவியாக இருக்க வேண்டும். நினைவு சக்தியை எடுத்துக் கொண்டால் ஒரு வினாடியில் என்னுடைய பாபா இனிமையான பாபா (மேரா பாபா, மீட்டா பாபா) என்று நினைவு செய்கின்ற அதே சமயத்தில் லயித்து (ஒன்றிவிடுதல்) விடுகின்ற, மூழ்கி விடுகின்ற அப்படிப்பட்ட அனுபவம் இருக்கிறதா? எந்த சமயத்தில், எந்த ஒரு தாரணை அவசியமாக இருக்கின்றதோ அதை காரியத்தில் கொண்டு வர முடிகிறதா? காரியம் முடிந்து விட்ட பிறகு நினைவுக்கு வந்தால் இதை அனுபவத்தின் அத்தாரிட்டி மூர்த்தி என்று கூற முடியுமா? எஜமான் சக்திவானாக இருந்தால் ஒவ்வொரு சக்தியும், ஒவ்வொரு குணமும் கட்டுப்பாட்டில் இருக்கும் ஆதலால் ஒவ்வொருவரும் தன்னைத்தானே பாருங்கள், அனுபவத்தின் அத்தாரிட்டி என்ற ஆசனத்தில் சதா அமர்ந்திருக்கிறீர்களா? அனுபவம் என்ற ஸ்தானத்தில் நிலைத்திருப்பவர்களுக்கு அதாவது நினைத்ததும் நடந்து விட்டது, முயற்சி எதுவும் செய்ய வேண்டியதில்லை, நேரம் எடுத்து கொள்ள வேண்டியதும் இருக்காது. இதன் காரணமாக ஒவ்வொரு ஸ்ரீமத்படி வாழ்க்கையானது இயற்கையாகவே, சுலபமாகவே நிறைவேறி விடும். ஏனெனில் ஆரம்பத்திலேயே கூறியபடி உண்மையான மனம், சுத்தமான மனம் உள்ளவரிடம்

சிநேகமுள்ள ஆத்மாவிடம் அன்பில் மூழ்கியிருக்கின்ற ஆத்மாவிடம் பாப்தாதா இதோ இருக்கின்றேன் என்று ஆஜராகி விடுகிறார். நீங்கள் ஆம் என்று உடனே தயாராக இருக்கும்போது உங்களிடம் பாபாவும் சதா தயாராகவே இருப்பார். சகஜமான நினைவு என்பது பிராமண வாழ்க்கையில் இயற்கையான குணம் ஆகும்.

எல்லோருக்கும் முதன் முறையாக வந்திருப்பவர்களானாலும், வெகுகாலமாக வந்து கொண்டிருப்பவர்களானாலும் சரி, ஒவ்வொரு சக்தியும், ஒவ்வொரு குணமும் இயற்கை சுபாவமாக ஆகி விட்டதா? ஒவ்வொருவரிடமும் ஏதாவதொன்று இயற்கை சுபாவம் என்பதாக இருக்கின்றது. ஆதலால் சில சமயம், அநேக குழந்தைகள் பிராமண வாழ்க்கைக்கு தகுதியில்லாத சிறு தவறு ஏதாவது நடந்துவிட்டால், என்ன சொல்கிறார்கள்? என்னுடைய நோக்கம் இதுவல்ல, ஆனால் எனது சுபாவம் அப்படி என்கின்றனர். எப்படி ஒரு பலவீனமான சுபாவம் இயற்கை சுபாவமாக ஆகி விடுகிறதோ, அப்படி ஒவ்வொரு சக்தியும் பிராமண ஆத்மாவினுடைய இயற்கை சுபாவம் ஆகும். எந்த ஒரு பலவீனமான சுபாவம், இயற்கையானதாக ஆகி விட்டிருக்கிறதோ அது தேகாபிமானத்தின் அடையாளம். ஆதலால் புரிந்து கொண்டீர்களா? ஞானி ஆத்மா பாபாவிடம் வைத்திருக்கின்ற மனப்பூர்வமான சிநேகம் எல்லாவற்றையும் சகஜமாக்கி விடுகிறது. சிநேகமும் கூட பிராமண வாழ்க்கையில் உறுதுணையாக இருக்கிறது. மேலும் சிநேகம் நினைவை கஷ்டமானதாக ஆக்காது. மறப்பதுதான் கஷ்டம் சிநேகத்தை மறப்பது கஷ்டம். நினைவு செய்வது இயற்கையான சுபாவமாக்கி விடுகிறது.

ஆதலால் பாப்தாதா தற்சமயம் குழந்தைகளாகிய உங்கள் ஒவ்வொருவரையும் எந்த ரூபத்தில் பார்க்க விரும்புகிறார்? ஏனென்றால் சமயத்தின் வேகம் திடீரென என்ன வேண்டுமானாலும் நடக்கலாம் என்ற விளையாட்டைக் காட்டிக் கொண்டிருக்கிறது. ஆதலால் பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் பாப்சமானமாகப் பார்க்க விரும்புகின்றார் ஒவ்வொரு குழந்தையின் முகத்திலும், பாபாவின் முகம் பிரத்யட்சமாக வேண்டும். ஒவ்வொரு குழந்தையின் கண்களிலும், ஆண்மீக நஷா இருக்க வேண்டும். ஒவ்வொருவரின் முகத்திலும் எல்லா பிராப்திகளையும் அடைந்து விட்ட

புன்முறுவலுடன் கூடிய (மலர்ந்த) முகத்தோற்றம் தெரிய வேண்டும். ஒவ்வொரு நடத்தையிலும் நிச்சயத்தின் நஷா இருக்க வேண்டும். வந்திருக்கின்ற எல்லோரும் நிச்சய புத்தியுடையவர்களா? கை உயர்த்துங்கள். நல்லது, வாழ்த்துக்கள்! ஆனால் நிச்சய புத்தியின் அடையாளம் என்னவென்று மகிமை செய்யப்படுகிறது? நிச்சயபுத்தியை அடுத்து வரும் சொல் எது? நிச்சயபுத்தி என்ன? விஜயி, நிச்சய புத்தியின் அடையாளம் வெற்றி ஆகவே சதா நிச்சய புத்தியின் அடையாளம் என்ன ஆகிறது? சதா வெற்றியா? அல்லது அவ்வப்போது வெற்றியா? சதா வெற்றியாகத்தான் இருக்குமல்லவா ஆதலால் இப்போது இந்த நேரத்தின் கணக்குப்படி நிச்சயபுத்தியின் பிரத்யட்ச வெளிப்பாடு சதா வெற்றி ஆத்மா. முயற்சி செய்வோம் என்பதல்ல. விரும்புகிறேன், முயற்சியும் செய்கிறேன், ஆகத்தான் வேண்டும் அல்ல. அவருடைய வாய் மொழியில் சதா வெற்றி வெளிப்பட வேண்டும்.

பாப்தாதா பார்த்தார் எல்லாக் குழந்தைகளும் புருஷாரத்திகள்தான் ஆனால் இடையிடையே கவனக்குறைவானது புருஷார்தத்தை தீவிரப் படுத்துவதற்குப் பதிலாக தாமதப்படுத்தி விடுகிறது. பிறகு பாப்தாதாவுக்கும் கூட மிகவும் இனிமையான வார்த்தைகளைக் கூறுகின்றனர். என்ன சொல்கிறார்கள்? நீங்கள் உங்களையே கேட்டுப் பாருங்கள். ஆகி விடும். நேரப்படி சென்றடைந்து விடுவோம் ஆகவே இந்த அலட்சியம் ஆகத்தான் வேண்டும். பாப்தாதாவுக்கு எந்த ஒரு வாய்தா கொடுத்திருந்தார்களோ பாபா நாங்கள் உங்கள் கூடவே இருக்கிறோம் கூடவே செல்வோம். கையோடு கை சேர்த்து செல்வோம் என்பது ஆனால் பாப்சமான் ஆகாமல் பாபாவோடு எப்படிச் செல்ல முடியும்? ஒரு விஷயத்தில் பாப்தாதாவுக்கு குஷியாக இருக்கிறது. எந்த விஷயத்தில் எல்லாக் குழந்தைகளும், நடப்பவராயினும், பறப்பவராயினும் அனைவரும் தந்தையிடம் வைத்திருக்கும் அன்பில் நல்ல மார்க் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். சம்பூர்ணமாவது சம்பன்னமாவது வேறு விஷயம்; ஆனால் பாபாவிடம் அன்பு இருக்கிறது. அன்பில் மார்க் நன்றாக இருக்கிறது. இனி சமான் ஆவதில் மார்க் வாங்க வேண்டும். எது தந்தையின் மகா வாக்கியமோ அதுதான் குழந்தையின் வாக்கியமாக இருக்க வேண்டும். எது பாபாவின் கர்மமோ, அதுதான் குழந்தைகளின் கர்மமாக இருக்க வேண்டும். சமான் ஆவதற்காக ஒரு வார்த்தையை மட்டும் சுலபமாக நடைமுறையில்

கொண்டு வாருங்கள். சொல்வது எளிது. அந்த ஒரு வார்த்தை பாப்தாதா கராவன்ஹார் (பாப்தாதா செய்விப்பவர்) இந்த செய்விப்பவர் என்ற வார்த்தை ஆத்ம அபிமானி ஆவதை சுலபமாக்கி விடும். ஆத்மாவாகிய நானும் கூட இந்த கர்மேந்திரியங்களை இயக்குபவனாக இருக்கின்றனே. ஒவ்வொரு அடியிலும், ஒவ்வொரு காரியத்திலும் செய்விப்பவர் தந்தை. நான் நிமித்தமாக இருக்றேன். ஏனெனில் விக்னம் உண்டாக்குவது இரண்டு வார்த்தைகள் தான் ஒன்று நான் இரண்டாவது என்னுடையது செய்விப்பவர். என்ற வார்த்தையில் நான், எனது என்ற இரண்டு வார்த்தைகளும் சமாப்தி ஆகி விடும். நான் நிமித்தம் நிமித்தமாக்கியிருப்பவர் செய்விக்கின்றார். நான் எனும் அபிமானம் இருக்காது. ஆகவே கேட்டீர்களா? பாப்தாதா என்ன விரும்புகின்றார்? ஒன்று உண்மையான மனம் மற்றும் சுத்தமான மனதின் சிநேகம், போலாநாத் தந்தை (கள்ளம் கபடமில்லாதவர்) உண்மையான மனம் உடையவர்களிடம் மிக சுலபமாக ராசியாகி விடுகிறார். எப்போது போலாநாத் ராசியாக இருக்கின்றாரோ அப்போது தர்மராஜ் புருவங்களை நிமிர்த்திக் காட்ட முடியாது. தர்மராஜருக்கும் பை-பை (bye bye) என்று சொல்லிக் கொண்டே சென்று விடலாம். அவரும் கூட பாப்சமான் குழந்தைகளுக்கு நமஸ்தே செய்வார். வணங்குவார். நீங்கள் படிப்பட்ட தந்தைக்கு அன்பான குழந்தைகள் ஆனால் கொஞ்சம் சோதித்துப் பார்த்துக் கொள்ள வேண்டும், சிநேகத்தில் ஏதாவது கசிவு இருக்கிறதா என்று? தன்னுடைய தேக அபிமானம், மற்றவர்களிடம் பார்க்கின்ற ஏதாவது விசேஷம் பற்றிய கசிவை (லீக்கேஜ்) அடைத்து விட வேண்டும். நல்லது.

இன்று முதன் முறையாக வந்திருப்பவர்கள் எழுந்து நில்லுங்கள் நல்லது. பாதி வகுப்பு முதன் முறையாக வந்திருப்பவர்களுடையதாக இருக்கிறது. நல்லது. பாதி முதன் முறையாக வந்திருப்பவர்கள். நல்லது அமருங்கள். எனினும் பாப்தாதாவுக்கு குஷிதான். ஏனெனில் லேட் போர்டு போடப்பட்டு விட்டது ஆனால் டூலேட் போர்டு இன்னும் போடவில்லை. இப்போது வந்திருப்பவர்கள் பின்னால் இருக்கிறார்கள். ஆதலால் தீவிர புருஷாரத்தம் செய்து முன்னே செல்ல வேண்டும். நீங்கள் இந்த சங்கமத்தின் ஒவ்வொரு நொடியையும் பயனுற்ற வகையில் பயன்படுத்திக் கொண்டால் வெற்றி உங்கள் பிறப்புரிமையாகி விடும் ஆனால் கவனம் மிகவும் அவசியம்

(அட்டென்ஷன் பிளீஸ்) ஒரு நொடி கூட வீணாக்கக்கூடாது. கவனம் (அட்டென்ஷன்) என்பதையும் கோடிட்டு வைத்துக் கொண்டு முன்னேற வேண்டும். இப்படி உற்சாகம் உள்ளதா? முதன் முறையாக வந்திருப்பவர்கள் நாங்கள் முன்னே செல்வோம் என்று தைரியமாக இருப்பவர்கள் கை உயர்த்துங்கள் டி.வி.யில் காண்பியுங்கள். கணக்கு கேட்பேன். எனினும் பாப்தாதா உங்கள் எல்லோர் மீதும் சுப சங்கல்பம் வைத்திருக்கின்றார். தாமதமாக வந்திருந்த போதிலும் முன்னே சென்று காட்டுவீர்கள். செய்து காட்டுவீர்களா? எவ்வளவு பேர் எழுந்திருந்தார்களோ அவ்வளவு கரவொலி எழுப்புங்கள். நல்லது. ஆர்வம் இருக்கிறது. உற்சாகத்தோடு முன்னேறிச் சென்று கொண்டேயிருக்க வேண்டும்.

எல்லா குழந்தைகளினுடைய ஆன்மீக சம்பாஷனையில் பாப்தாதா மிக நல்ல நல்ல விஷயங்களைக் கேட்கின்றார். தினந்தோறும், மெஜாரிட்டி என்ன சொல்கிறார்கள்? மெஜாரிட்டி இந்த வாக்குறுதியைத்தான் (வாய்தா) கொடுக்கின்றார்கள். இன்று வரையிலும் எந்த பலவீனம் இருந்ததோ அது இனி மேல் இருக்காது. லட்சியம் வைத்திருக்கின்றார்கள் ஆனால் லட்சியத்தை லட்சணத்தில் கொண்டு வருவதில் நேரம் தேவைப்படுகிறது. ஒரு வெட்டில் இரண்டு துண்டு எனும்படியாக இருப்பதில்லை. நினைத்ததும் நடந்தது. இனி இப்படிப்பட்ட தீவிரமான வேகம் கொண்டு வர வேண்டும். துரிதமான கதி வேண்டும். நினைப்பதும் செய்வதும் ஒன்றாக இருக்க வேண்டும். இன்று நினைப்பது, செய்வதில் நாட்களைக் கடத்துவது, மாதம் கூட ஆகி விடுகிறது. அந்த ஒரு மாத காலத்திற்குள் திடீரென ஏதாவது ஆகி விட்டால் என்ன கதி ஏற்படும்? பாப்தாதாவுக்கு ஒவ்வொரு குழந்தையிடமும் விசேஷ அன்பு இருக்கிறது. ஆதலால் பாப்தாதா இதைத்தான் விரும்புகின்றார். எல்லோரும் பாப்சமான் ஆகி இப்போது கூடவே இருக்கிறீர்கள். கூடவே செல்ல வேண்டும். அடுத்து இராஜ்யம் செய்வதிலும் முதலாவது பிறவியியில் கூடவே வரவும் வேண்டும். விருப்பம் தானே! கை உயர்த்துங்கள். உங்களுடைய ஸ்தானத்தை உறுதி (புக்) செய்து விடலாம், செய்து விடலாமா? யோசிக்கிறீர்களா? யோசித்துச் சொல்லப் போகிறீர்களா? அல்லது புக் செய்து விடலாமா? புக் செய்யத்தான் போகிறோம் என்று நினைப்பவர்கள் கை

உயர்த்துங்கள் புக் செய்யத்தான் வேண்டும். ஆஹா! இங்கே பாருங்கள் வி.ஐ.பி கூட கை உயர்த்துகிறார் அற்புதம்! வாழ்த்துக்கள். நல்லது.

டீச்சர்ஸ்: யார் வந்திருக்கிறார்கள் கை உயர்த்துங்கள் டீச்சர்களிடம் பாப்தாதா என்ன எதிர்பார்க்கின்றார் தெரியுமா? டீச்சர்களிடம் பாப்தாதா இதைத்தான் எதிர்பார்க்கின்றார் உங்கள் தோற்றத்தில், பாப்தாதாவின் தோற்றம் தெரியட்டும். சாதாரணமாக தோற்றமளிக்கக்கூடாது. எதிர்காலத் தோற்றம் தெரிய வேண்டும். பாப்தாதா தெரிய வேண்டும். அப்படி ஆக முடியுமா? ஆக முடியுமா? நல்லது. இப்போது யாரெல்லாம் வந்திருக்கிறீர்களோ, அவர்கள் ஒரு மாதத்திற்குப் பிறகு மதுபனில், பாப்தாதாவுக்கு தன்னுடைய இந்த விசேஷம் பற்றிய ரிசல்ட் எழுதி அனுப்ப வேண்டும். ஏனெனில் நீங்கள் நிமித்தமாகியிருக்கிறீர்கள். நிமித்தமாகியிருப்பவர்களுக்கு பொறுப்பும் இருக்கிறது. உங்களுடைய முகம் ஒரு மாதத்தில் ஒருபோதும் சோர்வாகவோ, வீணான சிந்தனைகளுக்குட்பட்டதாகவோ இருக்குமா அல்லது பாப்தாதா ஒரு மாதத்தில் என்ன விரும்புகின்றாரோ அந்த தோற்றம் இருக்குமா? பிரச்சினை எதுவுமில்லை (நோ பிராப்ளம்) சரிதானா? பிரச்சினை எதுவும் இருக்காதா? அல்லது ஏதாவது கொஞ்சம் கொஞ்சம் வந்து விடுமா? வர விடக்கூடாது. பிரச்சினை வருவதற்கான வாசலை மூடி விட வேண்டும். டபுள் லாக் என்பது ஒன்று நினைவு, இரண்டாவது சேவை. மனசா சேவை எப்போதுமே செய்து கொண்டிருக்கலாம். சேவை செய்ய வாய்ப்பே கொடுக்கவில்லை என்று சொல்லக்கூடாது. மூத்த சகோதரி எனக்கு வாய்ப்பு தரவே இல்லை. மனசா சேவையை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. இரவிலும் கூட கண் விழித்து செய்ய முடியும். மனசா சேவை, சக்தி மூலமாகப் பரப்புங்கள். பாவம் அப்பாவிகள் மிகுந்த துக்கத்தில் இருக்கும் ஆத்மாக்களுக்கு உதவி செய்யுங்கள். ஆகவே ஒரு மாதத்தில் புதியவர்கள், மூத்தவர்கள் ஆகிய எல்லா டீச்சர்களும் இங்கு இப்போது வராதவர்களாயிருந்தாலும் ஒரு மாதத்தின் ரிசல்ட் அல்லது நோ பிராப்ளம் என்று எழுத வேண்டும் அல்லது எத்தனை நாட்கள் பிரச்சனையில் இருந்தீர்கள் என்பதற்கான காரணம் விவரமாக எழுத வேண்டியதில்லை. இப்படி நடந்தது இதனால் இப்படி ஆனது என்றெல்லம் எழுத வேண்டியதில்லை. சரிதானா? செய்ய வேண்டும். யார் செய்வார்களோ அவர்கள் கை உயர்த்துங்கள். நல்லது மிகவும் நல்லது. இங்கேயும் அமர்ந்திருக்கிறார்கள். நல்லது.

மதுபன் வாசிகள், ஞான சரோவர், பாண்டவ பவன், ஹாஸ்பிட்டல்காரர்கள், எல்லோரும் கை உயர்த்துங்கள் நல்லது. ஆகவே எல்லோரும் ரிசல்ட் எழுதுவீர்கள். எல்லோரும் எழுத வேண்டும். மதுபன்வாசிகளின் விண்ணப்பம் (அப்ளிகேஷன்) வந்து சேர்ந்தது. நல்லது இந்த முறை, சேவையில் இரண்டு ஜோன்கள் உள்ளன.

ராஜஸ்தான் மற்றும் இந்தூர் ஜோன் சேவை: இரண்டு ஜோனும் நன்றாகவே செய்திருக்கிறார்கள் ஆனால் பாப்தாதாவுக்கு ஒரு விஷயம் இன்னும் கூட பாக்கி இருக்கிறது. அது தெரியுமல்லவா? ராஜஸ்தானில் எத்தனை நல்ல நல்ல வாரிசுகள் உருவாகியிருக்கிறார்கள். ராஜஸ்தான் என்றால் ராஜாக்களின் ஸ்தானம் ஆகவேதான் பெயர் ராஜஸ்தான். ஆகவே எத்தனை வருங்கால ராஜ்ய அதிகாரிகள் தயாராகியிருக்கிறார்கள்? ஒவ்வொரு சென்டரும் இது வரையிலும் எத்தனை இராஜ்ய அதிகாரிகளை உருவாக்கியிருக்கிறீர்கள். இந்த கணக்கு உங்களிடம் இருக்கிறதா? ஆக ஒவ்வொரு சென்டரும் இராஜ்ய அதிகாரி ஆகக்கூடிய விசேஷ ஆத்மாக்களின் எண்ணிக்கையை எழுத வேண்டும். சேவை செய்து கொண்டிருக்கிறீர்கள். சேவைக்கான திட்டம் போடுகிறீர்கள் ஆனால் இப்போதைய நேரத்தின் நிலவரப்படி ஒன்று அவரவர் பகுதியிலுள்ளவர்களின் குறைகளை நிவர்த்தி செய்து எங்கெல்லாம் சென்டர் இருக்கிறதோ, அந்தப் பகுதிகளில் அக்கம்பக்கங்களில் அதிக முயற்சி எடுத்துக் கொண்டு எல்லோருக்கும் பாபாவின் அறிமுகம் மட்டும் கொடுத்தால் போதாது. குறைந்தபட்சம் பாபாவின் ஆஸ்தியையும் அடையும்படி செய்ய வேண்டும். ஏனெனில் தந்தை வந்தார் அவரிடமிருந்து நாங்கள் ஆஸ்தி அடைவதிலிருந்து வஞ்சிக்கப்பட்டு விட்டோம் என்று குற்றம்குறை சொல்லும்படியாக இருந்து விடக்கூடாது. ஆகவே இப்போது நாலா பக்கமும் இந்த சேவையை சீக்கிரம் சீக்கிரமாக செய்து முடிக்க வேண்டும். நிமித்தமாக ஒரு ஜோன் ஆனால் பாப்தாதா எல்லா ஜோன்களுக்கும் கூறுகின்றார். எந்த ஒரு பகுதியும் எந்த ஒரு கிராமமும், எந்த காலனியும் வஞ்சிக்கப்பட்டு விடக்கூடாது. எல்லோரும் கடைசியில் உங்கள் புகழ் பாடுவார்கள். ஆஹா! என்று நீங்கள் எங்களுக்கு தந்தையின் அறிமுகம் கொடுத்தீர்கள் என்ற இந்தப் புண்ணியக்கணக்கை தீவிர கதியில் சேமிக்க வேண்டும். ஆகவே இராஜஸ்தான் என்ன செய்ய போகிறீர்கள்?

எவ்வளவு சமயத்தில் குறை தீர்க்கப் போகிறீர்கள்? எவ்வளவு நேரம் அவசியமாக இருக்கிறது? யோசிக்கப் போகிறீர்களா? திட்டம் தயாரியுங்கள் ஒவ்வொருவருக்கும் பங்கிட்டு சீக்கிரம், சீக்கிரமாக பிளான் தயார் செய்யுங்கள். சில ஜோன்கள் செய்து கொண்டுமிருக்கின்றன. மேலும் வெற்றியும் கிடைத்துக் கொண்டிருக்கிறது. நல்லது. டீச்சர்கள் நிமித்தம் பாப்தாதா டீச்சர்களுக்கு அமிர்த வேளையில் விசேஷமாக திருஷ்டி கொடுக்கின்றார் ஏனென்றால் டீச்சர்ஸ் தந்தையின் ஸ்தானத்திற்கு அதிகாரிகள் ஆனால் திருஷ்டியை எவ்வளவு காரியத்தில் உபயோகிக்கிறீர்கள் அதை ஒவ்வொருவரும் தனக்குத்தானே அறிவீர்கள்? ஏனென்றால் விசேஷ ரூபத்தில் பாப்தாதாவுக்கு நிமித்த டீச்சர்கள் மீது சிநேகம் இருக்கிறது. ஆகவே திருஷ்டி (பாபாவிடமிருந்து) எடுத்துக் கொள்ளுங்கள் திருஷ்டி (எல்லோருக்கும்) கொடுங்கள். நல்லது. டீச்சர்களுக்கு துணையாக இருப்பவர்களும் நிறைய வந்திருக்கிறார்கள். சேவையில் உற்சாகத்தை பாப்தாதா பார்த்தார் இருக்கிறது. உற்சாகம் ஆனால் இனி இன்னும் கொஞ்சம் உங்கள் சேவையில் ஒத்துழைப்பு தரக்கூடிய ஆத்மாக்களை உருவாக்க வேண்டும். மற்றபடி நன்றாக இருக்கிறது. விருத்தியாகிக் கொண்டுமிருக்கிறது. யாரெல்லாம் இப்பொழுது எழுந்திருந்தார்களோ அவர்கள் எல்லாம் இதே ஜோனைச் சேர்ந்தவர்களா? கை உயர்த்துங்கள் துணையாக வந்திருக்கிறீர்கள் நல்லது.

இந்தூர்காரர்கள்: எழுந்திருங்கள் கை அசையுங்கள் இந்தூர் சேவை செய்து கொண்டுதான் இருக்கிறார்கள் ஆனால் உங்களோடு உதவியாளர்களாகி உங்களோடு சேவையில் பங்கெடுத்துக் கொண்டு சேவை செய்யக்கூடியவர்களை உருவாக்குங்கள். இடையிடையே உதவி செய்கிறார்கள், சேவையில் துணையாகவும் இருக்கிறார்கள் ஆனால் சதா கூடவே இருக்கும்படியான துணைவர்களை தயார் செய்யுங்கள். இதன் மூலம் அவர்களும் சேர்ந்து, சீக்கிரம் சீக்கிரமாக எல்லோருக்கும் அறிமுகம் கொடுக்க முடியும். மற்றபடி பாப்தாதாவுக்கு குஷியாக இருக்கிறது. விருத்தியும் செய்து கொண்டிருக்கிறீர்கள் ஆனால் விதியையும் கூட கொஞ்சம் வேகமாகச் செய்யுங்கள். புதுப்புது ஆத்மாக்கள் அதிகரித்துக் கொண்டிருக்கிறார்கள். இதைப் பார்த்து பாபா குஷியும் அடைகின்றார் ஆனால் வேகத்தை இன்னும் கொஞ்சம் அதிகரிக்க வேண்டும். சுய புருஷாரத்தம் இன்னும் தீவிர கதியில்

கொண்டு வாருங்கள். மற்றபடி ஒவ்வொரு குழந்தையும் இரண்டு ஜோன்களிலும் பாப்தாதாவுக்கு இவரை விட அவர் என்று மிகவும் பிரியமானவர்களாக ஆகியிருக்கின்றார்கள். இப்பொழுது ஆத்மாக்களுக்கு எப்படி தங்களுடைய தந்தையின் அன்பை அனுபவம் செய்வித்தீர்களோ அதே போலவே இந்த ஆத்மாக்களுக்கு கூட தந்தையின் அன்பை கொஞ்சம் அதிகமாக அனுபவம் செய்வியுங்கள் வஞ்சிக்கப்பட்டு விடக்கூடாது. ஏனெனில் ஆத்மாக்கள் நீங்கள் விஷ்வ கல்யாணிகள். ஆகவே உலகில் இப்போது எவ்வளவு அதிகம் பாக்கியிருக்கிறது. ஒவ்வொருவரும் தங்களுடைய ஜோனுக்கு கல்யாணியாக (நன்மை செய்யக்கூடியவர்கள்) ஆகுங்கள். ஜோனில் ஒருவர் கூட வஞ்சிக்கப்பட்டு விடக்கூடாது. இப்படிப்பட்ட பிளான் ஒவ்வொரு ஜோனும் சேர்ந்து தயார் செய்யுங்கள். வேகமான சேவை. சேவைக்கான சீசன் உண்டாக்குங்கள். வஞ்சிக்கப்பட்ட ஆத்மாக்களுக்கு கொஞ்சமாவது தந்தையின் அன்பின் அஞ்சலியாவது கிடைக்கச் செய்யுங்கள். இரக்கமுள்ள ஆத்மாக்கள் தானே? ஆத்மாக்களிடம் இரக்கம் வருகிறதா? வருகிறதா இரக்கம்? அப்படியானால் அனுபவம் செய்வியுங்கள். எவ்வளவு சகோதரர்கள், சகோதரிகள் வந்திருக்கிறீர்களோ இவர்கள் எல்லோருமே இது தங்கள் கடமை என்று உணருங்கள். உங்களால் எவ்வளவு முடியுமோ, அவ்வளவு ஆத்மாக்களுக்கு எப்படி நாம் திருப்தியடைந்திருக்கிறோமோ அவ்வளவு மற்ற எல்லோரும் திருப்தி ஆத்மாக்கள் ஆகட்டும். இப்பொழுது புண்ணியத்தைச் சேகரித்து ஒன்று சேர்ப்பதற்கு இயந்திரம் வைத்துக் கொள்ளுங்கள். புரிந்ததா? எவ்வளவு பேர் எழுந்தீர்களோ? அவர்கள் ஒவ்வொருவரும் இரண்டு அல்லது நான்கு பேரை தயார் செய்யுங்கள். செய்தி கொடுங்கள். இன்னார் எனக்கு தந்தையின் அன்பைப் பெறுவதற்கான வழியைக் காண்பித்துக் கொடுத்தார் என்ற சமாச்சாரம் கடிதம் மூலமாக அவர் எழுதும்படியாக இருக்க வேண்டும். அந்தந்த சென்டரில் சமாச்சாரம் கொடுக்கலாம். பாப்தாதா இதுதான் விரும்புகின்றார். குறை சொல்ல இடம் கொடுக்க கூடாது. மற்றபடி எல்லோரும் ஒருவர் மற்றவரை விட மிக மிக நல்லவர்களாகவே இருக்கிறார்கள். இன்னும் நல்லவர்களாகவே இருப்பார்கள். பாப்தாதாவுக்கு விசேஷமாக இந்த ஜோனுக்கு வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்! ஆனால், இப்போது வேகத்தை தீவிரப்படுத்துங்கள். பாப்தாதா ஜனங்களின் துக்கத்தின் அழுகுரலை கேட்கிறார் அல்லவா?

எப்போது ஆத்மாக்களாகிய குழந்தைகளின் துக்கத்தின் அழு குரல் தந்தைக்குக் கேட்கிறதோ அப்போது சொல்லுங்கள் தந்தைக்கு எவ்வளவு இரக்கம் உண்டாகும் என்று! நீங்களும் கூட இரக்கமனமுள்ள ஆத்மாக்கள் தான், கல்யாணகாரி ஆத்மாக்கள். இப்போது துக்கத்திலிருப்பவர்களுடைய குரலைக் கேளுங்கள். ஹே, விஷ்வ கல்யாணி ஆத்மாக்களே இரக்க மனம் உடையவராகி கருணை காட்டுங்கள். நல்லது, மிகவும் நல்லது.

டபுள் விதேஷி: நல்லது. வெளிநாட்டினர் எழுந்திருங்கள் வெளிநாட்டினரும் கூட மிகவும் சாமர்த்தியசாலிகள். ஒவ்வொரு குரூப்பிலும் வெளிநாட்டினர் ஆஜராகாமல் இருக்க மாட்டார்கள். ஒவ்வொரு குரூப்பிலும் தங்களுடைய பார்ட்டை செய்து கொண்டேதான் இருக்கிறார்கள். மேலும் பாப்தாதா மற்றும் பிராமண பரிவாரம் உங்கள் எல்லோருடைய தைரியத்தைப் பார்த்து குஷியடைகிறார்கள். இப்போதோ டபுள் பாரினர்ஸ் என்ற பெயரை மாற்றி என்ன பெயர் வைத்திருக்கின்றார்? டபுள் புருஷாரத்தி! ஆகவே எல்லோருக்கும் டபுள் அதாவது தீவிர புருஷாரத்தம் இருக்கிறதல்லவா? யார் நாங்கள் தீவிர புருஷாரத்திகள் என்று நினைப்பவர்கள் கை உயர்த்துங்கள். கை அசைத்துக் காட்டுங்கள் நல்லது. மெஜாரிட்டி இருக்கிறார்கள். வாழ்த்துக்கள். தீவிர புருஷாரத்தத்திற்கு வாழ்த்துக்கள். இப்போது தீவிர புருஷாரத்திகளாக இருக்கிறீர்கள் ஆனால் இனி தீவிர சேவாதாரி இந்த பார்ட்டும் செய்ய வேண்டும். ஏனென்றால் சுய புருஷார்தத்துடன் சேவைக்கான புருஷார்த்தத்தையும் தீவிரமாகச் செய்ய வேண்டும். ஏனென்றால் சேவைக்கான வாய்ப்பு இப்போதுதான் மேலும் வாய்மொழி மூலமாக சேவை செய்வதற்கான வாய்ப்பும் இப்போதுதான். எவ்வளவு செய்ய முடியுமோ டபுள், டிரிபில் (இரண்டு, மூன்று மடங்கு) செய்யுங்கள். ஃபாரின் மட்டுமல்ல, பாரதத்திற்கும் கூறுகின்றார். ஒவ்வொருவரும் தங்களுடைய சுயம் மற்றும் சேவைக்கான ரிசல்ட் கொடுக்க வேண்டும். உங்களை நீங்களே சோதித்துக்கொள்ளுங்கள் எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவு சுயத்திற்காகவும் சேவையின் பொருட்டும் கவனம் இருக்கிறதா? மற்றபடி நன்றாக இருக்கிறது இப்போது ஃபாரின் போதுமான அளவு சம்ஸ்காரத்தை தங்களுடைய அனாதி ஆதி சம்ஸ்காரம் இருக்கிறதல்லவா, அதில் வந்து விட்டார்கள், இப்போது பிராமண

கலாச்சாரம் பழக்கப்பட்டு விட்டது, சம்ஸ்காரத்தோடு கூடவே ஸ்தூல கலாச்சாரத்திலும்கூட. ஆகவே வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்! நல்லது.

இப்பொழுது ஒரு செகண்டில் தன்னுடைய மனம் புத்திக்கு எஜமானனாகி, மனம், புத்தியை பரந்தாமத்தில் ஒருமித்து நிலைத்திருக்கச் செய்ய முடிகிறதா? இப்பொழுது ஒரு நிமிடம் பாப்தாதா பார்க்க விரும்புகின்றார். எல்லோரும் ஒருங்கிணைந்து (ஏகாக்கிரதா) ஒருமுகப்பட்டு பரந்தாம் நிவாசி ஆகி விடுங்கள். (டிரில்). இப்படிப்பட்ட பயிற்சி சமயத்தில் உதவியாயிருக்கும் இப்போது நாசூக்கான நேரம் நெருங்கி வந்து கொண்டிருக்கிறது. இதை சாதாரணமாக எண்ணி விடக்கூடாது. ஒரு செகண்டில் எது என்னவாக ஆகி விடும்! ஆதலால் பாப்தாதா ஆரம்ப முதலே சைகை காட்டிக் கொண்டே இருக்கின்றார். நல்லது.

நாலா பக்கமுள்ள தீவிர புருஷாரத்தி ஆத்மாக்களுக்கு சதா உண்மையான மனதுடன் தந்தைக்கு சிநேகமுள்ள திலாராமின் குழந்தைகளுக்கு சதா சுயம் மற்றும் சேவையில் மேலும், மேலும் முன்னேறி பறந்து கொண்டேயிருக்கும், பறக்கும் கலையில் உள்ள குழந்தைகளுக்கு, சதா அமிர்த வேளை முதல் இரவு வரை ஒவ்வொரு ஸ்ரீமத்தையும் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்ற பாப்சமான் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள், உள்ள பூர்வ வரதானம் ஏற்றுக் கொள்வீராக! இத்தோடு கூடவே பாப்தாதாவின் உள்நாடு மற்றும் வெளிநாட்டைச் சேர்ந்த அனைத்து குழந்தைகளையும் உள்ளத்தில் அமர்த்தி நமஸ்தே.

தாதிகளுடன்: நன்றாக உள்ளது. மூன்றுபேரும் சேர்ந்து தோழிகளாக தொடர்ந்து சென்று கொண்டேயிருங்கள் (அங்கிள். ஆன்டியினுடைய நினைவைத் தந்தார்கள்) இவர்களுக்கு உண்மையான உள்ளத்தின் நினைவு இருக்கிறது. உண்மையான மனதுடன் பாப்தாதாவுக்கும் நூறு மடங்கு அன்பு நினைவுகள். நல்ல நிமித்தமாக இருக்கிறார்கள். கடைசி வரை அவ்வாறே நிமித்தமாயிருப்பார்கள்.

**சாந்தாமணி தாதியுடன்:** பாப்தாதா உங்களை தைரியமுள்ள குழந்தை தந்தையின் உதவிக்கு அதிகாரி குழந்தை எனக் கருதுகின்றார். நல்ல தைரியசாலி. முரளி வகுப்பு நடத்துகிறார். பாப்தாதாவும் கேட்கின்றார்.

**பரதாதியுடன்:** ஆஹா, இவர் பாப்தாதாவின் மனசிம்மாசனத்தில் அமர்ந்திருக்கின்றார். கேட்டுக் கொண்டிருக்கின்றார். கேட்பதில் மிகவும் நல்லவர். உங்களைப் பார்த்து உங்களுடைய முகத்தில் தந்தை காணப்படுகின்றார். தந்தையிடம் என்ன சக்திகள் இருக்கின்றதோ, குணம், இருக்கின்றதோ அவை உங்களுடைய வாழ்க்கையில் தெரிகின்றன, புரிந்ததா. மிகவும் நல்லது. ஆதி ரத்தினம் பாருங்கள், இருவரும் ஆதி ரத்தினங்கள். உங்களுடைய இருவரின் முகமும் சேவை செய்கிறது. மிகவும் நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋

# 30.11.2008 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# முற்றுப்புள்ளி வைத்து, சம்பூரண தூய்மையைக் கடைப்பிடித்து மனோ சக்தி மூலமாக சுகம் சாந்தியின் அஞ்சலி வழங்கும் சேவை செய்யுங்கள்!

இன்று பாப்தாதா நாலா புறமும் உள்ள மகான் குழந்தைகளைப் பார்க்கின்றார். எந்த மகான் தன்மை? உலகினர் எதனை சாத்தியமில்லை என்று கூறுகின்றார்களோ. அதனை எளிதாகவே சாத்திய மாக்கிக் காட்டி விட்டார்கள். அது என்னவென்றால், தூய்மையின் விரதம் நீங்கள் எல்லோருமே தூய்மையின் விரதம் கடைப்பிடித்திருக்கிறீர்கள் அல்லவா? பாப்தாதாவிடம் சுய மாற்றத்திற்கு திட சங்கல்பத்துடன் விரதம் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். விரதம் எடுப்பது என்பதன் பொருள், விரதம் மூலமாக சுய மாற்றம் கொண்டு வருவது அப்படியானால், விருத்தியை (உள்ளுணர்வு) மாற்றம் செய்து விட்டீர்களா? நாம் சகோதர சகோதரர்கள் என்று சங்கல்பம் செய்திருக்கிறோம். இந்த உள்ளுர்ணவின் மாற்றம் மூலமாக, எத்தனையோ விஷயங்களில் பக்தியிலும் கூட விரதம் மேற்கொள்கிறார்கள், ஆனால் நீங்கள் எல்லோரும் தந்தையிடம் திட சங்கல்பம் செய்திருக்கிறீர்கள். ஏனெனில் பிராமண வாழ்க்கையின் அஸ்திவாரமே தூய்மை தான். மேலும் தூய்மையின் மூலமாகத்தான் பரமாத்ம அன்பு மற்றும் எல்லா பரமாத்ம பிராப்திகள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. மகாத்மாக்கள் கடினம் என்று நினைப்பதை, சாத்தியமில்லை என்று கருதுவதை, நீங்கள் தூய்மை தங்கள் சுய தர்மம் என்று புரிந்து கொண்டீர்கள் பாப்தாதா பார்க்கின்றார். அநேக நல்ல நல்ல குழந்தைகள் யாரெல்லாம் சங்கல்பம் செய்தார்களோ, அவர்கள் எல்லோரும் திட சங்கல்பம் மூலமாக நடைமுறையில் மாற்றம் செய்து காட்டிக் கொண்டிருக்கிறார்கள். இம்மாதிரி நாலா பக்கமும் உள்ள

மகான் குழந்தைகளுக்கு பாப்தாதா மிகுந்த உள்ளன்போடு ஆசீர்வாதங்களை அளிக்கின்றார்.

நீங்கள் எல்லோரும் கூட, மனம், சொல், செயல், விருத்தி, திருஷ்டி மூலமாக தூய்மையை அனுபவம் செய்து கொண்டிருக்கிறீர்கள் அல்லவா! தூய்மையின் உள்ளுணர்வு என்பதன் பொருள் ஒவ்வொரு ஆத்மாவுக்காகவும் சுப பாவனை, சுப அபிலாஷை, திருஷ்டி (பார்வை) ஒவ்வொரு ஆத்மாவை யும் ஆன்மீக சொரூபத்தில் பார்ப்பது, தன்னையும் கூட எளிதாகவே சதா ஆன்மீக ஸ்திதியில் அனுபவம் செய்வது. பிராமண வாழ்க்கையின் மகத்துவம் மனம், சொல், செயலில் தூய்மை. தூய்மை இல்லை என்றால் பிராமண வாழ்க்கைக்கு எந்த ஒரு மகிமை உள்ளதோ அதாவது தூய்மை சக்தி மூலமாக தனக்கும் கூட தானே, ஆசீர்வாதம் செய்வது, என்ன ஆசீர்வாதம் செய்கிறார்கள்? தூய்மையின் மூலமாக சதா தானும் குஷியாக இருக்கும் அனுபவம் செய்கிறார்கள். மேலும் மற்றவர்களுக்கும் குஷியைக் கொடுக்கிறார்கள். தூய்மையான ஆத்மாவுக்கு மூன்று விசேஷ வரதானங்கள் கிடைக்கின்றன. ஒன்று தானே தனக்கு வரதானம் கொடுப்பது. இப்படிப்பட்டவர் எளிதாகவே தந்தையின் அன்பிற்குரிய வராகி விடுகின்றார். இரண்டாவது வரதாதாவான தந்தைக்கு மிக நெருக்கமான மிக மிக அன்பான குழந்தையாக ஆகி விடுகின்றார். ஆதலால் தந்தையின் ஆசீவாதங்கள் தானாகவே கிடைத்து விடுகிறது. மேலும் சதா கிடைத்துக் கொண்டேயிருக்கிறது. மூன்றாவதாக பிராமண பரிவாரத்தில் யார் விசேஷ நிமித்தமுள்ளவராகியிருக்கின்றார்களோ, அவர்களிடமிருந்தும் ஆசீர்வாதங்கள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. இந்த மூன்று மடங்கு ஆசீர்வாதங்களால் சதா பறந்து கொண்டேயிருப்பதோடு மற்றவர்களையும் பறக்கும்படி செய்கின்றார்கள். ஆகவே நீங்கள் எல்லோரும் கூட தன்னைத்தானே கேளுங்கள், தன்னையே சோதித்துப் பாருங்கள். தூய்மையின் சக்தியை, தூய்மையின் பலனை சதா அனுபவம் செய்து கொண்டிருக்கிறீர்களா? சதா ருஹானி நஷா (ஆன்மீக போதை) உள்ளத்தில் பேரானந்தம் இருக்கின்றதா? சிலசமயங்களில் ஒரு சில குழந்தைகள் அமிர்தவேளை சந்திப்பின்போது, தங்களது ஆன்மீக சம்பாஷணையில் என்ன கூறுகிறார்கள் என்று தெரியுமா? தூய்மையின் மூலமாக எந்த ஒரு அதீந்திரிய சுகம் அனுபவம் ஆகிறதோ அது சதா அனுபவம்

ஆகவில்லை. தூய்மையின் பலன் அதீந்திரிய சுகம்தான், ஆகவே உங்களையே கேளுங்கள். நான் யார்? சதா அதீந்திரிய சுக அனுபவத்தில் இருப்பவர்களா? அல்லது அவ்வப்போது மட்டும் தானா? உங்களை நீங்கள் என்னவென்று அழைக்கின்றீர்கள்? எல்லோரும் உங்கள் பெயரை எழுதும்போது என்ன எழுதுகிறீர்கள்? பி.கே. இன்னார். இன்னார் என்று மேலும் உங்களை மாஸ்டர் சர்வ சக்திவான் என்றும் கூறுகின்றீர்கள். எல்லோரும் அப்படி இருக்கின்றீர்கள் அல்லவா? மாஸ்டர் சர்வ சக்திவான்களா? யாரெல்லாம் தங்களை மாஸ்டர் சர்வ சக்திவான் என்று நினைக்கிறார்களோ, சதா சில சமயம் மட்டுமல்ல, அவர்கள் கை உயர்த்துங்கள். சதா? பாருங்கள், யோசித்துக் கை உயர்த்துங்கள். சதாவாக இருக்கின்றீர்களா? டபுள் ஃபாரினர்ஸ் கை உயர்த்தவில்லை. கொஞ்சம் பேர் உயர்த்தியிருக்கிறார்கள். டீச்சர்ஸ் (சகோதரிகள்) உயர்த்துங்கள். சதா இருக்கின்றீர்களா? பரவாயில்லை உயர்த்தலாம் என்று உயர்த்தாதீர்கள். சதா யார் அப்படி இருக்கிறார்களோ, அவர்கள் மட்டும் உயர்த்துங்கள். மிகக் கொஞ்சம் பேர் தான். பாண்டவர்கள் உயர்த்துங்கள். பின்னால் அமர்ந்திருப்பவர்கள் மிகச் சிலர் தான். சபையில் உள்ளவர்கள் அனைவருமே உயர்த்தவில்லை. நல்லது. மாஸ்டர் சர்வ சக்திவான் என்றால், அந்த சமயம் சக்திகள் எங்கே சென்று விடுகின்றன? மாஸ்டர் இதன் பொருள் மாஸ்டர் என்றால் தந்தையையும் விட உயர்ந்தவர்கள். ஆதலால் சோதித்துப் பாருங்கள். சதா சர்வ சக்திவானாக இல்லை என்றால் நிச்சயமாக தூய்மை எனும் அஸ்திவாரம் கொஞ்சம் பலவீனமாக இருக்கிறது. எங்கே பலவீனம் இருக்கிறது? மனதில், அதாவது சங்கல்பத்தில் (எண்ணம்) பலவீன மிருக்கிறதா? பேச்சில் பலவீனமிருக்கிறதா? கர்மத்தில் பலவீனமிருக்கிறதா? அல்லது சொப்பனத்தில் பலவீனம் இருக்கிறதா? ஏனென்றால், தூய்மையான ஆத்மாவின் மனம், சொல், செயல், சம்மந்தம், தொடர்பு, சொப்பனம் இயல்பாகவே சக்திசாலியாக இருக்கும். விருத்தியை (உள்ளுணர்வு) மாற்றுவதற்காக எப்போது விரதம் எடுத்துக் கொண்டிருக்கிறீர்களோ, அப்போது சில சமயம் மட்டும் என்பது ஏன்? காலத்தைப் பார்க்கின்றீர்கள். காலத்தின் அழைப்பு பக்தர்களின் கூக்குரல் ஆத்மாக்களின் கூக்குரல் கேட்கிறீர்கள். மேலும் திடீரென்று நடக்கும் என்ற பாடமும் எல்லோருக்கும் பக்காவாக இருக்கிறது ஆனால் அஸ்திவாரம் பலவீனமாக இருக்கிறது. அதாவது தூய்மையில்

பலவீனம் இருக்கிறது என்பது தான். மேலும் பேச்சிலும் சுபபாவனை, சுப அபிலாஷை இல்லையென்றால் தூய்மைக்கு விபரீதமாக இருக்கிறது. ஆதலால் தூய்மையின் மூலம் எந்த ஒரு சுகம், அதீந்திரிய சுகம் அனுபவம் ஆக வேண்டுமோ அது இருக்காது. ஏனெனில் பிராமண வாழ்க்கையின் இலக்ஷியமே நடக்கமுடியாததை, நடத்திக்காட்டுவது. இதில் இவ்வளவு அவ்வளவு என்பதில்லை. எவ்வளவு இருக்க வேண்டுமோ அவ்வளவு இல்லை என்பதாகும். ஆகவே நாளை அமிர்தவேளையில் விசேஷமாக ஒவ்வொருவருக்கும் தன்னை, மற்றவரைப் பற்றிய எண்ணம் வரக்கூடாது. அடுத்தவரைப் பார்க்கவும் கூடாது ஆனால் தன்னை சோதிக்க வேண்டும். எத்தனை சதவிகிதம் தூய்மையின் விரதத்தைக் கடைப்பிடித்துக் கொண்டிருக்கிறோம்? நான்கு விஷயங்களை சோதிக்க வேண்டும். ஒன்று விருத்தி, இரண்டாவது சம்மந்தம் மற்றும் தொடர்பில் சுப பாவனை, சுப அபிலாஷை. இவரோ இப்படித்தான் இருப்பார் என்பதல்ல. அந்த ஆத்மாவின் மீதும் சுப பாவனை. எப்போது நீங்கள் எல்லோரும் உங்களை உலக பரிவர்த்தனையாளர் (விஷ்வ பரிவர்த்தக்) என்று ஏற்றுக் கொண்டு விட்டீர்களோ (எல்லோரும் அப்படித்தானே). தங்களை நாங்கள் உலகப் பரிவர்த்தனையாளர்கள் என்று புரிந்து கொண்டிருக்கிறீர்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள். இதில் எல்லோருமே உயர்த்துகிறார்கள். இதிலோ மிக நன்றாக கை உயர்த்தியிருக்கிறார்கள். இதற்காக வாழ்த்துக்கள் ஆனால் பாப்தாதா உங்கள் எல்லோரிடமும்ஒரு கேள்வி கேட்கின்றார். கேட்கட்டுமா? எப்போது நீங்கள் உலகப் பரிவர்த்தனையாளர்களாக இருக்கின்றீர்களோ, விஷ்வ பரிவர்த்தனையில் இந்த இயற்கையும், 5-தத்துவங்களும் கூட வந்து விடுகின்றன. இவற்றையும் பரிவர்த்தனை செய்ய முடிகிறது. இப்படி இருக்கும்போது தன்னையும், உடன் இருப்பவர்களையும் பரிவாரத்தில் உள்ளவர்களையும் பரிவர்த்தனை செய்ய முடியாதா? விஷ்வ பரிவர்த்தக் (உலக மாற்றம் செய்யக்கூடியவர்கள்) என்றால், ஆத்மாக்களை, இயற்கையை, எல்லாவற்றையும் பரிவர்த்தனை செய்ய வேண்டும். ஆதலால் நீங்கள் எடுத்துக் கொண்ட உறுதிமொழியை நினைவு கூறுங்கள். எல்லோரும் தந்தையிடம் அநேக முறை வாக்குறுதி கொடுத்திருக்கிறீர்கள் ஆனால் பாப்தாதா என்ன பார்க்கின்றார் என்றால் நேரம் மிக வேகமாக நெருங்கி வந்து கொண்டிருக்கிறது. எல்லோருடைய கூக்குரலும் அதிகமாகிக்

கொண்டேயிருக்கிறது. இந்தக் கூக்குரலைக் கேட்டுக் கொண்டிருப்பவர்கள், பரிவர்த்தனை செய்யக்கூடிய உபகாரி ஆத்மாக்கள் யார்? நீங்கள் தானே!

பாப்தாதா இதற்கு முன்னரும் கூட கூறியிருக்கின்றார். பரோபகாரி மற்றும் உலக உபகாரி ஆவதற்காக மூன்று வார்த்தைகளை சமாப்தி செய்ய வேண்டியதாயிருக்கும், உங்களுக்குத் தெரியும், அறிந்து கொள்வதில் கெட்டிக்காரர்கள். எல்லோருமே கெட்டிக்காரர்கள் என்று பாப்தாதாவுக்குத் தெரியும். முதலாவது வார்த்தை பரசிந்தனை (வீண் எண்ணம்), பரதர்ஷன் (தவறான பார்வை) பரமத் (தவறான வழி) இந்த மூன்று விதமான தவறான வார்த்தையை சமாப்தி செய்து விட்டால் பரோபகாரி ஆகி விடுவீர்கள். விக்னம் வருவது இந்த மூன்று ரூபத்தில் தான். நினைவிருக்கிறதல்லவா? புது விஷயமல்ல. ஆதலால் நாளை அமிர்தவேளையின் போது சோதிக்க வேண்டும். பாப்தாதாவும் சுற்றி வருவார். பார்க்கலாம். என்ன செய்கிறீர்கள் என்று? ஏனென்றால், இப்போது இன்றைய நேரப்படி, கூக்குரலின் பிரமாணமாக ஒவ்வொரு துக்கமுள்ள ஆத்மாவுக்கும் மனோ சக்தி மூலமாக சுகம், சாந்தியின் அஞ்சலி வழங்க வேண்டும். காரணம் என்ன? பாப்தாதா சில சமயங்களில் திடீரென என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று குழந்தைகளைப் பார்க்கின்றார். ஏனெனில் குழந்தைகள் மீது அன்பு இருக்கிறதல்லவா? மேலும் குழந்தைகளுடனேயே செல்ல வேண்டும். தனியாகச் செல்லக் கூடாது. கூடவே செல்ல வேண்டும் அல்லவா? செல்வீர்களா? செல்வீர்களா? கூடவே வருவீர்களா? முன் வரிசையில் அமர்ந்திருப்பவர்கள் கை உயர்த்தவில்லை. வர மாட்டீர்களா? வருவீர்களா? பாப்தாதாவும் கூட குழந்தைகளின் காரணமாக, அட்வான்ஸ் பார்ட்டியிலும் கூட, உங்கள் தாதிகளும் கூட, உங்களுடைய விசேஷமான பாண்டவர்களும் கூட உங்கள் எல்லோரையும் எதிர் பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் கூட பக்காவாக உறுதிமொழி கொடுத்திருக்கின்றார்கள். நாங்கள் எல்லோரும் கூடவே செல்வோம் என்று. கொஞ்சப்பேர் அல்ல எல்லோரும் ஒட்டுமொத்தமாக கூடவே செல்வோம். ஆகவே நாளை அமிர்தவேளையில் எந்த விஷயத்தில் குறையிருக்கிறது என்று உங்களை சோதியுங்கள். எதில்? மனதிலா, பேச்சிலா அல்லது செயலில் வரும்போதா? பாப்தாதா ஒருமுறை எல்லா சென்டர்களையும் சுற்றி

வந்தார். சொல்லட்டுமா, என்ன பார்த்தார்? குறை எதில் இருக்கிறது என்று. அப்போது என்ன தெரிந்தது என்றால் ஒரு வினாடியில் பரிவர்த்தனை செய்து முற்றுப்புள்ளி வைப்பதில் குறை இருக்கிறது. எதுவரை ஃபுல்ஸ்டாப் வைக்கவில்லையோ அதற்குள்ளாக என்னென்னமோ நடந்து விடுகிறது. பாப்தாதா ஏற்கனவே கூறியிருந்தார். கடைசி நேரத்தில் கடைசியாக ஒரு குறிப்பிட்ட நேரம் இருக்கும். அதற்குள்ளாக ஃபுல்ஸ்டாப் வைக்க வேண்டியதாக இருக்கும் ஆனால் என்ன பார்த்தேன்? வைக்க வேண்டியது ஃபுல்ஸ்டாப் ஆனால் நடந்தது என்ன கேள்விக்குறி. மற்றவரைப் பற்றிய விஷயத்தை நினைவு செய்கிறார்கள். இப்படி ஏன் நடக்கிறது? இதென்ன நடக்கிறது? இப்படி ஆச்சரியக்குறி விழுந்து விடுகிறது. அதாவது முற்றுப்புள்ளி வைப்பதற்குப் பதிலாக கேள்விக்குறி, ஆச்சரியக்குறியின் அடையாளம் மற்றும் ஏன்? என்ற கேள்விக்குறியின் கியூ (வரிசை) நிற்கிறது. ஆதலால் இதை சோதிக்க வேண்டும். ஏனெனில் முற்றுப்புள்ளி வைக்கும் பழக்கம் இல்லாது போனால் கடைசி நேரத்தில் புத்தி எப்படி இருக்கிறதோ அப்படி கதி நேரிட்டு விடுகிறது. (அந்த் மதே ஸோ கதி) இது சிரேஷ்டமானதாக இருக்காது உயர்வானதாக இருக்காது ஆகவே தான் பாப்தாதா ஹோம் ஒர்க் (வீட்டுப்பாடம்) கொடுக்கின்றார். முக்கியமாக நாளை அமிர்தவேளையில் சோதிக்க வேண்டும். மாற்றி விடவும் வேண்டியதாக இருக்கும். ஒரு வார காலம், ஒரு வினாடியில் ஃபுல்ஸ்டாப் வைப்பதற்கான அப்பியாசம் அடிக்கடி செய்ய வேண்டும். மேலும் ஜனவரி-18ல் எலலோருக்கும் பாப்சமான் ஆக வேண்டும் என்ற ஆர்வம், உற்சாகம் உண்டாகிறது. ஆகவே ஜனவரி-18ல் எல்லோரும் சீட் எழுதி பெட்டியில் போட வேண்டும். ஜனவரி-18 வரை என்ன நடந்தது என்ற ரிசல்ட் எழுதிப் போட வேண்டும். முற்றுப்புள்ளி வைத்தீர்களா? அல்லது வேறு மாத்திரை (கேள்விக்குறி, ஆச்சரியக்குறி) வைத்தீர்களா? இது விருப்பமுள்ளதாக இருக்கிறதா? விருப்பம் தானே? தலையசைத்துக் காட்டுங்கள். ஏனெனில் பாப்தாதாவுக்கு குழந்தைகள் மீது மிகுந்த பிரியம் உள்ளது. தனியாகச் செல்ல விரும்பவில்லை. ஆகவே என்ன செய்யப்போகிறீர்கள். இனி வேகமாக தீவிர புருஷாரத்தம் செய்யுங்கள். இப்போது டீலா-டாலா (மேலும்கீழுமான) முயற்சி வெற்றியைத் தராது.

தூய்மை (பியூரிட்டி), பர்ஸனாலிட்டி, ரியல்ட்டி, ராயல்ட்டி என்று சொல்லப்படுகிறது. ஆகவே உங்களுடைய ராயல்ட்டியை (இராஜரீகம்) நினைவு செய்யுங்கள். அநாதி ரூபத்தில் கூட ஆத்மாக்களாகிய நீங்கள் தந்தையுடன் உங்களுடைய தேசத்தில் (பரந்தாமத்தில்) விசேஷ ஆத்மாக்களாக இருந்தீர்கள். எப்படி ஆகாயத்தில் சில நட்சத்திரங்கள் விசேஷமாக மின்னுகிறதோ, அப்படி நீங்கள் அநாதி ரூபத்தில் விசேஷ நட்சத்திரங்களாக ஜொலிக்கிறீர்கள். அடுத்து உங்களுடைய ஆதி காலத்தின் (சத்யுகம்) ராயல்ட்டியை நினைவு செய்யுங்கள். பிறகு சத்யுகத்தில் எப்போது வருகின்றீர்களோ அப்போதைய தேவதா ரூபத்தின் ராயல்ட்டியை நினைவு செய்யுங்கள். எல்லோருடைய தலை மீதும் ராயல்ட்டியின் ஒளிக்கிரீடம் தெரிகிறது. அநாதி, ஆதி இரண்டும் எவ்வளவு ராயல்டியாக இருக்கிறது பிறகு துவாபர யுகத்தில் வரும்போது உங்களுடைய சித்திரங்களின் ராயல்டியைப் (தெய்வீக அழகு) பார்த்தால், இதைப்போல் வேறு யாருடைய சித்திரமும் இல்லை. தலைவர்கள், நடிகர்கள், தர்மாத்மாக்கள் ஆகியோருடைய படங்களும் உண்டு ஆனால் உங்களுடைய சித்திரங்களுக்குச் செய்யப்படுகின்ற மரியாதை, பூஜை உங்களுடைய சித்திரங்களின் விசேஷம் எவ்வளவு ராயலாக இருக்கிறது உங்களுடைய சித்திரத்தைப் பார்த்த மாத்திரத்தில் குஷியடைந்து விடுகிறார்கள். சித்திரங்கள் மூலமாகவும் கூட எத்தனை ஆசீர்வாதங்களைப் பெறுகின்றார்கள். ஆகவே இந்த எல்லா மகத்துவமும் (ராயல்ட்டி) தூய்மைக்காகத்தான். தூய்மை பிராமண வாழ்க்கையின் பிறப்புரிமை. (ஜன்ம சித்த அதிகாரம்) தூய்மையில் குறை என்பது இல்லாமலே முடித்து விட வேண்டும். இது இப்படி நடந்து விடாது ஆனால் அந்த சமயத்தில் வைராக்கியம் வந்து விட்டால், நடந்து விடும். பேச்சு மிக நன்றாக இருக்கிறது. என்ன கூறுகின்றார்கள். பாபா நீங்கள் ஒன்றும் கவலைப்பட வேண்டாம், ஆகி விடும் ஆனால் பாப்தாதாவுக்கு இந்த ஜனவரி மாதத்தில் குழந்தைகள் ஒவ்வொருவரும் ஸ்பெஷலாக தூய்மையில் சம்பன்னமாகியே தீர வேண்டும். தூய்மை என்பது பிரம்மச்சரியம் மட்டுமல்ல. வீணான எண்ணமும் அபவித்திரதா தான் (விகாரம் தான்). வீண் பேச்சு, வீணான ரூபத்திலான பேச்சு, அதாவது ஆவேசமாகப் பேசுவது, இதுவும் கோபத்தின் அம்சம் தான். உங்களுடைய சம்ஸ்காரம் எப்படி இருக்க வேண்டும் என்றால் தூரத்திலிருந்து உங்களைப் பார்க்கும் போதே உங்களுடைய தூய்மையின் சக்தி அதிர்வலைகள் (வைப்ரேஷன்) அவர்களைச்

சென்றடைய வேண்டும். ஏனென்றால், உங்களைப் போன்ற தூய்மை அதாவது ஆத்மாவும் தூய்மை, சரீரமும் கூட தூய்மை என்று இருமடங்கு தூய்மை அடைந்திருக்கிறீர்கள். குழந்தைகள் யாராவது முதல் முறையாக வந்தார்களானால், அவர்களுக்கு தந்தையிடமிருந்து என்ன வரதானம் கிடைக்கிறது? நினைவிருக்கிறதா? பவித்திர பவ, யோகி பவ! ஆகவே இரண்டு விஷயங்களுக்கும் ஒன்று பவித்திரத்தா (தூய்மை) இரண்டாவது ஃபுல்ஸ்டாப், பிடித்திருக்கிறதா? பாப்தாதா அமிர்தவேளையில் சுற்றி வருவார். சென்டர்களையும் சுற்றி வருவார். பாப்தாதாவோ, ஒரு வினாடியில் நாலா புறமும் சுற்றி வர முடியும். ஆதலால் இந்த ஜனவரி அவ்யக்த மாதத்தில் ஏதாவது பிளான் தயார் செய்யுங்கள். மனசா சேவை, மனசா- ஸ்திதி மற்றும் அவ்யக்த கர்மம் மற்றும் பேச்சை அதிகப்படுத்துங்கள். ஆகவே ஜனவரி-18'ல் பாப்தாதா எல்லோருடைய ரிசல்ட்டையும் பார்ப்பார். பிரியமாயிருக்கிறதல்லவா? 18-ஜனவரி அமிர்தவேளை முதல் அன்பைப் பற்றிய பேச்சு தான் பேசுகிறீர்கள். எல்லோரும் புகார் கூறுகிறார்கள். பாபா ஏன் அவ்யக்தமானார் என்று. ஆதலால் தந்தையும் கூட புகார் கூறுகின்றார். சாகாரத்திலிருந்து, பாப்சமான் ஆவதற்கு எவ்வளவு சமயம் எடுத்துக் கொள்ளப் போகிறீர்கள்?

ஆகவே இன்று கொஞ்சமாக கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அன்பும் அளிக்கின்றார். கவனத்தில் மட்டும் கொண்டுவரவில்லை. அன்பும் இருக்கிறது. ஏனெனில் தந்தை இதைத்தான் விரும்புகின்றார். என்னுடைய ஒரு குழந்தை கூட பின் தங்கி விடக்கூடாது. ஒவ்வொரு கர்மத்திலும் ஸ்ரீமத் சோதிக்க வேண்டும். அமிர்தவேளை முதல் இரவு வரை எந்த ஒரு கர்மத்திற்கும் ஸ்ரீமத் கிடைத்திருக்கிறதா என்று சோதித்துப் பார்க்க வேண்டும். பலமாக இருக்கிறதல்லவா? கூடவே செல்ல வேண்டும் அல்லவா? செல்ல வேண்டும்! கை உயர்த்துங்கள். செல்ல வேண்டுமா? நல்லது, டீச்சர்ஸ்? நல்லது பின்னால் இருப்பவர்கள் கை உயர்த்துங்கள். நாற்காலியில் அமர்ந்திருப்பவர்கள் கை உயர்த்துங்கள். பாண்டவர்கள் கை உயர்த்துங்கள். சமான் ஆனால் தானே, கை மேல் கை கோர்த்துச் செல்ல முடியும் அல்லவா? செய்யத்தான் வேண்டும். ஆகத்தான் வேண்டும். இந்த திட சங்கல்பம் செய்யுங்கள். 15-20 நாட்கள் இந்த உறுதி இருக்கிறது. பிறகு கொஞ்சம் கொஞ்சமாக சிறிது அலக்ஷியம் வந்து விடுகிறது. ஆதலால்

அலக்ஷியத்தை சமாப்தி செய்யுங்கள். அதிகபட்சமாக ஒரு மாதம் வரை நல்ல உற்சாகம் இருக்கிறது. உறுதியும் இருக்கிறது. பிறகு சிறிது சிறிதாக அலக்ஷியம் ஆரம்பமாகி விடுகிறது. இப்போது இந்த ஆண்டு முடிந்து விடும். அப்படியானால் என்ன சமாப்தி செய்வீர்கள்? வருஷத்தை மட்டும் சமாப்தி செய்வீர்களா? அல்லது வருஷத்தோடு கூடவே எந்த ஒரு சங்கல்பத்தை தாரணை செய்வதில் பலவீனமிருக்கிறதோ, அதையும் சமாப்தி செய்வீர்களா? செய்வீர்கள் அல்லவா? கை உயர்த்தாமல் இருக்கிறார்கள். ஆகவே தானாகவே உள்ளத்தில் இந்த ரிகார்டு (பாட்டு) ஒலித்துக் கொண்டேயிருக்க வேண்டும். இப்போது வீடு திரும்ப வேண்டும். திரும்பிச் செல்வது மட்டுமல்ல, ஆனால் இராஜ்யத்திலும் வர வேண்டும். நல்லது.

யார் முதன் முறையாக வந்திருக்கிறார்களோ, பாப்தாதாவை சந்திப்பதற்கு அவர்கள் கை உயர்த்துங்கள். ஆகவே முதல் முதலாக வந்திருப்பவர்களுக்கு விசேஷ வாழ்த்துக்கள் அளிக்கின்றார். தாமதமாக வந்திருக்கிறீர்கள் (லேட்) ஆனால் வெகு தாமதமாக (டூலேட்) வரவில்லை. எனினும் தீவிர புருஷார்தத்திற்கான வரதானத்தை சதா கூடவே வைத்திருக்க வேண்டும். தீவிர புருஷார்த்தம் செய்யத்தான் வேண்டும். செய்வீர்கள். செய்வோம், வோம், வோம் என்று சொல்லக்கூடாது. செய்யத்தான் வேண்டும். லாஸ்ட் ஸோ ஃபாஸ்ட், மற்றும் ஃபர்ஸ்ட் (விரைவாக, முதல் நம்பர்) ஆக வரவேண்டும். நல்லது. இப்போது என்ன செய்ய வேண்டும்?

சேவைக்கான வாய்ப்பு பஞ்சாப் ஜோன்: (பஞ்சாப், ஹரியானா, இமாச்சல், ஜம்மு, காஷ்மீர், உத்தராஞ்சல்) நல்லது. கிடைத்திருக்கின்ற இந்த வாய்ப்பு மிகவும் விருப்பமுள்ளதாக இருக்கிறதா? இது ஸ்பெஷல். பஞ்சாப் என்பதன் பொருள்.. ஸ்தூலமான நதிகள் பாவன (புனித) மாக்குகின்றன என்று கூறுகின்றார்கள். ஆதலால் பஞ்சாபின் பதீத பாவன குழந்தைகள், பஞ்சாபை பாவன ஆத்மாக்களாக ஆக்குவதில் முதல் நம்பராக இருப்பீர்கள் அல்லவா? பாருங்கள். பஞ்சாப் ஒரு விஷயத்தில் விசேஷமானதாக இருக்கிறது. அதாவது முதல் முதலில் ஆதியில் எந்த ஒரு சொற்பொழிவு நடந்ததோ, அது மகாத்மாக்களின் அழைப்பின் பேரில் நடந்தது. நினைவிருக்கிறதல்லவா? குழந்தைக்கு (தாதி ஜனாகி) நினைவிருக்கிறதா? மற்றபடி வேறெங்காவது

மகாதமாக்கள் கூடியிருக்கும் சபையில், சொற்பொழிவு செய்வதற்காக அழைப்பிதழ் கிடைத்திருக்கலாம் ஆனால் முதன் முதலாக என்று சொல்ல முடியாது. இப்படி நடக்கவில்லை. ஆகவே தான் பஞ்சாப் சிங்கம் என்று சொல்லப்படுகிறது. ஏனெனில் சிங்கத்தினுடைய வேலையைச் செய்திருக்கிறார்கள் அல்லவா எல்லா சாது சந்நியாசிகள் கூடியிருக்கும் சபையில் வாதிட்டார்கள் என்றால் பஞ்சாப் சிங்கம் ஆகிறதல்லவா இப்போதும் கூட இந்தக் குழந்தை (அமீர்சந்த் சகோதரர்) லிஸ்ட் கொடுத்திருக்கின்றார். பாப்தாத கூறியிருந்தார், யாரெல்லாம் வி.ஐ.பிக்கள் சம்மந்தத்தில் வந்திருக்கிறார்களோ. அவர்களுடைய லிஸ்ட் கேட்டிருந்தேன். பல துறையினருக்கு (வர்க்க ரீதியாக) சேவை நடந்திருக்கிறது. எல்லா ஜோன்களிலிருந்தும் சம்மந்தத்தில் வந்திருக்கின்ற விஜபிக்களின் லிஸ்ட் கொடுக்க வேண்டும். பஞ்சாப் ஜோன் மூலமாக சம்மந்தத்தில் வந்திருக்கின்ற வி.ஐ.பி'கள் லிஸ்ட் கிடைத்தது. லிஸ்ட் கொடுத்திருக்கின்றார் கரவொலி எழுப்புங்கள். நல்லது. இப்போது இவர்களுடைய லிஸ்ட் பார்த்தேன். நன்றாக இருக்கிறது ஆனால் இவர்களுக்கு தொடர்ந்து சேவை செய்து கொண்டேயிருக்க வேண்டும். வி.ஐ.பிக்கள் வி.ஐ.பிக்களாகவே இருந்து விடக்கூடாது. இவர்களை முதலில் மேடையில் கொண்டு வந்தீர்கள். இனி அடுத்தப்படியாக ஒவ்வொரு காரியத்திலும், ஒவ்வொரு சமயத்திலும் அன்புடையவர்களாகவும், சகயோகிகளாகவும் ஆக வேண்டும். இதன் பிறகு பிராமண பரிவாரத்திற்கு துணைவர்களாக ஆகட்டும். மேலும் பரிவாரத்தினரை தங்களுடையவராகக் கருத வேண்டும். சில இடங்களில் விஜ.பிக்கள் முன்னேறியிருக்கிறார்கள். பாப்தாதா அவர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார் ஆனால் இவ்வளவு சேவையும் ஞானசரோவர் ஆரம்பமாகிய பின்னர் நடந்திருக்கிறது. எத்தனை துறையினருக்கு சேவை நடந்திருக்கிறது எவ்வளவு காலம் எவ்வளவு சேவை நடந்திருக்கிறது. இதன் பிரமாணமாக விஜ.பிக்கள் இந்த பரிவாரத்தில் ஒருவராக ஆக வேண்டும். போன் செய்யுங்கள், வந்து சேரட்டும். ஆம். அப்படியே ஆம் என்று சொல்லட்டும், துணைவர்களாகவாவது ஆகட்டுமே, இனி ஒவ்வொரு வர்க்கத்தினரும் (வெவ்வேறு துறையைச் சார்ந்தவர்கள்) சகஜயோகி ஆக வேண்டும் என்ற லக்ஷியம் வைக்க வேண்டும். மரியாதை கொடுக்கலாம். சிறப்பு விருந்தினர்களாக எல்லோரும் வரட்டும் என்று நினைக்கக்கூடாது. கொஞ்சம் உறவில் கொண்டு

வாருங்கள். உங்கள் சென்டருக்கு அழைப்பு அனுப்புங்கள். அபு மலைக்கு வர முடியாமல் இருக்கலாம். மற்றபடி உங்கள் ஜோனில் உள்ள பெரிய, பெரிய சென்டருக்கு வரும்படி அழைப்பு அனுப்பலாம். குறைந்த பட்சம் 3-மாதம் அல்லது 6-மாதங்களுக்கு ஒரு முறை சந்தித்துக் கொண்டே இருக்க வேண்டும். உறவுக்காரர்களாக ஆகி விடட்டும். பிறகு சமயம் வரும்போது, நிலைமை மாறும்போது அவசியமான நேரத்தில் உபயோகமாக இருப்பார்கள். எல்லா வர்க்கத்தினரும் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். இங்குமங்குமாக ஆகியிருக்கிறார்கள் ஆனால் சிலர் தான் ஆகியிருக்கிறார்கள். பஞ்சாப்காரர்கள். சிங்கங்கள் தானே. சரி. இரு கைகளையும் உயர்த்துங்கள். எல்லோருமே சிங்கங்கள். ஆதலால் முதல் நம்பர் நீங்கள் வரவேண்டும். பஞ்சாப் விஜபிக்கள் பரிவாரத்தில் ஒருவராக ஆகட்டும். மகாத்மாக்களும் கூட பரிவாரத்தில் ஒருவராக ஆகட்டும். அழைப்பின் பேரில் வரக்கூடாது. அவர்களே. நாங்கள் வருகிறோம் என்று சொல்ல வேண்டும். நன்றாக இருக்கிறது. பஞ்சாப்பில் விருத்தி ஆகியிருக்கிறது. பாப்தாதாவுக்கும் கூட பஞ்சாப் மீது அன்பு இருக்கிறது. ஏன் அன்பு இருக்கிறது? ஜம்மு, காஷ்மீரையும் தன்னோடு சேர்த்துக் கொண்டார்கள் ஆனால் கொஞ்சம் தான். மேலும் ஜம்மு காஷ்மீர் பெயர் பிரசித்தமாக இருக்கிறது. பாகிஸ்தானில் ஆகட்டும், அமெரிக்கா ஆகட்டும் எல்லோருடைய பார்வையும் ஜம்மு, காஷ்மீர் மீது உள்ளது. ஆதலால் அங்கு ஏதாவது அற்புதம் நிகழ்த்துங்கள் ஆனால் இதை அங்குள்ள சகோதரிகள் செய்யட்டும் என்று விட்டு விடக்கூடாது. நீங்கள் சகயோகம் செய்து, அதில் கொஞ்சம் ஆச்சரியப்படும் படியான காரியம் செய்து காட்டுங்கள். கொஞ்சம் கவனம் கொடுத்தால், பெயர் பிரசித்தமாகி விடும் எதன் காரணமாக சண்டை நடக்கிறதோ அங்கே சாந்தியின் கொடியை பறக்க விடுங்கள். சரி. எண்ணிக்கை அதிகமாக உள்ளது. ஒன்று நிர்விக்னமாக இருக்கட்டும். இரண்டாவது சேவையில் சாந்தியின் கொடியைப் பறக்க விடுங்கள். எல்லோருக்கும் கொடி பறப்பது தெரியட்டும். அசாந்தியான இடத்தில் சாந்திக்கொடி பறக்கிறது என நினைக்கட்டும். நல்லது.

**டபுள் ஃபாரினர்ஸ் (வெளி நாட்டினர்):** இப்போது நீங்கள் டபுள் விதேஷி இல்லை. இப்போது டபுள் தீவிர புருஷாரத்திகளாக இருக்கிறீர்களா? நல்லது. நீங்கள் எல்லோரும் இத்தனை தேசங்களிலிருந்து வருகிறார்கள் என்று பெயர் சொன்னார்கள். இத்தனை தேசங்களில்

சேவா கேந்திரங்கள் இருக்கின்றன. இதைக்கேட்டு, எல்லோரும் குஷி அடைகிறார்கள், பரவாயில்லை, எல்லோரும் அவரவர் தேசங்களில் கொடி பறக்க விடாமல் இருக்கலாம். லண்டன் ஒன்றில் மட்டும் கொடி பறந்து கொண்டிருக்கிறது. மற்ற தேசங்களில் இல்லை. இருக்கிறது என்றால் கை உயர்த்துங்கள். எல்லோருக்கும் தெரியும்படியாக கொடி பறக்க விடப்பட்டுள்ளதா? எந்த ஒரு எதிர்ப்பும் இல்லை. நல்லது. எத்தனை தேசங்களில் உள்ளது. 10-12 தேசங்களில் இருக்கும். இதுவும் கூட நல்லது தான் ஆனால் பாப்தாதாவுக்கு குஷியாக இருக்கிறது. அநேக ஆத்மாக்களின் உள்ளத்தில் கொடி பறந்து கொண்டிருக்கிறதல்லவா? ஆகவே உங்களைப் பார்த்து குஷி அடைகிறார்கள். இவர்கள் உலக சேவாதாரிகள். பாரதத்திற்கு மட்டும் சேவாதாரிகள் அல்ல. உலக முழுமைக்கும் சேவாதாரிகள். விஷ்வ சேவாதாரி என்ற டைட்டில் இருக்கிறதல்லவா? பாரதம் மட்டுமல்ல. உலகின் மூலை முடுக்குகளிலெல்லாம் இருக்கிறது. மேலும் இன்னும் அதிகமாக சேவையை விஸ்தரித்துக் கொண்டிருக்கிறீர்கள் அல்லவா? முஸ்லீம் தேசங்களிலும் கூட சேவை நடக்கிறது. பாப்தாதாவுக்கு சமாச்சாரம் கிடைத்தது. நன்றாக உள்ளது. கராச்சிக்கும் கூட பிளான் (திட்டம்) தயார் செய்திருக்கிறார்கள். நன்றாக இருக்கிறது. என்ன நடக்க வேண்டுமோ, டிராமா நல்லதிலும் மிக நன்றாகவே இருக்கும். எந்தெந்த புதுப்புது நகரங்களில் குழந்தைகள் தெரியாமல் பாக்கியிருக்கிறார்களோ, அங்கு இப்போது சேவை உற்சாகத்துடன் நடந்து கொண்டிருக்கிறது. மேலும் எல்லோரையும் விட மிக தைரியசாலியான உங்களுடைய குழந்தை ஒன்று இருக்கிறது. அவர் தைரியசாலி பாப்தாதா தினந்தோறும் அவருக்கு அமிர்தவேளையில் வரதானம் கொடுக்கின்றார். மேலும் குழந்தையும் கூட (அக்யுரேட்) மிகவும் சரியாக நடந்து கொள்பவராக இருக்கின்றார். என்ன பெயர்? (வஜிஹா) அப்படி காரியம் செய்து காட்டுங்கள். மிக தைரியசாலி பயப்படுவதேயில்லை. பாருங்கள். தன்னுடைய குடும்பத்தாரையும் யுக்தியாக சரி செய்து விட்டார். கெட்டிக்காரர். நைரோபி காரர்களும் கூட மிக நல்ல முறையில் புருஷார்த்தம் செய்திருக்கிறார்கள். அவர்களுடைய விசேஷம் அதாவது நைரோபி நாட்டினருடைய விசேஷம் இது தான். சகோதரிகள் குறைவாக இருந்தால், யார் மாணவர்களாக இருக்கிறார்களோ அவர்கள் சென்டரை பராமரிக்கிறார்கள். இதுவும் ஒரு விசேஷம். ஆகவே எல்லோருடைய

விசேஷங்களையும் ஒன்று சேர்த்து ஒவ்வொருவரும் தங்கள் ஸ்தானத்தை விசேஷமுள்ளதாக ஆக்குங்கள். மற்றபடி நன்றாக இருக்கிறது. டபுள் புருஷாரத்திகள், நன்றாக புருஷாரத்தம் செய்து முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள் ஆனால் பாபா சார்ட் பார்ப்பார். எந்த ஒரு சமாச்சாரம் கூறினார்களோ, அந்த சார்ட் அதாவது சம்பூரண பவித்திரத்தா பற்றியது. நல்லது. லக்ஷியம் எல்லோருக்கும் நன்றாக இருக்கிறது ஆனால் இடையில் அலக்ஷியம் என்ற மாயை நிறைய வருகிறது. இப்போது அதற்கு விடை கொடுக்க வேண்டும். அலக்ஷியத்திற்கு விடை கொடுத்து ஃபுல்ஸ்டாப் வைப்பதை வரவேற்க வேண்டும். சரிதானா? செய்வீர்கள் அல்லவா? அலக்ஷியமாக இருந்து விடக்கூடாது. பாப்தாதா அலக்ஷியத்தின் நிறைய விளையாட்டுக்களைப் பார்த்து விட்டார். இனி ஒரு வினாடியில் ஃபுல் ஸ்டாப் என்ற விளையாட்டைக் காட்ட வேண்டும் எல்லாவற்றையும் விட கணக்கெடுத்தாலும் கூட எல்லாவற்றையும் விட சகஜமானது ஃபுல்ஸ்டாப் வைப்பது தான். பென்சிலை வைத்ததுமே ஃபுல்ஸ்டாப் வந்து விடும். நல்லது. டபுள் விதேஷி சதா ஒவ்வொரு முறையிலும் பாபா சீசன் வந்து கொண்டேயிருக்கிறார்கள். இது மிக நன்றாக இருக்கிறது. எடுத்துக் கொண்டேயிருக்க வேண்டும். நல்லது.

தில்வாலே கைடு குரூப்: நல்லது. புதிதாக ஏதாவது பிளான் தயார் செய்திருக்கிறீர்களா? (குப்தாஜியுடன்) நல்லது. காரியம் நடந்து கொண்டிருக்கிறது. இப்போது முயற்சி செய்து கொண்டிருக்கிறீர்கள். அரசாங்கம் மூலமாக எல்லோருக்கும் இது தெரியட்டும். செலவேயில்லாமல் இருதயம் சரியாகி விடும். முதலில் எல்லோரும் பார்த்ததும், ஒரு கேள்வி கேட்கிறார்கள். பாப்தாதாவிடமும் கூட ஒரு கேள்வி கேட்டார்கள். சொல்லட்டுமா? என்ன கூறுகின்றார்கள். பிராமண குழந்தைகளின் இதயத்தை ஏன் சரி செய்ய மாட்டேன் என்கிறார்கள். இவர்கள் ஏன் அங்கே செல்கிறார்கள். அவர்களையும் கூட சோதித்துப் பார்க்கலாம் அல்லவா? இதில், அவர்களுடைய தவறும் உள்ளது. ஏனென்றால், நியமப்படி நடப்பதில்லை. என்ன பத்தியம் சொல்லப்படுகிறதோ, அதைச் செய்து முடிக்கிறார்கள். மற்றபடி பிராமணர்கள் தங்கள் வீடு தானே என்று பத்தியத்தை குறைத்து விடுகிறார்கள் ஆனால் பிராமணர்களிலும் யாரையாவது விசேஷ உதாரணமாக்குங்கள். அப்போது பிராமணர்களும் நாமும் கூட செய்ய

முடியும் என்று புரிந்து கொள்வார்கள். மற்றபடி காரியம் நன்றாக இருக்கிறது செய்தி சென்றடைந்திருக்கிறது ஆனால் செய்தியை இன்னும் கொஞ்சம் அதிகப்படுத்தினால் நாலாபுறமும் பரவும். சுபபாவனை, சுப காம்னாவும் (சுப ஆசை) கூட காரியம் செய்கிறது. ஒவ்வொரு வர்க்கமும் மேலும் மேலும் முன்னேறிச் செல்ல வேண்டும். நல்லது. மேலும் முன்னேறுங்கள். மற்றும் முன்னேறிக் கொண்டேயிருங்கள். நல்லது.

நாலா புறமும் உள்ள மகான் பவித்திர ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் விசேஷ உள்ளத்தின் ஆசிர்வாதங்கள், உள்ளன்பு மற்றும் உள்ளத்தில் அமர்ந்திருப்பதற்கு வாழ்த்துக்கள். பாப்தாதா அறிவார். பாப்தாதாவின் வருகையின் போதெல்லாம் இ.மெயில், கடிதங்கள் மற்றும் விதவிதமான சாதனங்கள் மூலமாக நாலா புறமுள்ள குழந்தைகள் அன்பு நினைவுகளை அனுப்புகின்றனர். பாப்தாதாவிடம் கூறுவதற்கு முன்பே அன்பு நினைவுகளை அனுப்புகின்றனர். பாப்தாதாவிடம் கூறுவதற்கு முன்பே யாராவது கொடுப்பார்கள் ஆனால் அதற்கு முன்பே எல்லோருடைய அன்பு நினைவுகளும் வந்து சேர்ந்து விடுகின்றன. ஏனென்றால், யாராவது மிகவும் பிரியமாக நினைவு செய்யும் குழந்தை இருக்கிறார் என்றால் அவருடைய தொடர்பு மிக வேகமாக வந்தடைந்து விடுகின்றது. நீங்கள் 3, 4-நாட்களுக்குப் பிறகு நேரில் சந்திக்கிறீர்கள் ஆனால் அவர்களுடைய அன்பு நினைவுகள் அதாவது உண்மையான பாத்திரமாயிருக்கிற ஆத்மாக்களின் நினைவானது அதே நேரத்தில் பாப்தாதாவிடம் வந்து சேர்ந்து விடுகிறது. இதைத் தவிர யாரெல்லாம் உள்ளத்தில் நினைவு செய்தார்களோ, சாதனம் இல்லாதவர்கள். அவர்களுடைய அன்பு நினைவுகளும் வந்து சேர்ந்து விட்டன. மேலும் பாப்தாதா ஒவ்வொரு குழந்தைக்கும் நூறு நூறு நூறு மடங்கு அன்பு நினைவுகளை பதிலாகத் தருகின்றார்.

மற்றபடி இனி நாலா புறமும் இரண்டு வார்த்தைக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுங்கள். ஒன்று சம்பூரண பவித்ரதா என்பதை முழு பரிவாரத்திலும் பரப்பவேண்டும். அடுத்து எந்த ஒரு பலவீனம் உள்ளதோ, அதற்கு உதவி செய்வதன் மூலம் சரி செய்யுங்கள். இது மகா புண்ணியம். விட்டுவிடாதீர்கள். இவர் இப்படித்தான், இவர் மாறப்போவதேயில்லை என்று சாபம் கொடுத்து விடாதீர்கள். புண்ணிய

கர்மம் செய்யுங்கள். மாற்றிக் காண்பிப்பார்கள், மாறித்தான் ஆக வேண்டும். அவர்களுடைய நம்பிக்கையை திடப்படுத்துங்கள். கீழே விழுந்தவர்களை மேலும் கீழே தள்ளி விடாதீர்கள். உதவி செய்யுங்கள். சக்தி கொடுங்கள். இவ்வாறாக நாலா புறமும் மகிழ்ச்சியை வழங்கக்கூடிய குழந்தைகளுக்கு மிகுந்த அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

**தாதிகளுடன்: (தாதிகளின் சேவையில் துணையாக இருக்கும் சகோதரி பிராமணிகளுடன் பாப்தாதா சந்திக்கின்றார்):** நீங்கள் எல்லோரும் கூட ராஜயுக்தாக இருக்கிறீர்கள் அல்லவா? நீங்கள் நிமித்தமாயிருக்கிறீர்கள். ஆதலால் அதேபோல உங்களுடைய ரூபமும் இருக்கட்டும். ஸ்திதியும் இருக்கட்டும். இதனால் எல்லோரும் புரிந்து கொள்வார்கள் தாதிகள் மூலமாக இவர்களிடமிருந்தும் கூட கொஞ்சம் கிடைக்கிறது என்று. புரோகிராம் கிடைத்தால் மட்டும் போதாது ஆனால் இவர்களிடமிருந்தும் கொஞ்சம் கிடைத்தது. நீங்கள் திருஷ்டி மூலமாகக் கொடுக்க முடியும். முகத்தின் மூலமாகவும் கொடுக்க முடியும். முகம் மற்றும் நடத்தை மூலமாக சேவையில் நம்பர்-1. ஆக முடியுமா? எல்லோர் மீதும் பாப்தாதா விசேஷ அன்பு செலுத்துகின்றார். (இந்த மூவரும் கை உயர்த்துவதில்லை) பாபா எப்பொழுது கூறுகின்றாரோ, அப்போது கை உயர்த்த வேண்டுமல்லவா? இதன் மூலமாக நினைவு வரும். இன்று நீங்கள் நான்கு பேர் மட்டுமே செல்லமானவர்களாக இருக்கிறீர்கள். இவர்களும் கூட (மோகினி சகோதரி, முன்னி சகோதரி) பிராமணிகள் எங்கே இருக்கிறார்கள்? அவர்களையும் கூப்பிடுங்கள். பாருங்கள் உங்கள் எல்லோருக்கும் டியூட்டி மிக நன்றாகக் கிடைத்திருக்கிறது. எல்லோருக்கும் அறிமுகமாகி விடுகிறீர்கள். சிலருடைய அறிமுகம் இல்லாமலிருக்கும் ஆனால் உங்களுடைய டியூட்டியின் காரணமாக எல்லோருக்கும் அறிமுகமாகி விடுகிறீர்கள். யாராவது பெயர் சொன்னால், நீலு, ஹம்சா, பிரவீன், ருக்மணி, ஆம். எங்களுக்குத் தெரியும் என்பார்கள். ஆதலால் நீங்கள் உதாரணமானவர்கள். ஏனெனில் சாம்பிளை (முன்மாதிரி) பார்த்து வியாபாரம் நடக்கும். ஆதலால் யாரெல்லாம் நிமித்தமாக இருக்கிறீர்களோ அவர்கள் முன்னுதாரணங்கள் என நினைக்க வேண்டும். சொல்வார்கள், தாதிகளுக்கு முன்மாதிரி இவர்களும் அப்படித்தான் இருக்கிறார்கள். இப்படி மோகஜீத் (பற்றின் மீது வெற்றியடைந்தவர்கள்) கதை

கேட்டிருக்கிறீர்கள் அல்லவா? கூறுவார்கள். வாயிற்காப்போனும் கூட மோகஜீத். அப்படியானால் உள்ளே இருப்பவர்கள் எப்படி இருப்பார்கள் ஆகவே நீங்கள் நிமித்தமாயிருப்பவர்கள். இதுவும் கூட ஒரு வரதானம். இந்த டியூட்டி கிடைப்பதும் கூட ஒரு வரதானம். எவ்வளவு நெருக்கமாக இருக்கிறீர்கள். ஆகவே அருகாமையின் லாபத்தை எடுத்துக் கொள்ள வேண்டும் அல்லவா? நல்லது. பாப்தாதாவுக்கு உங்களைப் பார்த்து குஷியாக இருக்கிறது. நீங்கள் எல்லோரும் நன்றாக இருக்கிறீர்களா? அல்லது கொஞ்சம் மட்டுமா? தாதிகளின் குணத்தை தாரணை செய்து கொண்டேயிருங்கள். நல்லது.

**பரதாதியுடன் (நிர்மல் சாந்தாஜி):** உங்களுடைய முகமோ சேவை செய்கிறது. உங்களைப் பார்த்து எல்லோருக்கும் பிரம்மாபாபா நினைவுக்கு வருகின்றார். ஏனெனில், பின்பற்றி நடக்கிறீர்கள். மற்றபடி குழந்தைகளிடம் இம்மாதிரி அனுபவம் ஆகாது ஆனால் நீங்கள் பின்பற்றி நடந்தீர்கள். எனினும் மதுபன் நிவாசி ஆகி விட்டீர்கள். மதுபன் நிவாசி ரெம்பவும் நல்லது. நன்றாக பாதுகாத்துக் கொள்கிறீர்கள். இவர்களுக்கும் கூட (உடன் இருக்கும் சகோதரி) சர்டிபிகேட் கிடைக்கும். நல்ல அன்புடன் செய்கிறார்கள்.

**சாந்தாமணி தாதியுடன்:** (கண் ஆபரேஷன் செய்திருக்கிறீர்கள்) இது நன்றாக ஆகி விடும் ஆனால் தைரியமிருக்கிறது. உங்கள் எல்லோருடைய தைரியத்தையும் பார்த்து மற்றவர்களுக்கும் தைரியம் வருகிறது. ஏனெனில் விதை அஸ்திவாரம் மிக நன்றாக இருக்கிறது. உணர்வுகளுக்கு வசமாலதில்லை. நோய் பற்றிய உணர்வு வருவதில்லை. உங்களுடைய ஆழமான அனுபவ ஸ்திதியில் (மஸ்தி) இருக்கிறீர்கள். படிப்பில் கவனம் இருக்கிறது. சேவையில் கவனம் இருக்கிறது. அவர்களுடைய ஆசீர்வாதங்கள் கிடைக்கின்றது. டாக்டர்களும் மிக்க மகிழ்ச்சியடைகிறார்கள். ஏனெனில் வேதனைக்குரல் வருவதில்லை. ஐயோ, ஐயோ என்று கூறுவதில்லை.

**நிர்வயர் சகோதரர், ஹைதராபாத் அகாடமியில் நடந்து கொண்டிருக்கும் கட்டிட அமைப்பு பற்றி பாப்தாதாவுக்கு கூறினார்:**

என்ன காரியம் நடந்து கொண்டிருக்கிறதோ, அதில் ஆந்திர பிரதேசத்தில் உள்ள உச்சர்களையும் ஒன்று சேருங்கள். ஏனெனில்,

தனம் செல்லுமிடத்திற்கு மனமும் செல்லும். எல்லோரும் சகயோகம் செய்யட்டும். குறைவாக இருந்தால் யக்ஞம் இருக்கவே இருக்கிறது ஆனால் அவர்களுடைய தனம் வரவில்லையென்றால், மனமும் செல்லாது. ஆதலால் அவர்களை ஒன்று சேருங்கள். அவர்கள் ஒவ்வொரு வருக்கும் உற்சாகம் கொடுங்கள். மற்றபடி பாக்கியிருக்கும் காரியத்தை செய்து முடிக்க வேண்டும். அதில் யார் விரல் கொடுக்கமுடியுமோ, அவர்கள் கட்டாயமாகக் கொடுக்க வேண்டும். ஆதலால் எல்லோரையும் ஒன்று சேருங்கள். ஆந்திரபிரதேசம் கொஞ்சம் முன்னே வரட்டும். நல்லது. இனி ஆந்திர பிரதேசின் முறை (டர்ன்) வருமல்லவா? அதிலும் கூட நீங்கள் விசேஷமாக ஆந்திர பிரதேசத்தை ஒன்றாக இணையுங்கள். மேலும் ஒரு மாதத்தில் அல்லது 6-மாதத்தில் யாராவது அங்கு செல்லட்டும். ஏதாவது மீட்டிங் ஏற்பாடு செய்து எல்லோரையும் வரவழையுங்கள். எப்போது எல்லா ஜோன்களும் சந்திக்கின்றனவோ அதுபோல இவர்களும் கூட சந்திக்கட்டுமே. இதனால் எல்லாம் சரியாகி விடும். சரிதானா?

ரமேஷ் சகோதரரிடம்: உடல் நலமாயிருக்கிறதா? (பாம்பே சமாச்சாரம் கூறினார்) சென்டர்கள் எல்லாம் பாதுகாப்பாக இருக்கின்றன. எனினும் பாம்பே பாபாவினுடையது. பாபாவின் பரிவாரம் இருக்கிறது ஆனால் பாபா கூறினார் அல்லவா, புல் ஃஸ்டாப் மற்றும் தபஸ்யா. இதை கட்டாயமாக அதிகரிக்க வேண்டும். இதுவோ, ஒன்றுமேயில்லை. வீட்டை விட்டு வெளியே வர முடியாது. ஜன்னலைத் திறக்க முடியாது என்றால் என்ன செய்வீர்கள்? இதை விடவும் இன்னும் அதிகமாக நடக்கும்.

பிரிஜ்மோகன் சகோதரரிடம்: (ஓ.ஆர்.சியின் சிந்தி சம்மேளன் பற்றி கூறினார்) தொடர்பை உண்டாக்கி விட்டீர்கள். இனி தொடர்ந்து ஏதாவது செய்து கொண்டேயிருக்க வேண்டும். இன்னும் அதிகமாக தொடர்பில் கொண்டு வர வேண்டும். இவர்களில் சினிமாத்துறையைச் சார்ந்தவர் இருக்கிறாரல்லவா, அவரை உபயோகிக்கலாம். இவர்கள் (சிந்தி) விடுபட்டுப் போய் விடக்கூடாது. பாபா அவதாரம் செய்திருக்கிறார் என்றால் பின் தங்கி விடக்கூடாது. உங்களுடைய வேலை, அவர்களுக்கு செய்தி அளிப்பது. எங்களுக்கு சொல்லவில்லை என்று யாரும் சொல்லக்கூடாது. (ஆஷா சகோதரியிடம்) கொஞ்சம் முயற்சி

செய்ய வேண்டியதாயிருக்கிறது. தந்தையிடம் அன்பிருக்கிறது. ஆதலால் உழைப்பு அனுபவம் ஆகவில்லை. (இப்போது ஓ.ஆர்.சி. சேவையில்) வேகமாக ஓடிக் கொண்டிருக்கிறது. நாலா பக்கமும் ஓட வேண்டும். ஏதாவதொரு ஜோன் கொஞ்சம் பலவீனமாயிருக்கிறது. தங்களுக்குள் சந்திப்பதேயில்லை. அப்படிப்பட்ட இடத்திற்கு ஒவ்வொரு மாதமும் சென்று வர வேண்டும், ஒருங்கிணைக்க வேண்டும். (தாதி ஜானகி கூறினார். இதில் குல்ஜார் தாதியின் சகயோகம் வேண்டும்) ஒருவருக்கொருவருடைய சகயோகம் அவசியம் தான்.

**8-மூத்த சகோதரிகள் 5-நாட்கள் மௌன பட்டி செய்தார்கள். இவர்கள் பாப்தாதாவின் முன்னிலையில் வந்தார்கள்:** நல்லது. இந்த ஃபரிஷ்தாக்கள் வந்திருக்கிறார்கள். பரிஷ்தாக்கள்தானே? இது ஃபரிஷ்தாக்களின் சபை நல்லது சுயத்தில் ஆர்வம், உற்சாகம் வைத்து செய்தீர்கள் அல்லவா? இதற்கு மிகுந்த நல் வாழ்த்துக்கள். சிலர் மட்டும் தான். வருவார்களா? வர மாட்டார்களா? என்று நினைக்கவில்லை. செய்யத்தான் வேண்டும். ஆகவே 8-ரத்தினங்கள் ஆகி விட்டனர். ஆகவே இந்த 8-ரத்தினங்களைப் பார்த்து எல்லோருக்கும் உற்சாகம் வரும். இந்த ஜனவரி மாதத்தில் புரோகிராம் செய்வீர்கள் அல்லவா? அதில் ஏதாவது அப்படிப்பட்டதொரு விஷயம் இருக்க வேண்டும். அது எல்லோருக்கும் ஆர்வத்தை தூண்டும் படியாக இருக்க வேண்டும். மேலும் அதை தொடர்ந்து செய்து கொண்டேயிருக்க வேண்டும். நீங்களோ சுயம் பொறுப்புள்ளவராகி விட்டீர்கள் அல்லவா? நீங்கள் உங்களுடைய பொறுப்பை நிறைவேற்றி விட்டீர்கள் ஆனால் மற்றவர்களையும் ஈடுபடுத்த வேண்டும். மேலும் வாயுமண்டலம் எப்படிப்பட்டதாகி விட வேண்டுமென்றால், மதுபனில் பிராக்டிகலாக தாக்கம் உண்டாக்கும்படியாக இருக்க வேண்டும். ஒவ்வொருவரும் சென்டரில் இப்படிப்பட்ட வாயுமண்டலம் தயார் செய்ய வேண்டும். மகிமை இருக்கிறதல்லவா? ஒவ்வொரு வீடும் கோவில் என்று. ஆகவே ஒவ்வொரு வீட்டிலும் சைத்தன்ய பரிஷ்தாக்களின் கோவில் ஆகி விடட்டும். மற்றபடி பாப்தாதா குஷியாக இருக்கின்றார். நீங்கள் தைரியம் வைத்து செய்திருக்கிறீர்கள். மிக நன்றாகவே செய்தீர்கள். ஆதலால் பாப்தாதா கூறுகின்றார் தைரியசாலி குரூப் முன் மாதிரியாக ஆகி விட்டார்கள். நன்றாக இருந்ததல்லவா? மிக நன்றாக இருந்தது. எளிதாகவும் ஆகி விட்டது. கடின முயற்சி எதுவும் செய்ய

வேண்டியதாக இருக்கவில்லை. எழுந்திருக்க மனம் வரவில்லை. இப்படி சுற்றி வளையுங்கள். (கரவொலி எழுப்புங்கள்) பாருங்கள், இவர்கள் எந்த விஷயத்தில் தைரியம் வைத்தார்கள்? மேலும் பாப்தாதா மற்றும் பரிவாரமும் கூட சகயோகியாக இருந்தார்கள். இவர்கள் 5-நாட்கள் ஃபுல் ஸ்டாப் வைப்பதற்கான பட்டி செய்தார்கள். மேலும் 5-நாட்களும் தொடர்ந்து ஒருவர் கூட செய்யாமல் (மிஸ்) இருக்கவில்லை. ஆதியில் ஆரம்பித்தார்கள் மற்றும் கடைசியில் உங்கள் எதிரே இருக்கிறார்கள். ஆதலால் இந்த புருஷாரத்தம் மிக நன்றாகவே செய்தார்கள். இதுபோல நீங்களும்கூட குரூப் குரூப்பாக உள்ளுக்குள்ளேயே புருஷாரத்தம் செய்ய வேண்டும். சென்டரில் இரண்டு பேர் தான் இருக்கிறார்கள். சென்டரில் இன்னொருவரை துணையாக சேர்த்துக் கொள்ளுங்கள். மேலும் உங்களுடைய மூத்தவர்களிடம் சொல்லி விடுங்கள். பட்டி செய்வீர்கள் அல்லவா? விசேஷ நியமம் வைத்தீர்களானால், அதில் உதவி கிடைக்கும். பாப்தாதாவுக்கு இது பிடித்தமானதாக இருந்தது. இப்போது சகஜ புருஷாரத்தம் ஆகி விட்டதல்லவா? இனி அங்கு சென்றதும் மறந்து விடக்கூடாது. மற்ற விஷயங்களில் செல்லக் கூடாது. ஃபுல் ஸ்டாப் வைப்பதில் நம்பர்-1 ஆக வேண்டும். மற்றவர்களுக்கும் செய்விக்க வேண்டும். மேலும் தங்களுடைய அனுபவத்தையும் கூறுவீர்கள். நல்லது.

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳
✳✳✳✳✳

# 15.12.2008 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஒரு ராஜ்யம், ஒரு தர்மம், சட்டம் ஒழுங்கு ஸ்தாபனையின் சமயத்தில் தன்னை பரிவர்த்தனை செய்து விஷ்வ பரிவர்த்தனையாளர் ஆகுங்கள்!

இன்று பாப்தாதா நாலா பக்கமும் உள்ள தன்னுடைய செல்லமான (ராஜா குழந்தை) குழந்தைகளைப் பார்க்கின்றார். இந்த பரமாத்மாவின் அன்பு கோடியில் ஒரு சில குழந்தைகளுக்குத் தான் கிடைக்கிறது. பரமாத்ம அன்பில் பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் மூன்று சிம்மாசனங்களுக்கு அதிகாரியாக்கி யிருக்கின்றார். முதலாவது சுய இராஜ்ய அதிகாரமாகிய பிருகுட்டி எனும் சிம்மாசனம். இரண்டாவது பாப்தாதாவின் மனம் எனும் சிம்மாசனம். மூன்றாவது விஷ்வ இராஜ்யத்தின் அதிகாரமாகிய சிம்மாசனம் இந்த மூன்று சிம்மாசனங்களையும் தன்னுடைய சிநேகமுள்ள செல்ல குழந்தைகளுக்குக் கொடுத்திருக்கின்றார். ஆகவே, இந்த மூன்று சிம்மாசனங்களும் சதா நினைவில் இருப்பதன் காரணமாக ஒவ்வொரு குழந்தைக்கும் ஆன்மீக போதை இருக்கிறது. ஆதலால் எல்லா குழந்தைகளும் தந்தையிடமிருந்து கிடைத்த ஆஸ்தியைப் பார்த்து குஷியில் இருக்கின்றார்கள் அல்லவா! உள்ளத்தில் தானாகவே இந்த பாடல் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது. ஆஹா பாபா ஆஹா! மேலும் ஆஹா என்னுடைய பாக்கியம் ஆஹா எது சொப்பனத்தில் கூட இருக்கவில்லையோ அது நடைமுறை வாழ்க்கையில் கிடைத்து விட்டது. சிம்மாசனத்தோடு கூடவே பாப்தாதா இந்த சங்கமத்தில் இரட்டைக்கிரீடம் மூலமாக பறக்கும் கலையின் அனுபவசாலிகளாகவும் ஆக்கி விட்டார்.

ஆகவே. பாப்தாதா நாலா பக்கமும் உள்ள குழந்தைகளின் இந்த இரட்டை கீரிடம் (டபுள் தாஜ்) அதாவது தூய்மையின் ராஜரீகமாகிய (பியூரிட்டி கி ராயல்டி) இரட்டைக் கிரீடத்தைப் பார்க்கின்றார். பாப்தாதா இன்று நாலா புறமும் உள்ள குழந்தைகளினுடைய புருஷார்தத்தின் வேகத்தை சோதித்தார். ஏனென்றால் சமயத்தின் வேகத்தை நீங்கள் எல்லோரும் பார்க்கின்றீர்கள், புரிந்து கொண்டுமிருக்கின்றீர்கள். ஆதலால் பாப்தாதா என்ன பார்த்தார் என்றால், ஒவ்வொரு குழந்தைக்கும் தந்தையிடமிருந்து எந்த ஒரு ராஜ பாக்கியம் எனும் ஆஸ்தி கிடைத்துள்ளதோ, அந்த ராஜ்யத்தின் வருங்கால பாக்கியத்தின் (பிராப்தி) அதாவது வருங்காலத்தில் (சத்யுகத்தில்) உங்கள் எல்லோருடைய சம்ஸ்காரமும் இயற்கையாகவும் மற்றும் இயற்கையான சுபாவமும் இருக்கும். அது இப்போதிலிருந்தே வெகு காலமாகப் பழக்கமாகி விட்ட சம்ஸ்காரமாக அனுபவம் ஆக வேண்டும். ஏனென்றால் அந்த புதிய உலகமானது உங்கள் எல்லோருடைய புதிய சம்ஸ்காரத்தின் மூலமாகவே தயாராகிக் கொண்டிருக்கிறது. புது உலகின் எந்த ஒரு விசேஷங்கள் உள்ளதோ, அதனையும் கூட அனுபவம் செய்கிறீர்கள் அல்லவா? நமது இராஜ்யத்தில் எப்படி இருக்கும் இந்த நஷா இருக்கின்றதல்லவா! மனம் கூறுகிறதல்லவா நமது ராஜ்யம், நமது புதிய உலகம் இதோ வந்தே விட்டது என்று ஆதலால் பாப்தாதா பார்த்தார். புதிய உலகில் எந்த ஒரு விசேஷங்கள் இருக்குமோ அது குழந்தைகளின் புருஷாரத்தி வாழ்க்கையில் எந்த அளவுக்கு எழுச்சியடைந்திருக்கிறது. புதிய சம்ஸ்காரம், புதிய உலகத்தின் விசேஷங்கள் என்னவாக இருக்கும் என்பது உங்களுக்கும் தெரியும். எல்லோருடைய புத்தியிலும் புதிய உலக விசேஷங்கள் எழுச்சியுடன் இருக்கிறதல்லவா! தெரியுமல்லவா! பாடவும் செய்கிறீர்கள். தெரிந்து கொண்டும் இருக்கிறீர்கள். முதலாவது விசேஷம் எது என்று சோதித்துப் பார்க்க வேண்டும். மேலும் ஒவ்வொரு விசேஷமும் என்னிடம் எவ்வளவு எழுச்சியடைந்திருக்கிறது? முக்கியமான விசேஷம் ஒரு ராஜ்யம், எப்படி அங்கு ஒரு ராஜ்யம் இயற்கையாகவே இருக்கிறதோ, வேறு எந்த ஒரு ராஜ்யமும் இல்லை, அதே போல தன்னுடைய சங்கம யுக வாழ்க்கையில் எப்படி இருக்கிறது என்று பார்க்க வேண்டும். அதாவது தன்னுடைய வாழ்க்கையில் ஒரு இராஜ்யம் இருக்கிறதா? அல்லது சில சமயம் வேறு ராஜ்யமும் நடக்கிறதா? ஒருவேளை போகப்போக சுய ராஜ்யத்தோடு கூடவே,

மாயையின் ராஜ்யமும் கூட நடக்கிறது என்றால் ஒரு ராஜ்யத்தின் சம்ஸ்காரம் இருக்குமா? ஒரு ராஜ்யத்தில் வேறொரு ராஜ்யம் நடக்க முடியாது. பரமாத்மாவின் ஸ்ரீமத்படி நடக்கும் இராஜ்யம் உள்ளதா? அல்லது சில சமயம் மாயையின் ஆதிக்கம் இருக்கிறதா? உள்ளத்தில் மாயையின் ராஜ்யம் இருக்கக் கூடாது; இதை சோதிக்க வேண்டும். இந்த விஷயத்தைப் பற்றியும் உங்கள் சார்ட்டில் சோதியுங்கள். இப்போது சங்கமத்தில் பரமாத்மாவின் ராஜ்யம் உள்ளதா? அல்லது மாயையின் ஆதிக்கமும் உள்ளதா? சோதித்தீர்களா? இப்போதே சோதியுங்கள் உங்களுடைய சார்ட்டைப் பார்க்கிறீர்கள் அல்லவா? ஒருவேளை இன்று வரையிலும் கூட இரண்டு ராஜ்யங்கள் நடந்தால், ஒரு இராஜ்ய அதிகாரியாக எப்படி ஆக முடியும்? ஸ்ரீமத்தோடு மாயையின் வழி (மத்) யும் கூட கலப்படம் ஆகி விடுகிறதா என்ன? இதே போலவே ஒரு தர்மம். ஒரு ராஜ்யம் இருந்தால், ஒரு தர்மமும் இருக்கும் தர்மம் என்றால் தாரணை ஆகவே உங்களுடைய விசேஷ தாரணை எது? பவித்திரதாவின் தாரணை ஆகவே சோதியுங்கள் சதா மனம், சொல், செயல், சம்மந்தம் தொடர்பில் சம்பூரண மற்றும் சதா பவித்திரத்தா (தூய்மை) எனும் சுபாவம் இயற்கையானதாக ஆகி விட்டதா? எப்படி அங்கு தன்னுடைய ராஜ்யத்தில் பவித்திரத்தாவின் சுய தர்மம் இயல்பாகவே இருக்குமோ, அதே போலவே இந்த சமயத்தில் பவித்திரத்தாவின் தாரணை இயற்கையானதாகவும், இயற்கை சுபாவமாகவும் ஆகி விட்டதா? ஏனென்றால் உங்களுடைய அநாதி சொரூபம், ஆதி சொரூபம் பவித்திரத்தா (தூய்மை) என்பது உங்களுக்குத் தெரியும்; ஆகவே சோதியுங்கள் ஒரு தர்மம் என்றால் பவித்திரத்தா இயற்கையாகவே இருக்கிறதா? எப்படிப்பட்ட நேச்சர் (சுபாவம்) இருக்கிறதோ அது தானாகவே காரியத்தைச் செய்து விடும். ஏனென்றால் அநேக குழந்தைகள் எப்போது ஆன்மீக சம்பாஷணை செய்கிறார்களோ அப்போது என்ன சொல்கிறார்கள்? மிகவும் இனிமையாக பேசுகிறார்கள். சொல்கிறார்கள் நான் விரும்பவில்லை ஆனால் சில சமயம் மனதில், சில சமயம் பேச்சில், ஏதாவதொரு தூய்மையற்ற (அபவித்திரத்தா) அம்சம் எழுச்சியடைந்து விடுகிறது. சம்ஸ்காரம் பல ஜன்மங்களுடையதாக இருக்கின்றதால் ஆகி விடுகிறது. ஆகவே ஒரு தர்மம் என்பதன் பொருள், பவித்திரத்தாவின் தாரணை இயற்கை சுபாவமாகவும், இயற்கையானதாகவும் ஆகி விட வேண்டும். பேச்சிலும் ஆவேசம் வந்து விடுகிறது என்ன சொல்கிறார்கள்

என்றால் கோபப்படவில்லை கொஞ்சம் ஆவேசம் வந்துவிட்டது. அப்படியானால் ஆவேசம் என்பது என்ன? கோபத்தினுடைய குழந்தை தானே! அப்படியானால் ஒரு தர்மத்தினுடைய சம்ஸ்காரம் எப்போது இயற்கையானதாக ஆகும்? இதைச் சோதியுங்கள் ஆனால் சோதனையுடன் கூடவே தந்தையிடமிருந்து கிடைத்த சக்திகள் மூலமாக மாற்றி விடுங்கள். இருப்பினும் இப்போது பாப்தாதா முன் கூட்டியே கவனத்திற்குக் கொண்டு வருகிறார். அதாவது இப்போதே சோதித்து மாற்றம் செய்வதற்கான புருஷாந்தத்தைத் தீவிரப்படுத்தினால் மார்ஜின் (கொஞ்சம் சமயம் இன்னும் இருக்கிறது) உள்ளது ஆனால் குறுகிய காலத்திற்குள் திடீரென டூலேட் போர்டு போடத்தான் வேண்டும். இதன் பிறகு பாபா சொல்லவே இல்லை என்று சொல்லக்கூடாது. ஆகவேதான் இப்போது புருஷாரத்தம் செய்வதற்கான சமயம் கடந்து விட்டது ஆனால் தீவிர புருஷாரத்தம் செய்வதற்கான சமயம் இன்னுமிருக்கிறது. ஆதலால் சோதியுங்கள் ஆனால் சோதித்துப் பார்த்தால் மட்டும் போதாது கூடவே மாற்றமும் செய்ய வேண்டும். அநேகர் சோதனை செய்கிறார்கள் ஆனால் மாற்றம் செய்வதற்கான சக்தி இல்லை. சோதித்தல் மற்றும் மாற்றம் செய்துவிடுதல் என்ற இரண்டும் கூடவே நடக்க வேண்டும். ஏனென்றால் உங்கள் எல்லோருடைய ஸ்வமான் மற்றும் உங்களுடைய மகிமை என்ன? டைட்டில் என்ன? மாஸ்டர் சர்வ சக்திவான் ஆகவே நீங்கள் மாஸ்டர் சர்வ சக்திவானா? அல்லது சக்திவானா? யார் தன்னை மாஸ்டர் சர்வ சக்திவான் என்று நினைக்கிறீர்களோ அவர்கள் கை உயர்த்துங்கள் நல்லது. மாஸ்டர் சர்வ சக்திவான்களுக்கு வாழ்த்துக்கள் ஆனால் மாஸ்டர் சர்வ சக்திவானாக இருந்தும் மாற்றம் செய்ய முடியவில்லை என்றால் இதை என்னவென்று சொல்வது? தங்களுடைய சம்ஸ்காரத்தையோ. சுபாவத்தையோ மாற்றம் செய்ய விரும்பியும் கூட செய்ய முடியவில்லை என்றால் என்ன சொல்வது? ஆகவே உங்களையே கேட்டுப்பாருங்கள், நான் மாஸ்டர் சக்திவானா? அல்லது மாஸ்டர் சர்வ சக்திவானா? மாஸ்டர் சர்வ சக்திவான் சங்கல்பம் செய்தார்கள் செய்யத்தான் வேண்டும். இப்படி நிச்சயிக்கப்பட்டு விட்டது. ஆகி விடும். பார்க்கலாம், இது ஆகமாட்டேனென்கிறது. ஆதலால் இப்பொழுது இன்றைய சமயத்தின் பிரமாணமாக இந்த ரிசல்ட் கட்டாயம் வேண்டும். அதாவது என்ன நினைத்தீர்களோ அதாவது

சங்கல்பம் மற்றும் அந்த சொரூபம் ஆவது ஒன்றாகவே இருக்க வேண்டும்.

இப்போது புது வருடம். அவ்யக்த வருடம் வரத்தான் போகிறது. 40-ஆண்டுகள் அவ்யக்த பாலனை நடந்து கொண்டிருக்கிறது மேலும் அவ்யக்த பாலனை மற்றும் வியக்த ரூபத்தின் (சாகார் பாபா) பாலனை சேர்த்து மொத்தம் 72-ஆண்டுகள் முடிந்து விட்டன. ஆகவே இரண்டு தந்தைகளின் பாலனைக்கான கைமாறு பாப்தாதாவுக்கு கொடுக்க மாட்டீர்களா? எண்ணிப் பாருங்கள் பாலனை என்ன மற்றும் நடைமுறை என்ன? பாப்தாதா பார்த்தார் இப்போதும் கூட அலஷிய பாவம், ராயல் சோம்பல் உள்ளது. ராயல் சோம்பல் இருக்கிறது. ஆகி விடும் தயாராகி விடுவோம் சென்றடைந்து விடுவோம் என்பது அலஷியம் (அல்பேலாபன்) எப்படி இருக்கிறது என்றால் செய்து கொண்டுதான் இருக்கிறோம். வோம், வோம்... இது ஆகத்தான் போகிறது. இதைச் செய்யத்தான் வேண்டும் இப்படி சொல்லிலும், செயலும் வேறுபாடு உண்டாகி விடுகிறது. பாப்தாதா ஒரு காட்சியைப் பார்த்து புன்முறுவல் செய்கின்றார். என்ன சொல்கிறார்கள்? இது ஆகி விடட்டும் இதைச் செய்து விடுங்களேன். அப்போது நன்றாக இருக்கும். நான் முன்னேற முடியும். மற்றவர் மாற வேண்டும் என்ற விருத்தி (உள்ளுணர்வு) இருக்கிறது ஆனால் சுய பரிவர்த்தனைக்கான விருத்தி இங்குமங்கும் குறைந்து விடுகின்றது. இனி மற்றவரைப் பார்க்கும் விருத்தியை மாற்றுங்கள். ஒருவேளை பார்க்க விரும்பினால் விசேஷத்தைப் பாருங்கள். இப்படித்தானே இருக்கிறது. இப்படி நடந்து கொண்டுதானிருக்கிறது. இப்படிக்கூட செய்கிறார்கள். இந்த பாவனையைக் குறைத்து விடுங்கள். தன்னைப் பாருங்கள். தந்தையை எதிரில் வையுங்கள். மற்றபடி யாராயிருந்தாலும் மகாரதியாக இருந்தாலும் இடைப்பட்டவர்களாக இருந்தாலும் புருஷாரத்தத்தில் ஏதாவதொரு குறை இருக்குமானால் பரிவர்த்தனை செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். ஆகையால் தந்தையைப் பாருங்கள். (ஸீ டபுள் பாதர்) பிரம்மாபாபாவைப் பாருங்கள், சிவபாபாவைப் பாருங்கள். தந்தை உங்களை தன்னுடைய மன சிம்மாசனத்தில் அமர்த்தி விட்டார் மேலும் நீங்களும் கூட மன சிம்மாசனத்தில் தந்தையை அமர்த்தி விட்டீர்கள். உங்களுடைய சுலோகம் கூட ஸீ பாதர். ஸீ சிஸ்டர், ஸீ பிரதர் என்ற சுலோகம் இல்லவே இல்லை. கொஞ்சம் கொஞ்சம் குறை

எல்லோரிடமும் பாக்கி இருக்கிறது. ஒருவேளை மற்றவரைப் பார்த்தால் விசேஷத்தைப் பாருங்கள்; என்ன குறை இருக்கிறதோ, அதை தன்னிடமிருந்து விலக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதைப் பார்க்க வேண்டாம். அடுத்தது உங்களுடைய ராஜ்யத்தில், உங்களுடைய இராஜ்யம் ஞாபகமிருக்கிறதல்லவா, நேற்று இருந்தது. நாளை வரப் போகின்றது. உங்களுடைய புத்தியில் கண்களில் உங்களுடைய ராஜ்யம் தெளிவாக தெரிகிறதல்லவா? எத்தனை முறை ராஜ்யம் செய்திருக்கிறீர்கள்? எண்ணிப் பார்த்திருக்கிறீர்களா? அநேக முறை ராஜ்யம் செய்திருக்கிறீர்கள். சொல்லும் போதே எதிரில் வந்து விடுகிறது. உங்களுடைய ராஜ்ய அதிகாரத்தின் ரூபம் மேலும் சிரேஷ்ட ராஜ்யம் எப்படி உங்களுடைய ராஜ்யத்தில் சட்டம், ஒழுங்கு இயற்கையாகவே நடக்கிறது. எல்லோரும் ஞானம் நிறைந்த சம்ஸ்காரம் உடையவர்கள். தெரியும். சட்டம் என்பது என்ன? ஒழுங்கு என்பது என்ன? அதே போல இப்போது உங்களுடைய வாழ்க்கையைப் பாருங்கள் தந்தையின் ஆர்டர்படி நடக்கிறீர்களா? அல்லது எப்போதாவது மாயையின் ஆர்டரும் (கட்டளை) கூட நடந்து விடுகிறதா? சில சமயம் பரமத், மன்மத், ஶ்ரீமத்துக்குப் புறம்பாக நடப்பதில்லை தானே? மேலும் சட்டம் என்பது என்ன? சட்டம் என்பது கவலையில்லாத பாதுஷா எந்த ஒரு கவலையுமில்லை. ஏனென்றால், எல்லா பிராப்திகளும் இருக்கின்றன. இதே போல சோதித்துப் பாருங்கள் சங்கமத்தின் சிரேஷ்ட வாழ்க்கையிலும் கூட தந்தை கொடுத்த எல்லா பிராப்திகளும் இருக்கின்றன எப்படி பகவானுடைய பிரசாதம் இருக்கிற தல்லவா எப்படி பிரசாதத்திற்கு எவ்வளவு மகத்துவம் வைத்திருக்கிறார்கள். ஆகவே தந்தையின் பிராப்திகள் என்னவெல்லாம் இருக்கின்றதோ அந்த பிரபு பிரசாதம் கிடைத்திருக்கின்றது. பிரபு பிரசாதத்திற்கு மகத்துவம் இருக்கிறது. ஆஸ்தியும் இருக்கிறது. அதிகாரமும் இருக்கிறது. பிரசாதம் கூட இருக்கிறது. ஆதலால் சோதியுங்கள். லா அண்டு ஆர்டர் (சட்டம், ஒழுங்கு) இரண்டும் சம்பன்னமாக இருக்கிறதா?

பாப்தாதா ஒரு விஷயம் பார்த்தார் மெஜாரிட்டி, தக்க சமயத்தில் பரிவர்த்தனை செய்வதற்கான சக்தி கிடைத்திருக்கிறது. இந்த பரிவர்த்தனை செய்வதற்கான சக்தியை வேண்டிய சமயத்தில் காரியத்தில் உபயோகப்படுத்தினால், எந்த ஒரு கடின முயற்சியும்

அவசியமில்லை. பாருங்கள். எல்லோருக்கும் அனுபவம் இருக்கிறது. ஒருவேளை எப்போதாவது எந்த விதத்திலாவது மாயையிடமிருந்து தோல்வி ஏற்பட்டால் உங்கள் சொற்பொழிவிலும் கூறுகின்றீர்கள். வகுப்பிலும் கூட. கூறுகின்றீர்கள் இரண்டு வார்த்தைகள் கீழே தள்ளி விடுவதாகவும் முன்னேற்றுவதாகவும் இருக்கின்றன. அந்த இரண்டு வார்த்தைகள் உங்களுக்குத் தெரியும் எல்லோர் மனதிலும் வந்து விட்டது. அந்த இரண்டு வார்த்தைகள் நான், எனது என்பதாகும். சொற்பொழிவு செய்யும்போதும், வகுப்பிலும் கூறுகின்றீர்கள் அல்லவா? பாப்தாதா வகுப்பில் கேட்டார் என்ன சொல்கிறார்கள்? இப்போது இந்த இரண்டு வார்த்தைகளையும் பரிவர்த்தனை சக்தி மூலமாக இன்னார், இன்னார் என்று அல்லது நான் பிராமணன் என்கிறீர்கள் ஆனால் நான் யார்? பாப்தாதா எந்த ஒரு ஸ்வமான் கொடுத்திருக்கின்றாரோ அதை எப்போது நான் என்ற வார்த்தையை உபயோகிக்க்கிறீர்களோ அப்போது ஏதாவதொரு ஸ்வமானை சேர்த்துக் கொள்ளுங்கள் அல்லது புத்தியில் கொண்டு வாருங்கள். நான் என்ற வார்த்தையைக் கூறியதும் ஸ்வமான் நினைவுக்கு வந்து விட்டது. (எனது) என்ற வார்த்தையை சொன்னதும் பாபா நினைவு வரட்டும். மேரா பாபா இது இயற்கையான நினைவாக ஆகி விடட்டும். இந்த பரிவர்த்தனை செய்து விடுங்கள் போதும். அடுத்து இரண்டாவது விஷயம். பெரும்பாலும் எப்போது சம்மந்தம் தொடர்பில் வருகிறீர்களோ இரண்டு வார்த்தைகள் மூலமாக மாயை வருகிறது. ஒன்று பாவ், மற்றது பாவனை. எப்போது (எனது கருத்து-பாவ்) என்ற வார்த்தையை கூறுகின்றீர்களோ, நினைக்கின்றீர்களோ, அப்போது ஆத்மீக பாவ் எனது கருத்து (டாவ்) என்ற வார்த்தையை கூறும்போதே முதலில் ஆத்மா என்பது நினைவுக்கு வரட்டும் வார்த்தையின் அர்த்தத்தை மாற்றி விடுங்கள். (பரிவர்த்தனை செய்து விடுங்கள் உங்களுடைய டைட்டில் எது? விஷ்வ பரிவர்த்தக். விஷ்வ பரிவர்த்தக் என்றால், ஒரு வார்த்தையை பரிவர்த்தனை செய்ய முடியாதா? ஆதலால் வேண்டிய சமயத்தில் பரிவர்த்தனை சக்தியை உபயோகித்துப் பாருங்கள். தாமதமாக வருகிறது. எப்போது கடந்து விடுகிறதோ, மேலும் மனதிற்கு எப்போது பிடித்தமானதாக இல்லையோ, மனமானது தானாகவே நினைக்கிறது. சமயம் கடந்து விட்டதல்லவா! ஆதலால் இப்போது தீவிர கதியின் அவசியம் இருக்கிறது. எப்போதாவதல்ல வெகுகாலமாக நன்றாகவே இருக்கின்றேன் என்று நினைக்கக்கூடாது.

பாப்தாதா கூறியிருக்கின்றார். கடைசி நேரம் எதுவாக இருக்கும் என்று சொல்ல முடியாது. திடீரென என்ற விளையாட்டு நடக்கப் போகிறது. அநேக குழந்தைகள் தந்தைக்கும் கூட மிகவும் இனிமையான வார்த்தைகளை கூறுகின்றனர். என்ன கூறுகின்றார்கள். சமயமானது இன்னும் தீவிர கதியில் செல்லுமல்லவா? அப்போது வைராக்கியம் வந்து விடும். அப்போது அந்த வைராக்கியமான சமயத்தில் தானாகவே வேகம் அதிகரித்து விடும் என்பது ஆனால் பாப்தாதா ஏற்கனவே கூறியிருக்கின்றார். வெகுகால புருஷார்த்தம் வேண்டும் என்று ஒருவேளை குறைவான புருஷார்த்தம் செய்திருந்தால், பாக்கியமும் (பிராலப்த்) கூட குறைவான காலமே கிடைக்கும். முழுமையாக 21-ஜன்மத்திற்கான பாக்கியம் கிடைக்காது. பாப்தாதாவின் மூன்று வார்த்தைகளை நினைவில் வையுங்கள் -ஒன்று அச்சானக் (திடீரென) இரண்டாவது எவர் ரெடி, மூன்றாவது வெகுகாலம் -இந்த மூன்று வார்த்தைகள் சதா புத்தியில் இருக்கட்டும் எப்போதாவது எங்கேயாவது யாருக்காவது கடைசி நேரமாக இருக்க முடியும். இப்போதே பாருங்கள் எத்தனை பிராமணர்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள், இவர்களுக்குத் தெரியுமா என்ன? ஆதலால் வெகு கால முயற்சியின் மூலமாக முழுமையாக 21-ஜன்மத்திற்கான ஆஸ்தியை அடையத்தான் வேண்டும். இந்த தீவிர புருஷார்த்தம் என்பதை நினைவில் வையுங்கள். முதல் நம்பர், முதல் ஜன்மம், தன்னுடைய இராஜ்யம் என்ன நினைக்கிறீர்கள். முதல் ஜன்மத்தில் வர வேண்டுமல்லவா? மஜா (ஆனந்தம்) எதில் இருக்கும்? முதல் ஜன்மத்திலா? அல்லது ஏதாவதொரு ஜன்மத்திலா? தங்களுடைய இராஜ்யத்தில் முதல் ஜன்மத்தில் ஸ்ரீகிருஷ்ணருடன் எங்களுடைய பார்ட்டும் இருக்கும் என்று நினைப்பவர்கள் கை உயர்த்துங்கள் நல்லது. பார்ட் முதலில்? கைகளை உயர்த்தியிருப்பதைப் பார்த்து குஷியாக இருக்கிறது. கரவொலி எழுப்புங்கள் ஆனால் முதல் ஜன்மத்தில் வாருங்கள். இதற்கு வாழ்த்துங்கள் ஆனால். சொல்லவா என்னவென்று அல்லது சொல்ல வேண்டாமா? பெரத்தான் வேண்டும் முதலில் பிறகு அடுத்த விஷயத்தைப் பற்றி ஏன் கூற வேண்டும்? நல்லது எவ்வளவு பேர் வந்திருக்கிறீர்களோ. அவர்கள் எல்லோரும் முதல் ஜன்மத்தில் வரத்தான் வேண்டும். கரவொலியை எழுப்பி விட்டார்கள். முதல் ஜன்மம், முதல் ஸ்டேஜ் கூட ஆகவே முதல் ஸ்டேஜ் ஆக்கியே தீர வேண்டும். இதில் யாருக்கு திட சங்கல்பம் இருக்கிறதோ, வேகமாகச்

செல்லத்தான் வேண்டும். எப்படிப்பட்ட விக்னம் வந்தாலும் விக்னம், விக்னமாக இருக்கக்கூடாது. விக்ன விநாசக் முன்பாக வெற்றி ரூபமாக மாறிவிடட்டும். ஏனென்றால் நீங்கள் எல்லோரும் விக்ன விநாசக் (விக்னங்களை அழிப்பவர்கள்) உங்கள் டைட்டில் எது? விக்ன விநாசக் ஆகவே விக்னம் வந்தாலும் கூட விளையாட்டு விளையாட வரும் ஆனால் நீங்கள் தூரத்தில் இருக்கும் போதே புரிந்து கொள்வீர்கள். ராயல் ரூபத்தில் வரும் ஆனால் விக்ன விநாசக்கான நீங்கள் தூரமாக இருக்கும்போதே புரிந்து கொள்வீர்கள். இது என்ன விளையாட்டு நடக்கிறது என்று ஆதலால் பாப்தாதாவும் கூட எல்லா குழந்தைகளும் கூடவே வர வேண்டும். என்பதையே விரும்புகின்றார். பின் தங்கி விடக்கூடாது பாப்தாதாவுக்கு குழந்தைகள் இல்லாமல் மஜாவாக இல்லை. ஆதலால் உறுதியை ஒருபோதும் பலவீனப்படுத்தி விடாதீர்கள். செய்யத்தான் வேண்டும். வோம், வோம் என்று சொல்லக்கூடாது செய்வோம், பார்ப்போம் ஆகி விடும், பாருங்களேன், இப்படிப் பேசக்கூடாது. உறுதி தான் வெற்றிக்கான சாவி. இந்த சாவியை ஒருபோதும் தொலைத்து விடக்கூடாது. மாயாவும் கூட சாமார்த்தியமானதுதான், அந்தச் சாவியைத் தேடிக் கண்டு பிடித்து விடும். ஆதலால் இந்தச் சாவியை நல்ல விதமாக பாதுகாத்து வைத்துக் கொள்ள வேண்டும். ஆகவே இப்போது சோதியுங்கள் -தங்களுடைய இராஜ்யத்தின் சம்ஸ்காரத்தை இப்போதே தாரணை செய்யத்தான் வேண்டும். வோம் வோம் என்று சொல்லக் கூடாது. ஒன்று வோம், வோம் இரண்டாவது ஆகட்டும், ஆகட்டும் என்று சொல்கிறீர்கள். இந்த வார்த்தைகளை பிராமணர்களின் அகராதியிலிருந்து நீக்கி விடுங்கள். சரி யாரிடமாவது ஏதாவது பலவீனத்தைப் பார்க்கின்றீர்கள் என்றால், எல்லோருமே புருஷாரத்திகள்தான் இல்லையென்றால் பிராமண வாழ்க்கையிலிருந்து சென்று விடுவார்கள். புருஷாரத்திகளாக இருப்பதால்தான் பிராமண வாழ்க்கையில் இருக்கின்றார்கள் அல்லவா? சரி சிலர் நான் முற்றிலும் சரியாகத்தான் இருக்கின்றேன் என்று சொல்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். மற்றவர் செய்கிறார் என்றால் அவர்கள் முன்பாக விக்னம் உண்டாக்கி விடுகிறது. இவர் செய்யட்டுமே. இவர் மாறட்டுமே ஆனால் தந்தை முன் கூட்டியே சுலோகம் கொடுத்திருக்கின்றார். தன்னை மாற்றி மற்றவரை மாற்ற வேண்டும் என்று நான் மற வேண்டும் அவர் மாறினால் நாள் மாறுவேன் என்பதல்ல. கூறினேனல்லவா? உங்கள் கண்ணோட்டத்தையும் (பாஷ்)

பாவனையையும் மாற்றுங்கள் பாவ் ஆத்மாவினுடையது மேலும் பாவனை, சுப் பாவனை நீங்கள் செய்து பாருங்கள் களைப்படைந்து விடாதீர்கள். சுப் பாவனை அதிகமாக வைத்துப் பார்த்தேன், மாறவே இல்லை, மாறவே போவதில்லை. பிராமணர்களாகிய உங்கள் வாயிலிருந்து இப்படிப்பட்ட வார்த்தைகள் வருவது மாறவே மாட்டார் என்று சொன்னால், அது என்ன வரதானமா? பிராமணர்கள் என்ன வரதானம் கொடுப்பார்கள்? உதவி செய்ய முடியுமானால், உதவி செய்யுங்கள். சுப பாவனையுடன் இல்லாவிட்டால் விலகியிருங்கள். மனதில் வைத்துக் கொள்ளாதீர்கள். சுப பாவனையில் ஆசிர்வாதம் கொடுங்கள். மற்ற வார்த்தைகளைப் பேசாதீர்கள். ஒன்று இப்படி செய்கிறார்கள், அடுத்து இரண்டாவது வார்த்தை என்ன சொல்கிறார்கள் என்று கூறட்டுமா? ஏனென்றால் இன்று பாப்தாதா மிக நல்ல விதமாக சோதனை செய்தார். இரண்டாவது என்ன சொல்கிறார்கள்? இப்படி நடந்து கொண்டுதான் இருக்கிறது. இப்படியும் கூட செய்கிறாரல்லவ? பிறகு நான் செய்தால் என்ன வந்து விட்டது. அவர் கிணற்றில் விழுந்து கொண்டிருக்கிறார் மேலும் நீங்களும் கூட விழுந்து, பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். இதென்ன விவேகமானதா? இப்போது ஒரு வார்த்தை 18-ஜனவரி வரை பாப்தாதா புருஷாரத்தத்திற்காக ஹோம் ஒர்க் (வீட்டுப் பாடம்) கொடுக்கின்றார். செய்வீர்களா? செய்வீர்கள் என்றால் கை உயர்த்துங்கள். என்ன நடந்தாலும் சரி மாற வேண்டியிருந்தாலும் எதிர் கொள்ள வேண்டியிருந்தாலும் விலகியிருக்க வேண்டியிருந்தாலும், சரி மாறுவீர்கள். கை உயர்த்துங்கள் பக்கா? அல்லது நான் ரொம்பவும் முயற்சி செய்தேன். முடியவில்லை என்று சொல்வீர்களா? இந்த பதில் தரக் கூடாது. ஏனெனில் இனி அச்சானக் (திடீரென) விளையாட்டுகள் நிறைய நடக்கவிருக்கிறது. மேலும் பாப்தாதா என்ன விரும்புகிறார் என்றால் ஒரு குழந்தை கூட பின் தங்கி விடக்கூடாது. கூடவே வரட்டும். ஆதலால் ஒன்று, ஒருவேளை மாறவே இல்லை என்றால் சுப பாவனை வைத்த பிறகும். மாறவில்லை என்றால் நீங்கள் உங்களை மாற்றிக் கொள்ளுங்கள். அவர் இப்படிச் சொன்னார். அவர் இப்படிச் செய்தார். ஆகவேதான் நானும் செய்ய வேண்டியதாயிற்று. இது வேண்டாம். செய்வது கற்பிக்கும் நோக்கத்தோடு இருக்கலாம் ஆனால் பார்ப்பது குறைகளைத்தான். ஆதலால் பாவ் (கண்ணோட்டம்) மற்றும் பாவனை. ஆத்மீக கண்ணோட்டம் மற்றும் சுப பாவனை மற்றபடி இது நடந்து

கொண்டுதான் இருக்கிறது என்ற வார்த்தை இப்படிச் செய்து கொண்டுதானே இருக்கின்றார், நடந்து கொண்டுதானே இருக்கிறது, நான் செய்தால் மட்டும் என்ன வந்தது? ஆகவே தந்தை எப்போது சொல்கின்றாரோ அப்போது இவர் பின் தங்கியிருக்கிறாரல்லவா?' நானும் கூட இருந்து விடுகிறேன். இதனாலென்ன ஆதலால் ஸீ பாதர் மற்றும் பாவ், பாவனை இந்த இரண்டு பரிவர்த்தனை (மாற்றம்) வேண்டும். எப்போது 5-தத்துவங்களுக்கும் கூட நீங்கள் சுபபாவனை வைக்கின்றீர்கள். மேலும் பிராமண பரிவாரத்தில் சுப பாவனை வைக்க முடியாதா? இப்படித்தான் நடக்கிறது. இது நடந்து கொண்டுதான் இருக்கிறது என்ற வார்த்தைகளை சமாப்தி செய்யுங்கள். நான் மாறிக் காட்ட வேண்டும். நான் மாறினால் மற்றவரும் மாறுவர் கட்டாயமாக மாறிவிடுவார்கள். இந்த நிச்சயம் மற்றும் சுப பாவனையோடு இருங்கள். பிறகு பாருங்கள். வெகு சீக்கிரமாகவே தங்களுடைய இராஜ்யம் வந்து விடும். ஆதலால் இந்த 18ம் தேதிக்குள் இரண்டு வார்த்தைகளையும் சதா காலத்திற்கு தாரணையில் கொண்டு வர வேண்டும் என்று பாப்தாதா கூறப் போவதில்லை. எழுத்து மூலமாக எழுதி அனுப்பினால் போதும். உறுதி மொழி எழுத்து மூலமாக கொடுத்த காகிதங்களின் கோப்புகள் பாப்தாதாவிடம் நிறைய வந்து சேர்ந்திருக்கின்றன. வதனத்தில் இந்த கோப்புகள் நிறைய இருக்கின்றன. உறுதிமொழி அல்ல. திட சங்கல்ப ரூபத்தில் இந்த இரண்டு வார்த்தைகளை தாரணையில் கொண்டு வர வேண்டும். சரிதானா டீச்சர்ஸ்? செய்ய வேண்டுமல்லவா? நல்லது மாதாக்கள் கை உயர்த்துங்கள் செய்வீர்கள் கை உயரமாக உயர்த்துங்கள். பாண்டவர்கள்! பாண்டவர்களும் கூட உயர்த்துகிறார்கள். சரிதான் பாப்தாதாவோ தினமும் பார்த்துக் கொண்டேயிருப்பார். பாப்தாதாவுக்கு பார்ப்பதற்கு நேரம் பிடிக்காது சரிதானா? நல்லது.

டீச்சர்ஸ் யாரெல்லாம் வந்திருக்கிறீர்களோ, முரளி எல்லோருக்கும் போய்ச் சேரும். இங்கு வந்திருப்பவர்களுக்கு மட்டுமல்ல. உள்நாடு, வெளி நாடுகளிலுள்ள எல்லா குழந்தைகளுக்கும் தான். இனி உங்களுடைய வேலை அதிகமாகும். சேவை செய்து விட்டோம், சொற்பொழிவு செய்து விட்டோம். வர்க்க சேவையும் செய்து விட்டோம் என்பதல்ல. இன்னும் செய்ய வேண்டிய சேவை அதிகம் பாக்கி இருக்கிறது. இப்போது மனம் மூலமாக சக்தி கொடுப்பதற்கான சேவை

செய்ய வேண்டும். எப்படி ஆதியில், சிவபாபா, பிரம்மாவில் பிரவேசம் செய்தாரோ, அப்போது இருந்த இடத்திலிருந்தே சக்தி அலைகளைப் பரப்பினார். சிலருக்கு சாட்சாத்காரம் ஆனது. சிலருக்கு பிரேரணை கிடைத்தது. இதைக் கேட்டு நான் அங்கு சொல்லத்தான் வேண்டும் என்று, ஓடி ஓடி வந்தார்கள் அல்லவா? இப்படி யார் ஆரம்பத்தில் வந்தார்களோ, அவர்கள் எவ்வளவு பக்காவாக இருக்கிறார்கள். நினைக்கிறீர்கள் அல்லவா? தாதியை மற்ற தாதிகளையும் கூட நினைவு செய்கிறீர்கள் அல்லவா? ஆகவே ஆரம்பத்தில் என்ன நடந்ததோ அது இப்போது கடைசியிலும் கூட திரும்பவும் நடக்கும். ஆதலால் உங்களுடைய மனோ சக்தியை, மனசா சேவையை அதிகரியுங்கள் அந்த சமயத்தில் உங்களுடைய சொற்பொழிவை கேட்க மாட்டார்கள். யாரும் கோர்ஸ் செய்ய வரமாட்டார்கள். நிலைமை மிக மோசமானதாக இருக்கும். மனசா சக்தி மூலமாக ஆறுதல் அளிக்கக்கூடிய சேவை செய்ய வேண்டியதாயிருக்கும். ஆதலால் இப்போது பயிற்சி செய்யுங்கள். அமிர்தவேளையில் மட்டுமல்ல. மற்ற வேலைகளையும் செய்யுங்கள். இடையிடையே மனதை வசப்படுத்தி, நாலா பக்கமும். ஏகாக்கிரஹம் செய்து சக்தி அளிக்க முடியுமா? அளிக்க முடியவில்லையா? என்பதை சோதித்து பயிற்சி செய்து பாருங்கள். இதற்கு அதிகமாக அவசியம் உண்டாகும். கடைசியில் துக்கம் நீக்கி, சுகம் கொடுக்கும் உங்களுடைய சித்திரங்களும் தயாராகும். ஆகவே சைத்தன்யமாயிருக்கும் உங்களால் செய்ய முடியாதா? அந்தர்முகியாகி இடையிடையே 5-நிமிடங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். அமிர்த வேளை மட்டுமல்ல. இரவு பகலாக இந்த பயிற்சி அவசியம் இரவில் கண் விழித்தால் பயிற்சி செய்து பாருங்கள். பிறகு தேவைப்பட்டால் சென்று படுத்துக் கொள்ளுங்கள் ஆனால் கொஞ்ச நேரமாவது பயிற்சி செய்யுங்கள். மற்ற வேலைகள் இருந்தால் எழுந்திருக்கிறீர்கள் அல்லவா? ஆதலால் இந்த அப்பியாகம் செய்யுங்கள். அப்போதுதான் உங்களுக்கு பூஜை நடக்கும். இல்லையென்றால் உங்களுக்கு பெயரளவுக்குத்தான் பூஜை நடக்கும். கோவில் மிகப் பெரியதாக கட்டப்பட மாட்டாது பெயரளவுக்கு கோவிலில் பூஜை நடக்கும். கேட்டீர்களா? நல்லது.

இப்போது பாப்தாதாவிடமிருந்து சமாச்சாரம் கேட்யர்கள் இன்று மிக நன்றாக சோதித்தேன். சோதனை செய்வதற்கு பாப்தாதாவுக்கு நேரம்

ஆனது. நல்லது இப்போதே உங்கள் மனதை ஏகாக்கிரம் செய்யுங்கள். செய்ய முடியுமா? அல்லது நேரமாகி விட்டது என்ற எண்ணம் வருமா? களைத்துப் போய் விட்டீர்கள். பசி எடுக்கிறது. சாப்பிட வேண்டும். அப்படி இல்லைதானே இல்லை. பாப்தாதா அறிவார் குழந்தைகளுக்கு தந்தையிடம் மிகுந்த அன்பு இருக்கிறது. இந்த சிநேகத்திற்கான சர்டிபிகேட் பாப்தாதா கொடுக்கின்றார். நீங்கள் இப்போது வந்திருக்கிறீர்கள் அல்லவா? எந்த விமானத்தில் பயணம் செய்து வந்தீர்கள்? உங்களுக்கு தெரியுமா? ரயிலில் பயணமாக, விமானப் பயணமாக வந்திருக்கலாம் ஆனால் நீங்கள் ஒரு விசித்திரமான விமானம் மூலமாக வந்திருக்கிறீர்கள். ஆது என்ன வென்று தெரியுமா? சிநேகம் என்ற விமானம், சிநேகம் (அன்பு) என்ற விமானத்தில் தானே வந்தீர்கள். ரயிலில் வந்திருந்தாலும் சரி, வேறு எதுவாக இருந்தாலும் சரி தந்தையிடம் சிநேகம் இருக்கிறது. ஆதலால் வந்திருக்கிறீர்கள். இப்போது கொஞ்சம், கொஞ்சம் சில சமயம் மாயை விளையாட்டு நடக்கிறதல்லவா? அந்த சமயத்தில் தந்தையின் சிநேகத்தில் மூழ்கி விடுங்கள். மாயைக்குத் தெரியாது. பாப்தாதா ஆரம்பத்தில் டிரான்ஸ் (தியானம்) மூலமாக காட்சி காண்பித்தார் கடைசி நேரத்தில் அதிக குழப்பம் ஆகி விடும்போது எல்லா விருத்திகளும் (உள்ளுணர்வுகள்) வெளியே வரும். கெட்ட விருத்திகளும், உதவி செய்யக் கூடிய விருத்திகளும் வெளியே வரும். ஆகவே பாப்தாதா ஆரம்ப காலத்தில் குழந்தைகளுக்கு காட்சி காண்பித்தார். அநேக கெட்ட குணமுடைய துஷ்டர்கள், கெட்ட நோக்கத்தோடு பின்னால் வருவார்கள் ஆனால் அவர்களுக்கு ஒளி மட்டும்தான் தெரியும். மனித உருவம் தெரியாது ஒளிதான் தெரியும் ஃபரிஷ்தா ரூபம்தான் தெரியும் அதுபோல நீங்கள் ஏகாக்கிரஹ அட்பியாசத்தில் இருந்தாலும் கூட நீங்கள் எதிரில் அமர்ந்திருப்பீர்கள் ஆனாலும் அவர்களுக்கு தென்பட மாட்டீர்கள். ஒரே ஒளியாகத்தான் தெரியும் இப்படி நடக்கும் ஆனால் அப்பியாசம் இப்போதிலிருந்தே செய்யுங்கள். பரிஷ்தா நல்லது. இப்போது மூன்று நிமிடங்கள் மனதை ஏகாக்கிரஹ அப்பியாசம் செய்யுங்கள். இந்த டிரில் செய்யுங்கள்.

சேவை போபால் ஜோன்: நல்லது போபால்காரர்கள் கூட நல்ல எண்ணிக்கையில் வந்திருக்கிறார்கள். இப்போது போபால்காரர்கள் என்ன புதுமை பற்றி யோசனை செய்திருக்கிறீர்கள்? என்ன செய்து

முடித்திருக்கிறீர்களோ அது. எல்லோருமே செய்திருக்கிறார்கள் ஆனால் புதுமையாக என்ன செய்ய போகிறீர்கள்? பாப்தாதா இதற்கு முந்தைய சந்திப்பிலும் கூட கூறியிருந்தார். இப்போது விஜபி சேவை செய்திருக்கிறீகள். எல்லா ஜோன்களும் செய்திருக்கின்றன. எல்லா வர்க்கத்தினருக்கும் சேவை செய்திருக்கிறார்கள் ஆனால் இப்போது பாப்தாதா சம்மந்தத்தில் இருக்கின்ற விஜபிக்கள் யார் மைக் ஆகி மற்றவர்களுக்கு தனது பேச்சு மூலமாக பரிவர்த்தனை செய்ய வேண்டும். அப்படிப்பட்டவர்களை அருகில் கொண்டு வாருங்கள், 6-அல்லது 12-மாதங்களுக்கொரு முறை வரட்டும். 4-5 முறை வர வேண்டும் சொற்பொழிவாற்றினார்கள். சம்மந்தம் தொடர்பில் வந்தார்கள் ஆனால் அநேகருக்கு நன்மை உண்டாகும்படியாக கவரக்கூடிய அப்படிப்பட்ட குவாலிட்டி விஜபி தயார் செய்யுங்கள் பெயர் புகழுடையவராக இருக்க வேண்டும் ஆனால் தற்காலத்தில் இருக்கும் மக்கள் வெளிமுகமானவர்களாக இருக்கிறார்கள் அல்லவா? அவர்கள் வெளிப்பகட்டையும் விரும்புகிறார்கள். ஆகையால் தொடர்ந்து நடக்கும்படியாக அப்படிப்பட்ட பிளான் தயார் செய்யுங்கள். மேலும் வாரிஸ் குவாலிட்டியும் தயாராக்க வேண்டும். ஏனெனில் அனைத்து வர்க்கத்தினருக்கான சேவை ஆரம்பமாகி எத்தனையோ வருடங்கள் ஆகி விட்டன. ஆகி விட்டதல்லவா? ஆதலால் வாரிஸ் குவாலிட்டி விஜ.பிக்களை இன்னும் அருகாமையில் கொண்டு வாருங்கள். இப்போது விஜபி என்ற வரிசையில் இருக்கின்றனர். சகயோகியாகவும் இருக்கிறார்கள் சேவையும் செய்கிறார்கள் ஆனால் வாரிஸ் குவாலிட்டி ஆகவில்லை. இனி எந்த சமயத்தில் எந்த ஒரு காரியம் செய்ய வேண்டுமோ அதற்கு கல்வித்தகுதியுள்ளவர்கள், சகயோகியாகக் கூடியவர்களுடைய அவசியம் இருக்கிறது. அந்தந்த வகையில் அந்தந்த காரியத்தில் ஆஜராகத் தயாராக இருப்பவர்களாக இருக்க வேண்டும். நல்ல தொடர்பில் கொண்டு வந்திருக்கிறீர்கள். பாப்தாதா இந்த விஷயத்தில் குஷியாக இருக்கின்றார் ஆனால் இப்போது அவர்களும் கூட எவர்ரெடி சேவாதாரி ஆகட்டும். இம்மாதிரி குவாலிட்டியுள்ளவர்கள். வர்க்கத்தினர் ஆகியோரை ஒன்றாகச் சேருங்கள். பாப்தாதாவிடம் அழைத்து வர வேண்டும் என்பதல்ல ஆனால் ஏதாவதொரு சென்டரில் எல்லோரையும் ஒன்று சேருங்கள். எங்கே செய்தாலும் சரி எல்லோரும் வந்து கூடுவதற்கு சௌகரியமான இடமாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். மேலும் அவர்களுக்காக ஏதாவது

விசேஷமாக புரோகிராம் ஏற்பாடு செய்யுங்கள். புரோகிராம் இருக்கும்போது செல்கிறீர்கள், சந்திக்கிறீர்கள். சகயோகமும் செய்கிறார்கள் ஆனால் கொஞ்சம் நம்மவர்கள் என்ற உறவில் (ஹோம்லி) கொண்டு வாருங்கள். இதனால் அவசியமான நேரத்தில் சகயோகியாக இருப்பார்கள். ஆரம்பத்தில் போபால் காரர்கள் வி.ஐ.பிக்களுக்கு சேவை செய்து தொடர்பில் கொண்டு வந்தார்கள் ஆனால் இனி இந்த விதிப்படி சேவை செய்து காண்பியுங்கள். பிராமணர்கள் ஆகிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது எல்லா வகுப்பிலும் பிராமணர்கள் விருத்தியாகிக் கொண்டிருக்கிறார்கள். எல்லா வகுப்புகளும் நன்றாயிருக்கின்றன ஆனால் இப்போது அப்படிப்பட்ட சர்வீஸபுள் (சேவை செய்யும்) மனிதர்கள் தயாராக வேண்டும். இவர்களின் பேச்சு மற்றும் அறிமுகம் கேட்டு, சேவை நடக்கும்படியாக இருக்க வேண்டும். மேலும் அவசியமான நேரத்தில், இவர்கள் தயாராகவும் இருக்க வேண்டும், செய்ய முடியும். இப்போது செய்து காண்பியுங்கள். இத்தனை விஐபிக்கள் இருக்கிறார்கள் என்று லிஸ்ட் கொடுக்கிறார்கள் ஆனால் இவர்கள் அனைவரையும் ஒன்றாகச் சேர்த்தால் ஆகி விடும். இம்மாதிரி சபை கூட்ட வேண்டும். இவர்கள் ஒருவருக்கொருவரைப் பார்த்து உற்சாகம் உண்டாகும். யோசிப்பார்கள். இவர்கள் வருகிறார்கள். அவர்களும் வருகிறார்கள் என்று ஆர்வம் உண்டாகும். இனி எந்த ஒரு ஜோன் வந்தாலும், வர்க்கத்தனர் வந்தாலும், அவர்கள் முதலில் கொஞ்சம் முக்கியமான இடத்தில் ஒன்றாக கூட்டுங்கள். மதுபனில் ஒன்றாகக் கூட்ட வேண்டும் என்பதில்லை. ஏதாவதொரு ஸ்தானத்தில், இவர்களை ஒன்று சேர்த்து அவர்களை சிநேகம், மற்றும் சகயோகத்தில் முன்னேற்றுங்கள். டீச்சர்ஸ் என்ன செய்வீர்கள்? டீச்சர்ஸ் செய்து காட்டுவீர்கள் அல்லவா? என்ன செய்ய முடியாது? ஒவ்வொருவரும் இளையவராக இருந்தாலும், மூத்தவர்களாயிருந்தாலும் திட சங்கல்பம் வைத்தார்களானால் சங்கல்பம் மட்டும் இருந்தால் போதும். செய்யத்தான் வேண்டும். அபிமானத்தால் முன்னேறக் கூடாது சுவமானில் முன்னேற வேண்டும். பாப்தாதா எந்த ஒரு குழந்தையைப் பார்த்தாலும், எந்த ஒரு ஜோனைப் பார்த்தாலும், உயர்நத திருஷ்டியில் தான் பார்க்கின்றார். ஒவ்வொரு குழந்தையும் நம்பகமானவர்கள்தான். சில புது குழந்தைகளும் கூட உள்ளுக்குள்ளேயே, சேவையில் நல்ல அற்புதம் செய்து கொண்டிருக்கிறார்கள். பாப்தாதாவிடம் சமாச்சாரம் வராமலிருக்கலாம்

ஆனால் பாப்தாதா அறிவார். அற்புதம் செய்து காட்ட வேண்டும். ஆரம்பத்தில் மிக நன்றாக சேவை செய்தார்கள். அற்புதம் செய்து காட்டுங்கள். செய்வீர்கள் அல்லவா? செய்வீர்கள். நல்லது. எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டிருக்கிறது ஆனால் குவாலிட்டியை அதிகரியுங்கள். நல்லது.

சேவையில் கோல்டன் சான்ஸ், ஒவ்வொரு ஜோனுக்கும் மிக நல்ல முறையில் கிடைத்துக் கொண்டிருக்கிறது. தந்தைக்கும் குஷியாக இருக்கிறது. நீங்கள் எல்லோரும் கூட குஷியாக சான்ஸ் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். நல்லது. பாப்தாதாவுக்கு மகிழ்ச்சி தான். விருத்தியைப் பார்தது குஷி அடைகின்றார்.

கல்வி மற்றும் மேலாண்மைத்துறை: நல்லது கல்விக்காக அரசும் கூட வாழ்க்கைக்கு அவசியமானது என்று கருதுகிறது. மேலும் தற்சமயம் மெஜாரிட்டி கல்வியில் ஆன்மீகமும் அவசியம் என்று எண்ணத் தொடங்கியிருக்கிறார்கள். இப்போது வாயுமண்டலம் மாறியுள்ளது. இதற்கு முன்பெல்லாம், ஆன்மீகம் என்பது வயதானவர்களுக்குத்தான் என்று ஆனால் கல்வியில், ஆன்மீகம் இல்லையென்றால், பரிவர்த்தனை ஏற்பட முடியாது என்று இப்போது புரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆதலால் முடிந்தவரை ஆங்காங்கே, நகரங்களில் உள்ள பள்ளி, கல்லூரிகளில் சேவை செய்யுங்கள். அநேக குழந்தைகள், தங்கள் பெற்றோர்களை மாற்ற முடியும். பள்ளிகளில் ஒவ்வொரு இடத்திலும் சேவை நடக்க வேண்டும். பள்ளியில் பெற்றோர்களும் தொடர்பில் வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. இன்றைய குழந்தைகள் பிரச்சனைக்கு உரியவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் நடத்தையில் கொஞ்சம் பரிவர்த்தனை உண்டாவதைப் பார்க்கும்போது, இது நன்றாக இருக்கிறதே என்று நினைப்பார்கள். சில இடங்களில் இந்த சேவை நடக்கிறது. இது எல்லா இடங்களிலும் நடக்க வேண்டும். யாருக்காவது சகயோகம் அவசிமானால், சொற்பொழி வாற்றுவதற்கு, அல்லது புரோகிராம் ஏற்பாடு செய்வதற்கு, ஒருவருக்கொருவர் உதவி பெற்றுக் கொள்ளலாம். நீங்கள் உங்கள் டிபார்ட்மெண்ட்டை சோதியுங்கள். எங்கெல்லாம் முடியுமோ, உதவி செய்யலாம், செய்விக்கலாம். கொஞ்சம் விரிவு படுத்துங்கள். சில இடங்களில் பரவலாக சேவை நடக்கிறது ஆனால் நாலாபுறமும்

கிராமங்களிலும் கூட பரப்புங்கள். சிலர் கிராமங்களில் கூட சேவை செய்கிறார்கள். கல்வித்துறை இதில் நிறைய செய்ய முடியும். உலகாயத ரீதியிலும் கூட குழந்தைக்கு உயர் படிப்பு இருந்தால் உலகினருக்கும் லாபகரமானதாகும். மேலும் மக்களுக்கும் கூட புண்ணியம் சேமிட்பாகும். நல்லது செய்து கொண்டுமிருக்கிறார்கள். பாப்தாதா கேள்விட்படுகின்றார் ஆனால் நாலாபுறமும் சப்தம் பரவட்டும். பிரம்மாகுமாரிகளினுடைய ஆன்மீக ஞானம் அவசியம் என்ற சப்தம் பரவட்டும். சப்தத்தை பரவச்செய்யக் கூடிய குரூப் தயார் செய்யுங்கள். எந்த ஒரு வர்க்கம் தயார் செய்திருக்கிறார்களோ அந்த எல்லா வர்க்கத்தினரும் தத்தம் ரீதியில் அவசியம் தான். செய்தி கொடுக்கலாம். எங்கு சென்றாலும் கல்வி சம்மந்தமான சேவையில் சென்றாலும், மருத்துவ ரீதியாகச் சென்றாலும், அமைச்சரவை சம்மந்தமாகச் சென்றாலும், எங்கே சென்றாலும், எந்த ஒரு வர்க்கத்தைச் சார்ந்தவராயிருந்தாலும் இந்தக்குரல் செவியில் படட்டும். இந்த வர்க்கத்திலும் அவசியமானது தான். இப்படி சப்தம் எல்லா இடங்களிலும் பரவட்டும். கொஞ்சம், கொஞ்சம் இப்போது ஆரம்பமாகியிருக்கிறது. பிரம்மாகுமாரிகள் என்ன சேவை செய்கிறார்களோ, அப்படி வேறு யாராலும் செய்ய முடியாது என்று. இப்படி மகிமை பரவியிருக்கிறது. மேனேஜ்மெண்ட் வகையிலும் கூட பிரம்மாகுமாரிகள் எப்படி நிர்வாகம் செய்கிறார்களோ அப்படி வேறு யாரும் செய்ய முடியாது என்று. இப்படி ஒவ்வொரு வர்க்கத்தைச் சார்ந்தவர்களும் சப்தம் (மகிமை) பரவச் செய்ய வேண்டும். எங்கே சென்றாலும், பிரம்மா குமாரிகளினுடைய காரியம் நன்றாயிருக்கிறது இந்தக்க குரல் கேட்க வேண்டும். அப்போது தான் நன்றாக ஆவார்கள். நல்லது. மற்றபடி என்ன செய்து கொண்டிருக்கிறீர்களோ, அதை நன்றாகவே செய்கிறீர்கள். இனிமேல் இன்னும் சிறப்பாகச் செய்யுங்கள். மகிமை பரவிக் கொண்டேயிருக்கட்டும். நல்லது.

டபுள் விதேஷி: இப்போது டபுள் விதேஷிகள் எழுந்திருங்கள். இளைஞர்களும் கூட எழுந்திருங்கள். உங்கள் எல்லோருக்கும், டபுள் புருஷாரத்தி குழந்தைகளாகிய உங்கள் அனைவருக்கும் நல்வாழ்த்துக்களை அளிக்கின்றார். நீங்கள் எல்லோரும் மதுபனில் அலங்காரமாகி சென்று கொண்டிருக்கிறீர்கள். ஆகவே மதுபனின் அலங்காரத்திற்கு வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள். நீங்கள்

எல்லோரும் இந்த சங்கல்பம் மிக நன்றாகவே செய்தீர்கள். ஒவ்வொரு சீசனிலும் யாராவது வந்து ஆஜராகிக் கொண்டேயிருக்கிறீர்கள். பாப்தாதாவுக்கு குஷியாக இருக்கிறது. இப்போது முதன் முதலாக ஏதாவது பெரிய புரோகிராம் நடந்தால் ஏதாவதொரு தேசத்திலிருந்து மேடையில் வி.ஐ.பி. வெளி நாட்டினர் வருவது வழக்கம். இப்போது ஸ்பீக்கர் வி.ஐ.பி. யாரும் வருவதில்லை. பிராமணர்கள் வருகிறார்கள். இது மகிழ்ச்சிக்குரிய விஷயம். தங்களுடைய வீட்டின் அலங்காரங்கள் வருகிறார்கள் ஆனால் பாப்தாதா கேள்விப்பட்டார். புரோகிராம் செய்தீர்கள், வெளி நாட்டில் வந்து சேவை செய்ய வேண்டும் என்று புரோகிராம் ஏற்பாடு செய்திருந்தீர்கள். இவர் எதிரில் நின்று கொண்டிருக்கின்றார். (நிஜார் சகோதரர்), பிளான் தயார் செய்திருக்கிறீர்களா? நன்றாகச் செய்தீர்கள். ஏனென்றால் ஆரம்பத்தில் பாப்தாதாவின் மகாவாக்கியம் என்னவாக இருந்தது. வெளி நாட்டினர் இந்தியாவிலுள்ள கும்ப கர்ணர்களை விழிப்படையச் செய்வார்கள். இனி இப்படியும் முயற்சி செய்யுங்கள். எந்த ஒரு பெரிய புரோகிராம் நடந்தாலும், அதில் ஸ்பீக்கரும் வரவேண்டும். வி.ஐ.பி. நல்ல பிளான் செய்தீர்கள். நம்முடைய பிராமணர்கள் வருகிறார்கள் ஆனால் வி.ஐ.பி. வந்து தங்களுடைய அனுபவத்தைக் கூறட்டும். தங்களுக்கு என்ன கிடைத்தது என்று கூறட்டும். அதுவும் நடக்கும். இப்போது தொடர்பில் நிறைய பேர் இருக்கிறார்கள்.

மற்றபடி டபுள் புருஷாரத்திகள் தானே? யார் தங்களை டபுள் புருஷாரத்திகள் என்று கருதுகிறார்களோ அவர்கள் கை உயர்த்துங்கள். டபுள் புருஷாரத்தி. டபுள். டபுள் புருஷாரத்திகாள? மெஜாரிட்டி கை உயர்த்துகிறார்கள். ஒரு சிலர் மட்டுமே உயர்த்தவில்லை. இவர்களை உலாவாக விட்டு விடக்கூடாது. இப்போது டபுள் புருஷாரத்திகள் என்ற டைட்டில் கிடைத்திருக்கிறதல்லவா? பிறகு உங்களுக்கு டைட்டில் (பட்டம்) கிடைக்கும். பரிஷ்தா புருஷார்த்தி. ஏனென்றால் நீங்கள் வரும்போது பறந்து வருகிறீர்கள் அல்லவா? இதேபோல ஸ்திதியிலும் கூட பரிஷ்தா. அதாவது பறக்கும் கலை உடையவர்கள். உயரும் கலை, நடக்கும் கலை அல்ல. பறக்கும் கலை. கவனம் இருக்கிறது. சேவையும் கூட அதிகம் நடக்கிறது. இனி சதா ஏக்ரஸ், ஏகாக்கிரஹமாக இருக்கக்கூடிய குரூப் தயார் செய்யுங்கள். சில சமயம் மட்டும் என்ற பேச்சு கூடாது. சதா என்ற வார்த்தை தான் இருக்க வேண்டும்.

அப்படிப்பட்ட குரூப் தயார் செய்யுங்கள். சதா என்ற வார்த்தை அவ்வளவு பக்காவாக இருக்க வேண்டும். சில சமயம் மட்டும் எனும் போது அந்த புருஷாரத்தத்தில் அறியாதவர்களாகி விடுவார்கள். இங்கு மங்கும் சென்று கொண்டிருக்கும்போது சதா என்ற வார்த்தை நடைமுறையில் இருக்க வேண்டும். ஒவ்வொரு பாடத்திலும் சதா. இப்படிப்பட்ட குரூப் வெளி நாட்டிலும் செய்ய முடியும். உள் நாட்டிலும் செய்ய முடியும். ரேஸ் செய்யுங்கள். சிறிய குரூப்பானாலும், பெரிய குரூப்பாக இருந்தாலும் சரி ஆனால் எங்கேயாவது இப்படிப்பட்ட குரூப் தயார் செய்து காண்பியுங்கள். செய்வீர்கள்! டபுள் புருஷாரத்தி குழந்தைகளுக்கு பழக்கமிருக்கிறது. யார் ஆலோசிக்கிறார்களோ, அவர்கள் செய்து காண்பிப்பார்கள். ஆதலால் இதைச் செய்து காண்பியுங்கள். தைரியம் உள்ளதா? தைரியம் இருக்கிறதா? டீச்சசர் கூறுங்கள். ஜனக் (ஜானகி தாதி) கூறுங்கள் இருக்கிறதா? இப்போது ஆலோசிக்கிறார்கள். யோசியுங்கள், பரவாயில்லை. யோசியுங்கள். செய்து பாருங்கள் மேலும் எல்லோர் சார்பாகவும் பாப்தாதா அந்த குரூப்பிற்கு அன்பளிப்பு தருவார். யார் வேண்டுமானாலும் தயார் செய்யலாம். உள்நாடாக இருந்தாலும், வெளி நாடாக இருந்தாலும் சரி, சதா பிரச்சனையே இல்லை (No problem) என்பதாக இருக்க வேண்டும். நல்லது.

நாலாபுறமிருந்தும் குழந்தைகள் அன்பு நினைவுகளை விதவிதமாக அனுப்பிக் கொண்டே இருக்கின்றனர். அது பாப்தாதாவுக்கு கட்டாயமாகக் கிடைக்கிறது. மேலும் பாப்தாதாவும் கூட அந்த குழந்தைகளை உள்ளத்தில் அமர்த்தி அருகில் எமர்ஜ் செய்கின்றார். தற்காலத்தில் அநேக குழந்தைகள், தங்கள் தங்களுடைய கடந்த ஜென்மங்களின் கணக்கு வழக்குகளை முடிப்பதில் மூழ்கியிருக்கின்றனர். அவர்களுடைய அன்பு நினைவுகளும் பாப்தாதாவிடம் வந்து சேர்ந்திருக்கின்றன. எப்படி (அங்கிள், ஸ்டீவ் நாராயண்) முதல் விஜபி நிமித்தமானார்கள். ஆதலால் பாப்தாதா மற்றும் பரிவாரத்தினர் அனைவரும் யாருக்கெல்லாம் அவர்களுடைய அறிமுகம் இருக்கிறதோ, அவர்களுடைய சக்தி குழந்தைகள் வரை சென்றடைகிறது. எல்லோரும் தங்களுடைய உள்ள பூர்வமான நினைவுகளை அளிக்கின்றனர். இதேபோலவே அநேக குழந்தைகள் பாபா, பாபா என்று சொல்லிக் கொண்டே தங்கள் கணக்கு வழக்குகளை

முடித்துக் கொண்டுமிருக்கிறார்கள். மேலும் சக்திகளை பெற்றுக் கொண்டே முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். உள்நாடு, வெளி நாடுகளில் யாரெல்லாம் சரீரம் மூலமாக தங்கள் கணக்கை முடித்துக் கொண்டிருக்கிறார்களோ, அந்த நினைவுகள் மற்றும் ஆசிகள். சதா கிடைத்துக் கொண்டேயிருக்கின்றன. கிடைத்துக் கொண்டேயிருக்கும். கூடவே, நாலாபுறமிருந்தும் கடிதங்கள், தற்காலத்திலோ கடிதங்களை விட அதிவேகமான சாதனம் கிடைத்திருக்கிறது. யாரெல்லாம் நினைவுகளை அனுப்பியிருக்கிறார்களோ, அந்த எல்லா குழந்தைகளுக்கும் ஒவ்வொருவருடைய பெயர் சகிதமாக அவர்களுடைய விசேஷங்கள் சகிதம் பாப்தாதா அன்பு நினைவுகளை அளிக்கின்றார். இத்தோடு பந்தனத்திலுள்ள கோபிகைகளுக்கு இவர்களிடமிருந்தும் உள்ளத்தில் குரல் கேட்கிறது. அனால் இப்படிப்பட்ட இனிமையான (லவ்லி) குழந்தைகளை நினைவு செய்கின்றார். அற்புதம்! பந்தனத்தில் இருந்தாலும் பந்தன் முக்தாக இருக்கிறார்கள். தாங்கள் குப்த ரூபத்தில் கடுமையான பந்தனத்திற்கிடையிலும் தாங்கள் சேமிப்பு செய்கிறார்கள். இந்த பந்தனத்திலுள்ளவர்களின் வரலாறு விசித்திரமானது.

பாப்தாதா நாலா பக்கங்களிமுள்ள, இப்படிப்பட்ட பந்தனத்திலுள்ள உண்மையான கோபிகைகளுக்கும் கூட அன்பு நினைவுகளை அளிக்கின்றார். அவர்களுக்கு விசேஷ நேரம் இருக்கிறது. மேலும் பாப்தாதா அதே நேரத்தில் அவர்களுக்கு கிரணங்களை அளிக்கின்றார். நல்லது.

நாலாபுறமும் உள்ள லவ்வி மற்றும் லக்கி திட சங்கல்பமுள்ள குழந்தைகளுக்கு, நினைத்தார்கள் செய்தார்கள், செய்வோம், பார்ப்போம் என்பதல்ல. நினைத்தார்கள், செய்து முடித்தார்கள். சதா தன்னை நஷ்டமோகாவில், சம்மந்தத்தில் மட்டும் மோகமல்ல, தன்னுடைய தேகபான், தேக அபிமானத்திலும் கூட மோகம் இல்லை. இப்படிப்பட்ட நஷ்டமோகா, எவர்ரெடி குழந்தைகளுக்கு சதா ஸ்ரீமத்படி கையோடு கை சேர்த்து கூடவே பறக்கக்கூடியவர்கள் மற்றும் கூடவே பிரம்மாபாபாவுடன் தங்களுடைய இராஜ்யத்தில் வரக்கூடிய தீவிர புருஷாரத்தி, பறக்கும் கலையில் உள்ள குழந்தைகளுக்கு பாப்தாதாவின் மிக அதிக ஆசிகள் மற்றும் அன்பு நினைவுகள் ஸ்வீகாரம் செய்வீர்களாக. மேலும் பாலக் ஸோ மாலிக் குழந்தைகளுக்கு நமஸ்தே.

தாதிகளுடன்: (தாதி ஜனாகி மற்றும் மோகினி சகோதரி இருவரும் பாப்தாதாவை ஆரத்தழுவினார்கள்) நிமித்தமாக இந்த இருவர் ஆனார்கள் ஆனால் எல்லோருடைய கைகளும் இருந்தன.

சாந்தாமணி தாதி: நல்லது. பரவாயில்லை. படுக்கையில் இருங்கள் ஆனால் எல்லோருடைய உள்ளத்திலும் நினைவு இருக்கட்டும். ஏனென்றால் ஆதி ரத்தினம் அல்லவா! ஆதி ரத்தினம், அமூல்ய ரத்தனம் (விலை மதிக்க முடியாத ரத்தினம்) விரல் விட்டு எண்ணக்கூடிய ரத்தினம். எல்லோருக்கும் தாதியின் மிகுந்த நினைவு இருக்கிறதல்லவா

கிராம சேவை புரோகிராம் சார்பாக முழு குஜராத்தில் 18 டிசம்பரிலிருந்து 29-டிசம்பர் வரை சாஸ்வத ஆன்மீக விவசாய விழிப்புணர்வு பயணம் மேற்கொள்கிறார்கள். இதன் ஆரம்ப விழா நிகழ்ச்சியை நேற்றைய தினம் நதியில் வைத்திருந்தார்கள். பாப்தாதாவுக்கு சமாச்சாரம் கிடைத்தது. கிராம சேவை செய்பவர்கள் மிக நன்றாக பிரத்யக்ஷ சொரூபம் காண்பிக்கின்றார்கள். விவசாய நிலத்தில் விதவிதமான உரம் போடுகிறார்கள் அல்லவா? இந்த உரத்திற்குப் பதிலாக யோக பலத்தின் மூலமாக காய்கறி, கனி வகைகள் விளைச்சல் நன்றாகச் செய்கிறார்கள். மேலும் இதை நடைமுறையில் செய்து காட்டியிருக்கிறார்கள். நடைமுறையில் சோதித்தும் பார்த்திருக்கிறார்கள். மேலும் யோகத்தின் மூலம் எந்தஒரு கனிகள், பூக்கள், தானியங்கள் உற்பத்தியாகின்றதோ, அவைநோயை உற்பத்தி செய்வதில்லை. யோக பலத்தின் மூலமாக நோய்க்கிருமிகள் மடிந்து போகின்றன. இதை பல கிராமங்களில் நடைமுறையில் செய்து காட்டியிருக்கிறார்கள். இதில் யார் நிமித்த விஜபி. ஆக இருந்தார்களோ, அவர்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். யோக பலத்தின் மூலமாக இப்படி முயற்சி செய்தால் விருத்தியாகும் என்றும் கூறியிருக்கின்றார்கள். இது பிரத்யக்ஷ நிரூபணம். இப்படி இந்த பிரத்யக்ஷ நிரூபணத்தைப் பார்த்து, ஏற்றுக் கொள்வதற்கு எல்லோரும் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். இதுவும் கூட பிராமண பரிவாரத்தினருக்கு நல்ல வரவேற்பைத் தரக்கூடிய சேவையாக இருக்கிறது. அநேக இடங்களில் செய்திருக்கிறார்கள் அல்லவா?

அவர்கள் வந்திருக்கிறார்கள். எங்கே இருக்கிறார்கள், கிராம சேவை செய்பவர்கள். கிராம சேவை இலாகாவைச் சேர்ந்தவர்கள் எழுந்திருங்கள்.

இங்கே அபுவிலும் கூட இம்மாதிரி விவசாயம் செய்கிறார்கள். நிலத்திலிருந்து என்ன கிடைத்தது? இப்போது என்ன உற்பத்தி செய்திருக்கிறார்கள்? (இப்போது பப்பாளி (பபீதா) உற்பத்தியாகி இருக்கிறது. கடலை, பீன்ஸ், தயாராகிக் கொண்டிருக்கிறது. நன்றாயிருக்கிறதல்லவா? தங்களுக்கும் வருமானம் வந்தது. யோகமும் செய்தார்கள். ஏதாவது காரணமாக தொடர்ந்து யோகம் செய்திருப்பார்கள் அல்லவா? இதனால் தங்களுக்கும் நன்மை. ஜனங்களுக்கும் நன்மை. நல்ல விஷயம் தான். பிராக்டிக்கலாக, எப்போதாவது வகுப்பில் காண்பிக்க வேண்டும். என்ன உற்பத்தி செய்திருந்தாலும், அதைக் காட்டலாம். நல்லது. ஒருவேளை இதுபோன்று சப்தம் பரவிக் கொண்டேயிருந்தால், அழைக்காமலேயே, எல்லோரும் வந்து விடுவார்கள். அழைப்பிதழ் அச்சடிக்க வேண்டிய அவசியம் இருக்காது. வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், மிக நல்ல சேவை.

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳

## 31.12.2008 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## இந்த புத்தாண்டில் பரிவர்த்தனை சக்தி எனும் வரதானம் மூலமாக எதிர்மறையை (நெகட்டிவ்) ஆக்கப்பூர்வமாக (பாஸிட்டிவ்) பரிவர்த்தனை செய்து எண்ணம் (சங்கல்பம்), சுவாசம், சமயம் (நேரம்) ஆகியவற்றை பயன்தரும் வகையில் பயன்படுத்துங்கள், வெற்றி மூர்த்தி ஆகுங்கள்!

இன்று புதிய வாழ்வு அளிக்கின்ற தந்தை, தன்னுடைய நாலாபுறமும் உள்ள புதிய வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கின்ற குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சியடைகின்றார். இந்த புதிய வாழ்வு என்பதே. புது யுகத்தை உருவாக்குவதற்காகத்தான். உலகினர் புத்தாண்டை கொண்டாடுகிறார்கள் ஆனால் புது வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கின்ற குழந்தைகளாகிய நீங்கள் எல்லோரும் எல்லா ஆத்மாக்களுக்கும், வாழ்த்துக்களை அளிப்பதோடு, புது யுகம் இதோ வந்தே விட்டது என்ற நற்செய்தியையும் அளிக்கின்றீர்கள். குழந்தைகளாகிய உங்கள் எல்லோருக்கும் தந்தை ஆஸ்தியின் ரூபத்தில் பொன்னுலகை அன்பளிப்பாக அளித்து விட்டார். அந்த பொன்னுலகில் அநேக பொன்னாலான அன்பளிப்புகள் இருக்கவே இருக்கின்றன. இந்த பொன்னுலகம் என்ற அன்பளிப்பு எங்களது பிறப்புரிமை என்ற ஆன்மீக போதை (நஷா) உங்கள் எல்லோருக்கும் இருக்கிறதல்லவா? இன்றைய உலகில் யாருக்காவது ஏதாவது அன்பளிப்பு அளிக்கின்றனர் என்றால், அது எத்தனை பெரியதாக இருந்தாலும், என்ன கொடுப்பார்கள்? கிரீடம் மற்றும் சிம்மாசனம் ஆனால் உங்களுடைய பொன்னுலக

அன்பளிப்போடு ஒப்பிடும்போது இது ஒரு பொருளா? பெரிதாக இருக்கலாம்! உங்கள் உள்ளத்தில் குஷி இருக்கிறது. தந்தை எங்களுக்கு எல்லாவற்றிலும் மிகச் சிறந்த புது யுகம் என்ற அன்பளிப்பை வழங்கி விட்டார். இந்த நிச்சயம் இருக்கிறது. நிச்சயிக்கப்பட்டிருப்பதாகவும் இருக்கிறது. இப்படி விதிக்கப்பட்டிருப்பதை யாராலும் மாற்ற முடியாது. இந்த அசைக்க முடியாத உறுதியானது சதா நினைவில் இருக்கின்றதா? சதா இருக்கிறதா? அல்லது சில சமயம் குறைந்து போய் விடுகிறதா? ஜன்ம சித்த அதிகாரம் (பிறப்புரிமை) என்றால், ஜன்ம சித்த அதிகாரம் ஒருபோதும், மாற்ற முடியாதது.

இன்று நீங்கள் எல்லோரும் வெவ்வேறு இடங்களிலிருந்து புத்தாண்டை கொண்டாடுவதற்காக வந்திருக்கிறீர்கள். இந்த புத்தாண்டை கொண்டாடுகிறீர்கள் என்றால், இந்த புத்தாண்டில் என்ன இலக்ஷியம் வைத்திருக்கிறீர்கள். இந்த புத்தாண்டில் விசேஷமாக என்ன செய்ய வேண்டும்? இந்த புத்தாண்டின் விசேஷம், பாப்சமான் சம்பன்னமாக, சம்பூரணமாக ஆகியே தீரவேண்டும். எந்த ஒரு புருஷாரத்தம் (முயற்சி) செய்ய வேண்டிய அவசியம் இருந்தாலும் பாப்சமான் ஆகியே தீர வேண்டும் என்பது நிச்சயிக்கப்பட்டதாக இருக்கிறது. பதில் கூறுங்கள். உங்கள் எல்லோருடைய மனதிலும் இதே எண்ணம் பக்காவாக இருக்கிறதல்லவா? இருக்கிறதா? தலையை அசைத்துக் காட்டுங்கள். தந்தையின் விருப்பம் கூட ஒவ்வொரு குழந்தையும், பாப்சமான் ஆகவேண்டும் என்பது தான். தந்தை தந்தையாகவே இருக்கின்றார் ஆனால் குழந்தைகள் தந்தையையும் விட உயர்ந்தவர்களாக (சிறந்தவர்) இருக்கின்றார்கள், ஆதலால் பாப்சமான் ஆக வேண்டும் என்ற இலக்ஷியத்தை நிறைவேற்றுவதற்காக தந்தையைப் பின்பற்றி நடக்க வேண்டியதாக இருக்கும். நினைவு படுத்திப்பாருங்கள். தந்தை பிரம்மாபாபா எப்படி சம்பூரணமானார்? அவரிடம் என்ன விசேஷம் இருந்தது? சம்பூரணம் அடைவதற்கான விசேஷ ஆதாரம் என்னவாக இருந்தது? பிரம்மாதந்தை தன்னுடைய ஒவ்வொரு நேரத்தையும் பயனுள்ள வகையில் பயன்படுத்தினார். ஆதலால் பாப்சமான் ஆவதற்காக இந்த ஆண்டில் என்ன லக்ஷியம் வைக்கப் போகிறீர்கள்? பயன்படுத்த வேண்டும். வெற்றி மூர்த்திகளாக ஆகியே தீர வேண்டும். வெற்றி உங்களுடைய கழுத்து மாலையாகும். வெற்றி என்பது தந்தை உங்களுக்குக் கொடுத்த ஆஸ்தி, ஆதலால் இந்த இலக்ஷியத்தின்

அடிப்படையில் சோதிக்க வேண்டும். ஒவ்வொரு நாளும், வெற்றி மூர்த்தியாகி சமயம், சுவாசம் பொக்கிஷம், சக்திகள், குணம் ஆகியவற்றை பயனுள்ளதாக்கினோமா என்று சோதிக்க வேண்டும். ஏனென்றால், இப்போதைய வெற்றியின் மூலம் வருங்காலத்திற்கு சேமிப்பாகிறது. 21-ஜென்மத்திற்கு என்னவெல்லாம் வெற்றி அடைந்தீர்களோ, இதன் பலன் சேமிப்பாகிறது. அறிவீர்கள் அல்லவா? இதற்கு முன்பும் கூறியிருக்கின்றேன். நீங்கள் சமயத்தை பயனுள்ள வகையில் பயன்படுத்தினீர்களானால் வருங்காலத்தில் உங்களுக்கு இராஜ்ய பாக்கியத்தின் முழு சமயமும் இராஜ்ய பாக்கியம் பிராப்தி ஆகும். சுவாசத்தை பயனுள்ளதாக்கினீர்களானால் 21-ஜன்மங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள். ஒருபோதும் எந்த ஒரு ஆரோக்கியத்திலும் குறையிருக்காது. மேலும் இதனுடன் கூடவே பொக்கிஷங்களையும் சேமிக்கிறீர்கள். எல்லாவற்றிலும் பெரிய பொக்கிஷம் (கஜானா) ஞானப் பொக்கிஷம். ஞானம் என்பதன் பொருள் அறிவு ஆதலால் ஞானப் பொக்கிஷத்தை பயனுள்ளதாக்குவதால், வருங்காலத் தில் நீங்கள் எல்லோரும் அறிவாளிகள் ஆகி விடுவீர்கள். ஆதலால் உங்களுக்கு எந்த ஒரு அமைச்சரிடமும் அபிப்பிராயம் கேட்க வேண்டிய அவசியம் இருக்காது. நீங்களே நிரந்தரமாக, ஸ்திரமான இராஜ்யம் நடத்துகிறீர்கள். மேலும் உங்கள் இராஜ்யத்தில் விக்னம் வருவதில்லை. நிர்விக்ன, நிரந்தர, ஸ்திரமாக இருக்கும். இது தான் ஞான பொக்கிஷத்தை சேமிப்பதால் கிடைக்கும் பலன். ஒரு ஜன்மம் பயனுள்ளதாக ஆக்கிக் கொண்டீர்கள் மேலும் அநேக ஜன்மங்கள் வெற்றியின் பலனை அனுபவிக்கிறீர்கள். இதேபோலவே எந்த ஒரு சக்திகள் கிடைத்திருக்கிறதோ, அதனை தனக்கும், மற்றவர்களுக்கும் பயன்படுத்தும்போது, வருங்காலத்தில் உங்களுடைய ராஜ்யத்தில் சர்வ சக்திகளும் இருக்கும். ஒருபோதும் சக்தி குறையாது. எந்த ஒரு சக்தியிலும் குறை இருக்காது, இதே போல நீங்கள் குண தானம் செய்தீர்களானால், உங்களுடைய கடைசி ஜன்மம் 84வது ஜன்மத்தில் உங்களுக்கு ஜட சித்திரம் தயாரிக்கிறார்கள் அல்லவா? அதில் கடைசி வரை உங்களுக்கு என்ன மகிமை செய்கிறார்கள்? சர்வகுண சம்பன்ன. அகவே நீங்கள் அடைகின்ற ஒவ்வொரு வெற்றிக்கும், அநேக ஜன்மங்கள் அதிகாரியாகி விடுகிறீர்கள். அப்படியானால், இந்த ஆண்டு என்ன செய்ய வேண்டும்? இலக்ஷியம் வைக்க வேண்டும். ஒவ்வொரு மூச்சும் ஒரு வினாடி கூட பிரயோஜனமில்லாததாக ஆகி விடக்கூடாது.

சேமிக்க வேண்டும். சேமிப்பதற்கான சமயம் ஒரு சிறிய ஜன்மம் ஆனால் பலன் அனுபவிப்பது 21-ஜென்மம். ஆகவே இந்த ஆண்டில் பாப்சமான் ஆவதற்கான லக்ஷியம் இருக்கிறதா? எல்லோருக்கும் இலக்ஷியம் இருக்கிறது. பாப்சமான் ஆகியே தீர வேண்டும், ஆக வேண்டும் என்பதல்ல. ஆகியே தீர வேண்டும். ஆகியே தீரவேண்டும் என்பதை கோடிட்டு வைத்துக் கொள்ளவும். நல்லது. குழந்தைகளும் கூட ஆவார்கள். சிறு குழந்தைகளும் கூட ஆவார்கள். சிறு குழந்தைகள் அணிந்திருக்கும் கிரீடம் அழகாக இருக்கிறது. (எல்லா சிறு குழந்தைகளும் கிரீடம் அணிந்திருக்கிறார்கள்) பார்க்க மிகவும் நன்றாக இருக்கிறது. ஆதலால் இந்த ஆண்டுக்கான லக்ஷியமும் வைத்திருக்கிறீர்கள். இத்தோடு தந்தையைப் பின்பற்றி நடப்பதற்கான மந்திரம் பொக்கிஷங்களை பயன்படுத்தி வெற்றி மூர்த்தி ஆகவேண்டும். இதற்காக கடின முயற்சி செய்ய வேண்டிய கஷ்டம் குழந்தைகளுக்குக் கொடுக்க மாட்டார். மிகவும் எளிய விதியைக் கூறுகின்றார். சகஜ விதியாது? எந்த ஒரு சங்கல்பம் செய்தாலும் முதலில் சோதிக்க வேண்டும். பாபாவிடம் இந்த சங்கல்பம் இருந்ததா? இதுபோல பேசும்போதும், சோதியுங்கள், பாப்சமான் ஆக வேண்டுமல்லவா? ஆகவே சங்கல்பம், பேச்சு மற்றும் கர்மம், சம்மந்தம், தொடர்பு அனைத்திலும் முதலில் யோசியுங்கள், சோதியுங்கள் பாபாவிடம் இப்படி இருந்ததா? பிறகு அப்படியே சொரூபம் ஆகுங்கள். பிரம்மாபாபாவை பின்பற்றுங்கள். ஃபாலோ ஃபாதர் என்ற மகிமை இருக்கிறதல்லவா? அநேக குழந்தைகள் மிக நல்ல, நல்ல விளையாட்டு காண்பிக்கிறார்கள். தெரியுமா? என்ன விளையாட்டு காண்பிக்கிறார்கள்? பின்பற்றுவதில்லை ஆனால் என்ன சொல்கிறார்கள், நாங்கள் விரும்பவில்லை ஆனால் நடந்து விட்டது. முதலில் யோசிக்க வேண்டும். யோசிப்பது மட்டுமல்ல, சொரூபம் ஆக வேண்டும். சொரூபமாகி விட்டால் நாங்கள் விரும்பவில்லை ஆனால் நடந்து விட்டது என்று சொல்ல மாட்டீர்கள். செய்கின்றவர்கள். யோசிப்பவர்கள், சிரேஷ்ட ஆத்மாக்களாகிய நீங்கள் தான் எஜமானர்கள். நடந்து விட்டது என்பதன் பொருள், கர்மேந்திரியங்கள் மீது கன்ட்ரோல் இல்லை.

ஆதலால் இந்த ஆண்டில் இந்த சுலோகத்தை நினைவில் வைக்க வேண்டும். பாப்சமான் ஆகும் முயற்சி செய்ய வேண்டும். ஆகியே தீர

வேண்டும். கஷ்டமாக இல்லை தானே? எப்படி பாபா செய்தாரோ அப்படி செய்ய வேண்டும். காப்பி அடிப்பது எளிது தானே? யோசிப்பதற்கு அவசியமே இல்லை உங்கள் எல்லோருக்கும் நிச்சயம் இருக்கிறது. எப்படி தந்தை பிரம்மாபாபா ஃபரிஷ்தா ஆனார் என்றால், உறுதியாகி விட்டது. ஆகவே ஃபரிஷ்தா ஸோ தேவதா ஆகியே தீரவேண்டும். நீங்களும் கூட ஃப்ரிஷ்தா ஸோ தேவதா ஆகியே தீரவேண்டும். அநேக குழந்தைகள் கூறுகின்றார்கள். போகப்போக எதிர்ப்பு அதிகமாக வருகிறது. எதிர்ப்பு காரணமாக தங்களுடைய ஸ்தானத்திலிருந்து கீழே வந்து விடுகிறோம் என்கின்றனர் ஆனால் நினைத்துப் பாருங்கள். பாப்சமான் ஆக வேண்டும் என்றால் ஸ்தாபனையின் ஆரம்பகாலத்தில் பிரம்மாபாபா எத்தனையோ எதிர்ப்புகளையும் சமாளித்து ஒரே நிலையில் நிலைத்திருக்கும் பரிவர்த்தளையை செய்து கொண்டார். ஒவ்வொன்றும் புதிது, சவாலாக இருந்தது. இப்போதோ, காலம் வெகுவாக மாறி விட்டது ஆனால் பிரம்மாபாபா தனியாக எவ்வளவு தூரம் சுவமான் சீட்டில் அமர்ந்து கொண்டு இந்த ஸ்தானத்தின் அதிகாரி நிலையிலிருந்து எதிர்ப்புகளை சமாளித்தார். ஒன்றும் செய்ய முடியாது. முதலில் என்ன சொன்னீர்கள்? கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்று ஆனால் இப்போது என்ன சொல்கிறீர்கள்? அற்புதம் நிகழ்த்துகிறோம் என்று. இவ்வளவு வித்தியாசம் ஏற்பட்டுவிட்டது. என்ன காரணம்? பிரம்மாபாபா சுவமான் என்ற சீட்டில் மற்றும் திட நிச்சயம் என்ற சஸ்திரங்கள் (ஆயுதங்கள்) மூலமாக எதிர்ப்பை சமாப்தி செய்தார். (முடிவுக்குக் கொண்டு வந்தார்). ஆகவே நீங்கள் இந்த ஆண்டில் என்ன செய்வீர்கள்? சமான் ஆக வேண்டுமல்லவா? ஆதலால் சதா எதிர்ப்புகள் வந்தாலும் கூட சுவமான் என்ற சீட்டில் அமர்ந்து விட்டால், எதிர்ப்பு சாதகமாக மாறிவிடும். இப்படிப்பட்ட தைரியம் இருக்கிறதா? பிரம்மாபாபா சமானமாக ஆகியே தீரவேண்டும். அதில் கை உயர்த்தி விட்டீர்கள் ஆனால், இவ்வளவு தைரியம் இருக்கிறதா? முதலில் சுய பரிவர்த்தனையில், பிறகு அநேகவித சம்மந்தம், தொடர்பில் உள்ள ஆத்மாக்கள், பிறகு உலகில் உள்ள ஆத்மாக்கள். இந்த அனைவருக்கும் தன்னுடைய மனதின் மூலமாக சுப பாவனை, சுப விருப்பங்கள் (சுப அபிலாஷைகள்) மூலமாக திட சங்கல்பம் மூலம் பரிவர்த்தனை செய்ய வேண்டும்.

ஆகவே, இந்த ஆண்டில் பாப்தாதா விசேஷமாக ஒரு சக்தியையும் வரதானமாகக் கொடுக்கின்றார். மேரா பாபா என்று மனப்பூர்வமாகச் சொன்னீர்களானால் சக்தி ஆஜராகி விடும். சொல்ல வேண்டும் என்பதற்காக மேரா பாபா என்று சொல்லக்கூடாது. உள்ளத்திலிருந்து வரவேண்டும். அதிகாரம் இருக்கிறது. மேரா பாப சக்திகளுக்கு முன்னால் ஆஜராகி விடும். அது எந்த சக்தி? பரிவர்த்தனை சக்தி. பரிவர்த்தனை சக்தி மூலமாக, நெகட்டிவை, பாஸிட்டிவாக மாற்றிவிடுங்கள். நெகட்டிவ் சங்கல்பம், நெகட்டிவ் நடத்தையை பார்க்கும்போதே பாஸிட்டிவாக மாற்றி விடுங்கள். பாஸிட்டிவாக (ஆக்கப்பூர்வமாக) பார்ப்பது, பேசுவது, சுபபாவனை, சுப காம்னா (நல்விருப்பம்) மூலமாக சகஜமாகி விடும். ஏனெனில் எதிர்ப்பு வரும் ஆனால் உங்கள் பரிவர்த்தனை சக்தி உங்களுக்கு எளிதாகவே வெற்றி கிடைக்கச் செய்துவிடும். ஆகவே புரிந்து கொண்டீர்களா? இந்த ஆண்டின் விசேஷ வரதானம் பரிவர்த்தனை சக்தியை திட சங்கல்பத்துடன் காரியத்தில் பயன்படுத்த வேண்டும். பரிவர்த்தனை செய்ய முடியுமல்லவா? உங்களுடைய சவால் இருக்கிறது. ஞாபகமிருக்கிறதல்லவா? நீங்கள் விஷ்வ பரிவர்த்தக் உங்களுடைய டைட்டிலே, விஷ்வ பரிவர்த்தக் என்பதாக இருக்கும்போது, சுய பரிவர்த்தனை செய்வது கஷ்டமானதா? மனதில் கஷ்டம் என்று தோன்றினால், அது அப்படி கஷ்டமானது அல்ல, நீங்கள் தான் அப்படி ஆக்கி விடுகிறீர்கள். மாஸ்டர் சர்வ சக்திவான் முன்னால் கஷ்டம் என்பது இருக்க முடியுமா? ஆனால் நீங்கள் ஒரு தவறு செய்கிறீர்கள், அதாவது கஷ்டமாக ஆக்கி விடுகிறீர்கள். எப்படி பாருங்கள். உதாரணமாக திடீரென்று இருட்டாகி விடுகிறது. இதனை ஏதோ ஒரு வழியில் இருளை விரட்ட நினைத்தால் அது ஓடிவிடுமா? சரியான விதி எது? நீங்கள் விளக்கின் ஸ்விட்ச்சை ஆன் செய்தால், இருள் தானாகவே ஒரு செகன்டில் விலகி விடும். நீங்களும் கூட இப்படி தவறு செய்கிறீர்கள். அதாவது ஏதோ ஒரு விஷயம் நடந்து விட்டது என்றால், அது ஏன்? என்ன? எப்போது? எப்படி? என்ற கியூவில் நின்று விடுகிறீர்கள். சிறிய விஷயத்தை பெரிதாக்கி விடுகிறீர்கள். இப்படி பெரிதாக நினைக்கும்போது கஷ்டமாகத் தெரிகிறது. ஆதலால் சிறிய விஷயமாகி விட்டால், எளிதாகி விடும். தந்தை, ஏதாவதொரு சக்தியை காரியத்தில் ஈடுபடுத்துவதற்கான விதியை மிக எளிதாக கூறியிருக்கின்றார். நான் மாஸ்டர் சர்வ சக்திவான் இந்த நினைவில்

அந்த சீட்டில் அமர்ந்து விடுங்கள். நீங்கள் இந்த சீட்டில் செட் ஆகி இருந்தால் அப்செட் ஆகமாட்டீர்கள், சீட்டில் இல்லாதபோது தான் அப்செட் ஆகிறீர்கள், சீட்டில் செட்டாகி விடுங்கள். அப்செட் ஆக மாட்டீர்கள். 63-பிறவி சம்ஸ்காரம் எழுச்சியடைந்து விடுகிறது. 63-ஜென்மம் எப்படி இருந்தது? அவ்வப்போது செட்டாகியிருப்பது, அவ்வப்போது அப்செட்டாகி விடுவது. ஆதலால் சதா சுவமான் சீட்டில் செட்டாகியிருங்கள். மற்றபடி இந்த ஆண்டில் என்ன செய்வீர்கள்? புத்தாண்டில் எல்லோருக்கும் அன்பளிப்பு வழங்குவிகள் அல்லவா? அப்படியானால், என்ன அன்பளிப்பு அளிப்பீர்கள்? வாழ்த்துக்கள் அளிப்பீர்கள். இத்தோடு அன்பளிப்பு என்ன கொடுப்பீர்கள்? அன்பளிப்பு உங்களிடம் நிறைய இருக்கிறது. எவ்வளவு கொடுக்க விரும்புகிறீர்களோ, அவ்வளவு கொடுக்க முடியும். ஸ்தூலமான அன்பளிப்பு அற்ப காலத்திற்கு மட்டுமே இருக்கும் ஆனால் நீங்கள் அவிநாஷி பாப்சமான் ஆகப் போகிறவர்கள். அவிநாஷி அன்பளிப்பு வழங்க வேண்டும். மனம் மூலமாக சக்திகள் என்ற அன்பளிப்பு தாருங்கள். வாய்ச்சொல் மூலமாக ஞானம் என்ற அன்பளிப்பு, செயல் மூலமாக குணம் எனும் அன்பளிப்பு தாருங்கள். இதெல்லாம் உங்கள் எல்லோரிடமும் இருக்கிறதல்லவா? இருந்தால் தலை அசையுங்கள். பொக்கிஷம் நிறைய இருக்கிறதல்லவா? குறைவாக இல்லை தானே? ஏதோ ஒரு காரியமாக யாருடனாவது சந்திப்பு ஏற்படும். காரியத்தில் வரவேண்டுமல்லவா? அவர்களுக்கு இந்த ஆண்டு நிறைய அன்பளிப்பு வழங்குங்கள் ஆனால் அவிநாஷி அன்பளிப்பாக இருக்க வேண்டும். கூறியிருக்கிறேனல்லவா? யாரும் வெறுங்கையோடு திரும்பிச் செல்லக்கூடாது. வேண்டுமானால் மனோ சக்தி மூலமாக அன்பளிப்பு அளியுங்கள். வாய் மொழி மூலமாகவோ, கர்மத்தின் மூலமாகவோ அன்பளிப்பு அளிக்க வேண்டும். இதற்காக நீங்கள் சதா கவனத்துடன் இருக்க வேண்டியதிருக்கும். ஒவ்வொரு சமயத்திலும் மனதில் சக்திகளினுடைய ஸ்டாக் எழுச்சியடைந்த நிலையில் வைத்திருக்க வேண்டும். எத்தனை சக்திகள் இருக்கின்றன? லிஸ்ட் இருக்கிறதல்லவா? பேசவேண்டிய காரணத்தால் சதா மனதில் மனன சக்தி, ஞானத்தை மனனம் செய்யும் சக்தி, நினைவில் வைத்துக் கொள்ள வேண்டியதாக இருக்கும். நடத்தையில் முகபாவனையில், கர்மத்தில், குண சொரூபம் ஆக வேண்டியதாயிருக்கும். சதா தன்னை குணமூர்த்தியாக ஞான மூர்த்தியாக, சக்தி சொரூபமாக எழுச்சியுடன்

வைத்திருக்க வேண்டிய திருக்கும். சக்திகள் இருக்கிறது. ஞானம் இருக்கிறது என்று நினைக்கக்கூடாது. சொரூபமாக ஆக வேண்டியதிருக்கும். ஒவ்வொருவரையும் ஈஸ்வரிய பரிவாரம் என்ற பார்வையில் பார்க்க வேண்டிய திருக்கும். இந்த ஆண்டு பாப்சமான் ஆகியே தீரவேண்டும் என்ற விஷயத்தில் கை உயர்த்தியாகி விட்டது. பாப்தாதாவுக்கு வதனத்தில் எல்லோருடைய கைகளும் தென்படும். அங்கு இந்த சிறிய டி.வி. இல்லை, மிகப் பெரியது. ஒரு வினாடியில் எல்லா சென்டர்களினுடைய ரிசல்ட்டைப் பார்க்க முடியும். ஆகவே, பாப்தாதாவுக்கு, பாப்சமான் ஆகியே தீர வேண்டும் என்ற உங்களிடம் உள்ள ஆர்வத்தைப் பார்த்து குஷியாக இருக்கிறது. குஷியாக இருக்கும் அதிருஷ்டமுள்ளவர்கள், குஷி நிறைந்த முகபாவனையுடைவர்கள், ஒருபோதும் ஆவேசத்துடன் கூடிய முகபாவனையை உருவாக்கி விடாதீர்கள். சதா குஷியாக இருக்க வேண்டும். எவ்வளவு வேலையில் மூழ்கியிருக்க வேண்டியிருந்தாலும் தவறை சரி செய்து கொண்டிருக்கிறீர்கள். புரிந்து கொண்டுமிருக்கிறீர்கள் ஆனால் ஆவேசமுள்ள முகபாவனை, ஆவேசமான பேச்சு இருக்கக் கூடாது. இந்த ஆண்டில் இந்த பரிவர்த்தனை செய்து காண்பிக்க வேண்டும். வெகுமானம் கொடுப்பேன் (பிரைஸ்), முழு ஆண்டும் யார் புன்முறுவலுடன் இருக்கின்றார்களோ, என்ன நடந்தாலும் சரி. அநேக சகோதர சகோதரிகள் கூறுகின்றார்கள், ஆன்மீக சம்பாஷனை (ரூஹ் ரிஹான்) எல்லோரும் செய்கிறீர்கள் அல்லவா? அப்போது கூறுகின்றார்கள் -ஆவேசமாகப் பேசாவிட்டால் புரிந்து கொள்ள மாட்டார்கள், மாறவே மாட்டார்கள். இப்படி முதலிலேயே அவர்கள் மீது இந்த மாதிரியான பாவனை வைத்தீர்களானால், உங்களுடைய இந்த அதிர்வலைகள் (வைப்ரேஷன்) முன்னதாக அவர்களைச் சென்றடைந்து விட்டது. ஆதலால் இந்த ஆண்டில் கோபம், மற்றும் கோபத்தின் குழந்தை குட்டிகள் அனைத்திற்கும் விடை கொடுத்து விட வேண்டும். முடியுமா? ஆவேசமும் கூடாது. தந்தை கேட்கின்றார். எந்த சமயத்திலாவது அவசியமான நேரத்தில் காரியம் செய்து முடிப்பதற்காக அல்லது சீர்திருத்த வேண்டியதற்காக கோபப்படுகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம் ஆனால் அவர்கள் திருந்தி விடுகிறார்களா? கோபப்பட்டதன் மூலமாக யாராவது திருந்தியிருக்கிறீர்களா? இந்த லிஸ்ட் கொடுங்கள். இன்னும் அதிகமாக சிடுசிடுப்பாகி விடுவார்கள். திருந்துவதில்லை. மனதில் எதிர்ப்பை

வளர்த்துக் கொள்வார்கள். வயதில் பெரியவராயிருந்தால் மனதில் எதிர்ப்பை காட்டுவார்கள். பேச முடியாதல்லவா? மேலும் சிறியவர் களாயிருந்தால் அழுகை வந்து விடும். ஆழ ஆரம்பித்து விடுவார்கள். ஆதலால் இந்த ஆண்டு என்னென்ன செய்ய வேண்டும்? என்பதைப் பற்றி எல்லாவற்றையும் கூறுகின்றேன். பிடித்தமுள்ளதாக இருக்கிறதா? செய்ய வேண்டுமா? இப்போது கை உயர்த்துங்கள். செய்ய வேண்டுமா? இந்த டி.வி.க்காரர்கள் இந்த போட்டோ எடுங்கள். கை உயர்த்துங்கள். கையை இன்னும் மேலே உயர்த்துங்கள். டி.வி காரர்கள் போட்டோ எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

பாப்தாதா ஒவ்வொருவரிடமும் எந்த விஷயங்களைப் பற்றி கூறி இருக்கின்றாரோ இந்த ஆண்டு செய்ய வேண்டும். ஒவ்வொரு மாதமும் மாதக் கடைசி தேதியில் ஒவ்வொருவரும் தங்களுடைய சோதனைக் கணக்கை, உங்களுக்கு சிறு வரதான பத்திரம் கிடைத்திருக்கிறதல்லவா? அதில் ஓகே என்று எழுதுங்கள். ஒருவேளை எந்த விஷயங்கள் கூறப்பட்டதோ, இந்த எல்லா விஷயங்களிலும் இரண்டு விஷயங்கள் முடிந்து விட்டது, இரண்டு விஷயங்கள் முடியவில்லை என்றால் இப்படி முடியாமல் இருந்தால் ஓ.கே. என்ற இரண்டு வார்த்தைகளுக்கிடையே ஒரு கோடு போட வேண்டும். போதும். இந்த ரிசல்ட் எழுத வேண்டும். பெரிய காகிதத்தில் எழுத வேண்டியதில்லை. ஒருவேளை பெரிய கடிதமாக எழுதினால் இதைப் படிப்பவர்களுக்கு இதில் பாதி சமயம் படிப்பதிலேயே கழிந்து விடும். ஆதலால் ஓ.கே. என்று சிறு துண்டு காகிதத்தில் எழுதினால், சுலபமாகப் படிக்க முடியும். ஆதலால் ஓ.கே. என்று எழுதலாம். கோடிட்டு காண்பிக்கலாம், சுலபம் தானே? விசேஷமாக இந்த கோபம் என்ற பூதம் இருக்கிறதல்லவா, அதை இந்த ஆண்டு விரட்டிவிட வேண்டும். ஆவேசமும் கூடாது. அநேகர் கண்கள் மூலமாகவும் கோபத்தைக் காட்டுகிறார்கள். பார்த்திருக்கிறீர்களா? முகபாவனை மூலமாகவும் கோபத்தைக் காட்டுகிறார்கள். ஆகவே என்ன செய்யலாம்? கொஞ்சமாவது விடை கொடுப்பீர்கள் அல்லவா? கொடுப்பீர்களா? மதுபன் காரர்கள் கொடுப்பீர்களா? மதுபன் வாசிகள் கை உயர்த்துங்கள். நல்லது. இவ்வளவு பேர் அமர்ந்திருக்கிறார்கள். நல்லது. இங்கே அமர்ந்திருக்கிறார்கள். ஆகவே முதலில் மதுபன் வாசிகளுக்கு கூறுகின்றார். இதில் முதலில் நான். முதலில் மதுபனிலிருந்து

வெளியே வழியனுப்பி விட வேண்டும். மேலும் மதுபனுடைய பிரபாவம் சென்டரிலும் கூட தானாகவே சென்றடையும். மதுபன் விதை, தண்டுபாகம் ஆனால் உங்கள் எல்லோருக்கும் நிரந்தரமான முகவரி எது? மதுபன் தானே? ஆகவே மதுபன் வாசிகள் மட்டும் முதலில் நடைமுறையில் கொண்டு வருவார்கள் என்று நினைக்கிறீர்கள். நீங்கள் எல்லோருமே மதுபன் வாசிகள் தானே! ஏனெனில் நிரந்தரமான முகவரி உங்களுக்கு மதுபன். இதுவோ சேவைக்காக வெவ்வேறு இடங்களுக்குச் சென்றிருக்கிறீர்கள். வெளிநாடு செல்பவர்கள் தங்கள் பிறந்த ஊரை மறந்து விடுவார்களா? பாப்தாதா பார்த்தார். வெளிநாட்டிலிருந்து கொண்டு யாருக்கு இந்தியாவில் கிராமம் இருக்கிறதோ, இடமிருக்கிறதோ இவர்கள் வெளி நாட்டில் இருந்தாலும் கூட, தங்களுடைய ஜென்ம பூமியை கிராமமாக இருந்தாலும், நகரமாக இருந்தாலும், சென்டர் ஸ்தாபனை செய்திருக்கிறார்கள். பாப்தாதா அந்தக் குழந்தைகளுக்கு மிகப் பெரிய புண்ணிய ஆத்மாக்கள் என்ற டைட்டில் கொடுக்கின்றார். அற்புதம் செய்திருக்கிறார்கள், விசாரித்துக் கொண்டுமிருக்கிறார்கள். கஷ்டம் எதுவுமில்லையே நன்றாக இருக்கிறீர்களா? என விசாரிக்கிறார்கள். இது தான் புண்ணிய ஆத்மாவின் கடமை. தங்கள் குடும்பத்தைச் சார்ந்தவர் ஒரு குடும்ப அங்கத்தினர்கள். இரண்டு குடும்பம் என்பதில்லை. ஒரு குடும்பம், இன்றைக்கு நீங்கள் லண்டன் செல்கிறீர்கள், ஏதோ ஒரு காரியமாக. அங்கே நீங்கள் என்ன சொல்வீர்கள்? நம்முடைய சென்டர் என்று சொல்வீர்களா? லண்டன் காரர்களுடைய சென்டர் என்பீர்களா? நம்முடையது தானே? நம்முடையது என்று சொல்வதன் பொருள், அங்கு சென்று தங்கி விடுவதல்ல. பாபா ஒவ்வொருவருக்கும் அவரவர்க்கான சேவை செய்யும் இடத்தைக் கொடுத்திருக்கின்றார். ஆகவே என்ன செய்ய வேண்டும் என்பதை புரிந்து கொண்டீர்களா? மதுபன்காரர்கள் எல்லோரும் தங்களுடைய சர்டிபிக்கேட் வாங்க வேண்டும். நல்லது. நிறைய வேலை கொடுத்து விட்டேனல்லவா? எனினும் பாப்தாதா உங்களுக்குத் துணையாக இருக்கின்றார். எங்கேயாவது கஷ்டமாக இருக்கிறதென்றால், மனதார சொல்லுங்கள். பாபா, மேரா பாபா. என்னுடைய துணைவரே வாருங்கள், உதவி செய்யுங்கள் என்று சொன்னால் போதும், ஏனெனில் பாபாவும் கூட கட்டுப்பட்டிருக்கின்றார். மனதார கூறினால் போதும், ஏனெனில் சமயம் மற்றும் சுயம் இந்த இரண்டையும் பார்க்க வேண்டும். சமயம் சவால்

விட்டுக் கொண்டிருக்கிறது. நீங்கள் மாயைக்கு சாவல் விடுங்கள். என்ன செய்யும்.

ஆகவே சமயத்தின் பிரமாணமாக, பாப்தாதா பார்த்தார். சமயத்தின் வேகம் தீவிரமாக இருக்கிறது. ஆகவே சமயத்தை எதிர்கொள்பவர் யார்? நீங்கள் தானே? எதிர் கொள்ள வேண்டும். பாப்தாதா பார்த்தார். துக்கத்திலுள்ளவர்களுடைய கூக்குரல், பக்தர்களின் கூக்குரல் காலத்தின் கட்டாயம் என்று இவ்வளவு இருக்கிறது. கேட்பது குறைவாக இருக்கிறது. அப்பாவிகளான இவர்கள் தைரியத்தை இழந்து வீட்டார்கள். அவர்களுக்கு சிறகுகளைக் கொடுத்தால் பறக்கவாவது முடியும், தைரியம் என்ற சிறகு ஊக்கம், உற்சாகம் என்ற சிறகுகளைத் தாருங்கள். நல்லது.

பாப்தாதா நாலாபுறமிருந்தும் வந்திருக்கின்ற இ.மெயில், வாழ்த்துக்களை ஏற்றுக் கொண்டார். மேலும் இங்கேயும் பார்த்தார். உங்களுடைய உள்ளபூர்வமான வாழ்த்துக்கள் பாப்தாதாவுக்கு வைரங்களை விட நூறு மடங்குக்கும் அதிகமாக நினைத்து பாப்தாதா ஏற்றுக் கொண்டார். தூரத்தில் அமர்ந்திருக்கும் குழந்தைகள், தந்தையின் உள்ளத்திற்கு எதிரில் இருக்கின்றார்கள். பாப்தாதா எப்போது திருஷ்டி கொடுக்கின்றாரோ அது இந்த ஹாலில் இருப்பவர்களுக்கு மட்டுமல்ல, பாப்தாதா எதிரில் எல்லா இடங்களிலும் இருக்கும் குழந்தைகள் உள்ளத்தின் எதிரில் ஆஜராகி இருக்கின்றார்கள். ஆகவே நூறுமடங்கு வாழ்த்துக்களும், கோல்டன் கிஃப்ட் (அன்பளிப்பு) என்றால் பாப்தாதா எல்லா குழந்தை களையும் அதிகாரிகளாக ஆக்கியே விட்டார், அந்த கோல்டன் கிஃப்ட்'டல் அநேக கிஃப்ட்கள் அடங்கியிருக்கின்றன. எதை நினைக்கிறீர்களோ, அது ஆஜராகி விடும். இங்கேயுள்ள கணக்குப்படி இரவு 12-மணிக்கு புத்தாண்டு ஆரம்பமாகிறது. மேலும் நமக்கோ சதா கண்களில் உள்ளத்தில் என்ன நினைவுக்கு வருகிறது? கோல்டன் வெர்ல்டு (பொன்னுலகம்) இதோ வந்தேவிட்டது என்று கூறலாம். இப்படித் தோன்றுகிறதல்லவா? இப்போது இங்கே இருக்கின்றோம் ஆனால் வெகு விரைவில் தங்களுடைய உலகத்திற்கு சென்று விடுவோம். நல்லது. இப்போது கூறுங்கள்.

சேவை வாய்ப்பு தில்வி மற்றும் ஆக்ரா: மிக நன்று. அழகாக காட்சி தெரிகிறது. சேவை மூலம் புண்ணியம் சேமிப்பதால் மனம் குஷியால் ஆனந்த கூத்தாடுகிறதல்லவா? நல்லது. டீச்சர்களும் நிறைய பேர் இருக்கிறார்கள். டீச்சர்கள் கை அசையுங்கள். நன்றாக இருக்கிறது. குரூப் நன்றாக இருக்கிறது. இனி தில்லி என்ன செய்யப்போகிறது? இதற்கு முன்பும் கூறியிருக்கிறேன். கண்காட்சி, புரோகிராம் இவையெல்லாம் எல்லோருமே செய்கிறார்கள். இது பொதுவான சேவையாகி விட்டது. முறைப்படி நடந்து விட்டது. சீசன் முடியப்போகிறது. மேலும் வர்க்கத்தினருடைய சேவை ஆரம்பமாகப்போகிறது ஆனால் இப்போது பாப்தாதா இரண்டு விஷயங்களைப் பற்றி சைகையாக கூறியிருக்கின்றார். வி.ஐ.பி.க்களின் சேவையும் நன்றாகச் செய்திருக்கிறீர்கள். உரிய நேரத்தில் சகயோகிகளாகவும் ஆகின்றார்கள். நல்ல சகயோகமும் அளிக்கின்றார்கள் ஆனால் இப்போது இந்த மாதிரி சகயோகிகளிலிருந்து வாரிசு தயார் செய்யுங்கள், எப்படி தில்லியிலும் கூட வெகுகாலம் வாரிசு குவாலிட்டி ஆத்மாக்கள் தயாராகி இருக்கிறார்கள் ஆனால் முதலில் இப்போது மைக்காகவும் இருக்க வேண்டும். வாரிசு குவாலிட்டி, இனி மைக் ஆகவும் இருக்க வேண்டும். உதவியாளராகவும் இருக்க வேண்டும் ஆனால் வாரிசு குவாலிட்டி வேண்டும் குப்தமாக இருந்தாலும் சரி, ஆனால் வாரிசு குப்தமாக இருந்தாலும் பிரத்யக்ஷமாக இருப்பார்கள். இப்படிப்பட்ட குரூப் எங்கிருந்தாவது தயாராகட்டும். எந்த வார்க்கத்தைச் சேர்ந்தவராயிலும் அரி எந்த ஒரு தேசத்தைச் சார்ந்தவராயினும் சரி. வெளி நாட்டினராயினும் சரி, எங்கிருந்தாலும் குவாலிட்டி மாலையில் வராதவராயினும் சரி, கை கங்கணத்தில் வரக்கூடியவராயிருந்தாலும் சரி அந்த காலத்தில் உடனடியாகவே வாரிசுகள் உருவானார்கள். இதுபோல இப்போது மற்ற எல்லா தகுதிகள் உடையவராயிருந்தாலும் வாரிசு குவாலிட்டி ஒவ்வொரு ஸ்ரீமத்படி. ஒவ்வொரு டைரக்ஷண்படி மனதால் குப்த ரூபத்தில் கூட நடப்பவராக இருக்க வேண்டும். பாப்தாதாவுக்கு இந்த விருப்பம் தான் உள்ளது. வெவ்வேறு இடங்களிலிருந்தும் இப்படிப்பட்ட குரூப் தயார் செய்வதற்கு நிமித்தமாகட்டும். இந்த புதுமையை எந்த ஒரு சென்டர் அல்லது வர்க்கத்தைச் சார்ந்தவராயினும் செய்து காண்பிக்க வேண்டும். சகயோகிகளாக இருக்கிறார்கள். பாப்தாதா அறிவார். அவசியமான நேரத்தில் சகயோகம் செய்கிறார்கள் ஆனால் வாரிசாக இருக்க

வேண்டும். குப்தமாக இருந்தாலும் சரி, தில்லி என்ன செய்யப்போகிறது? இந்த மாதிரி கங்கண் (கைகாப்பு) தயார் செய்வீர்களா? பாப்தாதா மாலையில் வருபவர்களாக இருக்க வேண்டும் என்று கூறவில்லை. கை காப்பு கட்டிக் கொண்டவராக (கங்கணம்) ஆகியிருப்பவரை அழைத்து வர வேண்டும். இந்த ஆண்டில் ஏதாவது அற்புதம் செய்து காண்பிக்கலாமல்லவா? வெளிநாட்டினராக இருந்தாலும், பாரத தேசத்தவராய் இருந்தாலும் தயாராக முடியுமல்லவா? ஆக முடியும் டீச்சர்ஸ் கூறுங்கள். ஆக முடியுமா? கை உயர்த்துங்கள். டில்லிக்காரர்கள். ஆஹா, பாப்தாதா வாழ்த்துக்கள் அளிக்கின்றார். நல்ல தைரியம் வைத்திருக்கிறார்கள். இப்போது தைரியத்திற்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார். மேலும் எப்போது நடைமுறையில் செய்து முடிப்பார்களோ அப்போது எந்த விதமான வாழ்த்துக்கள் கொடுப்பார்? ஆஹா, காப்பாற்றக்கூடிய குழந்தைகளே ஆஹா! யார் வேண்டுமானாலும் செய்யலாம். பாம்பே செய்யட்டும், மகாராஷ்டிரா செய்யட்டும், ஆந்திரா செய்யட்டும், யார் வேண்டுமானாலும் செய்யட்டும் மதுபன் செய்யட்டும் சரி தானே! நல்லது. டில்லியில் பிரம்மாபாபாவுக்கு கூடவே சிவபாபாவும் இருக்கின்றார் ஆனால் விசேஷமாக பிரம்மாபாபாவுக்கு டில்லி, பாம்பே, கல்கத்தா கல்கத்தாக்களரர்களும் செய்ய முடியும் ஆரம்பத்திலிருந்தே நம்பிக்கை வைத்திருக்கின்றார். நல்லது இப்போது அற்புதம் செய்து, அடுத்த ஆண்டு வரும்போது தயார் செய்து கொண்டு வரவேண்டும். சரியா? எல்லா பாண்டவர்களும் கை உயர்த்துங்கள். பாருங்கள்! எத்தனை பாண்டவர்கள் இருக்கின்றார்கள்! ஆகவே டில்லி பாண்டவர்கள் கமால் செய்து கொண்டு வருவீர்கள் அல்லவா? செய்வீர்களா? பாப்தாதா எப்போதும், அடிக்கூடி டில்லியின் பெயரை உச்ளிக்கின்றார். மேலும் எல்லோருக்கும் யாரெல்லாம் பிராமணர்கள் இருக்கின்றார்களோ, அவர்களுக்காக டில்லியில் தர்பார் கூட்டலாம் அல்லவா? இராஜ்யம் செய்வீர்கள் அல்லவா? ராஜ்ய கூா டில்லியில் இருக்குமல்லவா? ஆதலால் டில்லிக்காரர்கள் டில்லியை தயார் செய்ய வேண்டியதாயிருக்கும். எல்லோருக்கும் மஹால் (அரண்மனை) கொடுக்கப்படும் அல்லவா? மஹால் கிடைப்பது டில்லியில். நல்லது. பார்க்கலாம் அற்புதத்தை ஏதாவது புதுமையாகச் செய்யுங்களேன். இப்போது எல்லாவற்றையும் பார்த்து முடித்து விட்டார்கள். அடிக்கடி புரோகிராம் நடக்கிறது. கண்காட்சி நடக்கிறது. நல்லது.

**ஜூரிஸ்ட் விங், கல்ச்சுரல் விங் மற்றும் மீடியா விங் வந்திருக்கிறார்கள்:** முதலில் ஜூரிஸ்ட் விங் ஸ்நீதித்துறையை சார்ந்தவர்கள்) சேர்ந்தவர்கள் எழுந்திருங்கள். ஜூரிஸ்டுகளின் வேலை முதலில் சட்டம், ஒழுங்கை பராமரிப்பது. நீங்கள் எல்லோரும் இந்தப் பழைய உலகில் இருந்து கொண்டு புது உலகில் எந்த ஒரு சட்டம், ஒழுங்கு இருக்குமோ அதைச் செய்து கொண்டிருக்கிறீர்கள். திட்டம் நன்றாகச் செய்திருக்கிறீர்கள் ஆனால் இப்போது இதேபோன்று நாலாபுறமும் ஏனென்றால் இந்த துறையில் (டிபார்ட்மெண்ட்) வெவ்வேறு இடங்களிலுள்ள உங்களின் கூட்டாளிகள் எல்லோரும் சேர்ந்து செய்தீர்களானால் அப்படிப்பட்ட வாயுமண்டலம், பேச்சு மூலமாகவும், சொற்பொழிவு மூலமாகவும் வாயுமண்டலத்தை தயார் செய்தீர்களானால், அநேக ஜனங்கள் உங்களுடன் கூட்டாகச் சேர்ந்து சகயோகம் செய்வார்கள். இதனால் அமைதியற்ற சமயத்தில் அமைதி நிறைந்ததாக வைப்போம். சாந்தி ஸ்தாபகராகி உங்களுக்கு துணைவர்களாக ஆகட்டும். இம்மாதிரி கையொப்பம் வாங்குங்கள். ஒவ்வொரு இடத்திலும் உங்களுடைய சேவை மூலமாக எழுதச் செய்யுங்கள். நாங்கள் அமைதி காப்போம், சட்டம் ஒழுங்கை மதித்து நடப்போம். மற்றவர்களையும் நடக்கச் செய்வோம். இந்த லிஸ்ட் தயார் செய்யுங்கள். மேலும் நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பதை அரசினரிடமும் காண்பியுங்கள். மேலும் அவர்களுடைய குரூப், நடைமுறையில் லா ஆண்டு ஆர்டர்படி நடந்து கொள்கிறார்களா? அல்லது இல்லையா? என்பதை இடையிடையே சோதியுங்கள். இப்படிப்பட்ட சகயோகி குரூப் அவசியமானால் இளைஞர்களாக இருக்கலாம், அல்லது முதியோர்களாகவும் இருக்கலாம். குழந்தைகளாகவும் இருக்கலாம், ஆனால் புரிந்து கொள்ளக்கூடிய குழந்தைகளாக இருக்க வேண்டும். இவர்கள் ஒன்று சேருங்கள். இவர்களை அவ்வப்போது யாத்திரையாகச் செல்ல வேண்டும் என்ற விஷயம் இல்லை. அங்காங்கே பெரிய நகரங்களில் இவர்களை ஒரு இடத்தில் ஒன்றாகச் சேருங்கள். இவ்வாறு செய்து கொண்டேயிருங்கள். இப்படிப்பட்ட குரூப் தயார் செய்யுங்கள். இதில் எல்லா வர்க்கத்தை சார்ந்தவர்களும் இருக்க வேண்டும். அப்போது இவர்கள் என்ன செய்கிறார்கள் என்று அரசு கவனிக்கும். அரசும் விரும்புகிறது ஆனால் செய்ய முடியவில்லை. நீங்கள் செய்து

காண்பியுங்கள். நன்றாக இருக்கிறது. குரூப் நன்றாக இருக்கிறது செய்து கொண்டிருக்கிறார்கள் ஆனால் இப்போது சப்தம் உரக்க ஒலிக்க வேண்டும். எனினும் இதில் யார் நிமித்தமாக இருக்கிறார்களோ அவர்களுக்கு பாப்தாதா உளமார வாழ்த்துக்கள் அளிக்கின்றார். செய்து கொண்டேயிருங்கள். விருத்தியாகிக் கொண்டேயிருங்கள். இப்போது அரசினரின் காதுகளுக்கு எட்டியிருக்கிறது. காதுகளை எட்டும்படி செய்யுங்கள். எத்தனை வர்க்கத்தினர் இருக்கிறார்களோ, அவரவர் சேவை மூலமாக அவர்களுக்கு பிரத்யக்ஷ நிரூபணம் காட்டுங்கள். அவர்களுடைய பிரச்சனைகளிலேயே உழன்று கொண்டிருக்கிறார்கள். இவர்களை சற்று எழுப்புங்கள். மற்றபடி என்னவெல்லாம் செய்து கொண்டிருக்கிறீர்களோ அது நன்றாகவே இருக்கிறது ஆனால் இப்போது இன்னும் நன்றாகச் செய்யுங்கள். மற்றபடி பாப்தாதாவின் விசேஷ அன்பு நினைவுகள் இந்த குரூப்புக்கு உண்டு. மேலும் வாழ்த்துக்களும் கூட இருக்கிறது.

**மீடியா விங்:** மீடியாக்காரர்கள் இப்போது கொஞ்சம் கொஞ்சம் ஜனங்களுடைய காதுகளைத் திறந்திருக்கிறார்கள். இப்போது கேட்பதற்கு நன்றாக இருக்கிறது. சிலர் கடைப்பிடிக்கவும் ஆரம்பித்திருக்கிறார்கள் ஆனால் எவ்வளவு பேர் கேட்டிருக்கிறார்களோ, அவர்கள் மட்டும் ஒருவேளை ஆகி விட்டார்கள் என்றால் என்னவாக ஆகி விடும்? பாப்தாதா சாகாரத்திலும் கூறியிருந்தார், மீடியா கமால் செய்து காட்ட முடியும் என்று ஆனால் இப்போது அவ்யக்த ரூபத்தில் பார்க்கின்றார். கொஞ்சம் தாமதமாகச் செய்திருக்கிறார்கள் ஆனால் தாமதத்திலும் அற்புதம் செய்திருக்கிறார்கள். வீட்டிலிருந்தவாறே சப்தம் அதிகம் பரவுவதற்கான சாதனம் மீடியா தான் செய்ய முடியும். ஏனெனில் தற்காலத்தில் மனித ஆத்மாக்கள் சமயம் நெருங்கி வந்த பிறகும் நேரமில்லை என்று சாக்குப்போக்கு சொல்கிறார்கள். ஆகவே இந்த பாசாங்கையும், மீடியாக்காரர்கள் முடிவுக்குக் கொண்டு வரமுடியும். நன்றாயிருக்கிறது என்று சொன்னால் மட்டும் போதாது நன்றாக பரிவர்த்தனை செய்தும் காட்ட வேண்டும். ஆரம்பமாகி விட்டது. நல்ல பிரபாவமும் உண்டாகியிருக்கிறது. முயற்சியும் கூட நன்றாகச் செய்திருக்கிறார்கள் ஆனால் சப்தத்தை இன்னும் கொஞ்சம் அதிகப்படுத்துங்கள். புதுப்புது பிளான் தயார் செய்யுங்கள். மேலும் சப்தத்தைப் பரப்புவதில் உங்களுக்கு சகயோகம்

செய்யக்கூடியவர்களைத் தயார் செய்யுங்கள். செய்ய முடியும். மற்றப்படி பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். முயற்சியும் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். முயற்சிக்கு வாழ்த்துக்கள் ஆனால் இன்னும் அதிகமாக்குங்கள். எல்லா விதத்திலும் துணைவர்களைச் சேர்த்துக் கொள்ளுங்கள். செய்விக்கக்கூயடிவர்கள் செய்வதில் நிமித்தமாகக் கூடியவர்கள் தயாராக வேண்டும். மற்றப்படி நன்றாக இருக்கிறது. மீடியா மூலம் அநேக விதத்தில் சேவை செய்யும் வாய்ப்பு இருப்பதால் வெவ்வேறு விதங்களில் சப்தத்தை அதிகம் பரவச் செய்யுங்கள். சம்மந்தம், தொடர்பில் கொண்டு வந்து கொண்டேயிருங்கள். மீடியா டிபார்ட்மெண்டுக்கு, பாப்தாதா எவ்வளவு சேவை செய்திருக்கின்றார்களோ நன்றாகவே செய்திருக்கிறார்கள். அதற்கு வாழ்த்துக்களை அளிக்கின்றார். பாப்தாதா எல்லாவற்றையும் கேட்டு குஷியடைவதைப் பார்த்து மகிர்ச்சியடைகின்றார். ஏனெனில் இரக்கம் உண்டாகிறது. துக்கமான ஆத்மாக்களின் துக்கத்தைப் பார்த்து இரக்கம் வருகிறது. எனினும் குழந்தைகள் அல்லவா? நல்ல குழந்தைகள், கெட்ட குழந்தைகள் இரு விதமான குழந்தைகள் இருக்கிறார்கள். (ஒரு தாய் வயிற்றுக் குழந்தைகள், மாற்றாந்தாய் குழந்தைகள்) எனினும் குழந்தைகள் தானே. ஆகையால் இன்னும் பிளானை விரிவுப்படுத்துங்கள். நல்லது.

கல்ச்சுரல் விங்: கல்ச்சுரல் மற்றும் கல்ச்சர் இரண்டும் சேர்ந்தது. ஆகவே கலாச்சாரம் மூலமாக கல்ச்சர் (நாகரீகம் / பண்பு) நடைமுறையில் கொண்டு வர வேண்டும். இந்த சேவை செய்து கொண்டிருக்கிறார்கள். பாப்தாதா ஒவ்வொரு வர்க்க சேவையாளர்களைப் பார்க்கின்றார். ஒவ்வொருவரும் அவரவர் விதி மூலமாக சேவையை விரிவுப்படுத்திக் கொண்டு தானிருக்கிறார்கள். நிமித்தமாக கல்ச்சுரல் இருக்கிறது ஆனால் எதைக் கொண்டு வர வேண்டும். கல்ச்சர் (நற்பண்புகள்). எப்போது மனித ஆத்மாக்களினுடைய நாகரீகம் மாறி விடுமோ அப்போது உண்மையான நாகரீகம் எது என்பதைப் பற்றிக் காண்பிக்கின்றீர்கள் ஆனால் தற்காலிக நாகரீகம் மாறி விடும்போது அவர்களும் கூட தங்கள் காரியங்களைச் செய்து கொண்டே குஷியில் ஆடத் தொடங்கி விடுவார்கள். எப்படி இப்போது நாட்டியம் மூலமாக காண்பிக்கிறீர்கள் அல்லவா? எங்கிருந்தாலும் என்ன செய்து கொண்டிருந்தாலும் மனம் குஷியாக ஆடட்டும். ஒவ்வொரு வீட்டிலும்

டான்ஸ் நடக்க வேண்டும். லக்ஷியம் நன்றாக இருக்கிறது. இந்த இலக்ஷியத்தின் அடிப்படையில் சேவையை விரிவு படுத்திக் கொண்டேயிருக்கிறார்கள் ஆனால் பாபா என்ன விரும்புகின்றார். இப்போது பார்க்க விரும்புகின்றார். யார் கங்கணத்துடன் தயார் செய்து கொண்டு வரப்போகிறார்கள்? எந்த வர்க்கம்? நம்பர்-1னாக இருந்தாலும், நம்பர்-1னில் சகயோகியாக இருந்தாலும் சரி இப்போது கொஞ்சம் புதுமையை விரும்புகின்றார்கள். எனினும் விதை போட்டு விட்டீர்கள். எல்லா வர்க்கத்தைச் சார்ந்தவர்களும் விதை நன்றாகவே போட்டிருக்கிறார்கள் ஆனால் இப்போது பலன் பிரத்யக்ஷமாக வேண்டும். குறைந்தபட்சம் 9-லட்சத்திலிருந்து இன்னும் எண்ணிக்கை பெருக வேண்டுமல்லவா? நன்றாக இருக்கிறது. எல்லா குழந்தைகளும் விதவிதமான வர்க்கத்தின் காரணமாக பொறுப்பாளிகளாகி இருக்கிறார்கள். கவனத்தை ஈர்த்திருக்கிறார்கள். இனி இன்னும் கொஞ்சம் சீக்கிரமாக விருத்தி செய்ய வேண்டும். ஏனென்றால், காலத்தின் கூக்குரல் அதிகமாகி விட்டது. துக்கம், அசாந்தி, அதிகமாகி கொண்டிருக்கிறது ஆனால் நீங்கள் குஷியாக ஆடுங்கள். பயபீதியிலிருந்து காப்பாற்றுங்கள். நன்றாக இருக்கிறது. ஒவ்வொரு சேவை மையத்திலும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். இதுவும் நன்றாக இருக்கிறது. ஆதலால் விரிவுபடுத்திக் கொண்டேயிருங்கள். உங்களுடைய துணைவர்களை யார் கல்ப கல்பமாக கூடவே இருந்தார்களோ அவர்களைத் தேடிக் கண்டுபிடியுங்கள். நல்லது மிக நன்றாக இருக்கிறது. இதைவிட இன்னும் நன்றாகவே இருக்கும். விரிவாகிக் கொண்டேயிருக்கும்.

இன்டர் நேஷனல் யூத் (இளைஞர்) மற்றும் குழந்தைகளின் ரிட்ரீட் நடந்து கொண்டிருக்கிறது: குழந்தைகளை முன்னே வையுங்கள். பாப்தாதா குழந்தைகளைப் பற்றிய சமாச்சாரமும் கேட்டார். நன்றாக இருக்கிறது. ஒருவேளை குழந்தைகள் சுய பரிவர்த்தனை மூலமாக விஷ்வ பரிவர்த்தனை செய்தார்களானால், பாப்தாதாவுக்கு மகிழ்ச்சியாக இருக்கும். குழந்தைகள் சுபான் அல்லவா? உறுதிமொழி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் அல்லவா? பாப்தாதா பார்த்தார். தயார் செய்திருக்கிறார்கள் தாமரை மலர் தயாரித்திருக்கிறார்கள். அதை முன்னால் காண்பியுங்கள். அரசும் கூட இளைஞர்கள் பரிவர்த்தனை கொண்டு வந்து கொண்டிருப்பதைப் பார்க்க விரும்புகின்றது ஏனெனில்

இளைஞர்களிடம் ஒரு விசேஷம் இருக்கிறது. யூத் குரூப் என்ன நினைக்கிறார்களோ, அதைச் செய்து காட்ட முடியும். தவறு செய்வதிலும் சரி, சரியக நடந்து கொள்வதிலும் சரி யூத் குரூப் கமால் செய்யக்கூடியவர்களாக இருக்கிறார்கள். குழப்பம் உண்டாக்குவது அல்ல (தமால்) அற்புதம் (கமால்) அரசும் கூட யூத் குரூப்பை விரும்புகிறார்கள். மேலும் பாபாவின் முன்னிலையில் தங்கள், தங்களுடைய உறுதிமொழியை தாமரை மலரில் நன்றாக எழுதியிருக்கிறார்கள். இப்போது இந்த உறுதிமொழிகளையும், பரிவர்த்தனை செய்து பாப்தாதாவுக்கு ரிசல்ட்டைத் தெரியப்படுத்திக் கொண்டேயிருக்க வேண்டும். எந்த ஒரு சேவா கேந்திரத்தில் இருந்தாலும் சரி, அங்கே தங்கள் டீச்சரிடம் உறுதிமொழி மற்றும் பலன் அதாவது என்ன உறுதிமொழி எடுத்துக் கொண்டீர்கள், அதனால் அடைந்த பலன் எவ்வளவு என்பது பற்றி ரிசல்ட் கொடுத்துக் கொண்டேயிருக்க. வேண்டும். டீச்சர்கள் பாப்தாதாவுக்கு அனுப்பிக் கொண்டேயிருப்பார்கள். மற்றபடி பாப்தாதாவுக்குத் தெரிகிறது. டிரெயினிங் எந்த முறையில் இருக்க வேண்டுமென்பது பற்றிய (ரூப் ரேகா) வடிவமைப்பு நல்ல முறையில் தயார் செய்திருக்கிறார்கள். மேலும் எல்லோரும் விருப்பத்துடன் செய்தார்கள். இதற்காக யூத் குரூப்பிற்கு பாப்தாதா நூறுமடங்கு வாழ்த்துக்களை அளிக்கின்றார். பக்காவாக இருக்க வேண்டும். சுச்சா ஆகக்கூடாது. கச்சாவாக இருந்தால் அதை பறவைகள் தின்றுவிடும். பக்காவாக இருப்பதை சாப்பிடுவதில்லை. ஆதலால் சதா பரிஷ்தா ஆகி பறந்து கொண்டேயிருக்க வேண்டும். இந்த தேகம் என்ற மண்ணில் கால் பதிக்கக்கூடாது. பறந்து கொண்டேயிருக்க வேண்டும். நன்றாக இருக்கிறது. குமாரிகளும் கூட மிக தைரியசாலிகளாக இருக்கிறார்கள். பட்டி செய்பவர்கள் அல்ல, பட்டியில் என்ன கேட்டார்களோ அதன் படி நடந்து காட்டுபவர்கள். அப்படித்தானே. யார்நடந்து காட்டுவார்களோ அவர்கள் கை உயர்த்துங்கள். செய்து காட்டுபவர்கள். நல்லது மிக்க நன்று எப்படி ஃபரின் என்று சொல்லுகிறார்களோ அதுபோல ஃபௌரன் (உடனே) செய்பவர்கள். பாப்தாதாவுக்கு குஷியாக இருக்கிறது. குழந்தைகளைப் பற்றியும் குஷியாக இருக்கிறது. சிறு குழந்தைக்ள கூட ஊக்கம் உற்சாகத்துடன் நேரம் கொடுத்திருக்கிறார்கள். மேலும் உறுதிமொழியும் கொடுத்திருக்கிறார்கள். நல்லது வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்.

டபுள் விதேஷி: டபுள் தீவிர புருஷாரத்தி. இப்போது டபுள் ஃபாரின் இல்லை. டபுள் தீவிர பருஷாரத்தி. டபுள் ஃபாரினர்ஸ்களின் விசேஷம் என்னவென்றால், பெரும்பாலும் கைமேல் கைகோர்த்து செல்கிறார்கள். ஆகவே நீங்கள் எல்லோரும் கூட பாப்தாதாவுக்கு பக்கவாக கை மேல் கை கொடுக்க வேண்டும். அதாவது துணைவர் ஆக வேண்டும். நண்பர்கள் ஆக வேண்டும். லவ்லி பிரண்டு. ஆகவே பிரண்டு ஆக்கி விட்டீர்களா? பிரண்டின் நட்பு நிறைய நினைவுக்கு வரும். எப்போதாவது கஷ்டமாக இருக்கும்போது தந்தையிடம் கூற மாட்டார்கள். பிரண்டிடம் (நண்பன்) கூறுவார்கள். ஆகவே கடவுளை நண்பனாக ஆக்கி விட்டீர்களா? அப்படித்தானே. குதா தோஸ்ட் (கடவுளின் நண்பன்) நன்றாக இருக்கிறது பாப்தாதாவுக்கு ஃபாரினர்களைப் பார்த்து மகிழ்ச்சியாக இருக்கிறது. ஏன்? காரணம் என்ன? தந்தையின் ஒரு பெயரை உறுதிப்படுத்தி விட்டார்கள். முதலில் விஷ்வ சேவை மனதால் செய்து கொண்டிருந்தார்கள். இப்போது உலகின் நாலாப்பக்கமும் சேவை செய்வதற்கு நிமித்தமாகி விட்டார்கள். இப்போது பாருங்கள் உலகின் மூலை முடுக்குகளிலெல்லாம் காணாமல் போன குழந்தைகள் தான் எத்தனை! எத்தனை! ஆஹா! குழந்தைகள் வெளியில் வந்து விட்டார்கள். ஒவ்வொரு கல்பத்திலும் நாங்கள் தான் உங்கள் துணைவர்கள் எனும்போது உங்களுக்கு நஷா உண்டாகிறது. இதற்கு முன்பும் அப்படி இருந்தீர்கள். இனிமேலும் இருப்பீர்கள். அப்படித்தானே? நஷா இருக்கிறதல்லவா? பாருங்கள். தந்தையின் பார்வை நீங்கள் எங்கோ ஒரு மூலையில் இருந்தபோதும் அடையாளம் கண்டு கொண்டார். தந்தைக்கும் அடையாளம் தெரிந்து விட்டது. உங்களுக்கும் தந்தையை அடையாளம் தெரிந்துவிட்டது. ஜனங்கள் அட்டாவிகள் வருவார். வருவார் என்று சொல்லிக் கொண்டிருக்க, நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? வந்து விட்டார். மகிமை பாடுகிறீர்கள் அல்லவா? மேரா பாபா வந்து விட்டார் என்று பாடுகிறீர்கள். மிகவும் நன்றாக இருக்கிறது. எல்லோருக்கும் தந்தை செல்லமான குழந்தைகளுக்கு அன்பு நினைவுகள் மேலும் உள்ளபூர்வமான ஆசிகளையும் விசேஷமாக அளிக்கின்றார். நல்லது சிந்தி குருட்பும் வந்திருக்கிறார்கள். பாப்தாதா விசேஷமாக உங்கள் இருவருக்கும் வாழ்த்துக்களை அளிக்கின்றார். நிமித்தமாகி வேகமாகச் செல்வதற்கு சங்கல்பம் நன்றாகச் செய்திருக்கிறீர்கள். ஆகவே விசேஷமாக வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்.

இனி வேகமாகவே இருக்க வேண்டும். தளர்ச்சியடைந்து விடக்கூடாது. ஒருவர்க்கொருவர் உதவி செய்து பறக்க வேண்டும். சரி தான். கரவொலி எழுப்புங்கள். இந்த ஓராண்டில் எத்தனை முறை வந்திருக்கிறீர்கள்? வந்தீர்களல்லவா? நன்றாகயிருந்ததா? இனி மற்றவர்களையும் நிமித்தமாக்குங்கள். ஏனெனில் பாப்தாதா சிந்துவில் வந்தார் என்றால் சிந்துக்காரர்கள் முன்னே இருக்கவேண்டும் அல்லவா?

நல்லது. இன்று 12-மணி ஆக வேண்டும் அல்லவா? நீங்கள் எல்லோரும் கூட 12-மணியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். நல்லது. பாபாவுடன் குழந்தைகள் சந்திப்பது கொண்டாடுவது, எவ்வளவு நன்றாக இருக்கிறது நன்று.

யார் முதன் முறையாக வந்திருக்கிறார்களோ எழுந்து நில்லுங்கள். முதன் முறையாக வந்திருப்பவர்கள் உங்களுடைய முதலாவது ஜென்ம தினத்தைக் கொண்டாடுவதற்கு வாழ்த்துக்கள். நீங்கள் முதன் முறையாக வந்திருக்கிறீர்கள். இதே போல நம்பரும் முதல் நம்பராக வரவேண்டும். பாப்தாதா உறுதி அளித்திருக்கின்றார், பரவாயில்லை. முதல் முறையாக வந்திருக்கலாம். இப்போது லேட் என்று போர்டு போடப்பட்டிருக்கிறது ஆனால் டுலேட் போர்டு இன்னும் போடவில்லை. ஆதலால் யாராயினும் லாஸ்ட் ஸோ ஃபாஸ்ட் மற்றும் ஃபாஸ்ட் ஸோ ஃபர்ஸ்ட் எடுக்க முடியும். நாங்களோ, மிக தாமதமாக வந்திருக்கிறோம் என்று நினைக்க வேண்டாம். இப்போதும் கூட டபுள் புருஷாரத் லக்ஷியம் மற்றும் லக்ஷணம் இரண்டையும் சமமாகக் கொண்டு வருவீர்கள். லக்ஷியம் உயர்ந்ததாகவும், லக்ஷணம் குறைவாகவும் இருந்தால் ஃபர்ஸ்ட் ஆக முடியாது. ஆதலால் புருஷார்த்தம் செய்வதில் லக்ஷியம் வைக்க வேண்டும். ஒருவேளை டூலேட் போர்டு போடப்பட்டுவிட்டால், முதல் நம்பரில் வரமுடியாது. பாப்தாதாவுக்கு குஷியாக இருக்கிறது. எனினும் தைரியம் வைத்து ஊக்கம், உற்சாகத்துடன் வந்து சேர்ந்து விட்டீர்கள். மேலும் இப்போது சதா எங்கே இருந்தாலும் மரியாதை பூர்வமாக நடந்து கொண்டேயிருங்கள். மேலும் தந்தையின் உள்ளத்திற்கு அருகாமையில் இருந்தால் இன்னும் கொஞ்ச காலத்தில் அனுபவம் செய்ய முடியும். இப்போது கோல்டன் சான்ஸ். யார் வேண்டுமானாலும் செய்ய முடியும். பாரதவாசிகளானாலும், வெளிநாட்டினரானாலும் சரி. புரிந்து

கொண்டீர்களா? டபுள், டிரிபிள் (மூன்று மடங்கு) புருஷாரத்தம் செய்ய வேண்டியதாயிருக்கும். சதா தந்தையுடன் கம்பைண்டாக இருக்க வேண்டிய தாயிருக்கும். ஏதாவது கஷ்டம் வந்தால், சுமையாக இருந்தால், தந்தையிடம் கொடுக்கத் தெரியுமா? இதனால் கவலையற்ற இராஜாவாகி பறந்து கொண்டேயிருட்பீர்கள். மனதில் பாரத்தை சுமத்திக் கொள்ளாதீர்கள். அநேசு குழந்தைகள் ஒரு மாதமாகி விட்டது. 15-நாட்கள் ஆகி விட்டன. இப்படி போய்க் கொண்டேயிருக்கிறது என்று கூறுகிறார்கள். சரி அநத் 15-நாட்களில் உங்களுடைய காலன் வந்து விட்டால் அந்த சமயத்தில் தந்தையிடம் சுமையை கொடுத்து விடுங்கள். கொடுக்கத் தெரியுமா? நன்றாக கொடுக்கக் கற்றுக் கொள்ளுங்கள் என்ன செய்வீர்கள்? கொடுக்க கற்றுக் கொண்டு விட்டீர்களா? பாப்தாதா வந்திருப்பது எதற்காக? குழந்தைகளிடமிருந்து சுமையை வாங்கிக் கொள்வதற்காக. யார், இவ்வளவு தைரியசாலிகள், கை உயாத்துங்கள். சரீரத்தின் கைகளை உயர்த்துகிறீர்களா? அல்லது மனதின் கைகளை உயர்த்து கிறீர்களா? மனதின் கையை உயர்த்துங்கள். நல்லது. பாப்தாதா இப்படிப்பட்ட குழந்தைகளுக்கு நூறு மடங்கு வாழ்த்துக்களை அளிக்கின்றார். நல்லது.

இந்த ஆண்டு ஹோம் ஒர்க் பாப்தாதா கொடுத்து விட்டார். இந்த ஆண்டை இந்த விதிப்படி கொண்டாட வேண்டும். மேலும் பாப்தாதா இன்றைய தேதிக்காக, என்ன ஹோம் ஒர்க் கொடுத்திருந்தாரோ அதையும் பாப்தாதா பார்த்தார். கேட்டார். யார் சங்கல்பம் செய்திருக்கிறார்களோ, அதில் உறுதியாக இருக்க வேண்டும். அலக்ஷியமாக இருக்கக்கூடாது. பாப்தாதா கூறினார்: அலக்ஷியம் என்பது எந்த வார்த்தைகள் மூலம் வெளி வருகிறது. ஒன்று வோம், வோம், அடுத்தது லாம். லாம் என்பது செய்யத்தான் வேண்டும். இரண்டு வார்த்தைகளும் அலக்ஷியத்தையே குறிக்கும். ஆதலால் இந்த ஒரு சங்கல்பம் செய்தீர்களோ அதில் இப்போது உங்களுடைய கையொட்டம் இருக்கிறது. அதில் உறுதியான எண்ணத்திற்கு அரசினுடைய முத்திரையும் குத்தி விட்டார். யாராலும் மாற்ற முடியாது. உறுதி என்பதை உங்களுடைய பிறவியில் மிகப் பெரிய அன்பளிப்பு (கி்ப்ட்) ஆகக் கருத வேண்டும். நல்லது.

சதா உறுதி என்ற வெற்றியின் சாவியை பத்திரமாக வைத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் சாவி, மாயாவுக்கும் கூட மிகப் பிரியமானதாக இருக்கிறது. ஆதலால் உள்ளம் என்ற டப்பாவில் இந்தச் சாவியைப் பத்திரமாக வைத்திருக்க வேண்டும். உறுதி தான் வெற்றிக்கான சாவி வெற்றி பாபா சமான் ஆவதற்கு சகஜ சாதனம் ஆகும். சதா நிச்சயம் மற்றும் இப்படித்தான் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது என்ற நம்பிக்கை வேண்டும். சுய ராஜ்ய அதிகாரி மற்றும் விஷ்வ ராஜ்ய அதிகாரி என்ற இந்த இரண்டும் நிச்சயிக்கப்பட்டது. இப்படிப்பட்ட நஷாவில் பெருமிதத்தில் சதா பறந்து கொண்டேயிருக்க வேண்டும். இந்த ஆண்டு இன்றைக்கு விடை கொடுத்தல் மற்றும் வரவேற்பு என்று கொண்டாடுகிறீர்களோ இதே போல தினந்தோறும் தங்களிடமுள்ள பலவீனங்களுக்கு விடைகொடுத்து பாப்தாதாவிடமிருந்து வாழ்த்துக்களையும் பெற்றுக் கொண்டேயிருக்க வேண்டும். இந்த சங்கமயுகம் விடை கொடுத்தல் மற்றும் வாழ்த்துக்கள் என்ற இரண்டுக்குமாக உள்ளது. ஆதலால் சங்கம யுகத்தில் ஒவ்வொரு நாளும் வாழ்த்துக்களுக்குப் பாத்திரமுடையவர்களாக ஆகிக் கொண்டே இருங்கள். பாப்தாதாவுக்கு ஒவ்வொரு குழந்தையும் உள்ளத்திற்குச் செல்லமானவர்கள் தான். நம்பர்வாராக இருக்கலாம். நம்பர்-1 இல்லை என்றாலும் கூட நம்பர்வாராக இருந்தாலும் கூட பாப்தாதாவுக்கு ஒவ்வொரு கல்பத்திலும் காணாமற்போய் கண்டெடுக்கப்பட்டுவிட்ட குழந்தை ஆனதற்கான பாக்கியத்தை சதா நினைவில் வையுங்கள். ஒரு சின்ன விஷயம், ஏதாவது கஷ்டம் வருகிறதென்றால், உள்ளன்போடு ஆர்டர் செய்யுங்கள். மேரா பாபா, நீங்கள் அவசியமாகக் கட்டுப்பட்டிருக்கிறீர்கள் ஆனால் உள்ளத்தில் வேறு எந்த விஷயமும் இருக்கக் கூடாது மேரா பாபா என்று சொல்லுங்கள், மேலும் மனதில் பலவீனமும் இருந்தால், தந்தை உங்களுக்கு உதவி செய்ய மாட்டார். (தில் சாஃப் முராத் ஹாஸில்) மனம் பரிசுத்தமாக இருந்தால் விருப்பம் நிறைவேறிவிடும். அசுத்தமான மனதில் (கிச்சடா) தந்தை வர மாட்டார். மேலும் சிநேகத்துடன் நினைவு செய்யுங்கள். வெறும் ஞானத்தின் ஆதாரத்தில் நினைவு செய்யாதீர்கள். கூறினேனல்லவா? ஞானம் என்பது விதை சிநேகம் என்பது தண்ணீர். ஞானத்தின் ஆதாரத்தில் அறிந்தீர்கள் ஆனால் உள்ளன்பின் அடிப்படையில் அனுபவம் செய்யவில்லை. அன்போடு தந்தையை நினைவு செய்யவில்லை, ஆகவே அனுபவபூர்வமான பலன் கிடைக்கவில்லை அதாவது

அனுபவம் ஆகவில்லை. அனுபவ சொரூபமாவது தாள் பலன், ஆனால் தண்ணீர் கொடுக்காததால் காய்ந்த சருகாகி விடுகிறது. கோர்ஸ் செய்வியுங்கள். சொற்பொழிவு செய்து விட்டு வாருங்கள். அன்பளிப்பும் வாங்கி வாருங்கள். ஒருநாளில் நான்கைந்து சொற்பொழிவு செய்யுங்கள் ஆனால் உள்ளபூர்வமான அன்பில்லை. ஏனெனில் பாபாவிடம் சிநேகத்தின் அடையாளம் பிராமண பரிவாரத்தில் ஒவ்வொருவரிடமும் சிநேகம். சிநேகம் இல்லையென்றால் மாயையின் விக்னம் அதிகம் வரும். ஏனெனில் தண்ணீர் ஊற்றவே இல்லை என்றால், பலன் எப்படி கிடைக்கும். அநேக குழந்தைகள் கூறுகிறார்கள். ஞானத்தை புரிந்து கொண்டோம், பாபாவிடம் சர்வ சம்மந்தமும் இருக்கிறது ஆனால் அனுபவம் இல்லை. அனுபவம் என்பது பலன். அனுபவமில்லாத ஞானி ஆக வேண்டாம். சிநேகி தந்தைக்கு சிநேகி என்றால் பரிவாரத்திற்கு சிநேகியாக தானாகவே ஆகி விடுவார்கள். ஏனெனில் பாப்சமான் அல்லவா? ஆகவே தந்தையின் கடைசி குழந்தையும் கூட உள்ளத்திற்கு அன்பானவர். ஒவ்வொரு குழந்தையையும் சிநேக விருத்தியோடு பார்க்கின்றார். ஆதலால் வெறும் ஞானி ஆக வேண்டாம். சொற்பொழிவு செய்பவர்களாகவும் வேண்டாம். ஒளிரும் சொரூபமுடையவர் ஆகுங்கள். உங்களிடமே கேளுங்கள். தந்தையின் உள்ளத்திற்கு சிநேகமுடையவரா? அல்லது எப்போது அவசியமிருக்கிறதோ அப்போது மட்டும் சிநேகம் இருக்கிறதா? இவர் ஞானி பக்தர். ஆதலால் இந்த ஆண்டு என்ன செய்வீர்கள்? சிநேக பூர்வமான வாயுமண்டலம், ஒவ்வொருவரையும் பாருங்கள், வேண்டுமானால் குறையுள்ளவராக இருக்கலாம் ஆனால் புருஷாரத்தம் செய்து கொண்டிருப்பவர் தானே? பரிவாரத்தைச் சோந்தவர்தானே! கீழே விழுந்து விட்டவரை இன்னும் கீழே தள்ளி விடாதீர்கள். ஊக்கம், உற்சாகத்தை அதிகப்படுத்துங்கள். சிநேக பூர்வமான வாயுமண்டலம் தயார் செய்யுங்கள். நல்லது.

அன்பு நினைவுகளை பாப்தாதா நாலாபுறமும் உள்ள குழந்தைகளுக்கு கொடுத்து விட்டார். நாலாபுறமும் உள்ள குழந்தைகள் இப்போது பாப்தாதாவுக்கு ஹோம் ஒர்க் செய்து பிராக்டிக்கலாக பலன் கொடுக்கக்கூடிய நல்ல குழந்தைகள் தங்கள் பிரபாவத்தைக் காட்டுவார்கள். ஆதலால் நாலாபுறமும் உள்ள குழந்தைகளுக்கு மிகுந்த உள்ளபூர்வமான அன்பு உள்ளத்திலிருந்து நூறுமடங்கு அன்பு

நினைவுகளை ஏற்றுக் கொள்வீராக மேலும் இப்படிப்பட்ட லாயக்கான சிரேஷ்ட குழந்தைகளுக்கு பாப்தாதாவின் நமஸ்தே.

தாதிகளுடன்: மிகுந்த அன்புமிருக்கிறது. நம்பிக்கையும் இருக்கிறது. நீங்கள் விரும்புவதைச் செய்ய முடியும். எப்படி உங்கள் எல்லோருடைய தாதி நிமித்தமாகியிருக்கிறார் அல்லவா? சொன்னாலும், சொல்லாவிட்டாலும் பாலனைக்கு நிமித்தமானார் என்பதால், தானாகவே அவருடைய நினைவு வருகிறது. பாப்தாதாவின் விஷயத்தை விட்டுவிடுங்கள் ஆனால் தாதியோ அப்படியே தான் இருந்தார் ஆனால் செய்து காட்டினார். எல்லாவற்றிலும் பெரிய பேப்பர் தாதி, பிரம்மாபாபா அவ்யக்த நாளான்று கொடுத்தார். அப்படிப் பட்ட வாயுமண்டலம் திடீரென வந்தது மேலும் இவ்வளவு தைரியம் வைப்பது, எல்லோருக்கும் உதவி செய்பவராக ஆவது இது கமால் செய்யும் விஷயம் அல்லலா? மற்றவர்களும் உதவியாயிருந்தார்கள் என்பது அரி தான். என்றாலும் நிமித்தமாயிருந்தாரல்லவா? தாதிஜியின் விசேஷம் என்னவாக இருந்தது? உள்ளம் சுத்தமாக இருந்தது விருப்பங்களும் நிறைவேறியது. யாருடைய விஷயத்தையும் மனதில் வைத்துக் கொள்ளவில்லை. அலக்ஷியத்தைப் பார்த்தாலும் அவர்களை ஊக்கப்படுத்தினார். அலக்ஷியமாக இருக்கிறார். விட்டுவிடுவதல்ல, தைரியம் கொடுத்தார். ஆகவே தான் எல்லோருடைய உள்ளத்திலிருக்கும் என்னுடைய தாதி என்று வருகிறது. எல்லோரும் மனதார மகிழ்ச்சியுடன் கூறுகிறார்கள் அல்லவா? என்னுடைய தாதி என்று ஆதலால் நீங்களும் கூட குரூப் தயார் செய்யுங்கள். லக்ஷியம் வைப்பவர்களாக இருக்க வேண்டும். பாப்சமான் ஆக வேண்டுமல்லவா? குறைந்த பட்சம் தாதிக்குச் சமமாக பிரகாசம் இருக்க வேண்டும் இப்படிப்பட்ட குரூப் அவசியம். ஒருவரல்ல, ஒருவருக்கொருவர் துணையிலிருந்து இப்படி பிரத்யக்ஷ சொரூபம் காண்பிக்க வேண்டும். பிறகு பாப்தாதா அந்த குரூப்புக்கு விசேஷ அன்பளிப்பு தருவார். என்ன தருவார் என்பதை இப்போது சொல்ல மாட்டேன் ஆனால் கொடுப்பேன். வாங்கத்தான் வேண்டும் இப்படி ரூஹ்-ரிஹான் (ஆன்மீக சம்பாஷனை) செய்யுங்கள். மீட்டிங் செய்கிறார்கள், இதுவும் அவசியம் தான் ஆனால் இப்படி ஊக்கம், உற்சாகத்துடன் இருக்கும்படியான ஆன்மீக சம்பாஷனை செய்யுங்கள். அப்போது தான் சரி. குரூப் தயார் செய்யத்தான் வேண்டும். எப்படி பாருங்கள் 6-7 பேர் விசேஷ நேரம்

எடுத்துக் கொண்டு அந்தர்முகியாக இருக்கலாம். (சகோதரிகள் பட்டி செய்திருந்தனர்) நேரம் கிடைத்ததல்லவா? பிராக்டிக்கலாக செய்து விட்டீர்கள் அல்லவா? என்ன செய்ய முடியாது? மேலும் இதனால் பிரபாவம் இருக்கும். பிராக்டிகலாக நன்மையும் இருக்கும். ஆகவே இது அவசியம். நீங்களோ (தாதி ஜானகிஜியிடம்) ரூஹ்ரிஹான் செய்வதில் ரெம்ப கெட்டிக்காரர். ஒருவர்க்கொருவர் சகயோகியாக இருக்கிறார்கள். அதாவது ஏதாவது புதுமை செய்து காட்ட வேண்டும். எப்படி நடந்து கொண்டிருக்கிறதோ, அப்படியே நடக்கட்டும் என்பதல்ல. இப்படியே நடந்து கொண்டிருந்தால் நேரம் நெருங்கி வந்து விடும். இப்போது பாருங்கள் பயபீதி காரணமாக கூக்குரலிடுகிறார்கள். நீட்டித்துக் கொண்டேயிருக்கிறார்கள். என்ன செய்ய வேண்டுமோ, அதைச் செய்யலாம் என்பது அல்ல. இப்படி மந்தமாகி விடுவதற்கு ஏதோ ஒரு காரணம் வந்து விடுகிறது. ஆதலால் இதைச் செய்ய வேண்டும். ஆண்டு ஆரம்பமாகி விட்டதால், பிளான் தயார் செய்ய வேண்டும்.

தாதி ஜானகி பாப்தாதாவுக்கு அங்கில் ஆண்டியினுடைய நினைவைக் கொடுத்தார். எப்படி பாப்தாதா கூறினாரல்லவா? ஐ.பி. ஆனாலும், மைக் ஆனாலும் வாரிசாக ஆகியருந்தாலும் இப்படி பிராக்டிக்கலாக நிமித்தமானார். மேலும் பரிவாரத்திற்கும் நன்மை உண்டாகும்படி செய்தார். ஆகவே ரத்தனம் கூட இப்படி உருவாக்க வேண்டும்.

**மூத்த சகோதரர்களுடன்:** ஒரு பிரம்மாபாபா தனியாக அற்புதம் செய்து காட்டினார் அல்லவா? ஆகவே நீங்கள் எத்தனை பேர்? ஆகி விடும். முடிந்து விட்டது. நிமித்தமாக மட்டும் ஆக்குகின்றார். நிமித்தமானவர்களுக்குத்தான் விசேஷ பிராப்தி கிடைக்கிறது. சாதாரண பிராப்தி எல்லோருக்கும் கிடைக்கிறது ஆனால் யார் நிமித்தமாகின்றார்களோ அவர்களுக்கு விசேஷ பிராப்தி கிடைக்கிறது. ஆகவே இவர்களுக்கு (தாதிகளுக்கு) சொன்னார். தங்களுக்குள் ரூஹ்-ரிஹான் செய்யுங்கள். மீட்டிங் செய்யலாம் ஆனால் ரூஹ்-ரிஹானும் செய்ய வேண்டும். நேரம் எடுத்துக் கொள்ள வேண்டியதாயிருக்கும். தன்னுடைய நேரத்தை செட் செய்ய வேண்டியதாயிருக்கும். நல்லது.

**2008ம் ஆண்டுக்கு விடை கொடுத்தல் -2009ம் ஆண்டுக்கு வரவேற்பு: இரவு 12-மணிக்குப் பிறகு பாப்தாதா எல்லா குழந்தைகளுக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களை அளித்தார்!** எல்லோரும் புத்தாண்டை கொண்டாடினார்கள். மேலும் இந்த ஆண்டில் ஒவ்வொரு நாளும் சுயபரிவர்த்தனை மற்றும் விஷ்வ பரிவர்த்தனை என்ற வகையில் கொண்டாடிக் கொண்டேயிருக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் புது பரிவர்த்தனை, ஒவ்வொரு நாளும் புது சேவை. ஒவ்வொரு நாளும் சதா ஊக்கம், உற்சாகம் ஒரு நாள் கூட மனக்கவலை இருக்கக்கூடாது. எப்போதும் ஆர்வம், உற்சாகத்துடன் இரவு பகல் இருக்க வேண்டும். இந்த புத்தாணடில் ஏதாவது புதிது. சுயத்திற்காக அல்லது உலகத்திற்காக சேவையின் நிமித்தம் செய்தேயாக வேண்டும். இப்படி திட சங்கல்பம் செய்து சமயத்தை அருகாமையில் கொண்டு வந்து கொண்டே சம்பூரணமாக பாப்சமான் ஆகி பறக்க வேண்டும். பறக்கச் செய்யவும் வேண்டும். இரவு வணக்கம். நல்லது.

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳

## ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## பொருளடக்கம்

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂